
www.padippakam.com

# பெண்கள் சந்திப்பு மலர் - 2005



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பெண்கள் சந்திப்பு மலர் – 9
2005

வெளியீடு

பெண்கள்சந்திப்பு குழு

படிப்பகம்

www.padippakam.com

# Penkal Chanthippu Malar 2005

*Collection of women's writtings*
*and*
*paintings*

***Compiled***
***by***

Malar Kuzhu
Theva (Germany)
Ranji (Swiss)
Uma(Germany)

***Published on:***
*Oct. 2005.*
***Published by***
Tamil Women's Forum
c/o SALZ
Waiblingerstrasse 59
70372 Stuttgart
Germany.
***Layout:***
Uma (Germany)
***Printed at:***
Mani Offset
Chennai-5
**Distribution in India:**
Vidiyal Pathippagam
11,Periyar Nagar
Masakkalipalayam(North)
Coimbatore 641 015
email : vitiyal2000@eth.net

படிப்பகம்

• • • • • • • • • • • • • • •


சுனாமி ஆழிப்பெருக்கால் உயிர் இழந்த. உடமையிழந்த
உறவிழந்த அனைவருக்கும் . : :

உலகின் அனைத்து மூலைகளிலும் இயற்கையின் சீற்றத்தாலும்
போரினாலும் அவதியுறும் மக்களிற்கும் . . .

• • • • • • • • • • • • • • •

www.padippakam.com

# உள்ளே




| | | |
|---|---|---|
| எம்மிடமிருந்து | | 7 |
| கண்ணுக்குள் கடலாய் | விஜயலக்சுமி | 12 |
| எஞ்சுவது நம்பிக்கை மாத்திரமே | ரம்யா ஜயசிங்க | 13 |
| பெண்கள் சந்திப்பு பிறந்த கதை | -தேவிகா | 14 |
| பெண்கள் சந்திப்பு 2004 | றஞ்சி(சுவிஸ்) | 18 |
| வாசுகி ஓவியம் | | 25 |
| ஆதித்தாய் ஓடிக்கொண்டிருக்கிறாள் | வாசுகி | 27 |
| எரிப்பதற்காய் பிறந்தவள் | பாமா | 31 |
| கல்விக்கானா | பாமா | 32 |
| வானைக் கடக்கும் பறவை | குட்டி ரேவதி | 33 |
| விலகி நிற்பவன் | அனார் | 40 |
| பிங்கலை ஓவியங்கள் | | 41 |
| பயம் | உமாமகேஸ்வரி | 42 |
| ஆன்மாவின் கீதம் | சுகந்தினி சுதர்சன் | 50 |
| ஓவியத்தில் பெண் | அருந்ததி | 51 |
| லீனா மணிமேகலைகவிதைகள் | | 56 |
| அம்மாவும் சப்பாத்தும் | சாந்தினி வரதராஜன் | 58 |
| மோனிகா ஓவியம் | | 67 |
| அவள் | மோனிகா | 69 |
| வரையாத தூரிகை | சுல்பிகா | 70 |
| ஓடைக்குயில் | புசல்லாவை இஸ்மாலிகா | 74 |
| ஆரதி ஓவியம் | | 75 |
| பெண்களின் நெருக்கமான நண்பன் | பத்மா அரவிந்த் | 77 |
| காளியாதல் | திலகபாமா | 82 |
| வேருக்குள் சுரண்டு | தேவா | 83 |
| சொல்லமாட்டேன் | சுமிதா | 91 |
| மக்கள் தொடர்புசாதனங்களில் பெண்கள் | வைகைச்செல்வி | 92 |


படிப்பகம்

www.padippakam.com


| | | |
|---|---|---|
| விமானநிலையச்சந்திப்பு | ஆழியாள் | 96 |
| எந்தையும் தாயும் | ஜெயந்தி சங்கர் | 97 |
| மனைவி கற்போடு | கோசல்யா | 103 |
| விழி ஒளி | நளாயினி | 105 |
| ஓவியங்கள் பற்றி | அருந்ததி | 106 |
| அருந்ததி ஓவியம் | | 107 |
| அருந்ததி ஓவியம் | | 109 |
| பெண்ணே நீ | ஜே.மதனி | 111 |
| தேடல் வலி | தர்மினி | 112 |
| ஈரல்களும் இதயங்களும் | ஜே.மதனி | 115 |
| A Song for Tea | Mallika | 117 |
| ஒரு தேயிலைப்பாட்டு | மல்லிகா | 119 |
| வீட்டுமூலையில் ஒளியும் துயரங்கள் | உமா | 126 |
| வாசுகி ஓவியம் | | 127 |
| கணவளின் தோழியர் | புதிய மாதவி | 129 |
| நடேசன் சார் | உஷா ராமச்சந்திரன் | 130 |
| குரல் கொடுப்போம் | கோசல்யா | 134 |
| தொடர்பூடகங்களும் பெண்களும் | தேவகௌரி | 135 |
| என்னை நீ ப்ரியம் செய்கிறாய | சாரங்கா தயானந்தன் | 141 |
| கிணற்றுநீர் | திலகபாமா | 142 |
| மலரோடு திலகம் | வேதா இலங்காதிலகம் | 147 |
| யாதுமாகி நின்றாள் | றஞ்சி(சுவிஸ்) | 148 |
| ஒரு பாதை பல கவிகள் | சுமதி ரூபன் | 153 |
| ஒரு பாடல் | உமா | 159 |
| இனிக் கண்ணீர் வேண்டாம் சகோதரி | | 160 |
| பட்டிமன்றங்களும் பிற்போக்கு பிரச்சாரங்களும் | ராஜேஸ்வரி | 164 |
| ஆரதி ஓவியம் | | 169 |
| கனடாவில் கருமையபெண்கள்பயிற்ச்சிபட்டறை | நந்தினி சபேசன் | 171 |
| பெண்கள் சந்திப்புமலர்-2004 விமர்சனம் | | 175 |

www.padippakam.com

முன் அட்டை ஓவியம் : மோனிகா
பின் அட்டை ஓவியம்: ஆரதி(12வயது)

உள் ஓவியப்படைப்புகள்:
வாசுகி((இலங்கை)
மோனிகா((அமெரிக்கா)
அருந்ததி(இலண்டன்)
சுகந்தி (ஜேர்மனி)
ஆரதி(சுவிஸ்)
பிங்கலை(ஜேர்மனி)

படிப்பகம்

www.padippakam.com

# எம்மிடமிருந்து......



அன்புத் தோழியருக்கு,

வணக்கம். இம்முறை 9வது பெண்கள் சந்திப்பு மலருடன் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி.

1990 ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கபட்ட பெண்கள் சந்திப்பின் 24வது தொடர் லண்டனில் நடைபெறுகிறது.

நடைபெற்ற சந்திப்புக்களினது எண்ணிக்கையும் வெளியிடப்பட்ட மலர்களினது எண்ணிக்கையும் வெறும் புள்ளிவிபரங்கள் மாத்திரமில்லை.

அவை

சாம்பலாக மௌனித்திருக்கும் ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் எரியும் ஒடுக்குமுறை என்ற நெருப்பின் சுவாலைகள். இறுகப் பிணைத்திருக்கும் விலங்குகளுடையும் ஓசைகள். எழுதுகோலின் மெல்லிய நகர்வுகள்.

நான் அவளது குரல், அவளது கதைகளை மீள
எண்ணுகின்றேன்.
வேதகாலத்திலிருந்து 21ம் நூற்றாண்டுவரை.
நேரத்தாலும் காலத்தாலும் நொறுக்கப்பட்டு,
சரித்திரத்தின் சாம்பலில்
மௌனமாக அடங்கியிருக்கும் நெருப்பு
நான் அந்தப் பெண்– நான் அவளைப் பற்றிப்
பேசுகிறேன்
நான் கண்ணீரை வாசிக்கிறேன். நெருப்பை
எழுதுகிறேன்.
நான் அறியப்படாமல் வாழ்கிறேன்.
அதன் சாம்பலை நுகர்கிறேன்.
நான் வன்முறையை பொறுக்கின்றேன்.
ஆனால் நான் இன்னும் நெருப்பைச் சுவாசிக்கின்றேன்.
இந்த நெருப்பு எனக்குள் வாழும் வரை நான்
வாழ்வேன்.

(மல்லிகா தசகுப்தாவின் கவிதையிலிருந்து சில வரிகள்.)



படிப்பகம்

www.padippakam.com

சந்திப்பதிலும் எழுதுவதிலும் என்ன பயன்?

இவற்றைச் சோர்வின் கேள்விகளாக புறக்கணிப்பதா? விரக்தியின் முனகல்களாக செவிசாய்ப்பதா?

எமது தொலைந்த அடையாளங்களை ஒன்றாகத் தேட கனக்கும் நெஞ்சங்களைச் சற்று இறக்கி வைக்க சுதந்திரக்காற்றில் எமது மூச்சை கலக்க இறுகக் கைபற்றிக் கொள்ள- எல்லாவற்றிற்கும் மேலாக எம்மீதான சகல அநீதிகளிற்கும் எதிராகவும் நாம் குரல் கொடுக்க வேண்டும். அதற்கு நாம் சந்தித்தே ஆகவேண்டும். எழுதியே ஆகவேண்டும்.

சுற்றும் பூமியின் சிறிய அதிர்வாக எனினும் ..................

* * *

உலகை ஆயிரம் பேர் வாழும் ஒரு கிராமமாக உருவகித்தால், அதில் இருக்ககூடிய 500 பெண்களில் 300 பேர் ஆசியப்பெண்கள். அதில் 167 பெண்கள் நாளும் வன்முறைக்குள்ளாக்கப்படுகிறாகள் என ஐக்கியநாடுகள்சபையின் அறிக்கைகளும், உலக மனித உரிமைச்சங்கமும் தெரிவிக்கின்றன.

பெண்கள்மீதானதும், சிறுவர்கள் மீதானதுமான வன்முறைகள் உலகெங்கும் தொடர்ந்தவண்ணமேயுள்ளது.

பாலியற்பலாத்காரம், உடல் மற்றும் மனரீதியான வன்முறை என்ற சகல வடிவங்களும் புற்றுநோயாக பெண்ணைத் துரத்துகின்றது. வன்முறையின் எண்ணிக்கை உலகளவு அதிகரிக்குமளவிற்கு அதனைத் தடுக்கும் நடவடிக்கைகள் கைமண்ணளவு என்று தான் சொல்லவேண்டும்.

அகில இலங்கை சிறுவர் பாதுகாப்பு அதிகாரியின் கூற்றுப்படி 20 வீதமான சிறுவர்களும் 10 வீதமான சிறுமியரும் வீட்டிலும் பாடசாலைகளிலும் பாலியற் பலாத்காரத்திறகுள்ளாக்கப்படுகிறார்கள்.

இலங்கையில் இந்த இரண்டு மாதத்திற்குள் (ஒகஸ்ட்-செப்டெம்பர்2005) மாத்திரம் எத்தனை பெண்களும் சிறுவர் சிறுமிகளும் பாலியற்பலாத்காரம் செய்யப்பட்டிருக்கிறார்கள்?. கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்? கடத்தப்பட்டிருக்கிறார்கள்?



படிப்பகம்

www.padippakam.com

மட்டக்களப்பில் 03.08.05 அன்று ஒரு பெண் மெதடிஸ் மத்தியகல்லூரி மண்டபத்தில் பாலியற்பலாத்காரம் செய்யப்பட்டபின் கொலைசெய்யப்பட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளார். இவர்பற்றின எந்த விபரங்களும் இதுவரை அறியவராமலேயுள்ளது.

கொழும்பில் 12.08.2005 அன்று பிரபல தொலைக்கட்சி செய்திவாசிப்பாளரான றேலங்கி செல்வராஜனும் அவரது கணவரும் அவர்களிற்குச் சொந்தமான அலுவலகத்தில் வைத்து விடுதலைப்புலிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் செப்டெம்பர் மாதம் தனது வீட்டில் வேலை செய்யும் 13 வயதுச் சிறுமியை 40 தடவை பாலியற்பலாத்காரம் செய்தமைக்காக யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளரும் விடுதலைப்புலிகளின் சர்வதேச மாணவரமைப்பின் பேச்சாளருமான , கே.ரி.கணேசலிங்கம் கைது செய்யப்பட்டுள்ளார். இவருக்காக பரிந்துபேச யாழ்பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் நீதிபதியைச் சந்தித்துள்ளார். இக்குற்றவாளிக்காக வழக்காட தமிழர் விடுதலைக்கூட்டணியின் வழக்கறிஞர்கள் ஆஜராகிறார்கள். இந்த அப்பாவிச் சிறுமிக்கு நீதி கிடைக்காது அரசியல் சாயம் பூசப்படக்கூடிய அபாயமும் உள்ளது.

2001ம் ஆண்டு மார்ச் மாதம் மன்னார் உப்புக்குளத்தில் உள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த விஜயகலா (வயது22) என்ற கர்ப்பிணிப் பெண்ணும், மூன்று குழந்தைகளின் தாயாரான சிவமணி சின்னத்தம்பி வீரக்கோன் என்ற பெண்ணும் நாசகாரதடுப்பு பொலிஸாராலும், கடற்படையதிகாரிகளினாலும் பாலியற்பலாத்காரத்திற்குட்படுத்தப்பட்டார்கள். இது தொடர்பான வழக்கு இவ்வருடம் செப்டெம்பர் மாதம் 21ம் திகதி அநுராதப்புரத்தில் நடைபெறவிருந்தது. அதற்கு முன்பாக விஜயகலா கடத்தப்பட்டு காணமல் போயுள்ளார். சிவமணி சின்னத்தம்பி படையினரால் பயமுறுத்தப்பட்டுள்ளார்.

இவை சில நிகழ்வுகள் மாத்திரமே.. வெளியில் தெரியவராமல் குரல்வளை நெறிக்கப்படும் உண்மைகள் ஏராளம்.

பெண்களினதும் சிறுவர்களினதும் பாதுகாப்பிற்கு உத்தரவளிக்கவேண்டிய சட்டத்துறையே அவர்களிற்கு பாரபட்சமாக நடந்துகொள்கிறது.
இவ்வொடுக்குமுறைகள் அதிகரிக்கும் இவ்வேளையில், செப்டெம்பர் 16ம் திகதி நீதித்துறை அமைச்சர் ஜோன் செனவிரத்ன இலங்கையில் பெண்களின் பாலியல் உறவிற்கான வயதை 16லிருந்து 13 ஆக குறைத்திருப்பதாக அறிவித்துள்ளார். இதனை பல பெண்கள் அமைப்புகள் கண்டித்துள்ளனர்.
பிரிட்டிஷ் பிரஜையான இலங்கையர் ஒருவர் நீர்கொழும்பிலிருந்து சிறுவர்களை



படிப்பகம்

பாலியற் தொழிலில் ஈடுபடுத்துவதற்காக கடத்திச் சென்று மன்னாரில் மறைந்துள்ளார். இச்சம்பவம் நடைபெற்று இரண்டு நாட்களிற்கு பின்னரே அமைச்சர் இச்சட்டமாற்றத்தை அறிவித்துள்ளார். இப்புதிய சட்டத்தின்படி 21 வயதுடைய ஆண் ஒரு 13 வயதுச்சிறுமியை பாலியல் பலாத்காரத்திற்குட்படுத்தினால், அது உண்மையில் பாலியல்வன்புணர்வா அல்லது அந்தச்சிறுமி விரும்பி பாலியல் உறவுகொண்டாளா என்று சட்டமா அதிபரால் விசாரிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படும். கடந்தகாலங்களில் பல பதின்மூன்று வயதுசசிறுமிகள் பாலிபலாத்காரப்படுத்தப்பட்டதும், பின் அவர்களாகவே வந்து , தம் விருப்பப்படிதான் நடந்தது என வழக்கைவாபஸ் பெற்றறுள்ளார்களாம். பல இளைஞர்கள் சிறையில் வாடுகிறார்களாம். இந்நிலைமையை மாற்றத்தானாம் இந்த சட்டமாற்றம்.

பெண்கள் பாலியற்பலாத்காரம் செய்யப்படுவதும் பின் பயமுறுத்தப்படுவதும் புதிதல்ல. இச்சட்டமாற்றமானது ஆண்களை அதுவும் சிறுமிகளை பாலிய்பலாத்காரத்திற்கு உட்படுத்தும் ஆண்களை பாதுகாக்கவே இயற்றப்பட்டுள்ளது. சிறுவர் பாலியற்`சுரண்டலிற்கு சட்டபூர்வமான அனுமதிகிடைத்துள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கொலைகள், பாலியற்பலாத்காரம், கடத்தல் என்பவற்றிற்கும் இச்சட்டமாற்றத்திற்கும் புகலிட பெண்கள்சந்திப்பு தன் கண்டணத்தை தெரிவித்து நிற்கின்றது.

*　　　　*　　　　*

2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டுள்ள காலகட்டத்தில், போர்ச் சூழல் நிலவாத போதும் விடுதலைப்புலிகள் இயக்கத்திளரால் வடக்குகிழக்கு பகுதிகளில் தொடர்ந்தும் சிறுவர்கள் கட்டாயப்போராளிகளாக்கப்படுவதற்காக கடத்தப்படுகிறார்கள். ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் போது பதினொன்று அல்லது பன்னிரண்டு வயதுடைய சிறார்களே மிக ஆபத்தான நிலைகளுக்குத் தள்ளப்படுகிறார்கள்.
ஒரு குடும்பத்திற்கு ஒரு பிள்ளையென்ற கோரிக்கையுடன் வீடுகளிலிருந்து சிறுவர்கள் இழுத்துச்செல்லப்படுகிறார்கள். அல்லது பாடசாலையிலிருந்து வரும் வழியில் கடத்தப்படுகிறார்கள்.
யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதில் இருந்து 2004ம் ஆண்டு ஒக்டோபர் 31ம் திகதி வரை, வயது குறைந்த சிறார்கள் புதிதாக படைகளில் சேர்த்தக்கொள்ளப்பட்டமை தொடர்பான 3,516 சம்பவங்களை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியமானது ஆவணப்படுத்தியுள்ளது. இக்காலக்கட்டத்தில் 1,206

www.padippakam.com

சிறார்களை புலிகள் இயக்கத்தினர் சம்பிரதாய பூர்வமாக விடுவித்தனர். ஆனால் நவம்பர் மாதம் 2004ம் ஆண்டுவரை யுனிசெப் அமைப்பினால் பதிவு செய்யப்பட்ட நபர்களில் இன்னும் 1,395 பேர் விடுவிக்கப்படாமல் உள்ளனர்.
2004ம் ஆண்டு ஏற்பட்ட இயக்கமுரண்பாடுகளின்பின் விலகிச்சென்று தம் குடும்பங்களுடன் சேருமாறு அனுப்பப்பட்ட சிறுவர்கள் மீண்டும் விடுதலைப் புலிகளினால் போராளிகளாக கட்டாயமாகச சேர்க்கப்படகிறார்கள். இச்சிறுவர் கடத்தலில் மட்டக்களப்பைச் சேர்ந்த சிறுவர்களே பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இவ்வாறு சேர்க்கப்பட்ட சிறுவர்கள் முதல் குழந்தைப்பிரிவு என அழைக்கப்படும் பிரிவுக்குள் சேர்க்கப்பட்டு பின் வேறு பிரிவுகளிற்குள் இணைக்கப்படுகின்றனர். அவர்களின் இயக்கத்தினால் நடாத்தப்படும் அநாதை இல்லங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் சிறுத்தைபுலி படைப்பிரிவு பிரிவில் சேர்க்கப்படுகிறார்கள்..
யுனிசெப் அமைப்பின் அறிக்கையின்படி இச்சிறார்களின் 40 வீதமானவர் பெண்கள் ஆவார்.

(இத்தகவல்கள் யாவும் மனிதவுரிமை கண்காணிப்புக்குழுவின் அறிக்கையிலிருந்து எடுக்கப்படடன.)

இச்சிறார்கள் மீதான மனிவுரிமை மீறலை பெண்கள்சந்திப்பு கண்டிக்கிறது.

பெண்கள்சந்திப்புமலர்குழு 2005-





படிப்பகம்

www.padippakam.com

# கண்ணுக்குள்ளே கடலாய்...



அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவில்
அலையோர வெண்மணலில்
நாம் பதித்த கால்தடங்கள்
இல்லாத இடங்கள் இல்லை

இற்றைத்திங்கள்
அதேவெண்மணலில்
என் கால்கள் தேடுகின்றன
உன்தடங்குளை
ஓ வெறும்
கடல் இரச்சலில்
உன் குரல் ஒலிப்பதுபோல்
பிரமைகள் எத்தனை எத்தனை
தூரத்தே
கடல் அசைவின் மேல் –நீந்தியிருப்பது போல் கனவு
நீண்ட தூரம் கண்கள் முட்டும்வரை

உன்முகம் தேட
வெள்ளை ஆடையுடன் –நீ
தூரத்தே மிதக்கலாம்
எனும பிரமை
கடல் நுரை காலை நனைக்க
அலை உன் கைகளாக மாறி–என்
கால்களை இழுப்பதாய் பிரமை

கண்மணி.
காணாதவர்பட்டியலில்– நீ
அடங்கியிருந்தாலும்
எனக்குத் தெரியும்–அந்த
கடலுக்கடியில்குந்தியிருந்து
மௌனமாய் அழுகிறாய் என்று

விஜயலட்சுமி சேகர் இலங்கை



படிப்பகம்

www.padippakam.com

# Die Hoffnung bleibt

*Hoffnung auf Leben hatte ich - nur wegen des Ozeans.*
*Kleine Kinder zog ich gross- nur durch den Ozeans.*
*Bis jetzt lebte ich zufrieden - nur wegen des Ozeans.*
*Das alles habe ich verloren - nur durch des Ozeans.*
*Nun, was soll ich heute*
*Ueber den Ozeans noch sagen?*
*Frau, Tochter, Sohn, Heim...*
*Alles was du mir-gabst*
*Hast du wieder von mir genommen.*
*Das Gerõusch der Brandung*
*Bricht mir das Herz - in tausend Stuecke.*
*Dennoch, mit Hilfe des Meeres*
*Werde ich es wagen - ein neues Leben!*

Ramya Jayasinghe

## எஞ்சுவது நம்பிக்கை மாத்திரமே

*சமுத்திரத்தினால் மாத்திரமே வாழ்வு பற்றிய நம்பிக்கையிருந்தது*
*சமுத்திரத்தினால் மாத்திரமே சிறு குழந்தைகளை பெரியவர்களாக்கினேன்.*
*சமுத்திரத்தினால் மாத்திரமே இதுவரை நிம்மதியாக வாழ்ந்தேன்*
*சமுத்திரத்தினால் மாத்திரமே அவை எல்லாவற்றையும் இழந்தேன்*
*சமுத்திரத்தைப் பற்றி*
*நான் இன்று என்ன சொல்ல?*
*மனைவி, மகள், மகன், மனை . . . .*
*நீ எனக்கு தந்த எல்லாவற்றையும்*
*மீண்டும் நீ என்னிடமிருந்து பறித்துவிட்டாய்*
*அலைகளின் பேரிரைச்சல்*
*எனது இதயத்தை ஆயிரந்துண்டங்களாக உடைத்தன*
*இன்னும்*
*கடலின் உதவியுடன்*
*எனது வாழ்வை வாழ துணிகிறேன்*

*ரம்யா ஜயசிங்க*





படிப்பகம்

www.padippakam.com

# பெண்கள் சந்திப்பு பிறந்த கதை

## தேவிகா

இதற்கு முன்னர் வந்த பெண்கள் சந்திப்பு மலரில் இதுபற்றிய குறிப்புகள் அவ்வப்போது இடம்பெற்றுள்ளது. இருந்தாலும் இதற்கான ஆரம்ப வித்து எங்கே விழுந்தது என்றறிதலும் சுவாரசியமானது.
1983ம் ஆண்டுக்கலவரத்துக்குப் பிறகு பெருமளவில் தமிழர்கள் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்து செல்லத்தொடங்கினார்கள். இலங்கை அரசின் அடக்குமுறையும் அரச பயங்கரவாதமும் அவர்களை இந்த முடிவுக்குத்தள்ளியிருந்தது. அதுவரை வெளிநாட்டுக்குச் செல்லவேண்டும் என்ற அவாவோடு தேவை இல்லாதவர்களும் கூட நாட்டைவிட்டுப் படிப்படியாக வெளியேறத்தொடங்கினார்கள்.

இதில் ஜேர்மனியின் கேர்ண (Herne) என்ற நகரம் 1985ம் ஆண்டளவில் பெருமளவில் வந்து சேர்ந்த புதிய மனிதர்களை ஆச்சரியமாக நோக்கியது. வெளிநாட்டவர் அலுவலகம் சமூக சேவை அலுவலகம் என்பவை குழந்தைகள், முதியவர், இளைஞர், யுவதிகள் என குடும்பமாகவும் தனித்தும் வந்து சேர்ந்தவர்களால் திணறின. இவர்களுக்கு இடவசதி மற்றும் ஏனைய அத்தியாவசிய வசதிகளை வழங்குவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இருந்தாலும் இந்த அந்நியரின் வருகையால் அமைதியாயிருந்த நகரம் பரபரப்புக்குள்ளானது.
ஜேர்மன் மொழி தெரியாத, மண்ணிறமான இந்த மனிதர்கள் யார்? ஏன்? எப்படி? இங்கே வந்தார்கள் என அந்த நகரத்து ஜேர்மன் மக்கள் கேள்வி எழுப்பினார்கள். ஜேர்மன் தினசரிகளின் தலையங்கத்தில் இவர்கள் சுட்டிக்காட்டப்பட்டார்கள். தேவாலயங்களின் பிரார்த்தனைக் கூடங்களிலும், வாராந்த சந்தை கூடுமிடங்களிலும்,
**ALDI, WOOLWORTH, KARSTADT, GLOBUS** போன்ற கடைகளிலும் காணப்பட்டார்கள். இவர்கள் காலநிலைக்கொவ்வாத உடைகள் காலணிகள் அணிந்திருக்கக்காணப்பட்டார்கள். பேருந்துகளிலும் பொது இடங்களிலும்



படிப்பகம்

www.padippakam.com

கூட்டமாகவும் பலத்த குரலிலும் வேற்றுமொழி ஒன்றைப்பேசுபவர்களாய் இருந்தார்கள்.
அந்நகரத்தின் தேவாலயமொன்றில் எழுப்பப்பட்ட இவர்கள் பற்றிய கேள்விகளுக்கு விடைதேடி அத்திருச்சபையின் தலைவர் இம்மக்களின் இருப்பிடங்களுக்கு வந்தார். இவ்வதிப்பிடங்கள் அந்நகரின் எல்லையில் கைவிடப்பட்ட நிலக்கரிச்சுரங்கத்தில் வேலை செய்பவர்களுக்காகக் கட்டப்பட்டவை. தற்போது அகதிகளாக வந்தவர்களுக்காக இவற்றைப்பாவிக்க ஜேர்மன் சமூகசேவைத்திணைக்களம் தீர்மானித்தது.

இலங்கை இந்தியாவுடனான தொடர்புள்ளவரான இந்த மனிதர் திரு கிறிஸ்டோபர் சிக்கமன் இவர்களுடன் பேசி இவர்கள் இலங்கைத்தமிழர்கள் எனவும், அரசு அடக்குமுறைக்கஞ்சி ஜேர்மனியில் தஞ்சம் கோரி வந்தவர்களெனவும் அறிந்துகொண்டார். தனது சபையைச் சேர்ந்த ஜேர்மன் மக்களையும், இத்தமிழர்களையும் அழைத்து ஒரு அறிமுகச் சந்திப்பொன்றை நடத்தினார். பத்திரிகைகளும் இச்செய்தியை வெளியிட்டதும் அந்நகரம் சிறிது ஆறதலடைந்தது. இத்தமிழ்மக்களுடன் பழகத்தொடங்கிய பிறிதொருநாளில் அவர்கள் சொன்னார்கள் இவ்வளவு தொகையான அந்நியரை நாங்கள் பார்த்தது இதுதான் வாழ்நாளில் முதல்தடவையென்று.
இதேவேளை அங்கிருந்த ஜேர்மன் தகவல் நிலையம் பெருகிவரும் அகதிகளின் தேவைக்கென ஒரு ஆணையும், பெண்ணையும் பணியில் அமர்த்தியது. இவ்வாறாக நானும் திரு பீட்டர் ஜெயரட்ணமும் அங்கு வேலை செய்ய ஆரம்பித்தோம். முதல் வேலையாக தமிழ் பத்திரிகை, புத்தகங்களை வரவழைத்தோம். சிறிய நூல் நிலையம் ஒன்று உருவானது. எமது அவதானத்தில் பத்திரிகை வாசிக்க, புத்தகம் இரவல்பெற்றுக்கொள்ள, அகதி அந்தஸ்து சம்பந்தமான பிரச்சனைகளை தெளிவுபடுத்திக்கொள்ள ஆண்களே வந்து போனார்கள். பெண்களின் பிரச்சனைகளும் கூட அவர்களின் கணவர் மூலமாகவோ அல்லது ஆண்பாதுகாவலர் மூலமாகவோதான் அங்கு கொண்டுவரப்பட்டன. இவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை ஒருவரோடொருவர் கலந்து பேசவும், வெளியுலகுடன் தொடர்பேற்படுத்தவுமான முதல் முயற்சியாக பெண்கள் வட்டம் என்ற பெயரில் 1987இல் தொடங்கப்பட்டது. பெருமளவு தமிழ்ப்பெண்கள் இங்கு வசித்துவந்தபோதும் 20-30 வரையான பெண்களே கலந்துகொண்டனர். அவர்களுடன் கலந்தாலோசித்து இதனை தொடர்ந்து ஒரு சுய உதவிக்குழுவாக நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. மாதமொருமுறை கூடுவது, கூட்ட அறிக்கையை பெண்கள் வட்டம் என்ற சஞ்சிகையை உருவாக்கி அதில் வெளியிடுவதென்றும் முடிவாயிற்று. இது கையெழுத்துப்பிரதியாக வெளியானது. ஜேர்மன் நண்பர் ஒருவர் இந்தியாவிலிருந்து தமிழ் தட்டச்சு யந்திரம் ஒன்றை கொண்டுவந்து தந்தார். இது பின்னர் நாளடைவில் நமது குரல் என்ற சஞ்சிகையாக உருப்பெற்றது.



படிப்பகம்

www.padippakam.com

இதே வேளை பீலபெல்ட் என்ற நகரத்தில் தமிழ்ப்பெண்கள் அமைப்பு ஒன்று உள்ளது என அறிந்து அவர்களுடன் தொடர்பேற்படுத்தப்பட்டது. இதே போல் ஸ்ருட்காட் நகரின் மகளிர் மன்றத்தின் தொடர்பும் கிடைத்தது. இவ்வமைப்புகள் ஒருவரையொருவர் அறிமுகப்படுத்திக்கொள்ள விரும்பி கேர்ணயில் பெண்கள் வட்டத்தினரால் ஏற்பாடுசெய்யப்பட்டது. இச்சந்திப்புக்கு ஏனைய நகரங்களிலிருக்கும் தமிழ்ப் பெண்களையும் அழைப்பதென முடிவு செய்யப்பட்டு இதுவே பெண்கள் சந்திப்பு என்றானது.

**இதுவரை நடைபெற்ற பெண்கள் சந்திப்புக்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஆவது பெண்கள் சந்திப்பு | கேர்ண | (ஜேர்மனி) | 17.03.1990 |
| 2 | ஆவது பெண்கள் சந்திப்பு | கேர்ண | ஜேர்மனி) | 12.05.1990 |
| 3 | ஆவது பெண்கள் சந்திப்பு | வுப்பற்றால் | (ஜேர்மனி) | 01.09.1990 |
| 4 | ஆவது பெண்கள் சந்திப்பு | ஸ்ருட்காட் | (ஜேர்மனி) | 12.01.1991 |
| 5 | ஆவது பெண்கள் சந்திப்பு | நொயிஸ் | (ஜேர்மனி) | 11.05.1991 |
| 6 | ஆவது பெண்கள் சந்திப்பு | கேர்ண | (ஜேர்மனி) | 19.10.1991 |
| 7 | ஆவது பெண்கள் சந்திப்பு | முல்கைம் | ஜேர்மனி) | 16.05.1992 |
| 8 | ஆவது பெண்கள் சந்திப்பு | எசன் | (ஜேர்மனி) | 12.09.1992 |
| 9 | ஆவது பெண்கள் சந்திப்பு | பேர்லின் | (ஜேர்மனி) | 09.04.1993 |
| 10 | ஆவது பெண்கள் சந்திப்பு | கார்ல்ஸ்ருக | (ஜேர்மனி) | 5.09.1993 |
| 11 | ஆவது பெண்கள் சந்திப்பு | டுயிஸ்பேர்க் | (ஜேர்மனி) | 21.05.1994 |
| 12 | ஆவது பெண்கள் சந்திப்பு | பிராங்பேர்ட் | (ஜேர்மனி) | 26.11.1994 |
| 13 | ஆவது பெண்கள் சந்திப்பு | ஸ்ருட்காட் | (ஜேர்மனி) | 20.05.1995 |
| 14 | ஆவது பெண்கள் சந்திப்பு | பேர்ண் | (சுவிற்சலாந்து) | 28.10.1995 |
| 15 | ஆவது பெண்கள் சந்திப்பு | கேர்ண | (ஜேர்மனி) | 02.11.1996 |
| 16 | ஆவது பெண்கள் சந்திப்பு | பொண் | (ஜேர்மனி) | 28.06.1997 |
| 17 | ஆவது பெண்கள் சந்திப்பு | ஸ்ருட்காட் | (ஜேர்மனி) | 12.12.1998 |
| 18 | ஆவது பெண்கள் சந்திப்பு | சுவிற்சலாந்து | | 10.07.1997 |
| 19 | ஆவது பெண்கள் சந்திப்பு | பிரான்ஸ் | | 29.07.2000 |
| 20 | ஆவது பெண்கள் சந்திப்பு | பேர்லின் | (ஜேர்மனி) | 19.05.2001 |
| 21 | ஆவது பெண்கள் சந்திப்பு | கார்ல்ஸ்ருக | | 25.05.2002 |
| 22 | ஆவது பெண்கள் சந்திப்பு | சுவிற்சலாந்து | | 11.10.2003 |
| 23 | ஆவது பெண்கள் சந்திப்பு | பிரான்ஸ் | | 9-10.10.2004 |

இதுவரை நடைபெற்ற பெண்கள் சந்திப்புகளில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் ஏராளம். புத்தக விமர்சனங்கள், இலங்கையின் கடந்த கால நிகழ்வுகள் தவிர வில்லுப்பாட்டு, கவிதாநிகழ்வு, நாடகம் போன்ற புதிய முயற்சிகள் மூலம் எமது பெண்களின் படைப்புத்திறன் வெளிக்கொண்டுவரப்பட்டது. தமிழ் பெண்கள் மட்டுமின்றி



படிப்பகம்

www.padippakam.com

ஜேர்மன் பெண்களும் இதில் கலந்துகொண்டுள்ளனர். இதன் மூலம் ஜேர்மன் சமூகத்தில் பெண்களின் நிலை, ஜேர்மனியில் பெண்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் சட்டங்களைப்பற்றிய ஆய்வு என பன்முகப்பட்ட நிகழ்ச்சிகள் இதுவரையில் நடைபெற்றுள்ளன.

எமது தாயகத்தில் பெண்களுக்கெதிரான வன்முறையும், பாலியல் பலாத்காரமும் இடம்பெற்ற வேளைகளில் பெண்கள் சந்திப்பு அதற்காக குரல்கொடுத்தும் கண்டனம் தெரிவித்துமுள்ளது. மூன்று மாதங்களுக்கொருமுறை சந்திப்பது என்று ஆரம்பித்த தீர்மானம் நடைமுறைப்பிரச்சனைகள் கருதி வருடத்துக்கொன்றாகிப்போனது. புதியவர்கள் அறிமுகமாவதும் பழையவர்கள் விலகிச்செல்வதும் மீண்டும் கலந்துகொள்வதும் இதன் சாதாரண நடைமுறைகளே. இருந்தும் இச்சந்திப்பு அடுத்த வருடம் 25ஆவது சந்திப்பை நோக்கி நகர்கிறது. இதில் கலந்துகொண்டவர்கள், இதனை தொடர்ந்து நடத்திச்சென்றவர்கள், மலர்வெளியீடு செய்வதற்கு உதவியவர்கள் என்று யாரையும் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லையாயினும் அவர்கள் எல்லோரும் பெண் என்ற முறையில் இதற்கான பங்களிப்பை வழங்கி தங்களையும் உயர்த்திக்கொண்டு ஏனைய பெண்களையும் உயர்த்திக்கொள்ளப்பாடுபட்டவர்களேயாவர்.

எந்த ஒரு நிறுவனத்தின் நிதியுதவியுமின்றி இச்சந்திப்புகள் ஒவ்வொரு முறையும் சிரமங்களுக்கிடையில் நடைபெற்று வருகிறது. இது ஒரு சுயமான அரசியல் தலையீடு எதுவுமின்றி பெண்களால் பெண்களுக்கென்றே இயங்கிவருகின்ற அமைப்பாகும். பெண் என்ற உணர்வின் கீழ் இதில் இணைந்து செயற்பட முன் வருபவர்களை உள்வாங்கி
இதன் செயற்பாடுகள் விரிவடைந்து வருகின்றன.
இவ்வளவு காலமாக ஒன்று கூடுகிறீர்களே பெண்கள் பற்றிய பிரச்சனைக்கு தீர்வென்ன கண்டீர்கள் என்று கேள்வி எழுப்புவோர்க்கு:
கதை, கவிதை, கட்டுரை, விவாதம் என்பதால் பெண்ணடிமை தீர்ந்துவிடப்போவதில்லை. ஆனால் மௌனமாக இந்த அடக்குமுறைகளையும் இவன்முறைகளையும் நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம். இதன் மூலங்களைக் கண்டறிவோம். பெண்ணுழைப்பை சுரண்ட விடமாட்டோம். எமது ஒன்றுகூடல்களின் மூலம் இதற்கான விழிப்புணர்வை உண்டுபண்ணும் முயற்சியை தொடர்வோம் என்பதே பதில்.

அக்கினி குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு - தழல்
வீரத்திற் குஞ்சென்று மூப்பென்றுமுண்டோ ?

- பாரதி -



படிப்பகம்

# பெண்கள் சந்திப்பு 2004. பிரான்ஸ்

றஞ்சி – சுவிஸ்

பிரான்சில் இரண்டாவது தடவையாக நடைபெற்ற பெண்கள் சந்திப்பின் 23வது தொடர் சென்ற ஒக்டோபர் 9,10ம் திகதிகளில் (2004) பிரான்சின் கார்கெஸ் சார்சல் நகரில் நடைபெற்றுள்ளது. இச் சந்திப்பு விஜியினால் ஒழுங்கு செய்யப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. இச் சந்திப்பில் பிரான்ஸ், ஜெர்மனி, சுவிஸ், லண்டன் போன்ற நாடுகளிலிருந்து பெண்கள் வந்து கலந்து கொண்டனர்.. பெண்ணிய சிந்தனை நோக்கிலான கருத்தாடல்கள், அனுபவப் பரிமாற்றங்கள், விவாதங்கள் என்பன இச் சந்திப்பில் இடம்பெற்றது. விஜி தலைமை தாங்கினார். நிகழ்ச்சிகள் இரு நாட்கள் நடைபெற்றது. முதலில் புரிந்துணர்வுக்கான சுயஅறிமுகத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. விஜி தனது தலைமை உரையின்போது இரண்டாவது தடவையாக பிரான்சில் நடைபெறும் இப் பெண்கள் சந்திப்பு 14 வருடமாக தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது என்றும், இச் சந்திப்பானது பெண்விடுதலை நோக்கிலான பெண்ணிய சிந்தனை கருத்தாடல்களுக்கும் அனுபவப் பகிர்வுக்கும் வழிவகுப்பது மட்டுமல்லாமல், பல புதிய பெண் எழுத்தாளர்களை ஊக்குவித்தும் வருகிறது என்றார். இப் பெண்கள் சந்திப்பானது தனது எட்டாவது பெண்கள் சந்திப்பு மலரை வெளியிட்டுள்ளதையும் குறிப்பிட்டார். இப் பெண்கள் சந்திப்புக்கு எந்த ஒரு அமைப்போ அல்லது நிறுவனமோ உதவி செய்வதில்லை என்ற செய்தியை நினைவுபடுத்திய விஜி, என்றும் பெண்களாகிய நாம் தனித்தே இதை செய்து வருகிறோம் என்பதை தனது தலைமை உரையில் தெரிவித்தார். அத்துடன் இப் பெண்கள் சந்திப்பை ஆரம்பித்த பல பெண்கள் இங்கு இல்லை என்றும் அது கவலைக்குரிய விடயம் என குறிப்பிட்டதுடன், என்றாலும் பல புதிய பெண்கள் கலந்து கொள்வதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம் எனக் கூறி பெண்கள் சந்திப்பை ஆரம்பித்து வைத்தார்.

முதல் நிகழ்ச்சியாக "புகலிட வாழ்வு-புதிய தலைமுறையினர் எதிர்நோக்கும் இரட்டைக் கலாச்சார சிக்கல்கள்" என்ற தலைப்பின் கீழ் தனது கருத்தை முன்வைத்து பரிமளா (பிரான்ஸ்) உரையாடினார். தமது ஆயிரமாயிரமாண்டு கால ஆணாதிக்கச் சீரழிவுகளை பெண்களின் தலையில் எத்தனை இலகுவாக சுமத்திவிட்டு தப்பித்துக் கொண்டார்களோ, அதேபோலத்தான் இன்று புலம்பெயர்

www.padippakam.com

பிள்ளைகளின் தலையிலும் அதே கருத்தை சுமத்துகிறார்கள். நம் நாட்டுக் கல்விமுறை, குழந்தை வளர்ப்பு, சூழல், குடும்ப உறவுகள், மரபுகள் என்பன புலம்பெயர் நாட்டு நிலைமையுடன் மாறுபட்டதென்பது தெளிவான ஒன்றுதான். ஆனால் சில பெற்றோர் நாம் எமது குழந்தைகளுக்காக என்னவெல்லாம் செய்கிறோம், இன்னும் செய்வோம் என சடப்பொருள்ரீதியான பார்வையை மட்டுமே முன்வைக்கின்றனர். ஆனால் வருங்கால, எமது குழந்தைகள் மீதான பாதிப்புக்கள் என்ன?. இளவயதினர் இரு வேறுபட்ட உலகில் வாழ்பவர்கள். இங்குள்ள முறை அவர்களுக்கு இயல்பாகவே தெரிகிறது. ஆனால் பெற்றோர்களோ தடைகளை மட்டுமே விதிக்கின்றனர். இதனால் பிள்ளைகளினால் பெற்றோர்களைப் புரிந்து கொள்ள முடியாது குழம்பிப்போவது மட்டுமன்றி மனமுடைந்தும் போய்விடுகின்றனர். இதனால் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையிலான இடைவெளி கூடிக்கொண்டே போய்விடுகிறது.

பாலியல் மற்றும் உடல்ரீதியான மாற்றங்களை எளிமையாகச் சொல்லலாம். இங்கு பாடசாலையிலும் அவை சம்பந்தமாக கற்றுத்தரப்படுகின்றன. ஆனாலும் பெற்றோர்களாகிய நாம் எமது பங்கினையும் செய்யவேண்டும். பாலியல் பற்றிய விளக்கங்களை, விளைவுகளை விளங்கப்படுத்த வேண்டும் அது எமது கடமையும் ஆகிறது. பெற்றோர்கள் முதலில் அவர்கள் வாழும் நாட்டின் மொழியை ஓரளவுக்கேனும் தெரிந்துவைத்திருக்க வேண்டும். இல்லையேல் பிள்ளைகளுடனான பிரச்சினைகளை கதைப்பதற்கோ விளங்கப்படுத்துவதற்கோ இயலாது போய்விடும்.

அத்துடன் பெண் குழந்தைககளுக்கு தண்டனைகள், இறுக்கமான கட்டுப்பாடுகள் என துன்பங்களை கொடுத்து வருகின்றனர். 10 வயது தொடக்கம் 13வயது பாலியல் உணர்வுகள் அரும்பும் காலகட்டமாதலால் மாறுபட்ட பாலியல் பழக்கவழக்கங்களும் தோற்றம்பெறுகின்றன. இதை ஒருவகை அச்சம்கொண்ட மனோபாவத்தில் அணுகமுனையும் பெற்றோர்கள் கட்டுப்பாடுகள், சட்டதிட்டங்கள் என்பனவற்றை அதீதமாகப் பயன்படுத்த முனைகின்றனர். இது எதிர்மறையான விளைவுகளைக் கொண்டுவந்துவிடுகின்றது. நாங்கள் மிகவும் ஒடுக்குமுறைக்குள்ளான எங்களுடைய வாழ்க்கையை வாழ்வதற்கு முயல்கிறோம். அதாவது பிணி பிடித்த எமது அடிமைக் கலாச்சாரத்தில் இருக்கும் குழந்தைகளின் விடுதலை இன்று முக்கியம். நாங்கள் அந்த அடிமைக் கலாச்சாரத்தின் பரப்பில் இருந்துதான் இன்னும் செயற்படுகின்றோம், சிந்திக்கின்றோம். அந்தச் சுமையை எங்களுடைய சிறார்களுக்கூடாகத் தாங்கிப்பிடிப்பதற்கு முயல்வதன் காரணமாக தொடர்ந்த தொடர்கின்ற



படிப்பகம்

www.padippakam.com

போராட்டத்தில் அவர்களின் ஆளுமையை அழிக்கிறோம், அவர்களை வெறுப்படையச் செய்கிறோம். பெற்றோர்களாகிய நாம் ஒரு நல்ல உலகத்தை பிள்ளைகள் உருவாக்குவதற்கும், அவர்கள் சிந்திப்பதற்கும் வழிவகுக்க வேண்டும். என தனது கருத்தைக் கூறி முடித்தார். இதுசம்பந்தமாக கிட்டத்தட்ட ஒன்றரை மணிநேரம் நீடித்த கலந்துரையாடலில் பல பெண்களும் கருத்துக் கூறினர். கலந்துரையாடல் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. (விவாதத்தில் இடம்பெற்ற பல கருத்துக்கள் இங்கு தொகுக்கப்படவில்லை.)

அடுத்த நிகழ்ச்சியாக "தேடல் வலி" என்ற கவிதைத் தொகுப்பை தர்மினி (பிரான்ஸ்) விமர்சனம் செய்திருந்தார். இக் கவிதைத் தொகுதி ஜெயந்தி சாம்சன் இன் கவிதைகளின் தொகுப்பாகும். இந் நூல் பற்றி தர்மினி கூறுகையில், என்னதான் ஆண்கள் எழுதித்தள்ளினாலும் ஒரு பெண்ணின் மனநிலையை பெண்களால் மட்டுமே உணர முடியும். பிரச்சினையை சந்தித்தவர்களால் தான் புரிந்துகொள்ள முடியும். இல்லை என்றால் பாலின் நிறமும் கொக்கின் நிறமும் வெள்ளை என்ற கதையாகத் தான் இருக்கும். ஆண்கள் இக் கவிதைகளைப் படித்து விட்டு அதன் கருத்துக்களை உள்வாங்குவதும் பெண்கள் உணர்வது என்பதும் வித்தியாசம். இதன் அடிப்படையில் இவரின் கவிதைகள் பெரும்பாலானவை சந்தேகம், நட்பு பற்றியே கூடுதலாகப் பேசுகிறது என்றார். அதேநேரம் சில கவிதைகள் முரண்நிலையாக உள்ளன என்றும் விமர்சித்தார். தேடல் வலியில் வந்த கவிதைகள் சில உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விமர்சிக்கப்பட்டது.

தர்மினியின் விமர்சனத்திற்கு கருத்துச் சொன்ன பெண்கள், புலம்பெயர் நாட்டில் வாழ்பவர்கள் ஒரு கவிதைத் தொகுதியை வெளியிடுவதற்கு நிதி பிரச்சினையோ அல்லது தொழில்நுட்பப் பிரச்சினையோ இல்லை. ஆனால் இலங்கையிலோ அல்லது இந்தியாவிலோ வசதிவாய்ப்பு அப்படிப்பட்டதல்ல. நல்ல தரமான கவிதைகளை படைப்பவர்களால்கூட தமது படைப்புகளை தொகுப்பாக கொண்டுவருவதற்கு முடியாத நிலை உள்ளது. இந்த புலம்பெயர் நாட்டில் வாழ்பவர்கள் பலர் மற்றைய படைப்பாளிகளின் படைப்புகளை தேடி வாசிப்பதில்லை. அத்துடன் அவர்களால் வெளியிடப்படும் புத்தகங்களை இவர்கள் விமர்சனம் செய்வதுமில்லை. ஆகக் குறைந்தது மற்றவர்களின் படைப்புகளை வாசித்து தமது எழுத்துதிறனை வளர்த்துக் கொள்ளவும் இல்லை என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. ஜெயந்தி சாம்சன் பிரான்சில் வாழ்ந்து கொண்டிருப்பவர். அவரின் கவிதைத் தொகுதி மீதான விமர்சனம் பெண்கள் சந்திப்பில் நடைபெறுகிறது என்று தெரிந்தும் அவர் பெண்கள் சந்திப்புக்கு வருகை தராதது அவருக்கு இலக்கியத்தின் மேல் உள்ள அக்கறையை எடுத்துக் காட்டுகிறது என்றும் சில பெண்களால்



படிப்பகம்

www.padippakam.com

சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் ஊடறு என்ற தொகுப்பில் வெளிவந்த கவிதையே தேடல்வலி என்ற கவிதை எனவும் ஆனால் மற்றைய சஞ்சிகைகளுக்கு நன்றி கூறிய ஜெயந்தி சாம்சன் ஊடறு தொகுப்பை மறந்து விட்டார் என்றும் அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இந் நிகழ்ச்சியைத் தொடர்ந்து "பெண்கள் சந்திப்பு மலர்-2004? வெளியீடு இடம்பெற்றது. 170 பக்கங்களில் வெளிவந்துள்ள இம் மலரைப் பற்றிய ஓர் அறிமுகத்தை நான் செய்தேன். இந்த (8 வது) பெண்கள் சந்திப்பு மலரில் பல புதிய பெண் எழுத்தாளர்கள் எழுதியுள்ளார்கள் என்றும் பெண்கள் சந்திப்பு மலர் பெண்களுக்கு ஓர் எழுதுகளமாக இருந்து வருகின்றது எனவும் குறிப்பிட்டேன். பொருளாதாரப் பிரச்சினை மற்றும் கால நெருக்கடிகள் இருந்தும் அதையும் மீறி இச் சந்திப்புக்களை நடத்துவதோடு மட்டுமல்ல, பெண்கள் சந்திப்பு மலரையும் கொண்டு வருவதில் கடுமையாக உழைப்பதையும் பாராட்டியே ஆகவேண்டும் என்றேன். இந்த 8 வது பெண்கள் சந்திப்பு மலருக்கு ஆக்கங்களைத் தந்துதவிய பெண்களுக்கு நன்றிகூறி அறிமுகத்தை முடித்துக்கொண்டேன். முதல் பிரதியை தேவா வழங்க அதை ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் பெற்றுக்கொண்டார்.

அடுத்த நிகழ்வாக "சினிமாவில்-பெண்களும் பாலியல் பரிமாணங்களும்" என்ற தலைப்பின் கீழ் தனது கருத்துக்களை முன்வைத்த ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் இன்றைய தமிழ்ச் சினிமாவில் பெண்கள் எப்படி பயன்படுத்தப்படுகின்றனர் என்பதையும், அவர்களின் உடை, நடனம் , சண்டைக்காட்சிகள் என கேவலமான காட்சி முறைகளை நடைமுறைப்படுத்தும் இந்திய கனவுத் தொழிற்சாலையான தமிழ்ச் சினிமா என்ன கருத்தை மக்களிடையே கொண்டு வருகிறது என்றால் அது பூச்சியம் என்றும் கூறினார். வெளிநாட்டுக் காட்சிகள் கூடுதலாக காண்பிக்கப்பட்டாலும் சினிமாக்காரர்களின் கமரா குளியல் அறைகளையும் படுக்கையறைகளையுமே அதிகமாக சுற்றிவருகின்றன. ஆனால் சொந்த மண்ணையும் அந்த மண்ணின் வேர்களையும் கணக்கில் எடுக்காமல் தங்களது சுயலாபத்திற்காக சினிமாக்காரர்கள் இயங்கி வருவதுதான் இன்றைய பரிமாணமாக உள்ளது. இக் காலத்துப் படங்கள் பாய்ஸ், நியூ, ஆயுதம் போன்ற படங்கள் என்னத்தை மக்களுக்கு சொல்ல வருகின்றன. நியூ படத்தில் கதாநாயகியாக நடிக்கும் சிம்ரான் ஒரு காமவெறி பிடித்த பெண்ணாக சித்தரிக்கப்படுகின்றாள். எட்டு வயது சிறுவனுக்கு குழந்தை பிறக்கிறது. இப்படியாக படங்களை தயாரிக்கின்றார்கள். ஆனால் இந்த மக்கள் இதற்கு எல்லாம் ஆமாம் என்ற தலையாட்டலோடு நின்று விடுவதோடு உள்ளார்கள். இதே சினிமா நடைமுறையில் இவர்களால் வாழ்க்கையாகக் கொள்ள முடியுமா? என்று கேள்வியும் எழுப்பினார். இந்தப்



படிப்பகம்

www.padippakam.com

படங்களை பார்த்து ரசித்துக்கொண்டிருக்கும் தமிழ்நாட்டு, புலம்பெயர் மக்கள் அதையே தமது வாழ்வாக ஏன் கொண்டு வருகின்றனர் இல்லை என்றும், பல உதாரணங்களுடன் அவர் தனது கருத்தை வெளியிட்டார். கலந்துரையாடல் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. இத் தலையங்கத்தில் எல்லோரும் தமது கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

இதனையடுத்து "வன்முறையை எதிர்கொள்ளல்" என்ற தலைப்பின்கீழ் "கோலா" அமைப்பின் செயற்பாடுகளை கிருசாந்தி (பிரான்ஸ்) அறிமுகம் செய்தார். இவ் அமைப்பின் மூலம் பெண்கள் எப்படி செயற்படுகிறார்கள் என்றும் மனித உரிமைகள் எப்படி மீறப்படுகின்றன, அது தனியே ஆண்களால் மட்டுமல்ல பெண்களாலும் தான் மீறப்படுகின்றன என்று கூறியவர் உதாரணமாக சந்திரிகா அம்மையார் மனித உரிமைகளை மீறுவதுமட்டுமல்ல, உணர்வு பூர்வமாக சமாதானத்தையும் முன்னெடுத்துச் செல்லவில்லை என்றும் கூறினார். இதற்கு குறுக்கிட்ட பல பெண்கள் சந்திரிகா அம்மையார் என்று சொல்வதில் தமக்கு உடன்பாடு இல்லை என்றும், சந்திரிகாவின் கருத்துக்களிலோ அல்லது அரசியலிலோ தமக்கு உடன்பாடு இல்லை, ஆனால் அம்மையார் என்ற வார்த்தையை ஏன் பாவிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதுடன் ஏன் அவர் இலங்கையின் ஜனாதிபதி என்று கூறக் கூடாது என்றும் கேட்டுக்கொண்டனர். இதில் இலங்கை அரசியலும் கலந்துரையாடப்பட்டது.

அடுத்து நடைபெற்ற நிகழ்வாக "ஓவியங்களில் பெண்கள்" என்ற கருத்தின் கீழ் ஓவியை அருந்ததி உரையாடினார். நன்கு தாயாரிக்கப்பட்ட தனது கருத்துக்களை அவர் முன்வைத்தார். பெண்கள் குறிப்பிட்ட சில துறைகளில் பிரபல்யமாதல் ஏனோ கடினமாகிவிடுகின்றது. கலைகளில் பெண்ணின் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் பெருமளவில் இருந்தாலும் கலை வரலாற்றில் பெண்களின் பெயர்களை தேடிக் கண்டுபிடிக்க வேண்டியதாகவே உள்ளது. ஒவ்வொரு பெண்களின் பங்களிப்பும் இருந்துவந்த போதும் அவர்களின் பெயர்கள் ஏனோ வரலாற்றில் பதிவாக்கப்படாமலேயே போய்விட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. முதன்முதலில் பெண் ஓவியர்கள் மறுமலர்ச்சிக் காலத்தில் இத்தாலிலேயே அடையாளம் காணப்பட்டனர். ஆனாலும் நவீன காலங்களில் பெண்களிற்கு ஓவியத்துறையில் முற்றுமுழுதாக கற்றுக் கொள்வதற்கு வாய்ப்புக்கள் அமைந்திருந்தாலும் முன்னர் குறிப்பிட்டது போன்று திருமணத்தால் ஏற்படும் சமூக நிலவரங்கள் பெண்களுக்கேயான உடற்கூற்று காரணங்கள் மற்றும் தாய்மை போன்ற காரணிகள் பெண்களை முழுமையாகக் கலைத்துறையில் ஈடுபடுத்திக் கொள்ள முடியாமல் செய்துவிடுகின்றது. ஆயினும் தேவாலயங்களை மையமாகக் கொண்டு கலை வளர்ந்த காலப்பகுதியில் கன்னியாஸ்திரிகள் மட்டுமின்றி தனிப்பட்ட பெண்களும்



படிப்பகம்

www.padippakam.com

ஆண் ஓவியர்களுக்கு ஈடாக ஓவியங்களை படைத்திருக்கின்றனர் என்பது பெண்களுக்கு பெருமை தரும் விடயமே. பிற்பட்ட காலங்களில் அதாவது ஓவியக்கல்லூரிகளில் பெண்கள் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் மறுக்கப்படுவதுடன் ஆண்களின் நிர்வாணத் தோற்றத்தை வரைவதிலும் தடைவிதிக்கப்படுகின்றது. இந் இடர்ப்பாடான சூழலில் பெண்கள் தம்மை இத்துறையில் ஆண்களிற்கு ஈடாக வளர்த்துக் கொள்வதென்பது சாத்தியமற்றதாகவே போகின்றது. ஆனாலும் காலப்போக்கில் ஓவியத்தின் கருத்துக்கள் மாறிச் சென்றிருப்பதுடன் பெண் ஓவியர்களின் பார்வையில் பெண்கள் வித்தியாசமான முறையில் சித்தரிக்கப்பட்டிருப்பதையும் காணலாம் என்று தனது கருத்துக்களை முன்வைத்த அருந்ததி, அவ்வாறான சில ஓவியங்களையும் எடுத்துக்காட்டியுமிருந்தார். ஓவியம் பற்றிய வாசிப்பே எம்மிடையே அருகியிருக்கும் நிலையில் ஓவியர் அருந்ததியின் கலந்துரையாடல் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

எழுத்தாளர், பத்திரிகையாளர், மனித உரிமை ஆர்வலர், குறுந்திரைப்பட இயக்குநர், சமூக நலப் பணியாளர் என்று பல்துறைகளிலும் இயங்கிக் கொண்டிருக்கும் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் "நாளைய மனிதர்கள்" என்ற நாவல் அண்மையில் வெளிவந்துள்ளது. நவீன கலையில் நிகழ்கால வாழ்வின் நெருக்கடிகளைச் சித்தரிக்கும் முறையில் நாவல் என்ற படைப்பு தன்னை மேம்படுத்திக் கொள்கிறது. புறச்சூழல் பற்றிய விபரிப்புகளைக் காட்டிலும் நெருக்கடிகள், அழுத்தங்கள் போன்ற அம்சங்கள் (மனிதர்கள் தமக்குள் நடத்துகின்ற மனப் போராட்டங்கள்) நாவல் என்ற கலைக்கு வளம் சேர்க்கின்றது. நாவல் என்பது ஒரு கலை மட்டுமல்ல. ஒரு கல்வியாகவும் மனித இனம் குறித்த ஆய்வாகவும் செயல்படுகின்றது. குடும்ப அமைப்பு முறையினுள் இருக்கக் கூடிய பிரச்சினைகள், கருச்சிதைவு என்பது ஒரு பெண்ணால் எப்படி தீர்மானிக்கப்படுகிறது, கூட்டு அமைப்பு முறையினால் ஏற்படும் சிக்கல்கள், அக் குடும்ப அங்கத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றவற்றையும் எடுத்துக் கூறியுள்ளார் நாவலாசிரியர். நாளைய உலகத்திற்கு நம்மையும் தயார்படுத்திக் கொள்வதற்காக இந் நாவலை வாசிக்கலாம் எனவும் கருத்துக் கூறப்பட்டது. இந் நாவலில் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் ஐரோப்பியர் என பல பாத்திரங்கள் வந்து போகின்றன. இந் நாவலை பலர் வாசிக்காததினால் கருத்துக்கள் பரிமாறப்படவில்லை. அதனால் படைப்பாளி என்ற வகையில் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தை கதையின் சாரம்சத்தை கூறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அவர் அந் நாவலின் சாரம்சத்தை விளக்கினார். அவர் கதை சொன்ன விதம் மிகவும் பிடித்தமானதாகவே இருந்தது. நாவலை கட்டாயம் வாசிக்க வேண்டும் என்ற துடிப்புடன் பலர் காணப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

இதனைத் தொடர்ந்து சுமதி ரூபனின் மனுசி, சப்பாத்து, உஷ், மனமுள் உட்பட ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் (ஈழப்போராட்ட ஆரம்பகாலங்களில் புலம்பெயர்வு பற்றிய) விவரணப் படமும் காட்டப்பட்டது. சுமதி ரூபனின் படங்களில் ஒன்றைத் தவிர மற்றையவை அவரது கவிதைகளையும் சிறுகதைகளையும் அடிப்படையாகக் கொண்டு படமாக்கப்பட்டுள்ளது என்ற செய்தி பரிமாறப்பட்டது. சப்பாத்து, ஏற்கனவே செருப்பு என்ற குறும்படத்தின் சாரம்சம் ஆக இருக்கின்றது என்றும் அதில் நடித்த அந்தச் சிறுவனின் நடிப்பு நன்றாக உள்ளதாகவும் கருத்துக் கூறப்பட்டது. மனுசி குறும்படம் எல்லோரையும் கவர்ந்த படமாகவே இருந்தது. சாதாரணமாக அன்றாடம் பெண்கள் எதிர்நோக்கும் நிகழ்வாகவே மனுசி வலம்வருகிறாள். இதுவரை காலமும் ஆண்களிடமிருந்து ஆணாதிக்க சிந்தனையில் எடுக்கப்பட்ட பல குறும்படங்களுக்கு மாற்றாக பெண்நிலையில் நின்று பெண்களால் படைத்துக்காட்ட முடியும் என்பதை சுமதி ரூபன் நிரூபித்துள்ளார் என கருத்துக்கள் கூறப்பட்டன. (இதேநேரம் லண்டனில் நடைபெற்ற குறுந்திரைப்பட விழாவின்போது சிறந்த நடிகையாக சுமதி ரூபன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது இங்கு குறிப்படத்தக்கது.)

ஒவ்வொரு நிகழ்ச்சிகளின் முடிவிலும் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. அதில் பெண்களது பிரச்சினைகள் பெண்கள் செய்ய வேண்டியவைகள் பற்றிப் பேசப்பட்டன பெண்களுக்கு தனியான சந்திப்புக்கள் மனம்விட்டுப் பேசுவதற்கான உளவியல் சந்தர்ப்பத்தை வழங்கும் எனவும், பெண்கள் அப்போதுதான் ஆண்நோக்கின் இடையீடற்ற கருத்துக்களில் சுதந்திரமாக வளரமுடியும் என்றும், எதிர்ப்புக்களை எதிர்கொள்வதற்கு பக்குவம் வரும் என்றும் கருத்துக்கள் விரித்துக் கூறப்பட்டன. பெண்கள் சந்திப்பானது மிகவும் பயனுள்ளதாக அமைந்தது எனவும் ஏன் இப் பெண்கள் சந்திப்பை 6 மாதத்திற்கு ஒருமுறை நடத்தக் கூடாது எனவும் கலந்து கொண்டவர்கள் கேள்வியும் எழுப்பியுமிருந்தனர். அடுத்த பெண்கள் சந்திப்பு 2005 ம் ஆண்டு லண்டனில் நடைபெறவுள்ளது.

ஓவியை அருந்ததி, சிறுமி ஆரதியின் ஓவியங்கள் முதல்நாள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. அவை பெரும் வரவேற்பைப் பெற்றன.

அத்துடன் ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண்களின் அவலநிலையைச் சித்தரிக்கும் பிரசுரமொன்று விநியோகிக்கப்பட்டது.

06.112004



படிப்பகம்

www.padippakam.com



ஓவியம் : வாசுகி




படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



கமலா வாசுகி – இலங்கை

# ஆதித்தாய் ஓடிக்கொண்டிருக்கிறாள்.

அவள் கால்களுக்கிடையால் வழியும் உதிரம் மண்ணில் திரள அவள் அதைக் கடந்து ஓடிக்கொண்டிருக்கிறாள். அவள் சிந்தும் உதிரத்திலிருந்து தோன்றியவர்கள் அவள் பின்னால் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ஆதித்தாய் ஓடிக்கொண்டிருக்கிறாள். தன் முன் ஓடிக் கொண்டிருக்கும் குறியில் கண்ணாகவும், தன் வழி நடக்கும் மக்களில் கருத்தாகவும் அவள் ஓடிக் கொண்டிருக்கிறாள்.

நீண்ட காலத்துக்குமாக அவள் வயிறு உப்பியிருந்த காலங்களில் திரண்டு சேர்ந்திருந்த குருதி உதிரும் போதில் உதிர்ந்தவர்களே தாங்கள் என்பது அவர்களுக்குத் தெரியும்.

அந்த உதிரம் புனிதமானது. மனிதர்களைத் தோற்றுவிப்பது. அவள் வயிறு மந்திரத் தன்மை வாய்ந்தது. அது சிந்திய உதிரம் வணக்கத்துக்குரியது. நோய்



படிப்பகம்

www.padippakam.com

தீர்க்க வல்லது.

அதன் வர்ணமே அர்ச்சனைக்குரியதாயிற்று.

- - - - - - - - - - -

முன்னால் ஓடும் எருமையைக் கொன்று அனைவரும் பசியாற வேண்டும்.

- - - - - - - - -

அன்றொரு நாள் வேட்டையில் கண்டெடுத்து வந்த எருமைக்குட்டி மனிதக்குட்டிகளுடன் விளையாடி வளர்ந்திருந்தது. அதன் குட்டிகள் பாலருந்திய மடியில் மனிதக் குட்டிகளும் பாலருந்தின.

அதைக் கொன்று தின்ன ஆதித் தாய் விடாள். வேட்டையில் அகப்படும் விலங்குகளே போதும். கூட இருப்பதை கொல்லும் பேராசையற்றவள் அவள்.

அவள் தொட்ட மரங்கள் கனி தரும். அவள் கை காட்டும் செடிகள் கிழங்கு தரும். அவள் மார்பு அமுது தர, அவள் வயிறு மனிதரைத் தர அவள் வாழ்ந்தாள்.

அவள் வாயெழுப்பும் ஒலிகள் அவர்களைக் கட்டிப் போட வல்லது. அவள் கையெழுப்பும் செயல்கள் அவர்களை வழிநடத்த வல்லது. அவள் தொடுகை குணப்படுத்த வல்லது.

ஓய்வற்றிருந்தாள் அவள். நட்சத்திரங்கள் வழிநடத்த நடப்பாள், சலசலத்த ஓடைகளில் நீரருந்தித் திளைப்பாள்.

மல்லாக்கக் கிடந்து உடல் காய்வாள்.

- - - - - - -

செம்மண்ணும் வெண்மண்ணுமாக ஒரு மிருகம் மண்ணில் பாய்கிறது. தான் பார்த்து வந்ததை மண்ணில் வரைவாள் அவள். அதில் புரண்டு விளையாடுவார்கள் குழந்தைகள்.
எருமைத் தோலணிந்து ஒருவன் பாய வேட்டைக்காட்சியைக் கற்றுக் கொடுப்பாள் ஆதித்தாய்.



படிப்பகம்

www.padippakam.com

அவள் சிரிப்பு குளிரில் வெம்மையையும், வெம்மையில் மழையையும் தரவல்லது. சிரிப்பில் நிலவெறிக்க அவள் வாழ்ந்தாள்.

- - - - - - -

அவள் எறிந்த கொட்டைகள் முளைவிட்டன. மேலும் கொட்டைகளை நட்டு வேலியிட்டார்கள் அவள் மக்கள். அவள் வளர்த்த எருமைகள் குட்டியீன்றன. மேலும் மிருகங்களைப் பிடித்துக் கட்டி வைத்தார்கள் அவள் மக்கள்.

உணவு அவர்கள் கட்டுப்பாட்டில் வந்தது.

அதைத் தேடி இன்னுமொரு மனிதக்கூட்டமும் வந்தது.

ஆதித்தாய் பல பிள்ளைகளை இழக்க மனிதனின் முதற் போர் தொடங்கிற்று.

- - - - - - - -

சாத்தான் பிறந்தான்.

- - - - - - -

தன் பருத்த உடல் பாறையில் சாய்த்து ஓய்ந்திருந்தாள் ஆதித்தாய். தன் மக்கள் அருகிருக்கும் நம்பிக்கையில் கண்ணயர்ந்தாள்.

போரில் இரத்தம் சுவைத்துத் திளைத்திருந்தனர் அவள் மக்கள். அவர்கள் தோள்கள் திணவெடுத்தன. தம்மிடமுள்ள உணவைக் காக்க தமக்கேயாக மனிதர் வேண்டும் என உறுமிக் கொண்டிருந்தனர் அவர்கள்.

பாலும் குட்டிகளும் தரும் எருதைக் கட்டினான் மகன். கனிதரும் செடிகளுக்கு வேலியிட்டான் பேரன். ஆதித்தாயையும் அவளீன்ற பெண்களையும் சுற்றித்திரையிட்டுச் சட்டங்களியற்றினான் கொள்ளுப் பேரன்.

மனுவும் இன்னும் பல பேரன்களும் பிறந்தனர். ஆதித்தாய் பலமிழந்தாள்.

- - - - - -

அவன் சொன்ன போதுகளில் அவன் சொன்னவர்களுக்காக மட்டுமே நான் தொட்ட மரங்கள் கனி தரும், என் கரம் நட்ட செடிகள் கிழங்கு தரும்.



படிப்பகம்

www.padippakam.com

அவன் சொன்ன போதுகளில் அவனுக்காக மட்டுமே என் மார்பு அமுது தரும். என் வயிறு மனிதரைத் தரும்.

என் வாயெழுப்பும் ஒலிகள் அவர்களைக் கட்டிப் போட வல்லது. ஆதலால் என் வாயைக் கட்டினார்கள். என் தொடுகை குணப்படுத்த வல்லது. அது அவனுக்கு மட்டுமேயாயிற்று. என் கையெழுப்பும் செயல்கள் அவர்களை வழிநடத்த வல்லது. ஆயின் அவர்கள் எதிர்த்திசை நடந்தனர்.

என் வயிறு மந்திரத் தன்மை வாய்ந்தது. அது சிந்திய உதிரம் வணக்கத்துக்குரியது. அது நோய் தீர்க்க வல்லது.

ஆயின் மனிதனின் உலகில் அது தீண்டத்தகாததாயிற்று. அதன் வர்ணம் மட்டுமே அர்ச்சனைக்குரியதாயிற்று.

*நான் பெண்கள் ஆண்களை ஆதிக்கம் செய்யவேண்டுமென்று விரும்பவில்லை. ஆனால் அவர்கள் தங்களை ஆதிக்கம் செய்யவேண்டுமென்றே விரும்புகிறேன்.*

மேரி வொல்ஸ்டோன்கிராப்ட்
**Mary Woollstonecraft**




படிப்பகம்

www.padippakam.com

## பாமாவின் கவிதைகள்

# எரிப்பதற்காய் பிறந்தவள்

பஞ்சும் நெருப்பும்
பக்கம் பக்கம் கூடாதாம்
பக்கத்தில் இருந்தால்
பற்றிக் கொள்ளுமாம்
பெண்ணவள்தான் பஞ்சாம்
ஆண்அவன் நெருப்பாம்
ஆணுக்குள் அவள் அய்க்கியமாம்
அவளுக்கென்றில்லை ஒரு தனித்துவமாம்
அவள் அவளல்ல; அவள் அவளுக்குமல்ல
அவள் எரிவதற்காய் பிறந்தவளாம் . அவள்
எரிப்பதற்காய் பிறந்தவள்
என்றைக்குப் புரிவீரோ?





படிப்பகம்

www.padippakam.com

# கல்விக் கனா



பள்ளிக்கூடம் போகச் சொன்னேன்
பசியாறச் சோறுதிங்க
பாவிமகா படுச்சுப்போட்டு
பாக்கூட பண்ணிப்போட்டா.
பாசுபண்ணி போட்டதினால்
பலகொடும வந்துபோச்சே
காசுபணம் இல்லாதவ
பாசுபண்ணி ஆவதென்ன?
பள்ளிக்கூட ஆபிசுல
அள்ளிப்பணங் கட்டவேணும்
பாடப்புத்த கங்களோட
பலதினுசு நோட்டும் வேணும்
அம்புட்டையும் அள்ளிப்போக
அறுந்துபோகாப் பையும் வேணும்
இம்புட்டையும் குடுத்தாத்தான்
இவாபோவா பள்ளிக்கூடம்.
எம்புட்டுத்தான் வேலசெஞ்சும்
எதையும் வாங்க முடியலையே
என்னப்போலக் கஷ்டப்படக்
கூடாதுன்னுதான் உன்ன
ஏழு எட்டு படிக்கவச்சு
ஏத்தங்கான ஆசவச்சேன்
ஆசமட்டும் போதாதம்மா
ஆஸ்தியுந்தான் வேணுமம்மா.
யூ னிபாரம் போடவேணும்
கேவிக்கேவி அழுதுசொன்னா

காணிநெலங் கையிலில்லை
ஓழச்சு ஓழச்சு ஓடாத்தான்
தேஞ்சுமாஞ்சு போனாலும்
ஓன்னநானு பழக்கவச்சு
ஓசந்தவாளா ஆக்கிவைப்பேன்.
கழனிக்காட்டு வேலவேணாம்
கண்ணேநீயும் கற்கவேணும்
ஓன்னாச்சேந்து நிக்கவேணும்
ஓலகத்தையே மாத்தவேணும்
போராட்டந்தான் வாழ்க்கையின்னு
புரியவேணும் புரட்சிதோணும்
புதிய ஓலகம் படைக்க வேணும்
புதுமைப் பெண்ணா நடக்கவேணும்

பாமா . இந்தியா.



படிப்பகம்

www.padippakam.com



# வரைனைக் கடக்கும் பறவை: இந்திய இலக்கியப்பரப்பில் பெண்ணின் தடம்

குட்டி ரேவதி, இந்தியா

எப்பொழுதுமே உலக இலக்கியம் என்பது பெண்ணின் படைப்புகளைப் புறக்கணித்த வெளியாகவும் அதன் மூலம், அதன் கருப்பொருட்களின் அர்த்தமிழக்கச் செய்வதாகவும் இருந்திருக்கின்றது. அதிகார வடிவமும் போர் என்ற ஆயுதமும் கையேந்திய ஆண்களின் அதிகாரத்தைக் கற்பனை செய்யும் வெளியாக அவர்களின் படைப்பிலக்கியம் மாறியது. வெள்ளைநிற நாடுகளல்லாத மற்ற நாடுகளின் இலக்கியங்களும் கால ஓட்டத்தில் அழிந்துகொண்டேயிருந்தன. அதிகார அரசுக்கும், வர்க்கத்துக்கும் உள்ளான **சமூகத்தின் பண்பாட்டையும் வரலாற்றையும் மீட்டெடுப்பது எவ்வளவு அவசியமானதோ, அவ்வாறே பெண் பயணித்த வெளிகளையும் நினைவுபடுத்துவது அவசியமானது.**

இந்தியா என்ற தேசியக்கோட்பாட்டின் மாயையை உடைக்கும் தீவிரமான அதிர்வுகளை ஒடுக்கப்பட்டிருக்கும் சமூகம் எழுப்பத் தொடங்கியுள்ளது. பெண்ணின் இலக்கியத்தடத்தை மீட்டெடுக்க இந்தியா என்ற நிலப்பரப்பு ஒரு பொதுவான வெளியாக நமக்கருகே விரிந்திருப்பது மட்டுமே இக்கட்டுரையை இந்தியா என்ற எல்லை வகுத்துக்கொண்டதன் காரணம். நதிகளை இணைப்பதாலும் தேசியம் பேசும் பண்பாட்டை வளர்த்தெடுப்பதாலும் எழும் பொய்யான ஒருமைப்பாட்டுணர்வுக்கும் இக்கட்டுரையில் நோக்கும் பெண்ணின் பாரதத்தும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இந்திய அளவில் வேறுபாடுகள் நிறைந்த மாநிலங்களையும் அதிகாரப்பெரும்பான்மையால் ஒன்றிணைக்கும் அரசியலையும் பெண்கள் தங்கள் கருத்தியல் ரீதியாகக் காலந்தோறும் எதிர்த்து வந்ததின் பதிவுகள் மிகவும் வன்மையானவை. படைப்புகளுக்குள் உரத்த தம் குரலையும்



படிப்பகம்

எதிர்க்கருத்தியலையும் தாங்கள் பயணம் செய்யாத பரந்த வெளிகளையும் மடித்துவைத்தனர், பெண்கள். இந்திய அளவில் முதலாய் எழுந்த பெண்ணின் படைப்பு என்பது, புத்தத்தின் வருகையோடு எழுந்ததாய் இருந்தது. இதற்கு அடிப்படையான காரணம் ஒரு சமயம், பெண்ணுக்கு வழங்கிய வாழ்க்கையின் சிந்தனையின் 'விட்டுவிடுதலை'யைப் பெண்கள் பரிபூரணமாக உணரத்தொடங்கியதே.

சமத்துவத்திற்குப் புத்தசமயம் அளித்த முக்கியத்துவம், பெண்களையும் தமது சிந்தனையை எழுதும், நினைவைப் பதிவு செய்யும் வெளிக்கு அழைத்துவந்தது. வரலாற்றில் பெண்ணிலக்கியப்படைப்பின் முதல் தொகுப்பாய் உருவானது, கி.மு. ஆறாம் நூற்றாண்டின் ஆரம்பக்கட்டமாகும். இல்லறத்தின் பிணைகளுக்குள், பால்நிலை அடிமைத்தனத்திற்குள் நசுங்கிப்போன சிந்தனைகளைச் சமயத்தின் வழியாகத் தப்பிப்பதன் மூலம் திடப்படுத்திக்கொண்டனர். பெண்ணின் முதல் கட்ட எழுத்து, சுயவிடுதலையைப் பற்றியதாய் எழுந்தது. பின், பெண்மையையும் பாலியலையும் கொண்டாடுவதாக மாறியது. தமிழின் சங்கக்கவிஞர்கள் பலரும் கி.மு. 100 முதல் கி.பி. 250க்கு இடைப்பட்ட காலத்தில் 'பெண் உடல்' என்பதன் அர்த்தங்களை வெகு அளவில் சிந்தனைத்தளத்திற்கு விரித்தார்கள். அந்தக் காலகட்டத்தில் கட்டுண்டு இறுகிக்கிடந்த உடல்வெளியை விஸ்தரித்து, காமத்தில் பெண் உணரும் இன்பத்தை எழுதுதல் மிகவும் துணிவாக உணரப்பட்டது. இது சிந்தனைகளில் படரும் பாலியல் விடுதலையை எதிரொலித்தது. மேலும் சங்ககாலப் பெண்கவிதைகள் உடலின் இச்சையினையும் உடலன்பின் மீதான ஈர்ப்பையும் போரின் மடமையையும் ஆண்களுக்கான மரபாய்ப் போர் மாறியதையும் சுயஅனுபவங்களையும் எழுதினர்.

வெள்ளிவீதியாரால் 'காமம் பெரிதே களைஞரோ இலரே!' என்று பாடமுடிந்தது. இன்றும் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்தாம் மிகவும் பழையதும் சமயச்சார்பற்றதுமான ஆவணமாய் இருக்கின்றன.

இந்தியாவின் அரசியல் நிலைமையால் பண்பாடு, மொழி, சமூகவடிவங்கள் மாறுதலும் சிதைதலும் வேறுபடுதலும் உருப்பெறுதலும் இருந்தபோதிலும் பெண்ணிலக்கியம் என்பது இதனூடாகச் சிதையும் பெண்மையை, பெண் உடலை, அனுபவவெளியை முன்வைப்பதாக இருந்தது. அதற்கான மறுப்பையும், எதிர்ப்பையும் மாற்றையும் மொழியாக்கிய பெண்களுக்குக் கட்டுகள் மிகுந்த சமூகவெளியிலிருந்து விமர்சனங்கள் குவிந்துகொண்டேயிருந்தன. மேற்கூறிய இந்த நெருக்கடி, பெண்களுக்கெல்லாம்

www.padippakam.com

பொதுவானதாகவும் ஆணாதிக்க முகமுடைய சமூகத்தைக் கேள்விக்குள்ளாக்குவதாகவும் இருந்தது.

போரை மொழி அதிக வன்மையுடையதாக மாற்றும் சூழ்நிலையைப் பெண்கள், தொடர்ந்த தமது செயல்பாடுகளால் உருவாக்கியுள்ளனர்.

பெரும்பாலும் பெண்ணிலக்கியத்தின் முதல் தொனி கவிதை வடிவமெடுத்துள்ளது. காரணம், கவிதை காலத்தின் துலாக்கோலாக இயங்குவதன் மூலம் வரலாற்றையும் அரசியலையும் வார்த்தைகளால் பரிசீலனை செய்ய முயல்கிறது. ஒடுக்குமுறையை, வரிகளுக்கிடையே ஒளிந்திருக்கும் ஒற்றை வார்த்தையாய் தீயெழுப்புகிறது.. சிந்தனையின் இயங்குவெளியும் உணர்வு ஓங்கியெழும்பும் காலமும் இணையும் ஒரு புள்ளியில் கவிதை வெடிக்கிறது, ஒரு பெரும் உணர்ச்சியாக. மெல்ல மொழியின் கிளைகளாக விரிந்து விசாலமெடுக்கிறது. பெண்களின் அடக்கி வைக்கப்பட்ட உணர்வுகளுக்கு மொழி உற்சாகமான ஒரு பானமாகிறது.

பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒரே ஒரு பெண்ணாக உருவான ஆண்டாள், 5—9 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையே தென்னிந்தியாவில் மலர்ந்த பக்தி இயக்கத்தின்போது கவிதை மொழியானவர். ஆண்டாள், அவரது கடவுள் மீதான பக்தியை விட மிகுதியும் அவரது கவிதைகளால் தான் குறிப்பிடப்படுகிறார். அவை பெரும்பான்மையும் சுயசரிதைத் தன்மைகளைக் கொண்டிருக்கின்றன. தான் ஒரு முதிர்ச்சியுறாத பெண்ணாகவும், கடவுளைச் சேர விலங்குகள் ஈடான எல்லோரின் உதவியையும் நாடும் பெண்ணாகவும் குறிப்பிடப்படுகிறார். அவரது திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற இரு படைப்புகளுமே இலக்கிய, தத்துவ, கலாப்பூர்வமான எல்லா வடிவங்களிலும் நிறைவடைந்துள்ளது.

**இந்திய மொழியின் எந்த மொழியினையும் விட தமிழ்மொழியில் பெண்களின் இலக்கியத்தடம் மிகவும் அழுத்தமானது.**

நாற்புறமும் கண்ணாடிகள் பதிக்கப்பட்ட சுவருடைய அறைக்குள் நுழையும் ஒருவரின் பிம்பங்கள் பெருகுவதைப் போன்ற தன்மையுடையவர், ஔவை. இலக்கியம், மருத்துவம், தத்துவம், அரசியல் என்ற எல்லா தளங்களின் வழியாகவும் சமூகத்தைப் புரிந்துவைத்திருந்த ஔவை, ஒரு பெண்ணுக்கு மறுக்கப்பட்ட பிரயாண அனுபவங்களையும் நாடோடியாக அலைந்து பெற்றிருந்தார். பெண்மைக்கான குணங்களென இவர் சித்திரிப்பவை, முற்றிலும் வேறானவை.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்ச்சமூகத்தின் எல்லா திசைகளிலும் தொங்கும் ஆணாதிக்கக் கண்ணாடிகளில் ஔவை, ஔவையாராகிறார்.

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் அக்கம்மாதேவி என்ற கன்னடக்கவி மிகவும் கலகம் நிறைந்த அகநிலைக்கவிதைகளையும் உலகை ஆக்கிரமித்திருந்த ஆணாதிக்க ஆளுமையை எதிர்க்கும் கவிதைகளையும் வழங்கினார். மெய்ஞ்ஞானம் தேடியலைந்தவரின் கவிஉணர்ச்சியும் மொழியினைத் தேடி ஒரு கொடியைப்போல படர்ந்தது. புத்தசமயம் எல்லையழித்துப் பரவிக்கொண்டேயிருந்ததும் இஸ்லாமிய சமயத்தை மக்கள் விரைவில் ஏற்றுக்கொள்வதாயும் இருந்தநிலை, இந்து மதத்தை அதன் சாதிக்கட்டுமானத்தை மீண்டும் புனரமைக்கப் பணித்தது. இதனால் தீவிரமெடுத்த பக்திஇயக்கம் ஆண்களையும் பெண்களையும் இதில் இணையவைத்தது. பக்தியின் உணர்வு பொங்கி வழிய அதைச் சொற்களால் திரட்டுவது, பெண்களின் உணர்வுவெளி உளைச்சலை மட்டுப்படுத்துவதாக இருந்திருக்க வேண்டும். இது கவி அக்கம்மாதேவியின் எழுத்தில் தெளிவாகப் புலனாகிறது. தனது உடல்படிமத்தை அவரது எழுத்தில் உபயோகப்படுத்தும் தொனி, சமூகத்தில் பெண்ணின் உடலைப் பண்டமாயும் கேலியாகவும் நோக்குபவர்களைப் போருக்கழைப்பதாக இருந்தது. 'சகோதரனே, அலை போன்றெழும் இந்த முலைகளின் அழகினாலும் பொங்கிவழியும் இளமையினாலும் இழுக்கப்பட்டு நீ, வந்திருக்கிறாய். நான் பெண்ணல்ல, சகோதரனே, வேசியுமல்ல' என்று எழுதினார். முற்போக்கான அகநிலையினை, மறுபிறப்பெடுத்த இந்து சமயத்தின் புரிந்துணர்வையும் பக்திமரபையும் வெளிப்படுத்தவே தனது பாலுறுப்புகளைப் பயன்படுத்தினார். 'ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்றல்ல, நான்கல்ல, எண்பத்திநானூறு ஆயிரம் யோனிகள் வழியாக நான் வந்திருக்கிறேன்..... இன்பத்தையும், துன்பத்தையும் பேராவலுடன் குடிக்கும், வெறுக்கப்படும் யோனி வழியாகத்தான் நான் வந்திருக்கிறேன்........'
'ஒரே ஓர் ஆணின் பணத்தை எடுத்துக்கொள்ளும் இந்த வேசி வியாபாரத்தில், என்னால் இரண்டாவது ஆணை ஏற்றுக்கொள்ள முடியாது. ஐயா, நான் அவ்வாறு செய்தால் அவர்கள் என்னை நிர்வாணமாக நிறுத்திக் கொன்றுவிடுவார்கள், ஐயா'. பக்திமரபின் கவிஞரான சுலே சங்கவ்வா, நவீன மெய்யுணர்வால் புனிதத்தை அதிர்ச்சியுறச்செய்யும், ஒரு வேசியைப்போல எழுதும் அவரது சமூகப்பொய்மையைப் பற்றிய உளப்பாட்டை, அவரது உயிரோடு இருக்கும் இந்த ஒரே ஒரு கவிதையின் மொழி, விளக்கப்போதுமானது. அதற்குப் பின்புவந்த ஒரு நூற்றாண்டுப் பெண்கவிதைகளும், பெண்களின் முதுகை மடிக்கும் பொருளாதாரச்சுமையையும்



படிப்பகம்

www.padippakam.com

சமயத்தையும் கடவுளையும் பற்றியதாகவே எழுந்தன. ஒடுக்கும் சாதிக்கட்டுமானத்தைப் பயன்படுத்தித் தங்கள் உணர்வுகளை மொழியால் உழுவதை வரையறுத்தார்கள்.

தாழ்த்தப்பட்ட சமுதாயப் பெண்ணான மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த ஜானாபாய், கடவுளைத் தனது சகதோட்டியாகவும், தான் களைப்புறும் நேரத்தில் அவருக்காகக் குப்பையை வாருவதைப் பொருட் படுத்தாதவராகவும் வர்ணித்ததன் மூலம் சாதிமேலடுக்குக்கான கடவுளை கீழே இறங்கச் செய்தார்.
மற்ற தாழ்த்தப்பட்ட பெண்களும் செய்த இந்த விமர்சனத்தைப் பக்திமரபு செய்யத் தவறியது என்றே கூறலாம்.

அதற்குப் பின்பாக மூன்று நூற்றாண்டு இந்தியாவில் நடந்த மொகலாய ஆட்சி புதுவிதமான அனுபவங்களையும் தாக்கங்களையும் இந்தியப்பெண்ணிலக்கியத்திற்குக் கொண்டுவந்தது. மறைநூலான குரானை இஸ்லாமிய சமய ஆணும் பெண்ணும் கட்டாயம் வாசிக்க வேண்டும் என்பதைப் பயன்படுத்திக்கொண்டு, பெண்களும் கல்வியறிவு பெற்றனர். தன்னையும் தனது படைப்புகளையும் இலக்கியப் படைப்புகளாக்கினர். 158ல் இளவரசி குல்பதான் பேகம், பாரசீக மொழியில் மொகலாய மன்னர்களின் வாழ்க்கையையும் வரலாறுகளையும் எழுதினார். இதுவே இந்திய வரலாற்றில் எழுதப்பட்ட



முதல் சுயசரிதை நாவலாகக் கருதப்படுகிறது.
நாயக்க மன்னர்கள் சான்றோர்களாகவும் கவிஞர்களாகவும் இசை மற்றும் இலக்கியத்தைப் போற்றுபவர்களாகவும் இருந்ததால் நடனம் மற்றும் இசைக்கல்வியில் சிறந்த பெண்களுக்குப் பெருமளவில் அரசின் ஆதரவை அளித்தனர்.
முத்துப்பழநியின் ராதிகா சந்த்வானம் : கிருஷ்ணனுக்கும் ராதைக்கும் இடையிலான உறவை 584 கவிதைகளாக வடித்தார்.
அசாதாரணமான மூன்றாவது பகுதியில் கிருஷ்ணன் விரும்பவில்லையென்றாலும் ராதா காதல்உறவுக்குக் கிருஷ்ணனை வற்புறுத்துவதாக எழுதியுள்ளார்.
இருநூறு வருடங்களுக்கு முன்பாக அவரது காமம் சார்ந்த பாடல்கள் பிரசுரமாகும்போது, அப்போதைய முற்போக்கான விமர்சகர்களையும் வாசகர்களையும் கூட அதிர்ச்சிக்குள்ளாக்கியது.
மொகலாயப்பேரரசின் முக்கியமான அரசவையணங்காக இருந்த

பல



படிப்பகம்

www.padippakam.com

வைக்கவிதைகளையும் ல்களையும் மிகவும் நேர்த்தியாக எழுதினார். அவரது கவிதைகள் எல்லாமும் தொகுக்கப்பட்டு 1824 -ல் அவரது மறைவுக்குப்பின் பிரசுரமானது.

18ஆம் நூற்றாண்டில், நிறைய காரணங்கள் இந்தியப்பெண்ணிலக்கியத்திற்குப் பெரும் சரிவைக்கொண்டு வந்தன. 1600ல் தனது வணிகத்திற்காக இந்திய மண்ணில் கால்வைத்த கிழக்கிந்தியக்கம்பெனியினர் ஆதிக்கம் செலுத்துவோராக மாறியதாலும் அப்பொழுதைய அரசர்களும் அரசு இழந்ததாலும் அவர்களது பொன்முடிப்பின் வாய் சுருக்கப்பட்டு அவையில் பெண் சான்றோர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த ஆதரவு நின்றது. பெண்ணிலக்கிய உருவாக்கம் மெல்ல மெல்ல ஒன்றுமில்லாமல் போனது.

19ம் நூற்றாண்டின் இறுதியில் ‘பெண்களுக்குக் கல்வி வழங்குதல்’ என்பது ஒரு சீர்திருத்த இயக்கமாய் இந்தியாவில் உருவெடுத்தது. பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான சீர்திருத்த இயக்கங்களில் பெண்களும் இணைய வேண்டியிருந்தது. இது புதுவகையான பெண்ணிலக்கியப் படைப்புவெளியைத் திறந்தது என்றாலும் பெரும்பாலும் இது சுதந்திரப்போராட்டம் அதன் சீர்திருத்த, தேசிய இயக்கங்களை முன்வைப்பதாகவே இருந்தது. சீர்திருத்தக்காலத்தில் முதலில் எழுத வந்தவர், சாவித்ரிபாய் பூலே. இவரது கணவர் பூலே, பெண்கள் கல்வியை முன்மொழிந்தவர். ஓர் இயக்கவாதிக்கான தன்மைகளைக் கொண்டிருக்கும் சாவித்ரிபாயின் எழுத்து, தீண்டத்தகாதவர்களை விடுவிப்பதற்கான நம்பிக்கையைக் கொண்டிருந்தது. ஆங்கிலத்திலும் சமஸ்கிருதத்திலும் புலமை மிக்க பண்டித ரமாபாய் சரஸ்வதி தனது, நூலில் வேதங்களிலும் புராணங்களிலும் உள்ள ஆணாதிக்க வாசிப்பை முன்வைத்து அதன் மூலம் பெண்ணொடுக்குமுறையை முன்வைக்கும் தத்துவத்தை அர்த்தமில்லாமலாக்கினார்.
19ஆம் நூற்றாண்டின் மையக் காலகட்டம், நிறைய பெண்களிடமிருந்து ஆங்கிலப்படைப்புகளை வழங்கியது.

பெண்ணியக் கருத்தியல் உலகத்தை உருவாக்கினார். பெண் ஆதிக்கமுடைய உலகைப் பற்றிய வர்ணனையாக அவரது ‘சுல்தானாவின் கனவு’ என்ற நூல் இருந்தது. போரில்லாத உலகம், அறிவியல் முன்னேற்றம், சூழலின் மீதான அக்கறை என்பதாக அவரது கனவு விரிந்தது.
இருபதாம் நூற்றாண்டு நவீனத்துவத்தை நோக்கி வேகமாக நகர்ந்தது. பெண்கள் பெண்ணியக் கருத்தியலையும் அரசியல் போக்குகள்



படிப்பகம்

www.padippakam.com

பற்றிய விமர்சனங்களையும் படைப்புகளாக்கத் தொடங்கினர். மாஸ்வேதா தேவி பெண்ணியக் கருத்தாக்கத்தையும் அரசியல் இயக்கங்களையும் தொடர்புபடுத்தினார். சசி தேஷ்பாண்டே உலகளாவிய பெண் அனுபவங்களுக்கான பாதையையும் வெளியையும் உருவாக்கினார்.
தமிழில், நவீனப் பெண்கவிஞர்கள் வெறும் சுயஅனுபவங்களை மட்டும் முன்வைக்காது 'உடலரசியலை'யும் விரிவுபடுத்தினர். இதற்கான ஆணாதிக்கச் சமூகத்தின் விமர்சனம், சனாதன மனப்போக்குடன்தான் எழுந்தது.
இவ்வாறு, இந்தியாவின் வரலாற்றை, பெண்ணிலக்கியக் கருப்பொருளின் போக்கிற்கேற்பவும் புரிந்துகொள்ள முடிகிறது. ஆணாதிக்க சமூகத்தால் கட்டமைக்கப்பட்ட வரலாற்றை மறுப்பதை, பெண்ணின் இலக்கியப்படைப்புகள் வழியாக வரலாற்றையும் அரசியலையும் சமூகவியலையும் வாசிப்பதன் மூலம் இன்னொரு வரலாறு மீட்டெடுக்கப்படுகிறது. இந்தியப் பெண்ணிலக்கியத்தை, மொழிவாரியான பெண்படைப்பை மீள்வாசிப்பு செய்வதன் மூலம் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் ஒட்டுமொத்த காலமும் பிரதிபலிக்கிறது.
இந்திய இலக்கியப்பரப்பில் பெண்ணின் தடம், ஆணாதிக்க மரபான போரையும் வன்முறையையும் ஒடுக்குமுறையையும் எப்பொழுதுமே அழிக்க முயன்றிருக்கிறது.

***பெண்ணின்விடுதலை பற்றி ஆணின் நிராகரிப்பின் வரலாறு, விடுதலையின் கதையை விட சுவாராசியமானது.***

**வேர்ஜினியா வுல்ப்**
**(Virginia Woolf)**



படிப்பகம்

www.padippakam.com

# விலகி நிற்பவன்

ஒரு நிமிடத்தையும் மீதம் வைக்காமல்
பொழுதைக் குடிப்பவனுக்காக
காலம் முழுவதையும் தேக்கி வைத்து
வாழ் நாளெல்லாம் அலைகிறேன்.

ஆற்றின் ஓரங்களில்
செத்த பாசிச் செடிகளாய்
நாறும் கழிவுகளாய்
பேச முற்பட்ட தருணங்கள்
பிந்திய நாளின் முடிவில்
கரையொதுங்குகின்றன.


அநாவசியமாகிவிட்ட
சொற் குருணல்களைப் பொறுக்கிப் போக
என் வாசலுக்கு வருகின்றன.
புறாக்கள்

பரிசளித்த எனது ரோஜாவை
எடுத்து முகரவோ
என் சமகாலக் கேள்விகளுக்கெல்லாம்
பதில் எழுதவோ

வெப்பிரசாரங்களுக்கும்
விரகத்திற்கும்
இன்னும்
எல்லாவற்றிற்கும் பொதுவாய்

இருள் மண்டி
சிணுங்காமல் கிடக்கும்

தொலைபேசி உண்டியலில்
ஒரு முத்த ஒளித் துளியை
இட்டு நிரப்பிடவோ
நேரம் இருப்பதுமில்லை அவனுக்கு


Prem Singh

கண்களிடமிருந்து பறித்தெடுத்த
ஒரு பிடிக் கனா
காதுகளிடமிருந்து பறிக்கப்பட்ட
ஒரு வெளி நிறைய இசை

என்னிடமிருக்கிறது
அவனில்லாத வாழ்வு நெடுகிலும்
சுமந்தலைய

இன்னும்
இந்த ஒரே உலகத்திலேயே தான்
இருக்கின்றன
எனக்கும் அவனுக்குமான
வெவ்வேறு உலகங்கள்.

**அனார், இலங்கை**
**3.2005**



படிப்பகம்

www.padippakam.com

## பிங்கலையின் ஓவியங்கள்







படிப்பகம்




உமாமகேஸ்வரி, இந்தியா

கண்ணுக்கெட்டிய தூரம் வரை அவள் கண்டதெல்லாம் இருள்தான். குளிர்ந்த இருள். பகல் முழுவதும் மெதுவெயிலாக இருந்தது. அந்தியொளி மரங்களுக்கு உயிர்ப்பூட்ட எவ்வளவோ முயன்றும் அவை அசந்து போய்தான் நின்றன இன்று. சற்று முன்புதான் உல்லாசமான சிறுவர்கள்போல் ரயிலினுடைய வேகத்தோடு ஓடி கையசைத்து ஓய்ந்திருந்தன அவை.

முதன்முறையாகத் தனித்த பயணம். அவளுக்கு உற்சாகமாகவே இருந்தது ஆரம்பத்தில். ஜன்னல் வழித் தெரியும் மரங்களும் மலைகளும் வீடுகளும் மனித முகங்களும் நேரம் போவதே தெரியாமல் அவள் கவனத்தை நிறைத்துக்கொண்டிருந்தன. இப்போது இருட்டு சிறிது அச்சத்தையும் சேர்த்துத் தன்னோடு திரட்டிக்கொண்டு வந்திருக்கிறது.

பயம் - அம்மா அவளுக்கு ஆகாரத்தோடு சேர்த்து ஊட்டி வளர்த்த ஒன்று. ஆறு மணிக்கு மேல் இருட்டிய பிறகு ஒருநாளும் தனியே வீட்டைவிட்டு வெளியேற விட்டதேயில்லை அம்மா. ஆரம்பத்தில் அது ஒரு கட்டளையைப் பின்பற்றுவதாக இருந்து, பிறகு வழக்கமான நியதியாகவே உறுத்தலேற்படுத்தாமல் அவளோடு ஒட்டிக்கொண்டது.

இருட்டை வகிர்ந்துகொண்டு தலைதெறிக்க ஓடுகிறது ரயில். அதன்



படிப்பகம்

www.padippakam.com

இருபுறமும் நெளியும் கூந்தலென கருமை அலைபாய்ந்து கொண்டிருக்கிறது. ரயிலின் கூவல் நீண்ட கேவலாகத் தொனித்தது. அந்தக் கேவலிலிருந்து அடுக்கடுக்காக விரியும் கோரக் காட்சிகள். விபத்து நேர்ந்த இடங்களின் கதறல்கள். மரணவீடுகளின் ஓலங்கள். இறுதிப் பயணத்திற்குச் சடலங்களை வழிநடத்தும் சங்கொலி. அவள் வலுக்கட்டாயமாகத் தன்னைப் புத்தகத்திற்குள் பொதிந்துகொள்ள முயன்றாள். தோல்விதான். நிலைகொள்ள மறுக்கும் மனம். காதுகளில் வாக்மேனை எடுத்துப் பொருத்திக் கொண்டாள்; பெருகிய இசை வெள்ளம் சற்று ஆறுதலையும் அமைதியையும் தந்தது.

மூடிய கண்ணாடி ஜன்னல் வழி நிலவைச் சுற்றி ஒளிச் சுழல்கள் விரிந்திருந்தன. மிக அருகில் போல மலைச் சிகரமொன்று தெரிந்தது. அதையொட்டியே இன்னொரு குன்று. தொடர்ச்சியாக விதவிதமான தோற்றங்களில் மலைகள். வெளிச்சமிருந்தபோது கவிழ்ந்த குவளை போன்றும், சயனியத்திருக்கும் அரசி போலவும், அமர்ந்த யானையாகவும் தெரிந்து அச்சுறுத்தவே அவசரமாகக் கண்ணைத் திருப்பிக் கொண்டாள்.

சுருண்டு இறுகிய சூன்யத்தின் தலையில் தட்டித் தாளமிட்டபடி ஓடும் ரயிலின் தடதடப்பு. சிள் வண்டுகளின் ஒலி விட்டுவிட்டுக் கேட்கிறது. அவள் மட்டும் அந்த அந்தகாரத்தில் துண்டித்து எறியப்பட்டிருப்பதுபோல் உணர்ந்தாள். சுற்றி ஒருவர்கூட விழித்திருக்கவில்லை. மணி என்ன ஒன்பதிருக்குமா? கையோடு கொண்டுவந்த டிபனைச் சாப்பிட்டுவிட்டு, குளிரூட்டப்பட்ட பெட்டியில் தத்தமது இருக்கைகளில் நீட்டிப்படுத்துத் தூங்கி விட்டார்கள் அதற்குள்ளாகவே. மணிக்கட்டைத் திருப்பிக் கடிகாரத்தைப் பார்த்தாள். ஒன்பதுதான். வழக்கமாக இந்நேரம் இந்த ரயில் ஊர்போய்ச் சேர்ந்துவிடுமாம். இன்றுதான் இவளுடைய முதல் தனிப்பயணத்தின்போது, ரயில் மூன்று மணி நேரம் தாமதம். அம்மா பயந்ததுபோலவே ஆயிற்று.

டிசம்பர் இரவின் குளிரும், ரயிலின் சீரான ஓட்டமும் எல்லோர் கண்ணையும் கிறக்கிக் கொண்டுவரும்போல. தூங்குகிறார்கள்; நிம்மதியாக; நிச்சலனமாக; அவளைபபோல அச்சங்கள் ஏதுமின்றி.

'இந்த ரயில் எத்தனை மணிக்குத்தான் போய்ச் சேரும்? ஒரே இருட்டாக இருக்கிறதே! வழியில் ஏதாவது பிரச்னையென்றால்? என்னைக் கூப்பிட ஸ்டேஷனுக்கு யாராவது வந்துவிடுவார்களா? அப்படி வராவிட்டால் என்ன செய்வது? நான் இப்படித் தனியாகக் கிளம்பி வந்திருக்கக்கூடாதா? பெரியப்பா ஒன்றும் பயமில்லை என்றாரே! பார்சல்கூட வந்து சேர்ந்துவிடும் என்று கிண்டலடித்தாரே! எல்லாம் இந்த அம்மாவால் வந்த வினை. 'ஆறு மணிக்கு மேல் வீட்டுக்கு வெளியில் இருக்கக்கூடாது. எங்கே போக வேண்டுமானாலும் யார்



படிப்பகம்

www.padippakam.com

துணையோடாவதுதான் போகணும். உனக்கென்ன தெரியும்? நீ இன்னும் குழந்தைதான். காலம் கெட்டுக் கிடக்கு.

இம்முறை தவிர்க்க முடியாமல் தனியே வரவேண்டியதாகி விட்டது. அம்மா முதலில் ஒப்புக்கொள்ளவே மாட்டேனென்றாள். இங்கே ஸ்டேசனிலிலிருந்து புவனாவும், மீனாவும் வந்து ரயிலேற்றி விட்டார்கள். அங்கே ஸ்டேஷனுக்கு யாராவது வருவார்கள். அப்புறமென்ன? ஆனாலும் அம்மாவிற்கு மனசே கேட்கவில்லை. அவள் உடல்நிலை, மனநிலை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டுதான் அவளை இப்படிப் பொத்திப் பொத்தி வைத்திருப்பதாகச் சொல்லிப் புலம்புவாள். இப்போது என்ன செய்கிறாளோ? நள்ளிரவாகிவிடும் இந்த ரயில் போய்ச் சேர.

இந்த இருட்டு! வீட்டிலிருந்தால் உலகத்து அழகையெல்லாம் வாரிச் சூடிக்கொண்டு விடுகிற இது, இப்போது வெளியில் பூதாகரமாகக் கருத்து விரிந்து கிடக்கிறது.

இரண்டு குழந்தைகளையும் மடியில் போட்டுக்கொண்டு உட்கார்ந்தவாக்கிலேயே தூங்கும் இந்த இளம் பெண், நீண்டு படுத்திருக்கும் பெரியவர், ஜன்னலில் முகத்தை ஒட்டி வைத்துக்கொண்டு கண் செருகும் அந்த முதியவள் - இவர்களுக்கெல்லாம் அற்புதமான பரிசாக வாய்த்திருக்கிறது தூக்கம். சற்றுப் பொறாமையாகக்கூட இருக்கிறது.

நான் மட்டும்தான் ஒரு மாபெரும் வெற்றிடத்தில் அலைமோதுகிறேன். உருவற்ற, பொருளற்ற ஏதோ ஒன்று என்னைத் துரத்தித் துன்புறுத்துகிறது. ஆனால் அது அதிபயங்கரமானது. மானிட சக்தியை நசுக்கித் தீர்ப்பது. எத்திசையில் நகர்கிறது என்பதே தெரியாத இந்த வாழ்க்கையையும், ரயிலையும்போல இருளுக்குள் விரைந்து கொண்டிருக்கிறது.

திடீரென்று அவள் ஒரு கற்பனையைப் புனையத் தொடங்கினாள். காதுகளில் நிறைந்து போதையூட்டும் இப்புல்லாங்குலலிசையை அவள் தன்னுடைய அறையின் கதகதப்பான கட்டிலில் மல்லாந்து படுத்துக்கொண்டுதான் கேட்கிறாள். நிம்மதியாக; ஒரு பயமுமின்றி பாதுகாப்பாக. இப்படியொரு பயணம் நேரவில்லை அவளுக்கு. அப்படியிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

கண்களைத் திறந்தபோது ரயிலுக்குள் மின் விளக்கின் ஒளிச்சாரல் பரவியிருந்தது. இருளின் கீற்றுக்கள் அதனிடையே அற்புதமான கோலங்களைத் தீட்டிக்கொண்டிருந்தன. ஒளியும் நிழலும் கலந்து பின்னும் அழகிய சித்திரக் கம்பளம். இந்த அற்புதத்தைப் பார்க்காமல் என்ன தூக்கம் வேண்டிக் கிடக்கிறது இவர்களுக்கெல்லாம். சலித்தபடியே வெளியே பார்த்தாள். கோட்டுச்



படிப்பகம்

www.padippakam.com

சித்திரங்களாக மலைகள் விரைந்து மறைந்தன. வானில் அடர்த்தியான கருநீலம் குழைந்திருந்தது. சிறிய பிறை நிலாதான். ஆனாலும் சுற்றித் தெரிந்த பொற்கதிர்கள் அதற்கு சொல்ல முடியாத வசீகரத்தை அளித்திருந்தன. அதையே பார்த்துக்கொண்டிருந்தால் அத்தனை பயங்களும் தனிமையுணர்வும் கரைந்து விடுமென நினைத்தாள். தன்மேல் யாருடைய பார்வையோ பதிந்து உறுத்தவும் சட்டென்று திரும்பிப் பார்த்தாள். கழிப்பறையை நோக்கிப்போன ஒருவன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தபடியே நடந்துகொண்டிருந்தான். அவள் உடனடியாக முகத்தைத் திருப்பிக்கொண்டு, புத்தகத்தை விரித்து, தன்னை அதற்குள் குவித்துவிட முயன்றாள். திரும்பும்போதும் அவன் பார்வை நேராக அவள்மீது பதிந்தது. முகத்தில், கழுத்தில், கழுத்திற்குக் கீழ். மறுபடி புன்னகைத்தபடியே "எந்த ஊருக்கு?" என்றான். கேள்வியே காதில் விழாததுபோல புத்தகத்திற்குள் மறைந்துகொண்டாள். அவன் தோளைக் குலுக்கிவிட்டு நகர்வது தெரிந்தது. நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

முந்தாநாள் விடுதி அறைக்கு வந்த வர்த்தினியின் கலங்கிய முகம் திடீரென்று ஞாபகம் வந்தது. முனைவர் பட்ட ஆய்வு மாணவி அவள். கலகலப்பானவள். பேச்சிலும் எப்போதும் நகைச்சுவைத் துணுக்குகள். அன்று வந்தவள் புவனாவின் கட்டிலில் சோர்ந்து உட்கார்ந்தாள்.

"பேயடிச்சாப் போலயிருக்க... என்னாச்சு" என்று மீனா கேட்டபோதும் வாயே திறக்கவில்லை. திரும்பத்திரும்ப, துருவித்துருவிக் கேட்டபோதுதான் வெடித்த அழுகையூடே சொன்னாள்.

அவளுடைய முனைவர் பட்ட ஆய்வுக்கட்டுரையைப் பேராசிரியரிடம் சமர்ப்பித்தாளாம். அதைப் புரட்டிக்கூடப் பார்க்கவில்லையாம் அவர். 'வியாழன் என்னோடு நீ ஊட்டிக்கு வர முடியுமா?' என்றாராம் நேராக, வெளிப்படையாக. அதிர்ந்துபோய் தலைதெறிக்க ஓடி வந்தவள் சில நாட்களுக்கு அவர் பக்கமே போகாமல் தவிர்த்தாலும், மறுபடி அவரிடம்தான் போய் நிற்க வேண்டியிருந்தது, ஒரேயொரு கையெழுத்துக்காக. அதே கேள்வியின் துருவேறிய கொக்கிகளே பேராசிரியர் பார்வையில் மண்டியிருந்தன. வேறு வழியே தெரியாமல் தலையாட்டியிருக்கிறாள். பிறகு... அந்த ஒரு நாள்.. அதற்கு மேல் சொல்லவே முடியாமல் அழுதாள் வர்த்தினி.

"அந்த ஆள் என்னைத் தொடவே இல்லடி. ஆனா..." இன்னும் அழுதாள்.

கோரமான அந்த ஞாபகத்திலிருந்து விடுபட விரும்பிக் கண்களை இறுக மூடிக்கொண்டாள் அவள். ரயிலின் சீரான வேகம் அவளையும் தாலாட்ட, களைப்பும் பயமும் மனதை அழுத்த, கண்களை இறுக மூடினாள். அரை உறக்கமும் விழிப்புமாக வெளியொலிகள் தேய்வுற்றன. அந்தக் குளிரிலும் ரயிலுக்குள் உஷ்ணம் திரள, வியர்த்துக் கொட்டியது. ஆனாலும் தூக்கம் போன்ற ஏதோ ஒன்றில்



படிப்பகம்

www.padippakam.com

லேசாக அயர்ந்துவிட்டாள்.

முற்றிலும் திறந்த வெளி. எல்லாத் திசைகளிலும் இருள் முறுகிக்கிடக்கிறது. மரங்களின் அங்கலாய்ப்பைத் தாளமுடியவில்லை. அத்தனை பசுமையையும் தொலைத்துவிட்டு, கருமையில் அவை அலைந்தோடின. இனிப் பகலேயில்லையென்பதுபோல கனத்துப் பாரமுற்ற இரவு. அத்தனை உருவங்களின் வெளிக்கோடுகளையும் அது அழிக்கிறது. எல்லாம் மங்கி அமிழ்கின்றன கருமையின் ஆழத்தில்.

எதுவோ வெடிப்பது போன்ற பலத்த சத்தத்தில் திடுக்கிட்டு விழித்தாள். ரயில் எதிலோ மோதி நின்றிருக்கிறது. அதன் பெட்டிகள் ஒவ்வொன்றாகக் கழன்று உருள்கின்றன. அவள் பீதியுடன் அலறினாள். ரயில் நின்றிருக்கிறது. யாருமற்ற வெறுமை. எங்கே போனார்கள் அத்தனை பேரும்? கண்ணாடி ஜன்னலுக்கு வெளியேயும் வெளிச்சத்தின் தடமேயில்லை. அப்படியென்றால் இது ரயில் நிலையமில்லையா? குழம்பினாள். ஏதோ விபத்தா?

ரயிலின் கூரை குளிர்ந்து தலையில் அழுந்தியது. பின்புறமிருந்து தடதடவென செருப்புக்கள். யாரோ ஓடிவருகிறார்கள். நெருங்கி வரவர செருப்புக்கள் தேயுமொலி நிதானமடைகிறது. திகிலில் அவள் மனம் குலைகிறது. செய்வதறியாது முகம் பொத்தி உட்கார்ந்திருந்தாள் நெடுநேரம். திடீரென்று என்னவோ நினைத்தாற்போல் எழுந்து ரயில் பெட்டியின் வெளிக்கதவை நோக்கி ஓடினாள். ரயில் முழுக்கவும் ஆளேயில்லை. கதவைத் தள்ளினாள். அது திறக்கவே முடியாமல் குளிரில் இறுகிப் போய்க் கிடந்தது. தட்டுதட்டென்று தட்டினாள் உள்ளங்கைகள் கன்றிப் போகுமளவு. அவள் கைகள் கதவை அறையும் பெருஞ் சத்தத்தில் அஞ்சி நடுங்கினாள் அவளே. பின்னிருந்து நெருங்கி வருகிறதொரு பெருத்த அபாயம். இங்கிருந்து தப்பித்துவிட வேண்டும் எப்படியாவது. இப்போது முழங்காலை மடித்துக் கதவில் இடித்தாள் வலிக்க வலிக்க. மீண்டும் மீண்டும். கதவு இரக்கம் கொண்டாற்போல் திறந்துகொண்டது. வெளியில் இருள் அவள் முகத்தில் இடித்தது. வேறு யாரோ கதவைத் திறந்துவிட்டு இப்போது ஒளிந்துகொண்டிருக்கிறார்கள். ஜில்லிட்ட உலோகக் கம்பியைத் தொற்றித் தொங்கிக்கொண்டே நின்றிருந்தாள். பிறகு ரயிலிலிருந்து தவறி உதிர்ந்தவள்போல மண்ணில் விழுந்தாள். தடுமாறி எழுந்து ஓடத் துவங்கினாள் இலக்கேயற்று. நள்ளிரவு வானில் மேகத் திட்டுக்கள் நிறைந்திருந்தன. நிலவின் மெலிந்த ஒளியில் அவை நிறமற்ற சிதறல்களாக இருந்தன.

முள் மரங்கள் அடர்ந்த காடு. ஓடிக்கொண்டேயிருந்தாள்... பாதங்களைத் தடுக்கிச் சுற்றும் சிறு கொடிகளையும், செடிகளையும் விலக்கித் தாண்டி... மனிதச் சுவடேயற்ற காய்ந்த காடு. நட்சத்திரங்கள் கூரான முட்களாக மாறிவிட்டிருந்தன. நாய்களின் ஊளை. சிறியதாகத் தொடங்கி பிரபஞ்சத்தையே கிடுகிடுக்கச் செய்வதாகப் பெருகி அவளை




படிப்பகம்

நடுநடுங்க வைத்தது.

அமைதியாகக் கவிந்த வானத்தில் மேகங்கள் இறுக்கம் கொண்டன. கரும் பாறைகளெனப் புரண்டன. கடும் குளிர் அவளை விறைக்க வைத்தது. செத்த பாம்பைப்போல் கிடந்தது ரயில் தொலைதூரத்தில். சிள் வண்டுகளின் ரீங்காரம். ஆந்தையின் அலறல். புதர்களுக்குள்ளிருந்து நாய்கள் குரைக்குமொலி. அதிர்ந்து, நின்று மெதுவாகச் சத்தமின்றிப் பாதங்களை எடுத்து வைத்தாள்.

அந்த அருவருப்பான நிசப்தத்தை வெறுப்பதுபோல், தன்னைத் தானே ஆறுதல்படுத்திக்கொள்வதுபோல் அர்த்தமற்ற ஒலிகளை 'ம் செய்தாள். ராகமாக இழுக்க முயன்று முணுமுணுத்தாள்.

ஒரு குன்றின் விளிம்பைக் கண்டதும் இனி நடக்க முடியாது என்று பாறையொன்றின் மீது துவண்டு உட்கார்ந்தாள். கண்கள் செருகின. வாயுலர்ந்துவிட்டது. குளிர் முதுகைச் சொடுக்கியது. அரைவிழிப்பில் அந்த உருவத்தைக் கண்டாள். அவளுக்குச் சரியாக எதிர்முனையில் மங்கலாயத் தெரிந்தது அது. சிறிய குளமாகத் தேங்கிய நீரின் கரையில் உட்கார்ந்திருந்தது. பெருமூச்சு விட்டாள். நல்லவேளை, அவள் தனியாக இல்லை. ஒற்றை மனித உயிரேனும் இருக்கிறது இந்த வனாந்திரத்தில். நிம்மதியாக மூச்சை இழுத்து விடுவதற்கு முன்பாகவே தன் தலை யாருடைய மடங்கிய காலிடுக்கிலோ அழுத்தி, நசுக்கப்படுவதை உணர்ந்தாள். மூச்சுத் திணறியது. திமிறித் தன்னை விடுவித்துக்கொள்ள முனைகையில் முகத்தில் விழுந்தது ஒரு அறை. அதிர்ந்தாள். மேலேறிய பாவாடையை பாதம் வரை இறக்கிச் சரி செய்ய முற்பட்டபோது புறங்கையில் இன்னொரு அடி விழுந்தது. வலியில் துடித்தாள்.



ஒன்றும் புரியாமல் குழம்பினாள். மிருகங்களின் உறுமல் தொலைவிலிருந்து கேட்டது. நிசப்தத்தை மிதித்துக் கிழிக்கும் குதிரைகளின் குளம்பொலி. தான் உயிரிழந்துவிட்டதாகவே அவள் நினைத்தாள்.

உதடுகள் காய்ந்து வெடித்துவிட்டன. தசைகள் எலும்பிலிருந்து கழன்றன. கரிய வானம் மாபெரும் பாறையாகச் சரிந்து அவளை அழுத்தியது. தலை சுழலக் கீழே விழுந்து



படிப்பகம்

சிதறினாள்.

கூந்தலில் சேறு படிந்தது. ஓட்டுப்புற்கள் முதுகில் குத்தின. முகத்தின் மீது 'சொத்தென்று சகதி விழுந்து அப்பியது. கண்கள் மங்கிவிட்டன. மூச்சுப் பிரிந்து உடல் குளிர்ந்து போனது. இதயம் எதிலோ மோதி அடைத்து நின்றது. அவள் இதுதான் மரணம் என்று நம்பிவிட்டாள் வெகு நிச்சயமாக.

பிரக்ஞை தெளிந்தபோது தடுமாறி எழுந்து, சதுப்பு மண்ணில் புதையும் கால்களோடு இழுத்து நடந்து அந்த உருவத்தை நெருங்கினாள். நீரின் சலசலப்புக் கேட்டது. சிவந்து குழம்பும் நீர் குருதிபோல. கரையோரத்தில் முழுதாகத் தெரிந்தது அவன் தோற்றம். மிகவும் பரிச்சயமானவன்போல் தெரிந்தான். எந்தக் கனவிலோ சந்தித்த முகமோ? கனலும் கண்கள். இறுகிய உதடுகள். கலைந்த தலைமுடி. காற்றில் படபடக்கும் உடைகள். துணையைக் கண்டடைந்த ஆசுவாசத்தோடு அவனை நெருங்கி நடக்கையிலேயே, நெற்றியிலும் கன்னத்திலும் பதியும் முத்தங்களில் திகைத்தாள். முதுகில் யாரோ தட்டுகிறார்கள் விளையாட்டாக. செல்லமாக. திடீரென்று அருகே இழுத்து காது மடலில் முத்தமிடுகிறான் ஒருவன். குழம்பிப்போய் கவனமாகப் பார்த்தாள். அவன் அங்கேயேதான் இருந்தான். அலை அலையாய் விரியும் நீரை ஒரு நீண்ட துடுப்பால் கிளறிக் கொண்டிருந்தான். முடிவேயற்ற சிந்தனையில் லயித்த முகம். துடுப்பு நீரைத் துழாவியது. உற்றுப் பார்த்தாள். அதிர்ந்தாள். வீரிட்டு அலறினாள்.

அவனுடைய உடலேதான் மிதந்துகொண்டிருந்தது நீரில். துண்டு துண்டாக. தலையைத் தட்டினாள். என்னென்ன பிரமைகள்! பயங்கரமான கற்பனைகள்! அது அவனுடைய நிழலின் துண்டங்கள்தானே! ஆசுவாசமாகித் திரும்புமுன், அவன் துடுப்பால் தனது அங்கங்களைத் தனித்தனியாக எடுத்து மண்ணில் எறிவதை பீதியில் விரிந்த கண்களோடு பார்த்தாள்.

நனைந்து நீர் சொட்டும் தலை. ஊறிய கைகள். அவை கற்பனைகளில் அவளோடு காதல் செய்தவை. அவள் கனவுகளின் நேசிப்பிற்குரியதாயிருந்த திடமான மார்பு. சாய்ந்துகொள்ள விரும்பிய கைகள். எல்லாம் நேர்த்தியாக அறுத்து நறுக்கித் துண்டாடப்பட்டிருந்தது. அவள் பக்கத்தில் போய் நின்றதும் "என்ன தாகமாயிருக்கா? இந்தா" என்று சொல்லி ஊறி விறைத்த ஒரு சதைத் துண்டத்தை எடுத்து நீட்டினான் அவள் வாயருகில். அலறிக்கொண்டே பின்னகர்ந்தாள். குரூரச் சிரிப்போடு, "சிதைந்ததா உன் கனவு" என்றான்.

அவள் விழிகள் பிதுங்கிவிட்டன. உடல் உருகிச் சொட்டியது. உடைந்து குமுறும் அவளுடைய அழுகையை அலட்சியப்படுத்தி மறுபடி நீரைக் கிண்டத் துவங்கினான். குளிர்ந்த பிணக் குவியல் மேல் விழுந்ததுபோல் அவள் உடல் கூசிக் கிடுகிடுத்தது.

முகத்தில் தெளிக்கப்பட்ட நீர்த்துளிகள் சிறு கற்கள்போல் சுள்ளென்று குத்தின. சருமத்தைச் சிலிர்க்க வைத்தது அந்தக் கூவல்.

www.padippakam.com

ரயிலின் உற்சாகக் கூச்சல்தான் அது. அவள் அந்த பயங்கரக் கனவின்போது வாய்விட்டலறி இருக்கவேண்டும். அல்லது, இருக்கையிலிருந்து நழுவி விழுந்துவிட்டாளோ? உறங்கிக் கொண்டிருந்த சகபயணிகள் அத்தனை பேரும் விழித்து உட்கார்ந்திருந்தார்கள். அத்தனை பக்கமிருந்து அவளை ஆரத்தழுவிக் கொண்டன ஆதரவான சொற்கள்.

அந்த இளம்தாய் இன்னும் உறங்கும் தன் குழந்தைகளைக் கையால் தட்டிக்கொண்டே சொன்னாள், "என்ன பயம் இப்படி? நீ மட்டும் தனியாவா இருக்கே? நாங்கல்லாம் இல்லையா? "

"ரயில் கொஞ்சம் லேட்டுதான். அப்படி உன்னைக் கூப்பிட யாரும் வரலேன்னா நீ போகவேண்டிய இடத்திற்கு நான்கொண்டுபோய் விடறேம்மா.பயப்படாதே" என்றார் பாதி உறக்கக் கண்ணோடுஅந்தப் பெரியவர். முதியவள், "இருட்டைக் கண்டு பயந்துட்டியா? கவலைப் படாதே. நீ எங்க வீட்டுக்கு வா. நான் கூட்டிட்டுப் போறேன் உன்னை பத்திரமா. தைரியமா இரு!" என்றாள்.அவள் மிகுந்த வெட்கமும் அவமானமும் கொண்டாள். தலையைக் குனிந்து தரையை வெறித்தாள். அந்தப் பெண் காலருகே இருந்த சிறு வயர்க்கூடையை இழுத்து, பிளாஸ்க்கைத் திறந்து அதன் மூடியில் பாலை ஊற்றி "இதைக் குடி" என்று நீட்டினாள். இவள் குறுகிப்போய் "வேணாம்" என்று மறுக்க மறுக்க,அவள் "சும்மாக் குடி. தெம்பாயிருக்கும்" என்று வற்புறுத்தினாள். வெதுவெதுப்பான பானம் இதமாகத் தொண்டைக்குள் இறங்கியது. நன்றி சொன்னாள்.

எழுந்து போய் வாஷ்பேஸினில் முகம் கழுவினாள். கண்ணாயில் தெரிந்த அந்த முக பிம்பத்தை அவள் இதுவரை பார்த்ததேயில்லை. கைப்பைச் சீப்பால் தலையை வாரிக்கொண்டு, தன் ஜன்னலோர இருக்கையில் உட்கார்ந்து கொண்டாள். எல்லோரும் மறுபடி அரை உறக்கத்திற்குப் போய்விட்டார்கள்.

மரங்களின் வேக நிழல்கள். ஆழ்ந்து தியானிக்கும் மலைகள். கழற்றிப்போட்ட ஆபரணங்கள்போல் மின்விளக்குக் கும்பல்கள் தூர ஜொலித்தன. மெதுவாக நெருங்கின. ரயில் நீளமாய்க் கூவியது. அலாரமடித்ததுபோல் அத்தனை பேரும் அவசர அவசரமாகப் பெட்டிகளை இழுத்து இறங்கத் தயாரானார்கள்.

'எந்த வாசல் வழி இறங்குவது எப்படிக் கூட்டத்தைக் கடப்பது? மணி பதினொன்னரை. யாருமே வந்திருக்காவிட்டால்... ' யோசித்துக் குழம்பத் துவங்கியவாறே தன் பையோடு படியில் நின்றாள்.

இருள் முற்றிலுமாக விலகிவிட்டது. பட்டப்பகல்போல் வெளிச்சம் பூத்திருந்தது ரயில் நிலையத்தில். மாம்பழ மஞ்சள் புடவை ஒளிர அம்மா நின்றிருக்கிறாள் காத்துக்கொண்டு. அவள் தரையில் கால் வைக்கும் முன்பே பார்த்து நெருங்கி வருகிறாள். அத்தனை தீய நிழல்களையும் விலக்கித் தள்ளுகிறது அம்மாவின் உருவம். அவள் தூய புன்னகை மென்மையாக நீண்டு அவளைத் தொட்டுப் பற்றிக்கொண்டது.



படிப்பகம்

www.padippakam.com

ஆன்மாவின்கீதம்

# ஆன்மாவின்கீதம்

மனித நடமாட்டமில்லாத
உணர்வுகள் அடங்கப்பட்ட இருளில்
நிகழ்ந்தன அவை

கோரத்தனங்களின் பற்கள் விழுங்கிய இரகசியங்களை
குண்டு கொண்ட ஆட்காட்டியின் அவலக்குரல்
தொண்டைக்குழி மட்டும் வந்து
அடங்கிக் கொண்ட இரவுகள் பல.

வெட்ட வெளிப் பரப்பின்
இரகசிய ஓரங்களில் நடந்தேறின அவை

எனக்குள் அந்நியம் அமிழ்த்திய கொடூரங்கள்
ஈரம் காயாமல் இன்னும்
பிசுபிசுத்துக் கொண்டிருக்கிறது

என் உடல் நைந்து உருக்குலைந்திருக்கலாம்.
ஏதாவது ஓரிரு எச்சம் மட்டும் இருக்கக் கூடும் -
ஆனால்
என் உயிர் இன்னும் காத்துக்கிடக்கிறது.
உண்மைகளின் வேர்களை காந்தபடி
என் உயிர் இன்னும் காத்துக் கிடக்கிறது.

சருகாயென்னை உதிர்த்த போதும்
என் ஆன்மா அழியவில்லை
அது எருவாய் இன்னும் இன்னும்.
நியாயத்துக்கு உரமிட்டபடி உறைந்திருக்கிறது
என்றாவது உண்மையின் வெப்பம்
ஸ்பரிசிக்கும் போது அவை உருகியே தீரும்.



கவிதையும் ஓவியமும்:
சுகந்தினி சுதர்சன் ஜேர்மனி



படிப்பகம்

www.padippakam.com

# ஓவியத்தில் பெண்

- அருந்ததி, லண்டன்

பெண்கள் குறிப்பிட்ட சில துறைகளில் பிரபல்யமாதல் ஏனோ கடினமாகி விடுகின்றது. கலைகளில் பெண்ணின் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் பெருமளவில் கலை வரலாற்றில் பெண்களின் பெயர்களை தேடிக்கண்டு பிடிக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு காலகட்டத்திலும் கலைத்துறையில் பெண்களின் பங்களிப்பு இருந்து வந்த போதும் அவர்களின் பெயர்கள் ஏனோ வரலாற்றில் பதிவாக்கப்படாமலே போய்விட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.



இக்கட்டுரை ஓவியத்துறையில் பெண்களின் பங்களிப்பு எந்தளவிற்கு இருந்திருக்கின்றது என்பதை நோக்குவதுடன் பெண்கள் எவ்வாறு ஓவியங்களில் சித்தரிக்கபட்டுள்ளனர் என்பதையும் கருத்திற் கொண்டு ஆராயப்படவுள்ளது.

ஓவிய வரலாற்றை நாம் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே நோக்கலாம். குகைகளில் மனிதன் கோட்டோவியங்கள் கீறியதை நாம் அறிவோம். கையொப்பமிடாத அக்குகை ஓவியங்கள் உண்மையில் யாரல் வரையப்பட்டவை என தெரிந்து கொள்ள முடியாதிருக்கும் பட்சத்தில்,கலை வரலாற்று ஆய்வாளர்கள் அவற்றை ஆண்களின் கைவண்ணமாக கருத்திற் கொண்டது ஒரு ஊகமே. Nancy a Heller தனது பெண் ஓவியர்கள் என்ற புத்தகத்தின் முன்னுரையில் வரலாற்றிற்கு முற்பட்ட



படிப்பகம்

கால ஓவியங்களை ஆண்கள் படைத்தார்கள் என ஏன் கருத வேண்டும் என்ற கேள்வியை எழுப்புகின்றார். இந்தக் கேள்வி நியாயமானதாகவும் சிந்திக்கப்பட வேண்டியதாகவம் இருக்கின்றது. மேலும் Nancy a Heller பெண்கள் கால ஓட்டத்தில் காணாமல் போவதற்கு அவர்கள் திருமணமான பின் அவர்கள் மாறிக்கொள்வதும் ஒரு காரணம் என குறிப்பிடுகின்றார். அத்துடன் பெண்கள் 14 வயதிலேயே திருமணம் செய்து கொள்வதால் அதன் பின் அவர்களுக்கு குழந்தை பெறுதலும் குழந்தை வளர்ப்புலுமேயே காலம் சென்று விடுகின்றது. என்ற குறிப்பையும் Nancyயின் ஆய்வுக்கட்டுரையில் கண்டறிய முடிகின்றது. நவீன காலத்தில் பெண்களின் திருமண வயது தள்ளிப் போடவப்பட்டிருந்தாலும் சமூக அந்தஸ்த்தில் மாற்றம் அதிகளவில் இடம்பெறவில்லை என்றே கூறலாம்.

மேலும் பெண்களின் படைப்புக்கள் மீள ஆண் ஓவியர்கள் குறிப்பாக அவர்களின் ஆசிரியர்கள் அல்லது ஆண் உறவினர்களினால் கையொப்பம் இடப்படும் வழமை இருந்திருப்பதாக heller குறிப்பிடுகின்றார். எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெண்களின் படைப்புக்கள் என தெரிந்து கொள்ள முடியாமல் போவதும் அவர்கள் பெயர்கள் வரலாற்றில் இல்லாமல் போவதும் தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

இருந்தாலும் கலைப்பொருட்களில் பெண்கள் ஓவியம் வரைவது போன்று சித்தரிக்கபட்டிருக்கும் காட்சிகள் எமக்கு பெண்கள் மிகப் பழங்காலங்களிலிலேயே ஓவியத்துறையில் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள் என்பதற்கு சான்றாகின்றது. குறிப்பாக 5ம் நூற்றாண்டிற்குரிய கிரேக்க சாடிகள் இதற்கு உதாரணமாகின்றது. கிரேக்க ரோம காலங்களில் பெண்கள் ஓரளவிற்கு கலைத்துறையில் ஈடுபடுவது அறியப்பட்டாலும் அவர்கள் கைவினைப் படைப்பாளர்களாக குறிப்பாக தையற்கலை வல்லுனர்களாகவும் நேற்தை பின்னுபவர்களாகவும் மணிகளை கோப்பது போன்ற வேலைகளில் ஈடுபடுபவர்களாகவுமே அறியப்படுகின்றனர். அத்துடன் இவ்வாறான கலை ஈடுபாடு கொண்ட பெண்கள் ஓரளவிற்கு வசதி படைத்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவும் வீட்டு வேலைகளுக்குள் தம்மைத் தொலைத்துக் கொள்ளாதவர்களாகவுமே இருந்திருக்கின்றனர். மேலும் அவர்களிற்கு கலை ஆர்வம் ஏற்படுவதற்கான குடும்பச் சூழ்நிலையும் இருந்திருக்கின்றது.

முதன் முதலில் பெண் ஓவியர்கள் மறுமலர்ச்சிக் காலத்தில் இத்தாலிலேயே அடையாளம் காணப்படுகின்றனர். அதிலும் கலைக்குடும்பத்திலிருந்து வராத முதற்பெண் ஓவியை மறுமலர்ச்சிக் காலத்தைச் சேர்ந்த Sofonisba Angulssola (1535 - 1540 - 1625) என Edith Krull தனது ஓவியத்தில் பெண்கள் என்ற புத்தகத்தில் குறிப்பிடுகின்றார். 15ம் ,16ம்



படிப்பகம்

www.padippakam.com

நூற்றாண்டுகளில் குறிப்பிடத்தக்களவில் பெண் ஓவியர்கள் இத்தாலியில் தோற்றம் பெற்றதை தொடர்ந்து ஏனைய மேற்கத்தைய நாடுகளிலும் பெண்கள் ஓவியத்துறையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்ததை கலை வரலாறுகள் எடுத்துக்காட்டுகின்றன. இதிலும் குறிப்பாக தேவாலயங்களைச் சேர்ந்த கன்னியாஸ்திரிகள் ஓவியத்துறையில் தம்மை ஈடுபடுத்தியிருந்தமைக்குப் பல சான்றாதாரங்கள் உள்ளன. தேவாலயங்களை மையமாகத் கொண்டு கலை வளர்ந்த காலப்பகுதியில் கன்னியாஸ்திரிகள் மட்டுமின்றி தனிப்பட்ட பெண்களும் ஆண் ஓவியர்களுக்கு ஈடாக ஓவியங்கள் படைத்திருக்கின்றார்கள் என்பது பெண்களுக்கு பெருமைதரும் விடயமே. இவ்வாறாக பெண்கள் தம்மை ஓவியத்துறையில் வளர்த்து வந்திருந்தாலும் அவர்களுக்கு ஓர் பெரும் முட்டுக்கட்டை பிற்பட்ட காலங்களில் ஏற்படுகின்றது. ஆதாவது ஓவியக் கல்லூரிகளில் பெண்கள் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு மறுக்கப்படுவதுடன் ஆண்களின் நிர்வாணத் தோற்றத்தை வரைவதிலும் தடைவிதிக்கப்படுகின்றது. இச்சூழலில் பெண்கள் தம்மை இத்துறையில் ஆண்களிற்கு ஈடாக வளர்த்துக் கொள்வதென்பது சாத்தியமற்றதாகவே போகின்றது.

நவீன காலங்களில் பெண்களிற்கு ஓவியத்துறையில் முற்றுமுழுதாக கற்றுத்தேற வாய்ப்புக்கள் அமைந்திருந்தாலும் முன்னர் குறிப்பிட்டது போன்று திருமணத்தால் ஏற்படும் சமூக நிலவரங்கள்,பெண்களுக்கேயான உடற்கூற்றுக் காரணங்கள் மற்றும் தாய்மை போன்ற காரணிகள் பெண்களை முழுமையாக கலைத்துறையில் ஈடுபடுத்திக் கொள்ள முடியாமல் போகின்றது.

அடுத்ததாக பெண்கள் எவ்வாறு எல்லாம் ஓவியத்தில் சித்தரிக்பகபட்டுள்ளாள் என்பது பற்றி நோக்குவோமாயின் மேலைத்தேயத்திலும் சரி, கீழதேயத்திலும் சரி பெண் அழகுபொம்மையாகவே ஆரம்ப காலங்களில் ஓவியர்ங்களில் சித்தரிக்கப்பட்டு வந்துள்ளாள். ஓவியம் என்பது சமூக நிகழ்வுகளை சித்தரிப்பதற்கு முன்னதாக தெய்வ உருவங்களை வரைவதாகவே இருந்ததனால் தெய்வப் பெண்கள் அதி அற்புத சொருபிகளாக கற்பனையில் தோற்றுவிக்கப்பட்டிருந்ததை நாம் 15ம் நூற்றாண்டில் மேற்குலகில் வரையப்பட்ட மாதா ஓவியங்களிலும் 19ம் நூற்றாண்டு இந்திய ஓவியர் இரவிவர்மாவின் சரஸ்வதி ஓவியங்களிலும் காணலாம்.

இந்திய மொகலாய இராஜஸ்தானி ஓவியங்களும் கூட சாதாரண பெண்களின் சித்தரிப்புகளாக இல்லாமல் தெய்வீகப் பெண்களும் அரச குடும்ப பெண்களுமாகவே ஓவியங்களில் இடம்பெற்றிருக்கின்றனர். இவ்வாறு அழகான பெண்களின் சித்தரிப்புக்கள் பெரும்பாலும் ஆண் ஓவியர்ககளிகளின் படைப்புகளாகவே இருந்திருக்கின்றது



படிப்பகம்

www.padippakam.com

என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஆனால் காலப் போக்கில் ஓவியத்தின் விடயங்கள் மாறிச் சென்றிருப்பதுடன் பெண் ஓவியர்களின் பார்வையில் பெண்கள் வித்தியாசமான முறையில் சித்தரிக்கப்பட்டிருப்பதையும் காணலாம். அவ்வாறான சில ஓவியங்கள் இக்கட்டுரையில் எடுத்தாயவுள்ளேன்.

தாயும் சேயும் என்ற தலைப்பு,மாதாவும் குழந்தையேசுவும் என்ற மிகப்பழையகால ஓவியங்களிலிருந்தே பிரபல்யமானது. 18ம் நூற்றாண்டின் ஓவியர்கள் உணர்வுபூர்வமான குடும்பச் சூழல்களைச் சித்தரிப்பதை தமது ஓவியங்களின் தலைப்புகளாக எடுத்துக் கொண்டதுடன் தாயும் சேயும் தலைப்பிலான ஓவியங்கள் அதிகளவில் வரத் தொடங்குகின்றது. இதற்கு 18ம் நூற்றாண்டின் பெண் ஓவியர்களான Marguerite Gerard இனதும் Constance Mayer இனதும் இரு ஓவியங்களை எடுத்துக்காட்டுகளாக காட்டலாம். இவ் ஓவியங்களில் தாய்மையும் தாயானவள் குழந்தையில் லயித்திருப்பதும் அழகாக சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது.

அடுத்து நியோர்க்கில் வாழ்ந்த 20ம் நூற்றாண்டு ஓவியையான Alice Neel நாளாந்த வாழ்வைச் சித்தரிக்கும் ஓவியங்களிலிருந்து மேலும் ஒருபடி முன்னேறி கர்ப்பிண பெண்ணைத் தன் படைப்பில் கொண்டு வந்திருக்கின்றார். இவ்வாறான ஓவியங்களைப் பார்ப்பதும் ஏற்றுக் கொள்வதும் சற்றுக் கடினமாக இருக்கும் சூழலில் குறிப்பாக பெண் ஓவியரால் படைக்கப்பட்ட ஓவியம் என்னும் போது பார்ப்பவர்களுக்கு அதிர்ச்சி தருவதாகவே இருந்திருக்கின்றது.அழகான பெண்ணின் நிர்வாணத் தோற்றத்திற்குப் பழக்கப்பட்ட ஓவிய இரசிகர்களுக்கு நிர்வாண கர்ப்பிணிப் பெண்ணை ஓவியத்தில் பார்ப்பது வித்தியாசமான அனுபவமாகவே இருந்திருக்கும்.



அமெரிக்காவில் வாழும் ஓவியையான Alice Neel அவர் நாளாந்த வாழ்வில் மனிதர் படும் அவஸ்தைகளையும் அனுபவங்களையும் தனது படைப்புகளில் கொண்டு வந்திருக்கின்றார். பெரும்பாலும் இவரின் படைப்புகள் மனித உடம்பின் உபாதைகளாகவே இருக்கின்றன. அத்துடன் நவீன காலத்தில்



படிப்பகம்

www.padippakam.com

ஓவியத்தின் வடிவம் முப்பரிமாணத்தோற்றமாக மாறிவந்திருப்பதால் விடயத்தில் விபரிப்புக்கள் அதிகளவில் சேர்த்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. பலவகையான ஊடகங்களையும் கொண்டு விடயங்கள் சித்தரிக்கப்படுவதும் படைப்பின் விபரணத்திற்கு உதவுவதாககின்றது. இந்த வகையில் Kiki Smithd பெண்ணின் மாதவிடாயைச் சித்தரிக்கும் படைப்பு மிகவும் வித்தியாசப்பட்டதாக அமைகின்றது. மேழுகாலான பெண்ணின் நிர்வாணத் தோற்றமும் சிவப்பு மணிகளாலான குருதி ஓட்டமும் இவ் முப்பரிமாண படைப்பில் கொண்டு வரப்பட்டுள்ளது. இன்னும் பல சகலாச்சாரங்களில் பேசப்படாத கூச்சப்பட வைக்கும் விடயம் பெண் படைப்பாளியால் கொண்டு வரப்பட்டிருப்பது வியக்கத்தக்கதே.

இந்த மாதியான வெளிப்படையான படைப்புக்கள் அண்மைக்காலங்களில் கீழைத்தேய பெண் ஓவியர்களும் எடுத்தாண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

நவீன காலத்தில் பெண்களுக்கும் விரும்பிய கற்கைநெறியை பயில வாய்ப்புக்கள் ஏற்பட்டிருப்பதால் ஓவியத்துறையிலும் அவர்கள் சிறப்பாக வளர்ந்துகொள்ள வாய்ப்புக்கள் ஏற்பட்டிருந்தாலும் கூட அவர்களின் சமகாலத்தவரான ஆண் ஓவியர்களுடன் சமமான அளவு பிரபல்யம் பெறும் வாய்ப்பு பெண் ஓவியர்களுக்கு குறைந்தளவிலேயே



கிடைக்கின்றதெனலாம் மேலும் மேலைத்தேய பெண் ஓவியர்கள் உலகளாவிய ரீதியில் அறியப்படுமளவு கீழைத்தேய குறிப்பாக இந்திய, சீனா, ஜப்பான் இலங்கை உட்பட்ட நாடுகளைச் சேர்ந்த பெண் ஓவியர்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகளும் கிடைப்பது அரிதாகவேயுள்ளது என்ற குறிப்பை Edith Krull தனது ஓவியத்தில் பெண்கள் என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே பெண்கள் ஓவியத்துறையில் ஈடுபடுவதுடன் மட்டுமன்றி பெண் ஓவியர்கள் பற்றிய குறிப்புகளும் அவர்களின் படைப்புக்கள் பற்றிய ஆய்வுகளும் விமர்சனங்களும் கூட இடம் பெற வேண்டும் என்பதை இக்கட்டுரையின் மூலம் வலியுறுத்த விரும்புகின்றேன்.

ஓவியை அருந்ததியின் இக்கட்டுரை பெண்கள்சந்திப்பில் வாசிக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

## லீனா மணிமேகலையின் கவிதைகள்

ஆச்சர்யப்படுத்திக் கொண்டேயிருப்பது அலுப்பாக
இருக்கின்றது
நேசிப்பதைச் சற்று தள்ளிப்போடலாம்

பொய்கள் வரையறை மீறி தீர்ந்து விட்டிருக்கின்றது
நட்பாக இருப்பதை பரிசீலித்துப்பார்க்கலாம்


சுமுகமாகவே தோன்றுவது சோர்வைத் தருகின்றது
உறவு கொண்டாடுவதை நிறுத்திக் கொள்ளலாம்

தயார்நிலை வித்தைகள் சலித்துப் போகின்றன
பணியிலிருந்து உடனே நீக்கிவிடலாம்

கதவுகள் திறந்தே இருப்பது
கண்கள் கூசுகின்றன

இந்த தடவை நீங்கள் ஓய்வெடுங்கள்

நானே கதவை சாத்திக்கொள்கிறேன்



**லீனா மணிமேகலை, இந்தியா**



படிப்பகம்

www.padippakam.com



என் குப்பியில்
பச்சை குறைந்திருந்தது
மரமும் கானகமும்
அடர்ந்தெழுந்தன

என் குப்பியில்
நீலம் கசிந்திருந்தது
கடலும் ஆகாயமும்
படர்ந்திருந்தன

என் குப்பியில்
வண்ணம் குழைந்திருந்தன
மண்ணும் மனிதமும்
விளைந்திருந்தன

என் குப்பி
உடைந்திருந்தது
பூ கம்பமும் சரிவும்
வெடித்திருந்தன

என் குப்பி
காணாமல் போயிருந்தது
புதிய கண்டம்
பிறந்திருந்தது

**லீனா மணிமேகலை, இந்தியா**



படிப்பகம்

www.padippakam.com

# அம்மாவும் சாப்பாத்தும்

சாந்தினி வரதராஜன், ஜேர்மனி

வெளியில் பனி கொட்டிப்போய் கிடந்தது. இனி இந்த குளிருக்கு ஏற்றமாதிரி சப்பாத்து போட்டு சுவற்றர் போட்டு எல்லாமே சுமையாக தோன்றினாலும். எனக்குளிருக்கும் வலியின் சுமை இவையெல்லாம் வெறும் பஞ்சை சுமப்பதுபோல்தான். சப்பாத்து நிறைந்து வழிந்து கொண்டிருந்தது. வீட்டுக்கார அன்ரியும் சொல்லத் தொடங்கிட்டா. சித்தியும் அப்பிடித்தான் சொன்னவ. துளசி உம்மட சப்பாத்துக்கடை கூடிப்போச்சுது தேவையில்லாதை தூக்கி எறியும். ஓம் எண்டு சொன்னாலும் எறியிறது சுகம் எண்டுதான் எல்லாரும் நினைக்கினம். எதை எறியிறது எதைவைச்சிருக்கிறது? என்னால எதையுமே எறிய முடியேல்ல. நேரம் ஓடிக்கொண்டேயிருந்தது. கோப்பையும் எச்சிலை ஏந்திக்கொண்டு எனக்காக காத்துக்கொண்டிருக்கும். பனி இறுகி பாறங்கற்களாய் கிடந்து நடையின் வேகத்தை தடுத்துக் கொண்டே இருந்தது. ஒரு ஒளி காணும் அதன் இறுக்கம் இழந்து சத்தமில்லாமல் கரைந்தோடுவதற்கு.

தூரத்தில் ஓப்பாவும் சந்திராவும் வருவது தெரிந்தது. அவரின் சிரிப்பு நான் வருவதை சந்திரா சொல்லிவிட்டா என்பதை காட்டியது. இனி ஓப்பா மோர்கன் சொல்லி கைதடவி கவனமா போய்வா மகள். ஓப்பாவின் வார்த்தை என்னோடு நடைபோட்டபடியே வரும். அவரின் அம்மாவும் போருக்கு போகேக்க இப்பிடித்தான் சொல்லி அனுப்பியிருப்பா. சந்திரா ஏதோ சொல்லி கைகாட்டுவதும் அவர் சிரிப்பதும் தூரப்போனாலும் கேட்டுக்கொண்டே இருந்தது. ஓப்பாவின் மனதில இந்த கிராமம் ஸ்பார்காசையில இருக்கிற படம்மாதிரி இடிந்த வீடுகளும் உடைந்த தெருக்களும்தான் பாசிபோல படர்ந்து கிடக்கும். எங்கட கடற்கரை கிராமமும் பதினைஞ்சு வருஷத்தில நல்லா மாறிபோயிட்டுதெண்டு சித்தப்பா சொன்னவர். பாவம் ஓப்பா இவரால எப்படி சிரிக்க முடிகிறது? இல்லை ஓப்பாவுக்குள் இன்னொரு ஓப்பா



படிப்பகம்

www.padippakam.com

ஒளிந்திருந்து அழுது கொண்டே இருப்பார். மனிதருக்குள் எத்தனை முகங்கள் ஒளிந்திருக்கின்றன என்பதை கண்டுபிடிக்கவே முடியாது.

கடலும் கண்ணாடிபோல பளிங்காய் இருக்கும் என்றுதான் நினைச்சிருந்தனான். ஆனா அதுவும் தனக்குள்ள கோர முகமொன்றை ஒழிச்சுவைச்சிருந்திருக்கெண்டு பிறகுதானே தெரிஞ்சது.. சித்தியும் தன்ர இன்னொரு முகத்தை வெளியே எடுத்த பொழுது எங்கும் இருட்டாகவே இருந்தது. எப்பவும் என்ர நம்பிக்கைகளை எனக்கு தெரியாமல் ஆராவது பறித்துக்கொண்டே இருப்பினம்.. தகப்பனுக்கும் மகளுக்கும் உள்ள உறவை புரிந்து கொள்ள விரும்பாத சித்தியின் வார்த்தைகள் நெருப்பாய் விழுந்த பொழுது அதில் கருகிவிடமல் என்னை காப்பாற்ற சித்தப்பா பட்டபாடு. அன்றும் அப்படித்தான். இந்தப்பிள்ளை இனி என்ன செய்யப்போகுது? எனக்குள் எழத்தெரியாத கேள்வி மற்றவர்களால் எழுப்பப்பட்டபோது, காப்பாற்றும் கடவுளாக வந்த சித்தப்பா. வீட்டுக்கார அன்ரி நல்லவ ஆனா மாமாவின்ர முகத்தில சிரிப்பை ஒட்டவைத்தாலும் அது ஒட்டாமல் திரும்ப திரும்ப விழுந்துவிடுகிறமாதிரி ஒரு முகம். சில நேரங்களில அன்ரி சொல்லுவா

இங்கேருங்கப்பா நீங்க போறவழியில இவளை இறக்கிவிட்டிட்டு போங்கோ சரியான குளிராக்கிடக்கிது

எனக்கு நேரம்போச்சுது நீர் ஒருபக்கம்.

சரி சரி வரச்சொல்லும் பிறகு உம்மட புறு புறுப்பை என்னால தாங்கேலாது. நானும் வாய்க்குள்ள சாப்பாட்டை வைச்சுக்கொண்டு முளித்துக்கொண்டிருப்பன். பிறகு பெல்ற் போட்டுவிடுகிற சாக்கில முட்டுறதும். வசனமே இல்லாத முனகல் பாட்டைபோட்டிட்டு ஒரு மாதிரி சிரிக்கிறதும். இவர் காரைவிட்டு இறங்கேக்க தன்ரை முகத்தை காருக்குள்ள களற்றிவைச்சிட்டுத்தான் இறங்குவார். அன்ரி வீட்டில இல்லாத நேரங்களில மட்டும் காருக்க இருக்கிற முகம் வீட்டுக்குள்ள நடக்கும். அவரின்ர ஒவ்வொரு அசைவும் நிழலா என்ரை காதவிற்கு அருகாமை விழுந்தபடியே இருக்கும். பூனை நடப்பது அதற்கே கேட்காததுபோலதான் இவரும். அப்பொழுதெல்லாம் கிளியின் கூடு பூட்டியபடியே கிடக்கும். இந்த காட்டுப்பூனையைபற்றி சித்தப்பாவுக்கு நான் எப்பிடி சொல்லுறது? . ஏனோ தெரியவில்லை எனக்குமட்டும் எல்லாக் காலங்களும் காயங்களோடுதான் கரைந்து போகின்றது. அந்தபொழுதுகளில் எனக்குள் ஒளிந்திருக்கும் மனசு யாரும் அறியாத இரவிற்காய் காத்திருந்து பெரும் குரல் எடுத்து அழும் அப்போது மட்டும் என்ரை அம்மா என்னை குஞ்சு என மெல்லத்தடவுவா..

கோப்பை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டபடியும் வரிசையாகவும் எனக்காக காத்திருந்தது. செவ் நிற்கக்கூடாது கடவுளே என்று நினைக்க தான் தோன்றிமாதிரி



படிப்பகம்

வந்துநின்றார். ஏனோ தெரியாது எப்பவும் நான் நினைக்கிறதுக்கு எதிராத்தான் எல்லாம் நடக்கும். நான் உனக்கு கனதரம் சொல்லிற்றன் நீ கெதியில வெளியில போகப்போறாய். இப்பிடித்தான் சித்தியும் சொன்னவ அவ சொல்லேக்க அழுகைவந்தது. .சில நேரங்களில சொந்த பாஷையில கேக்கேக்க அதின்ர ஒலி தாக்கிறது வேறமாதிரி இருக்குமோ?. தோளிலிருந்த பை கனத்தது. சித்தி என்ரை பாக்கை பார்க்கிற நேரமெல்லாம் கேட்பா இந்த வெறும் பாக்கை என்னத்துக்கு காவிக்கொண்டு திரியிறய்? அவவுக்கு தெரியாது அதுக்குள்ள எவ்வளவு பாரமான மனசு கிடக்குதென்று. கோப்பைகள் கழுவியபின் வர்ணம் விசிறி சிரித்தது. இப்பிடி கோப்பைகளை செறின் வீட்டிலதான் கண்டனான். அது நிறைய சொக்கிளேற்றும், கேக்குமா நிறைஞ்சுபோய் இருந்தது. கை தண்ணில ஊறி வெளிறிப்போய் கிடந்தது. என்ரை அம்மாவின்ர கையும் இப்பிடித்தான்...............................

அம்மாவின் விரல் பிடித்து நடக்கும் பொழுதுகளில் நெருப்பு துண்டங்கள் காலுக்கடியில் கிடப்பதுபோல் இருக்கும்.. அம்மா ம் அம்மாவின் சிந்தனை முழுவதும் மீனைப்பற்றியும், அப்பத்தை பற்றியதாகவே இருக்கும்.

அம்மா

ம்

கால் சரியா சுடுகிது

இன்னும் கொஞ்ச தூரம்தானே குஞ்சு. அம்மா கதை சொல்லத் தொடங்குவா. அம்மா எப்பவும் கடலைப்பற்றித்தான் கதை சொல்லுவா. ஆனா பெயரைமாத்திரம் கடலம்மா, கடலாச்சி எண்டு மாத்தி மாத்தி ஒரே கதையைத்தான் சொல்லுவா. கடலுக்கடியில ஒரு பெரிய அரண்மனை இருக்கிது அங்க கடல்தேவதைகள் வெள்ளை வெள்ளையா சட்டைபோட்டுக்கொண்டு தலையில மினுங்கிற வளையம்போட்டு, இடையில கதை நிற்கும் அம்மா· மீனைபற்றி சொல்லத் தொடங்கிடுவா கேக்கிற ஆக்கள் மூச்சு விடுகிற இடைவெளியில அம்மான்ர குரல் நுழைஞ்சு அப்பத்தைபற்றியும் சொல்லத்தொடங்கும். அவையள் அப்பத்தையும் எங்களையும் கண்ணை சுருக்கிக்கொண்டு பார்ப்பினம். எனக்கு அம்மாவை பார்க்க பாவமா இருக்கும். அம்மான்ரை ஒரு கை என்னை பிடிச்சிருக்கும் மற்றகையால வேர்வையை துடைச்சபடி நடப்பா அம்மா நடக்கேக்க ஷ ஷ எண்டு சத்தம் வரும். அம்மான்ர தலையில இந்த பெட்டி விழாமல் எப்பிடி நிக்குது? இதைபற்றியும் இடைக்கிடை யோசிச்சுக்கொண்டே துள்ளி துள்ளி நடப்பன்.

அம்மா கதை

ஓ பிறகு என்னத்தோட விட்டனான்.

அவையள் மினுங்கிற தொப்பிபோட்டு. அப்ப பார்த்து ஏய் மீன் எண்டு கூப்பிடுவினம். எனக்கு கோபம்

www.padippakam.com

கோபமா வரும். இவை என்ரை தேவதை கதையை குழப்பிறதுக்குத்தான் இப்பிடி செய்யினம். ஆ இதில்லை மற்ற மீனை காட்டு, வேற என்ன வைச்சிருக்கிறாய்? அம்மா அப்பத்தையும் காட்டுவா அவையள் அப்பத்தை பார்கவே மாட்டினம் இது என்ன விலை? குறையன் வாங்கிறம். எண்டு ஆறுதலாதான் கேப்பினம். அவையளின்ர காலில செருப்பிருக்கும். நான் ஒரு காலை தூக்கி மற்ற காலை தூக்கி. நடக்கிற எல்லாற்றை காலிலையும் கலர் கலரா செருப்பிருக்கும். எனக்கும் என்ரை அம்மாவுக்கும் மட்டும் எதுவுமில்லை. அம்மாவை பார்த்தன் ஏதோ யோசிச்சபடி நடக்கத்தொடங்கினா. அம்மா உங்களுக்கு சுடேல்லையே? அம்மா எப்பவும்போல சிரிச்சுக்கொண்டு என்ர கையை இன்னும் இறுக்கி பிடிப்பா.. அம்மா . அவையள் ஏன் உங்களை மீன் எண்டு கூப்பிடுனம்? என்ர அம்மாவுக்கு பெயர் இருக்குதானே. அப்பவும் சிரிப்பா. என்ரை அம்மாவோட சனிக்கிழமை சந்தைக்கு போறதெண்டா எனக்கு ஒரே புழுகம். சந்தைக்கு முன்னாலதான் சப்பாத்து கடை அந்த கடையில தேவதைகள் போடுற சப்பாத்து இருக்கிது. வெள்ளையா. பின்னால லையிற்மாதிரி மினுங்கும் அம்மா மீன் மீன் எண்டு கத்திக்கொண்டிருப்பா நான் அந்த கடையையும் சப்பாத்தையும் பார்த்துக்கொண்டிருப்பன். அங்க வாற எல்லாரும் போகேக்க சப்பாத்து பெட்டியோடத்தான் போவினம். ஒரு நாள் செறினும் அவளின்ர அப்பான்ர கையைபிடிச்சுக்கொண்டு சப்பாத்து பெட்டியையும் கட்டிப்பிடிச்சுக்கொண்டு போகேக்க நான் அம்மாவை பார்த்தனான். அப்ப அம்மாவும் என்னை பார்த்தவா அம்மான்ர கண் ஈரமா இருந்தது. அங்க வாற ஆரும் அந்த சப்பாத்தை தொட்டு பார்த்தா எனக்கு நெஞ்சுக்குள்ள டக்கு டக்கெண்டு கேக்கும். நான் அவையள் அதை வாங்கக்கூடாது எண்டு கும்பிட்டபடி இருப்பன். ஒரு நாள் நான் எழுத்துக்கூட்டி பாட்டா எண்டு வாசிச்சுகாட்டினான். அம்மா என்னை கொஞ்சிபோட்டு சொன்னவ

என்ரை குஞ்சுக்கு அம்மா எப்பிடியும் சப்பாத்து வாங்கிதருவன்.

எப்ப?

அது ஒரு நாளைக்கு

என்ரை பிறந்த நாளுக்கு?

பார்ப்பம்.

ம் வருஷப்பிறப்புக்கு

சரி

அச்சா அம்மா எண்டு கட்டிபிடிச்சனான்.

இரவில கடல்காற்று மண்ணை அள்ளி அள்ளி எறியும். அம்மா தன்ரை சாறியால என்ரை முகத்தை மூடிக்கொண்டு கதை சொல்லுவா. அம்மா நாங்கள் அப்பாவோடை பார்த்த படத்திலவாற தேவதைகளின்ர சட்டை



படிப்பகம்

www.padippakam.com

மாதிரி இவையளின்ர சட்டையும் பொங்கிக்கொண்டிருக்குமோ ? அவையள் நல்லவை எண்டா ஏன் என்ரை அப்பாவை பிடிச்சுவைச்சிருக்கினம்? நிலவின் ஒளியில் அம்மாவின் முகம் கறுத்துபோய்கிடக்கும். என்ரை அம்மா கடலை பார்த்து பெருமூச்சுவிடுவா. அம்மா அழுகிறீங்களா ? சீ மண்போயிற்று குஞ்சு எண்டு சொல்லிபோட்டு சீலையால கண்ணை துடைச்சவ. சந்திரனுக்குள்ள ஒவ்வைபாட்டி முயல் எல்லாம் இருக்கே அம்மா ? என்ர அம்மா சிரிக்கேக்க அவவின்ர கண்ணும் சிரிக்கும். அம்மா நானும் உங்களை மம்மி எண்டு கூப்பிடட்டே ? செரினும் மம்மியெண்டுதான் கூப்பிடுறவள்

அவை பணக்காரர் அப்பிடித்தான் கூப்பிடுவினம்.

பணக்காரர் எண்டா என்னம்மா ? அம்மா அப்பவும் சிரிப்பா இந்த அம்மா இப்பிடித்தான் என்ரை கன கேள்விக்கு பதிலே சொல்லமாட்டா ? ஓம் இன்னும் பதிலே இல்லாத கேள்விகள் காற்றில் கரையாமல் திரும்ப திரும்ப ஒலித்தபடிதான்.

இல்லை நானும் மம்மியெண்டுதான் கூப்பிடுவன்.

சரி சரி ஆனா ஆரும் இருக்கேக்க கூப்பிடாத என்ன

ஏன் அம்மாவும் இப்பிடி சொல்லிறா?

அவளும் சொன்னவள் எடியே ஆரும் இருந்தா என்னை கூப்பிடாத. என்ன யாழ்ப்பாணம் போயிற்று வந்தா புதுப்புது விளையாட்டெல்லாம் பழகிக்கொண்டு வருவாள். ஆனா என்னை சேர்க்கவே மாட்டாள். அவள் எப்பவெல்லாம் சிரிக்கிறாளோ அப்பத்தான் நானும் விளையாடலாம். அவள் சிரிக்கேக்க அவளின்ர வீட்டில இருக்கிற மோனலிசா மாதிரித்தான் சிரிப்பாள். சில நேரங்களில ஏன் சிரிக்கிறாள் எண்டு கண்டுபிடிக்கவே முடியாது. நான் நினைக்கிறன் அந்த படத்தை பார்த்துதான் இவளும் சிரிக்கப்பழகியிருப்பாள். அண்டைக்கும் அப்பிடித்தான் தேவதைகளின்ர சட்டைமாதிரி போட்டுக்கொண்டுவந்து ரொபி குடுத்தவள் எல்லாரும் நீயூபின் எண்டு சொல்லி நுள்ளினவை. எனக்கும் ஆசையா இருந்தது. நான் மனதுக்க நியூபின் சொன்னனான். எல்லாரையும் பிறந்தநாளுக்கு கூப்பிடேக்க கடவுளே கடவுளே இவள் என்னையும் கூப்பிடவேணுமெண்டு கும்பிட்டனான். கனநேரம் ஏதோ யோசிச்சிட்டு மெல்லிசா சிரிச்சவள்.

அப்பா கடைசியா வேண்டிதந்த சட்டையை அம்மா போத்தலுக்க சுடுதண்ணிவிட்டு தேச்சுபோட்டு தந்தவா நான் தலையணிக்கு கீழே வைச்சு படுத்திட்டு போட்டுக்கொண்டு போனனான். உன்ரை சட்டையில என்னவோ மணக்கிது எண்டு சொன்னவள். நான் மணந்து பார்த்திட்டு இல்லையே எண்டு சொல்லேக்க எல்லாரும் சிரிச்சவை. அவளின்ர வீட்டு வாசலை நிரப்பினபடி செருப்புகளும்,



படிப்பகம்

www.padippakam.com

சப்பாத்துக்களும் நிறைஞ்சிருந்தது.அதுக்கு நடுவில அந்த தேவதைகளின்ர சப்பாத்து அது என்னை பார்த்து பார்த்து சிரிச்சது. செறின் ரோஸ்நிறத்தில சட்டைபோட்டு அதே நிறத்தில சப்பாத்து போட்டு எல்லாரும் அவளை கொஞ்சிபோட்டு பரிசுகள் குடுக்கேக்க அவள் என்னை பார்த்தவள் நானும் அம்மாவும் சிப்பி எடுத்து ஒட்டி ஒட்டி பொம்மை செய்தனாங்கள் ஆனா நான் அதை குடுக்காம மறைச்சுவைச்சுக் கொண்டிருந்தனான். யாழ்ப்பாணத்தில இருக்கிற அவளின்ர அன்ரியின்ர மகள் பார்பிவீடு குடுத்தவ. அதுக்குள்ள அவளின்ர வீட்டில இருக்கிற சாமான்கள் மாதிரியே எல்லாம் இருந்தது. அதோட பார்பியும் அதுக்கும் நிறைய சப்பாத்தும் சட்டைகளும் இருந்தது. அவள் அதையே கட்டிப்பிடிச்சுக்கொண்டிருந்தவள் நாங்கள் எல்லாரும் அவளையே பார்த்துக்கொண்டிருந்தனாங்கள். பிறகு அவளின்ர அப்பா எங்களுக்கு சிண்டிரல்லா படம்போட்டுவிட்டவர். அந்த படத்தில சிண்டிரல்லா அழேக்க தேவதை வந்து சப்பாத்தெல்லாம் குடுத்து சட்டையெல்லாம் குடுத்தவ. செறின் சொன்னவள் அது அவளின்ர செத்த அம்மாவாம். என்ரை அம்மாவும் செத்தா நல்லம் அப்பத்தான் நான் அழேக்க தேவதையாவந்து எல்லாம் தருவா எண்டு நினைச்சனான். பிறகு எனக்கு அழுகைவந்திட்டுது. நான் ஒருத்தருக்கும் தெரியாமல் கடவுளே கடவுளே எண்டு சொல்லி மூண்டுதரம் துப்பினனான். இதை கனதரம் பார்த்திட்டன் சரியான போறிங்கா இருக்கிது நாங்க ஒழிச்சுபிடிச்சு விளையாடுவம் என்ன எண்டு சொல்லிபோட்டு மங்கி டொங்கி சொன்னவள். அவள் எப்பவும் தன்னில கை வராமல் கவனமா பார்த்துக்கொள்ளுவாள். எல்லாரும் ஓடிப்போய் ஒளியுங்கோ எண்டு சொன்ன உடன எல்லாரும் வண்ணத்து பூச்சிமாதிரி பறந்துபோனனாங்கள். நான் ஓடிப்போய் சப்பாத்து அலுமாரிக்கு பின்னால ஒழிஞ்சனான். எனக்கு பக்கத்தில அந்த சப்பாத்து மினுங்கிக்கொண்டிருந்தது. நான் அதை பார்க்க கூடாது பார்க்க கூடாது எண்டு நினைச்சாலும் என்ரை கண் அதையே திரும்ப திரும்ப பார்த்துக்கொண்டிருந்தது. ஒருக்கா தொட்டாவது பார்க்கவேணும்போல ஆசையா இருந்தது. பாட்டா கடைக்காரனும் தொட்டுபாாக்க தரமாட்டன் எண்டுதான் சொன்னவர்.மெல்ல சப்பாத்தை தடவிபார்த்தன் செறின் பதுங்கி பதுங்கி எங்களை தேடிக்கொண்டிருந்தாள். ஒருத்தரும் பார்க்கேல்லைத்தானே ஒருக்கா போட்டு பார்ப்பம் எண்டு நினைச்சு காலில போடேக்க செறின்ர அன்ரியின்ர மகள் மம்மி எண்ரை சூவை களவெடுக்கிறாள் எண்டு கத்தி அழத்தொடங்கிட்டாள். எனக்கு பயம்வந்திட்டுது இல்லை இல்லை எண்டு நான் அழுததை ஆரும் நம்பேல்ல. போடி கள்ளியெண்டு சொல்லி செறின் என்னை தள்ளிவிடேக்க என்ரை முழங்காலாலை இரத்தம் வந்தது. எல்லாரும் என்னை கோபமா பார்த்தவை அப்ப ரீவியில இளவரசன்



படிப்பகம்

இந்த சப்பாத்து ஆருக்கு அளவு? ஆருக்கு அளவு? எண்டு கேட்டுக்கொண்டே இருந்தார். கடலை பார்த்தபடி இருந்த என்ரை வீட்டின்ர முகத்தை கண்டோன்ன எனக்கு அழுகை அழுகையா வந்தது.

இரத்தம்வராமல் இருக்க முழங்காலில மண்ணை அப்பியிருந்தனான் அதை அம்மா கடல்தண்ணியால கழுவேக்க சரியா எரிஞ்சது. அம்மா என்ரை தலையை தடவிவிட்டுக்கொண்டே இருந்தா. பிய்ஞ்ச செருப்பு சப்பத்து தைக்கனுமா? கேள்வி கேட்டபடி கத்திக்கொண்டே போனவர் கடற்கரை நீளத்துக்குபோய் மறைந்தாலும் அந்த கேள்வி அந்த இடமெல்லாம் கேட்டுக்கொண்டே இருந்தது. என்ரை அம்மான்ரை கண் சிவப்பாயிருந்தது. இப்ப அவை என்ன செய்வினம்? திரும்பவும் மங்கி டொங்கி விளையாடுவினமோ? இல்லாட்டி சிண்டிரல்லா பார்ப்பினமோ? என்னை பற்றி கதைச்சு சிரிச்சுக்கொண்டிருப்பினம் பள்ளி தொடங்கேக்க எல்லாருக்கும் என்னை கள்ளி எண்டு சொல்லுவினம். அம்மா நான் கள்ளியாம்மா? நீ ஏன் குஞ்சு அங்கைபோனனீ எண்டு அம்மா அழுதவ. அம்மாவை பார்க்க பாவமா இருந்தது. என்ரை அம்மா செத்தா நல்லம் எண்டு நினைச்சபடியாலதான் இப்பிடியெல்லாம் நடந்தது. அம்மாட்டை சொல்லுவமோ? சொன்னா அழுவவோ? கனவுமுழுக்க கள்ளி கள்ளி எண்டு எல்லாரும் என்னை பார்த்து பார்த்து சிரிக்கிறதும் தேவதைகள் எனக்கும் சிந்திரெல்லாவுக்கு குடுத்தமாதிரி சப்பாத்து பொங்கிற சட்டை எல்லாம் தருகிறமாதிரியும் நான் சரியா பன்னிரன்டு மணிக்கு வராததால திரும்பவும் பூசனிக்காயய், எலியாய் மாற செரினும் அவளின்ர சினேதிகளும் சிரிக்கிற சத்தமும் கேட்டுக்கொண்டே இருந்தது. இல்லை இல்லை நான் கள்ளி இல்லை, கள்ளி இல்லை சும்மாதான் தொட்டு பார்த்தனான் எண்டு கத்திக்கொண்டு முளிச்சு பார்த்த பக்கத்தில சப்பாத்து பெட்டி. எனக்கு கனவுபோல இருந்தது. கண்ணை கசக்கி கசக்கிபோட்டு திறந்து பார்த்தா உண்மையா சப்பாத்து அம்மாவை பார்க்க அம்மா சிரிச்சவ. எனக்கு புழுகம் புழுகமா இருந்தது. என்ரை அம்மா அச்சா அம்மா எண்டு கட்டிப்பிடிச்சு கொஞ்சினான் எல்லாருக்கும் சப்பாத்தை காட்டவேணும்போல இருந்தது. எப்ப காட்டலாம்? பள்ளிக்கூடம் தொடங்க கனநாள் இருக்கிது. ம் நத்தாருக்கு போட்டுக்கொண்டு கோயிலுக்குபோவம். அவைக்கு முன்னால நடந்துபோனாத்தான் லயிற் எரியிறதை பார்ப்பினம். எப்ப அம்மா நத்தார் வரும்? அது வரும் எண்டு சொல்லிக்கொண்டு அம்மா தூரப்போய்க்கொண்டிருந்தா.

நித்திரையால எழும்பின நேரம் தொடக்கம் எனக்கு அம்மாவில கோபம் கோபமா இருந்தது. ராத்திரி ஏன் என்னை எழுப்பி கோயிலுக்கு கூட்டிக்கொண்டு போகேல்ல? சிச் அவையளுக்கு இனி எப்ப நான் என்ரை சப்பாத்தை காட்டுறது? இந்த அம்மாவோட இனி நான் கதைக்கவே

www.padippakam.com


கூடாது. நல்ல குஞ்சலல்லோ வருஷத்துக்கு போட்டுக்காட்டலாம். இப்ப வா குளிச்சிட்டு சாப்பிடுவம். அம்மா கெஞ்சிக்கொண்டே இருந்தா நான் கதைக்கவே இல்லை. முகத்தை திருப்பிக்கொண்டிருந்தனான். இதென்ன சத்தம்?

அம்மா ஏன் கத்ததுறா? என்னால் எதையுமே சிந்திக்க முடியவில்லை என்ரை குஞ்சு ஓடிவா ஓடிவா எண்ட அம்மாவின் சத்தமும். மற்றவர்கள் கத்துவதும் அம்மாவின் இழுப்புக்கு ஏற்ப ஓடிக்கொண்டே இருந்தன..

நடக்கவில்லை என்பதுபோல் பேரலைகள் பின்வாங்கி நின்றபோது. எனக்கும் ஒன்றுமே விளங்கவில்லை. ஆனால் நினைவுகளை மட்டும் கடற்பரப்புபோல நீட்டி வளர்த்துவிட்டிருந்தது. ஒவ்வொரு நிகழ்வும் இன்னும் கண்ணுக்குள் வழிந்தபடி.

ஐயோ அம்மா கடல் வருகுது

நீ கெதியா ஓடிவா எல்லா முகங்களும் கடலை திரும்பி திரும்பி பார்த்படி ஓடின. ஓடுவம் என நினைத்த பொழுது




அந்த கடலின் கைகளுக்குள் அடிபட்டு சுவடுகள் புதைந்துபோன அத்தனை நினைவுகளும் மேலெழும்பொழுது வாழ்க்கை ஓவென்று இரைச்சலோடுதான் அழுகின்றது. என் நினைவுகளை தனக்குள்வாங்கிய கடலும் மேகமும் எப்பவும் கறுத்தபடிதான். எதுவுமே

அம்மா என்ரை சப்பாத்து. எல்லா சத்தமும் என் குரலை எழும்பவிடாமல் தடுத்தது.

அது கிடக்கட்டும் நீ ஓடி வா குஞ்சு.

இல்லை எனக்கு என்ரை சப்பாத்து வேணும். என் கால்களை கடல்



படிப்பகம்

www.padippakam.com

தொடத்தொடங்கியது

ஐயோ அதை பிறகு எடுக்கலாம் நீ வா

.இல்லை எனக்கு என்ரை சப்பாத்துதான் வேணும். அம்மாவின் பிடியை நழுவவிட்டேன்.

சரி நீ ஓடிப்போ நான் எடுத்துக்கொண்டு வாறன். அம்மா வருவா நீ ஓடு என்ரை அம்மா என்னை திரும்பி திரும்பி பார்த்தபடி கடலை எதிர்த்துக்கொண்டு ஓடினா. அம்மாவும் அம்மாவின்ர குரலும் தூர தூரப்போய்க்கொண்டிருந்ததை பார்த்தபடி நின்ற என்னை ஒரு கை இழுத்துக்கொண்டு ஓடியது. ஓடிய கால்கள் நின்றபொழுது எல்லாமே இழந்த மனிதர்களின் ஓலங்கள் மட்டும் கடற்கரையெங்கும் ஒலித்தபடி அத்தனை குரல்களையும் காவி காவிகாற்று முகங்களிலும் காதுக்குள்ளும் கொட்டியபடி இருந்தது.ஒவ்வொருவரின் குரல்களும் அவர்களின் முகங்களை நினைவுபடுத்தின.எங்கு பார்த்தலும் மனித உடல்கள் என்ன நடந்தது? உன்ரை அம்மா எங்க பிள்ளை? என்னை இழுத்துக்கொண்டு ஓடிய அத்தனை முகங்களும் என்னை கேள்வி கேட்கத்தொடங்கின. வார்த்தைகள் வறண்டு வெளிவராமல் நின்றது.

என்ரை அம்மா எங்க? அம்மா எங்க அம்மா இருக்கிறீங்க? உயிர் உடைந்த கதறல்களுக்குள் என் சின்னக் குரல் அம்மாவுக்கு கேட்கவில்லையோ? என நினைக்கவைத்தது. சோடிகள் இல்லாத சப்பாத்துக்களும் செருப்புகளும், புத்தகங்களும் நிறைந்த கரையில் என் அம்மாவின் காலை அளவு எடுத்து கீறிய படம் என் கால்களுக்குள் அம்மாவையே கண்டுவிட்ட சந்தோஷத்தில் அதை எடுக்க குணிந்த பொழுது பக்கத்தில ஐயோ இது செறினின்ர பார்பி வீடு அதுக்குள்ள ஒண்டும் இல்லாம உடைஞ்சுபோய் கிடந்தது. எடுப்பமா எண்டு நினைத்தபொழுது போடி கள்ளி என்று செரின் கத்துவது கேட்டது. இங்க ஓடி வா பிள்ளை கெதியா வா பிள்ளை ஏன் எதுவுமே என்னால் நினைக்க முடியவில்லை.. அங்க அங்க என்ரை குஞ்சு அம்மா என்ரை சப்பாத்தை கட்டிப்பிடிச்சபடி என்னையே பார்த்துக்கொண்டிருந்தா.





படிப்பகம்

www.padippakam.com



**ஓவியம் : மோனிகா**




படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# அவள்



தொலைவின் மரத்தினடியே
தொங்கும் கொங்கைகளுடன் ஒருத்தி
என் வாயில் தாண்டி சன்னல் தாண்டி
வழி தாண்டி, மொழி தாண்டி,
மங்களூர், யாழ்ப்பாணம், மொரிஷியஸ்,
ஆப்பிரிக்கா, க்யூ பா, டுனீசியா
திரும்பவும் டுனீசியா, க்யூ பா, ஆப்பிரிக்கா,
மொரிஷியஸ், யாழ்பாணம், மங்களூர் தாண்டி
எனது பார்வை
அவள் மீது.

காலை கண்ணாடியின் முன்
மைவைத்தேன், உதட்டுக்குச் சாயம் எழுதினேன்.
எல்லா ஒப்பனைக்கும் பிறகு
ஓயாமற் தேடினேன் என்னை எல்லா
கண்ணாடியின் முன்னும்,
இந்த உலகம் வளரும் முன் இருந்த என்னை
என்ற ஈட்ஸின் பாடல் வரியையும் தாண்டி
எனது பார்வை.

தோல் சுருங்கலில் தொலைத்த
நாகரிகம் முழுவதையும் கால் அணியின் இடுக்கில்
தொட்டுத் தடவிக் கொண்டிருந்தாள் அவள்.
இருட்டின் கருக்கலில் மொழியைத்
துலைத்துவிட்டு தேடிக்கொண்டிருந்தாள்.
விடியல் வருமென்று என்னால் சொல்ல
முடியவில்லை.
வரைபடங்களை ரப்பரிட்டு
அளித்தால் தெரியலாம்
அவளது தூரமைத் தடம்.
அதற்கு நான் என்ன செய்ய?

அதனால் இளமை வருமென்றும்
என்னால் சொல்ல முடியவில்லை

உரக்கக் கூவினேன் அவளை அழைக்க
வருகிறேன் என்கிறாள்
வாழ்க்கையின் முடிவில்.
அதுவரை பார்ப்பாள் அவளும் என்னை.

— மோனிகா , அமெரிக்கா



படிப்பகம்

www.padippakam.com



# அனாரின் ஓவியம் வரையாத தூரிகை

## நூல் விமர்சனம்

**சுல்பிகா**

அனாரின் கவிதைகள் பற்றிய என் வாசிப்பு என்னுள் ஏற்படுத்தியுள்ள உணர்வுகள் பற்றிப் பேசுவதற்கு கவிதைகள் பற்றிய எனது கருத்தையும் அதனை எவ்வாறு நான் நோக்குகிறேன் என்பது பற்றியும் முதலில் நான் கூறவேண்டும். தனிமனிதன் உணர்வுகள் சமூக உறவுகளுடனும் இயற்கையுடனும் இடைத்தாக்கமுறும் போது ஏற்படும் இன்பத்தை திருப்தியை,வலியை, நோவை, அது பற்றிய ஆதங்கத்தை எதிர்பார்ப்பை ஏதோ ஒரு வகை மொழியமைப்புக்கூடாக வெளிப்படுத்தும் போது அது கவிதையாகின்றது. அங்கு பிரச்சினைகளும் வேதனைகளும் உண்டு. அவ்வாறே அவற்றுக்கான தனிமனிதத் தீர்வுகளும் உண்டு. இவ்வகையில் கவிதைகள் சமூக செயற்பாட்டு வாதத்துக்கான அதாவது சமூகத்தில் சீரமைப்புக்களை ஏற்படுத்துவதற்கான ஒரு கருவியாகவும் அமைந்து விடுகின்றது.

பிரச்சினைகளை முன் வைப்பது அதன் மூலவேர் பற்றிச் சிலாகிப்பது, விமர்சிப்பது கண்டுபிடிப்பது பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன் வைப்பது பாதிப்புற்றோரை வலிமையற்றோராக அல்லது உறுதியுள்ளோராக நோக்குவது போன்றன இவ்வகையான சமூக செயற்பாட்டுக் கருவிகளாக அமையும் கவிதைகளின் லட்சணங்களாக உள்ளன. இவ்வகையான லட்சணங்கள் பலவற்றை அனாரின் கவிதைகள் எல்லாமே கொண்டிருப்பதை நான் காண்கிறேன். கவிதைகள் வெற்றிடங்களில் உருவாக்கப்படுவதில்லை. ஆக்க முயற்சிகள் யாவற்றுக்கும் நோக்கங்கள் உள்ளன. அடிப்படைகள் உள்ளன. பின்புலங்கள் உள்ளன. எனவே அனாரின் கவிதைகளை இவற்றுக்கு அப்பாலிருந்து நோக்குவது அவருக்கு இழைக்கும் அநீதியுமாகும். உதாரணமாக அழகியல் நோக்கத்துடன் அல்லது இயற்கையுடன் வாழ்தல் என்ற பின்புலத்திலிருந்து எழுதப்பட்ட ஒரு கவிதையை சமூக நோக்கில் எழுதப்பட்டிருக்கிறதா என்று நாம் ஆய்வு செய்ய முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

ஆய்வு செய்வோருக்கும் ஆக்கியோனுக்குமிடையில் எங்கு பிரச்சினை எழுகிறது? ஆக்கியோன் தனது ஆக்க நோக்கங்களை அதன் அடிப்படைகளை அதன் பின்புலத்தை வெளிப்படையாக அல்லது அவரது ஆக்கங்களுடாக முன் வைக்காத போது அல்லது முன் வைத்திருப்பதை வாசகனால் விளங்க முடியாதிருக்கும் போது தான் பிரச்சினை எழுகின்றது.

கவிதை வாசகனைத் தொடுவதற்கும் அவன் உணர்வோடு கலப்பதற்கும் மேற்கூறிய விடயங்கள் பற்றிய புரிதல் அவசியம் என்றே நான் நினைக்கிறேன். எனவே அனாரின் கவிதைகளை நான் எனது வாசிப்பின் பிரகாரம் எப்படி விளங்கிக் கொண்டுள்ளேன். ஏப்படி அதன் பிரக்ஞையை என்னுள் ஏற்படுத்திக் கொண்டுள்ளேன். ஏவ்வாறு என்னுள் அவை இடைத்தாக்கமுறுகின்றன என்பது பற்றி மட்டுமே நான் பேச விழைகிறேன்.. மட்டுப்படுத்தப்பட்டுள்ள இந்தப் புரிதல்களுடன் நான் அனாரின் கவிதைகளை பிரித்தறிய முற்படுவது ஒரு வகையில் சில குறைபாடுகளைக் கூட கொண்டிருப்பதற்கான சாத்தியம் உண்டு.

**இந்த நூலின் தலைப்பு ஓவியம் வரையாத தூரிகை என்ற படிமம் அல்லது குறியீடு எதனைக் குறிக்கின்றது. ?**

அது அனாரின் நிலையைக் குறிக்கிறதா? அல்லது பெண்ணின் நிலையைக் குறிக்கிறதா? குறிப்பிட்ட கவிதையிலுள்ள செய்தியைக் குறிக்கிறதா? அல்லது அனாரின் கவிதையின் தன்மைகளைக் குறிக்கிறதா? இது தான் எனது உள் மன விசாரணை. அனார் அல்லது அனார் என்ற பெண்ணை இது குறிக்கின்றதாயின் சமூகத்தில் அவர்கள் முடக்கப்பட்டுள்ள தன்மையை அது சுட்டுவதாக நான் கொள்வேன். எனினும் அனாரின் கவிதைகளின் தன்மையை அது சுட்டுமாயின் அது என்னால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். ஏனெனில் எனது வாசிப்பின் பிரகாரம் அனாரின் கவிதைகள் பல்வேறு ஓவியங்களை என்னுள் வரைந்துள்ளது அல்லது ஒரு குறிப்பிட்ட கவிதையொன்றின் பொருளாயின் அதனை பொதுவான தலைப்புக்காக ஏன் அவர் தெரிவு செய்தார் என்பதற்கு அவர்தான் காரணம் கூறவேண்டும்.

பெண்களுக்கு ஆண்டாண்டு காலமாக ஏற்படுத்தப்பட்டுள்ள வலிமையற்ற தன்மை சில வேளைகளில் தங்களது பலவீனமான பகுதியை மட்டுமே பார்க்க வைத்து வருகிறது. துரதிர்ஷ்டவசமாக அதன் விளைவாகக் கூட இது இருக்கலாம். மூன்று முக்கிய ஓவியங்களை அனாரின் கவிதைகள் என்னுள் வரைந்திருக்கின்றன.

**1. தனிமனித உணர்வுகளை, காதலினை, இயற்கையுடன் அவள் இடையீட்டை அல்லது வாழ்தலை வெளிப்டுத்துகிற பெண்.**
**2. பெண்ணிலை பற்றிப் பேசுகிற பெண்**



படிப்பகம்

www.padippakam.com

**3. சமூக பாரபட்சங்களைச் சாடும் சமூகத்தின் சீரமைப்புக்காக அதன் நிலை மாற்றத்துக்காக பேசும் பெண்.**

இந்த மூன்று ஓவியங்களுக்குரிய விசேட தன்மை என்னவென்றால் ஒரு பெண்ணின் பார்வைக்கூடாக அவள் அதை வரைந்திருப்பது தான். பெண்ணின் பார்வை என்று நான் இங்கு குறிப்பிடுவது பெண்ணின் உணர்வின் வர்ணங்கள் தேவைகளின் விருப்புக்களின் கோலங்கள். கோடுகள் விருப்புக்களின் விளைவுகள் எல்லாமே இவ்வோவியங்களை அமைப்பதற்கும் உருவாக்குவதற்கும் உபயோகிக்கப்பட்டுள்ளன. என்பது அவரது கவிதைக்குரிய சிறப்பு என்பேன்.

பெண்ணின் தனிமனித உணர்வுகளை வெளிப்படுத்தல் ஒரு செய்யத்தகாத, செய்வது ஒரு இழுக்கு எனக் கருதப்பட்ட காலங்களிலிருந்து கவிதையானது இதனை வெளிப்படுத்துகின்ற பலத்தினைப் பெண்களுக்கு அளித்து வந்திருக்கிறது. அவ்வகையான தற்றுணிவை மிக மிக உறுதியாகவே அனார் தனது கவிதைகளுக்கு கூடாக வெளிக்காட்டியிருக்கிறார். இவ்வகையில் அனாரின் கவிதையிலுள்ள பெண் ஓவியங்கள் மிக உறுதியான ஒன்றாக சுயம் சார்ந்த ஒன்றாக தன் உணர்வுகளுக்கு மிக நேர்மையான, உண்மையான ஒன்றாகவே நான் காண்கிறேன்.

அதவாது தன்னை தன் உணர்வுகளைப் போலியான சமூக நியமங்களுக்காக மறைத்துக் கொள்ளாது வெளிப்பாட்டில் சுய தணிக்கை செய்யாது தன்னை மிக மிக வெளிப்படையாக வெளிப்படுத்துகின்ற ஓவியங்களை பல கவிதைகளில் நாம் காண்கிறோம். 'சிலை செதுக்கிய சிற்பம், தேய்பிறை, தவறிய தடங்கள் ,ரம் சொட்டும் காதல் மௌனச்சிலுகைள், ஊமைக்காவியம் போன்றன இவ்வகையில் என் உணர்வுகளில் சித்திரம் வரைந்தவை. தேய் பிறையில் ஆழமான துயர உணர்வு அது பற்றி அடுத்தவர்களின் அக்கறையின்மையை அவர் பின்வருமாறு சுட்டுகிறார்.

*வேர்களில் எடுத்த வலி*
*வண்டுகளோடு குலாவும்*
*பூக்களுக்குத் தெரிவதில்லை*

*காதலின் வரியைச் இப்படிச் சொல்கிறார்*

*நடுச் சாமங்களில்*
*பனிப் பெய்து*
*நிலாக் கரைய*
*துயரக் கிளைகளில்*
*அமர்ந்தென் ஜீவனும் விசும்பும்*

*ஈரம் சொட்டும் காதல் எனும் கவிதையில்*

*காவல் தாண்டி வந்து*
*உன் கண்கள் நடத்தும்*
*கலவரங்களில்*
*உயிரெல்லாம் காயம்*



படிப்பகம்

www.padippakam.com

***மெதுவாய் வீசு***
***கழன்றுதீர்ந்திடும் உயிர்***
***வார்த்தைகள் கூசுமென்று***
***பார்வைகளால் பேசி***
***பைத்தியமாக்கினாய்***

பெண்ணிலை பேசும் ஓவியங்களாக கோரிக்கை, துஷ்பிரயோகம், பேசாதிருப்பதனால், வன்மப்படுதல், சூரியனைப் பற்றவைக்க, ம(ர)ணப்பந்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பெண்ணடக்கு முறைகளின் பல்வேறு அம்சங்களை குறிப்பாக குடும்ப மட்டத்தில் ஏற்படுகின்ற அமைதியான ஆனால் அடிப்படையான உரிமை மீறல்களை அவர் மிக நேர்மையுடனும் மேற் குறிப்பிட்ட அவரது கவிதைகளில் தீர்க்கமான முடிவுகளையும் உறுதிப்பாடுகளையும் கூட அவர் முன் வைத்திருக்கிறார்.

சுமூக சீர்திருத்தவாதப் பெண் ஓவியங்களை வரைந்துள்ள கவிதைகளாக யாருக்கும் கேட்பதேயில்லை, வஞ்சனை,காயமே மருந்தாகி, ஒட்டுண்ணி போன்றவை அமைகின்றன. இங்கு தான் அவர் தனது கவிதை என்ற கூர் ஆயுதங்கள் சமுதாய செயற்பாட்டுக்கான கருவியாக உபயோகித்திருக்கிறார். வஞ்சனை என்ற கவிதை இனப்பிரச்சினைப் பின்னணியில் இப்படிப் பேசுகிறது.

***விதைகளையும் வேர்களையும்***
***பூவையும் பிஞ்சையும்***
***அவ்வப்போது அழித்துப் புசிப்பதே***
***உமது சேவையாயிற்று***

***உமது பாதரட்சைத் தோலுக்கு***
***எம் முதுகுத் தோல்***
***தேவைப்பட்டது.***

***உமது கொடியை பறக்க விட***
***எம் எலும்புகள்***
***முறிக்கப்பட்டன.***

***மார்பிலடித்து அழும்***
***ஏம் தாய்மார் வயிற்று***
***நெருப்பெடுத்து***
***நீவிர் உணவுண்ணுஞ்***
***சமையல் அடுப்புக்கு***
***அன்றாடம்***
***கடைசியல்***
***நீர் இத்தேசத்தின்***
***சௌபாக்கிய மனிதராயிருக்க***
***நாம்***
***நாடற்று***
***நாதியற்று***

(அனாரின் ஓவியம் வரையாத தூரிகை கல்முனை ம்மூத் பாலிகா மண்டபத்தில் நடைபெற்ற போது வைக்கப்பட்ட விமர்சனம் இதுவாகும்.)



படிப்பகம்

www.padippakam.com

# ஓடைக் குயில்

புசல்லாவை இஸ்மாலிகா
சிவப்பு பொட்டு கறுத்த சட்டை
சுமந்த கூடை ஒயிலுடன்
உவப்பு நறை உவகையுடன்
ஓருத்தி நடைபோடுகிறாள்

அந்தி சாயும் நேரமதில்
அங்கு பார்த்து இங்கு பார்த்து
சந்தி நிற்கும் கங்காணி
சடையன் போகும் வேளை பார்த்து


முந்திச் செல்லும் கூடைபாட்டி
முனியம்மா வழி பார்த்து
இந்த மனதில் குந்தியுள்ள
இருளப்பன் தனைக்காண

ஆடை காற்றில் ஆடிப்பாட
ஆசைமுகம் வேர்த்து நோக
ஓடைப்பக்கம் போன குயில்
உள்ளமெல்லாம் காதல் வெயில்

ஆசைவெல்ல ஆர்வம் துள்ள
அவரைக் காண வந்த மானும்
மீசை மின்னும் மச்சான்
கண்டு
மிரண்டு வெட்கப்பட்டு நிற்க

குடித்த கள்ளின் வெறி பறக்க
குழறும் வார்த்தை வேகமாக
முடித்த உறுதி மறந்து போக
மூர்க்கமாக அவன் சொன்னான்.

வேறு மணம் பேசியாச்சு
வீணில் மனம் நோக வேண்டாம்



மாறி நீயும் மணம் முடித்து
மங்களமாய் வாழ்க வென்றான்

தூசு என எண்ணியவன்
துரத்திச் சொன்ன வார்த்தை கண்டு
பாசம் கெட்ட அவன் மனதின்
பயங்கரத்தை அறிந்தவளாய்

ஓடைதன்னில்
வளர்ந்த காதல்
ஓசையின்றிப் போன துயரில்
ஆடை, கசங்க அழுது புலம்பி
அவன் முகத்தை வெறித்து நோக்கி

வஞ்சகத்தால் ஆசை காட்டி
வளைத்து மனம் மாற வைத்து
கொஞ்சி மனம் குளிரச் செய்து
குமரி என்னை மயக்கிய நீ

மனிதனல்ல மிருகமென்றாள்
மனம் கொதிக்க வெறியும் கொண்டாள்.
இனி எனக்கு வாழ்வெங்கே?
இதயம் உடைந்து போனதென்றாள்.

ஆசை அள்ளி வந்தவளின்
அன்பு மனம் கொன்ற அவன்
காசைக் கையில் வைத்து
கடன் மறக்க வேண்டி நின்றான்

கோடையதில் கானல் நீர்
கண்டு ஏமாந்த அவள்
ஓடைக்குயிலாக நின்று கமுத்தி
உயிர் போக துடித்தழுதாள்.

**புசல்லாவை இஸ்மாலிகா**



படிப்பகம்

www.padippakam.com




ஓவியம் : ஆரதி



படிப்பகம்

www.padippakam.com

அதேபோல பதின்மூன்று வயதில் கருத்தரித்தல், பாலியல் உடல் நலக்குறைவு இவையாவும் அடிப்படையில் பாலியல் வன்முறைகள் மற்றும் பாதுகாப்பில்லாத உறவுகள் பயமுறுத்தல்கள் ஆகியவற்றால் வருவதும் உளவியல் நிபுணர்களால் கண்டறியப்பட்டுள்ளது.

அதேபோல் குறைபிரசவங்கள், உடல் ஊனத்துடன் குழந்தைகள் பிறத்தல், பதின்மூன்று வயதினருக்கு யுஜனுளு போன்ற நோய்கள் வருதல் இவையாவும் அடிப்படையில் வீட்டில் நடக்கும் வன்முறைகளாலேயே வருகின்றன. அமெரிக்காவில் ஒவ்வொரு 15 வினாடிகளில் (seconds) ஒரு பெண் கணவனால் அடிக்கப் படுகிறாள். ஒவ்வொரு வருடமும் லண்டனில் 10இல் ஒரு பெண் கணவனால் அடிக்கபடுகிறாள் ( மருத்துவமனைக்கு வரும் அளவுக்கு அடிப்பது மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது).

கருத்தரித்தபின் இந்த வன்முறைகள் அதிகரிக்கின்றன. பெரும்பாலான சமயங்களில் குறைபிரசவங்களுக்கு இந்த வன்முறையே காரணமாக இருக்கிறது.

கனடா, இஸ்ரேல், பிரேசில் போன்ற நாடுகளில் பெண்கள் பெரும்பாலான சமயங்களில் முன்பின் தெரியாதவனைவிட கணவனால் கொலை செய்யப்படுவது அதிகம்.

ஆசிய நாடுகளில் கருவிலேயே அழிப்பது, பிறந்த குழந்தை பெண் என்று தெரிந்ததும் கொலை செய்வது இவற்றால் 60 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் காணாமல் போய் இருக்கிறார்கள்.

பாலியல் வன்புணர்வு பற்றிய கருத்துக்கணிப்பில் அமெரிக்காவில் உள்ள 20ூ பெண்கள் தங்கள் வாழ்நாளில் ஒருமுறையாவது வன்புணர்வை உணர்ந்திருக்கிறார்கள்.இத்தகைய கருத்து கணிப்பில் பங்கு கொள்ளும் உரிமை கீழைநாட்டு பெண்களுக்கு அவர்களது கணவனால் மறுக்கப்படுகிறது.

இவ்வாறு வன்புணரப்பட்ட பெண்கள் பாலியல் நோய்,AIDS போன்றவற்றால்






படிப்பகம்

www.padippakam.com

பாதிக்கப்படுகின்றனர். அமெரிக்காவில் மட்டும் **4%** பெண்கள் இவ்வாறு வன்புணர்தலால் இத்தகைய நோய்களில் திண்டாடுகிறார்கள்.

கருவைக்கலைப்பது சட்டப்படி முறையாகாத இடங்களில், வசதி இல்லாத வீடுகளில் மருத்துவர் துணையில்லாமல் செய்வதால் அதிக வலி, மற்றும் அவை சீழ்பிடிப்பது போன்ற நிலையாலும் உடனே வீட்டு வேலைகள் செய்வதாலும் அதிக பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.சமீபத்தில் வன்புணரப்பட்ட பெண் அன்றே வீட்டு வேலைகள் செய்யவேண்டிய கட்டாயத்தில் இருந்த நிலையை நேரில் கண்டேன். ஓய்வெடுக்க கூட அனுமதி இல்லை.

இப்படிப்பட்ட அதிக இரத்த போக்கு, சீழ்பிடித்தல் இவற்றால் 75000 பெண்கள் ஆண்டொன்றுக்கு இறக்கிறார்கள்.

கோடிக்கணக்கில் குழந்தைகளும் சிறுமிகளும் விற்கப்படுவதும், பாலியல் தொழிலுக்கு தள்ளப்படுவதும், இன்னும் அடிமைகளாக்கப்படுவதும் உலகெங்கும் வருடந்தோறும் நடக்கிறது.

1998 இல் நடந்த ஐக்கிய நாடுகள் கூட்டதில் பெண்களுக்கு எதிரான வன்முறையே வளர்ந்துவரும் அபாயமாக முதல் இடத்தில் குறிப்பிடப்பட்டது. இந்நிலை மாறாவிடில் இது உலக மக்கள் அனைவருக்கும் ஊறு விளைவிக்க கூடியது என்றும் அறிவிக்கப்பட்டது.

**உலக உடல் நல அமைப்பு உலகில் ஐந்தில் ஒரு பெண் தன் வாழ்நாளில் ஒருமுறையேனும் தந்தையால், சகோதரர்களால், கணவனால் உடல் அல்லது பாலியல் சம்பந்தமான வன்முறைகளுக்கு ஆளாவதாக கூறுகிறது.**

ஒரு பெண்ணின் இனப்பெருக்க உடல் நலன் , அவளுக்கு கருவுறுவாவதை நிர்ணயிக்க கூடிய உரிமை, ஆகியவை அவளுடைய குடும்பத்தை சார்ந்தே உள்ளதால் அதிக பட்சம் வன்முறைக்கு ஆளாக வழிவகுக்கிறது. இது நேர் அல்லது மறைமுகமாக கீழ்க்கண்ட சில பிரச்சினைகளுக்கு அடிகோலுகிறது.






படிப்பகம்

- *வன்புணர்தலால் உருவாகும் விருப்பம் இல்லாத தாய்மை*

- *கருத்தடை சாதனங்களை உபயோகிக்க அனுமதி மறுப்பு*

- *கருத்தரிக்கும் காலத்தில் வரும் உடல்நல சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகள் (complications) பாலியல் நோய்கள்*

- *இனப்பெருக்க உறுப்புகள் தொடர்பான உபாதைகள்*

- *மன நல பாதிப்புக்கள்*

பெண்கள் பிறக்கும் முன்பே வன்முறை ஆரம்பித்து விடுகிறது. கொரியாவில், இந்தியாவில் ஆண்குழந்தை வேண்டும் என்பதால் பெண்கள் அதிக அளவு மன அழுத்தம் அடைகிறார்கள். இதனால் மருத்துவ பரிசோதனைகள் செய்து, தேவையில்லா குழந்தைகளை அழித்து விடுகிறார்கள். சில சமயம் முன்பே கூறியபடி தக்க சிகிச்சைமுறை இன்றி செய்ப்படும் இவற்றால் அதிக அளவு உடல் உபாதைகள் வாழ்நாள் பூராவும் அனுபவிக்கிறார்கள்.
சீனாவில் உள்ள ஒரு குழந்தை அரசு திட்டத்தால், பிறக்கும். அந்த ஒரு குழந்தையும் ஆணாக இருக்க வேண்டும் என்று அதிக கருக்கலைப்பும் ஆரம்பமாகியுள்ளது. சில சமயங்களில் கருவை கலைக்க முடியாமல் போனால், தாதிகள் சூடான நீரில் பிறந்த பெண் குழந்தையை மூழ்கடித்து கொலை செய்கிறார்கள்.

இந்தியாவில் வாயில் நெல் மணியை அடைத்து, அல்லது ஈரத்துணியில் குழந்தையை சுற்றி மூச்சடைத்து இறக்கடிக்கிறார்கள்.

கோடிக்கணக்கான பெண்குழந்தைகளுக்கு தங்கள் பிறப்பு உறுப்பில் ஊனம் செய்யும் அறுவை சிகிச்சையை (Genetic mutilation) வீட்டிலேயே, மயக்க மருந்தும் இல்லாமல் செய்து கொடுமைபடுத்துகிறார்கள். இதனால்பெண் உறவு கொள்ளும் போது வலி ஏற்படும் என்பதும் மற்ற ஆண்களுடன் உறவு கொள்ள மாட்டார்கள் என்பதும் நம்பிக்கை.

இந்தியாவில் வருடத்திற்கு 10000 பெண்குழந்தைகள் விற்கப்படுவதால் பாலியல் தொழிலுக்கு பருவம் வரும் முன்னரே அனுப்பப்படுகிறார்கள். பாகிஸ்தானில் வன்புணர்வை காவலரிடம் புகாரிடும் பெண் அந்த குற்றத்தை நிருபிக்காவிட்டால் வாழ்நாள் முழுதும் சிறையில் அடைக்கப்படுகிறாள் அல்லது கல்லால் அடித்து கொலை செய்யப்படுகிறாள். ஆப்பிரிக்காவில் கணவன் ஆவியை பரிசுத்தம் செய்ய கணவன் இறந்த அன்றே அவனது மனைவி ஊரார் தேர்ந்தெடுத்த ஒருவனுடன் உறவு கொள்ளுமாறு வற்புறுத்தப்படுகிறாள். இல்லை எனில் ஊருக்கே சாபம் வரும் என்று பயமுறுத்தல் செய்கிறார்கள்.இதனால் பரவும் தொற்றுநோய்கள் அதிகம். சமீபத்தில் இந்தியாவில் ஒரு மேல்சாதி ஆண்மகனை காதலித்தாள்



படிப்பகம்

www.padippakam.com

என்பதற்காக ஒரு பெண்ணை 10 மேல்சாதி ஆண்கள் வன்புணருமாறு பஞ்சாயத்து தீர்ப்பளித்ததும் அது மனித உரிமை குழுவுக்கு சென்று விவாதிக்கப்பட்டதும் தெரியும்.

மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா என்பதும் பெண்ணாய் பிறப்பதே அதிர்ஷ்டம் என்பதெல்லாம் கற்பனையிலேயே இருக்கிறது. இந்த ஒரு விஷயத்திலாவது இனம், நிறம், சாதி மற்றும் மதங்களின் அடிப்படையில் பேதமில்லாமல் இருப்பதைக்குறித்து பெருமைப்படுவதா என்று தெரியவில்லை!!
பிள்ளைத்தமிழ் என்று பாடும் போது பத்து பருவங்களாக பிரித்து பாடுவது வழக்கம். இன்றும் பத்து பருவங்களாக பிரித்து விதம் விதமாக கொடுமைப் படுத்துவது வாடிக்கையாக இருக்கிறது. கீழே உள்ளவை ஏழ்மையான பெண்களுக்கே நடக்கும் என்றால், ஊனமான பெண்களுக்கு இன்னும் மோசமான துன்பங்களுக்கான வாய்ப்புக்கள் அதிகம்.

**கருவில்:** ஆணா பெண்ணா என அறிந்து சிதைத்தல் கருவுற்றிருக்கும் காலத்தில் கணவனால் வன்முறையில் துன்பப்படுதல்.
**மழலை:** கள்ளிப்பால் மூலமோ, பட்டினி போட்டோ கொலைசெய்வதல், ஊனமான பெண் எனில் இதற்கான வாய்ப்பு அதிகம்
**குழந்தை :** பிள்ளை பருவத் திருமணம், னகைகநசநவெயைட உணவு, மற்றும் மருத்துவ கவனிப்பு

**பருவ வயது (குமரி):** பள்ளி மற்றும் பணியிடங்களில் பாலியல் கொடுமை, பாலியல் அச்சுறுத்தல் (sexual harassment), பாலியல் வன்முறை, ஊனமாகிய பெண்ணை கற்பழித்தல்.

**திருமண வயது:** வரதட்சிணை கொடுமை, போதிய சீர் இல்லை என்ற காரணத்தால் கொலை செய்தல், கணவன்மார்களின் அடக்குமுறை, உடல் மன ரீதியிலான வன்முறை,பிள்ளாஈ இல்லை என்றால் வரும் கொடுமைகள், போதிய சீர் இல்லை என்றால் கணவனுடன் உறவு கொள்ள தடை போன்றவை

**முதுமை:** பிள்ளைகளாலும், மற்றப் பெண்களாலும் வன்முறை, போதிய உணவோ மருத்துவ வசதியோ இன்றி அல்லல்

**இந்நிலை மாறவேண்டுமானால் வன்முறை பற்றி முதலில் அறிதலும், அதை எதிர்ப்பதும் அவசியம்.**
**பெண்களின் உரிமையை மனித உரிமை குழுவில் ஏற்று உலக அளவில் உதவிகள் செய்யவும், சமுதாய அளவில் விழிப்புணர்வும் ஏற்படுத்துதல் வேண்டும்.**




பத்மா அரவிந் ,
அமெரிக்கா



படிப்பகம்

www.padippakam.com

# காளியாகுதல்

தீர்க்க முடியா தாகத்திற்கு

வெளித் தள்ளிக் கிடக்கிறது நாவு

என் கழுத்திருந்து பறித்து

ருசி கண்டு போட்ட

மண்டையோடுகளை

நானே என் கழுத்தில் மாலையாயிட்டு

காணத் தருவேன்

இதுவரை நீ உணராதிருந்த

தீராது முளைக்கக் கூடிய என் துளிர்ப்பை

காலடியில் அரக்கர்கள்

துளி இரத்தம் சிந்தாமல்

குடித்தே அழிக்க

தீராத பசியுடன் நிரம்புகிறது வயிறு

தேவதை காண மறந்து

கோடாலிக்கு நீ கையேந்த

காளியாகுது மனசு



**—திலகபாமா, இந்தியா**



படிப்பகம்

www.padippakam.com

# வேருக்குள் கூரண்டு....

## தேவா, ஜேர்மனி

-பாருங்களேன் அக்கா. இது தேவையா? நான் எத்தனையோ முறை சொல்லிவிட்டேன். இப்படி வேண்டாம். என்று. நான் என்ன பிழை விட்டேன் என்று வாயைத்திறந்து சொல்லித்தொலைத்தால் என்ன. ஒன்றுமே பேசாமல் இருந்தால் எப்படி? நீங்களாவது அவருக்கு சொல்லுங்களேன்.-

நீதிமன்றவாயிலுக்கு வரும்வழிபூரா கீதாவின் காதுகளில் அவளின் வேண்டுகோள்கள் சடசடவென கொட்டிக்கொண்டேயிருந்தன. கீதா அவள் பேசுவதை மட்டும் கேட்டுக்கொண்டுவந்தாள். கீதாவின் வீட்டிலிருந்து அவள்வசிக்கும் வீடு 15 நிமிட நடைதூரத்தில் தான். இருந்தாலும் வீதியில் கண்டுகொள்வது, சிறிதுநேரம் உரையாடுவது மட்டுமே போன 2 வாரங்கள் வரை இருந்தது அவள் உறவு. ஆனால் இந்த கொஞ்சநாளாய் அவளின் துயரங்களை பகிர்ந்துகொள்ள அவள் ஓடிவரும் இடம் கீதாவுடைய வீடுதான். இவளும் எத்தனையோமுறை கேட்டுவிட்டாள். உனக்கு உறவினர் யாரும் இங்கு இல்லையா-.அவளிடமிருந்து அதற்குரிய பதில்களோ வராது. வேறு ஏதாவது ஒருகேள்வி அவளிடமிருந்து முளைக்கும்.

நான் யாரிடம் போவேன்- புலம்புவாள் அவள்.

-அது எப்படி முடியும்? நான் விருப்பமில்லை. அதற்கு. அக்கா இந்த கடிதம் வந்த நாளிலிருந்து, எனக்கு காலும் புரியவில்லை. தலையும் புரியவில்லை ஏன் இப்படி. இவர் ஏன் இப்படி செய்கிறார். எங்களுக்குள் எந்தப்பிரச்சினையும் இல்லையே.-

கீதாவும் யோசித்துக்கொண்டிருந்தாள். தன்னுடைய ஆங்கிலபுலமையும், 'தான் சிங்கப்பூரைசேர்ந்தவள் என்ற விடயமும்தான் இவள் தன்னை தேடிவந்திருக்கவேண்டும். ஏனெனில் இவள் நாட்டவர்கள் இங்கு நிறைய பேர் இருக்கிறார்கள். அல்லது ஈகோ பிரச்சினையாயிருக்கவேண்டும். ஆனால் இவளுக்கு தன்னால் எப்படி உதவமுடியும்? வழக்கறிஞரிடம் போவதற்கு வரச்சொல்லி கீதாவிடம் அழுது மன்றாடி, இவளை இழுத்துக்கொண்டு போகாத குறைதான். அங்கும் அவள் திரும்ப திரும்ப சொன்னதையே



படிப்பகம்

www.padippakam.com

உருப்போட்டுக்கொண்டிருந்தாள்.

-தன்னை தன் கணவன் அடித்ததே இல்லை. கைச்செலவுக்கு முன்னர் காசு தந்ததேயில்லை.

சாப்பாட்டுக்குரிய எல்லாவகை வசதிகளையும் செய்து தந்துவிடுவார். இப்போது 2,3 மாதங்களாக காசை தந்துவிடுகிறார். எனக்கும் நீ சமைக்கதேவையில்லை என திடீரென ஒருநாள் கூறினார். நான் என்னசெய்ய.- அழத்தொடங்கினாள்.-

அவள் அழுகையை நிறுத்த கீதா பட்டபாடு பெரும்பாடாய் போனது. வழக்கறிஞர் தன் அறையை விட்டு வெளியேறி 10 நிமிடங்கள் காத்திருந்தார். மீண்ட வழக்கறிஞரும் இவளுக்கு செர்மன் நாட்டு விவாகரத்து சட்டங்கள்பற்றிய விளக்கங்களை மிக விபரமாக்கினார்.

விவாகரத்தை கணவனோ அல்லது மனைவியோ கேட்டு விண்ணப்பித்து, விண்ணப்பித்தவர் தனக்கு திருமண ஒப்பந்தத்திலிருந்து விடுதலைவேண்டுமென முறையிட்டால், நீதிமன்றம் விவாகரத்தாவதற்கே தீர்மானம் எடுக்கும்.

"இவரோடுதான் நீ திருமணம் முடிக்கவேண்டும்" என்ற நிர்ப்பந்தத்தை சட்டம் மனிதருக்கு விதிக்கமுடியாது. அதுபோல திருமணம் ஆகியோர் கட்டாயம் சேர்ந்து வாழத்தான் வேண்டுமென அது தீர்ப்பும் கொடுக்காது.

ஆனால் அவளோ விடாக்கண்டன் ஆய் விளக்கினாள். யாருக்குமே தன்நிலைமை புரியவில்லை என்பது இவளின் விவாதிக்கவே இடமில்லா முடிவு.

நீங்கள் சொல்வதை நான் ஒன்றும் கேட்கவேண்டியதில்லை. நான் உங்கள் வேலைக்கு பணம் தருகிறேன். நீங்கள் எனக்காக வாதிடுவதுவானே முறைமை-

அவள் முகத்தில் இந்தச் சிந்தனையின் வெளிப்பாடு இருந்தது. இவளுடைய வாதத்தை மட்டும்வைத்துக்கொண்டு வழக்காடுவது முடியாத காரியம் அந்த ஆளும் கூறிவிட்டார். அங்கிருந்து வெளியேறும்போது,

அக்கா நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். எனக்கு நீதி கிடைக்குமா. எனக்கு எங்கள் நாட்டுக்கு போகத்தான் வேண்டிவருமா? எந்தமுகத்தோடு அங்கு போய் வாழமுடியும்? அது நடக்கிறகாரியமா? நான் பேசாமல் ஊரோடே, திருமணம் முடிக்காமல் இருந்திருக்கலாம். அங்கு நான் ஏதாவது தொழில்செய்து கொண்டு என்பாட்டை பார்த்திருப்பேன். அம்மாவின் பிடிவாதத்தில் இவரை கலியாணம் செய்துகொண்டேன்.- திருமணம் அவள்தலையில் ஏற்றப்பட்ட சுமை என்பதை அவள் மணிக்கணக்காக-நாட்கணக்காக-வருடக்கணக்காக நினைத்து மாய்ந்து கொண்டிருக்கிறாள். இதை எத்தனையோ தடவை தான் தேடிக்கொண்ட புது நண்பி கீதாவிடம் கூறியிருக்கிறாள். அதனால், ஒருதடவை கீதாவும் கேட்டாள்.

இப்போது, உனக்கு நிரந்தர விடுதலை கிடைக்கிறது. உனக்கு




படிப்பகம்

www.padippakam.com

வாய்ப்பாகவும் போய்விட்டது.
உன்நாட்டுக்கு போய்விடலாமே.-

அக்கா உங்களுக்கு தெரியாததா. எங்கள்நாட்டில் ஒரு திருமணமான பெண் தனியாக திரும்பி வந்தால் என்னென்ன கேள்விகள் தொடுக்கப்படும் என. நான்தான் ஒத்துப்போயிருக்கவேண்டும். என் மேல் குற்றங்களை ஏற்றுவார்கள். அத்தோடு இப்போது எனக்கு அங்கு மீண்டும் வேலை கிடைக்குமா. தவிரவும் என்னிடம் சேமிப்பும் கிடையாது. எனக்கென்று இந்த 5வருடகாலத்தில் ஒரு கொஞ்சமாவது பணம் சேர்க்க முடிந்ததில்லை. நான் உழைக்கும் சிறியதொகையில்தான் எனக்குரிய செலவுகளையும், அம்மாவுக்கு அனுப்புவதையும் சமாளிக்கவேண்டும். மதன் எடுக்கிற சம்பளத்தில் எல்லாவற்றையும் சமாளிக்க முடியாது. கீதாவுக்கு இவளை புரிந்துகொள்ளவே முடியவில்லை. ஒரு சாதாரணமனைவிக்குரிய பொறுப்புக்களை நிறைவேற்றுகிறாள். கணவனை விட்டுக்கொடுக்கிறவள் மாதிரியும் இல்லை. இவள் சொல்லுகிறதைபார்த்தால் இவள்தான் எங்கோ தவறு செய்கிறமாதிரி கீதாவுக்கு பட்டது. சிலவேளை இவளுக்கு வேறு உறவு கிடைத்திருக்குமோ? இது கணவனுக்கு தெரிந்து, அதனால் அவன் இவளைபிரியவேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டிருப்பான்? இவள்மேல் எரிச்சல் பற்றிக்கொண்டுவந்தது. என் நேரகாலத்தையும் வேறு இவள் வீணடிக்கிறாள். சரி, நீ போய்வா. என கழுத்தைபிடித்து வெளியே தள்ள மனம் முனைந்தது.



-நான் சில அலுவல்கள் பார்க்க வெளியே கிளம்பவேண்டியிருக்கிறது-

-ஆமாம். நீங்கள் எனக்காக எவ்வளவு மெனக்கெட்டுவிட்டீர்கள். நீங்கள் குறை நினைக்கக்கூடாது. எனக்காக ஒருதடவை என்கணவரோடு கதைப்பீர்களா?-

கீதாவுக்கு தேள் கொட்டியதுபோல் இருந்தது. ஆவளது கெஞ்சியபார்வையை தவிர்த்தாள்.
-அதைப்பிறகு பார்ப்போம்.-
தற்போதய சங்கடத்திலிருந்து மீள நிரம்ப அவசரம் இருப்பதாக காட்டிக்கொண்டு வெளியே கிளம்பினாள்.

நீதிமன்றத்திலிருந்து வழக்குவிசாரிப்புக்கான ஆணை வந்த



படிப்பகம்

www.padippakam.com

நாளிலிருந்து, கீதாவிடம் அவள் வருவது மீண்டும் அவசியமாயும், அதிகமாகவும் ஆனது. கிட்டத்தட்ட எந்தநாளும் வந்துபோனாள். தன் வீட்டுக்கும் கீதாவை அழைத்தாள். அவளிடம் போகும் சந்தர்ப்பத்தை கீதா தவிர்த்தாள். அவள் கணவன் தன்னைச் சந்தேகக் கண்ணால் பார்க்கக்கூடும். கேள்விகள் முளைக்கக்கூடும். ஏதாவது காரணம் கண்டுபிடித்து தன்னையும் வையலாம். எதற்கும் தான் ஒதுங்கியிருப்பது தனக்கு, தன் குடும்பத்துக்கு நல்லது. எந்த யோசனையும் சொல்வதில்லை. இது எனக்கு தேவையுமில்லை. இவள் கூப்பிட்டால், கூடப்போவது. ஆனால் அவளோ நீதிமன்ற வழக்குதேதியையும் எத்தனையோ நாட்களுக்கு முன்னாலேயே குறிப்பிட்டு, தன்னோடு கூடவரவேண்டும் என கீதாவை கட்டாயப்படுத்தியிருந்தாள்.
ஒன்றுமட்டும் கீதாவுக்கு நன்கு புரிந்தது. தன் உறவினருக்கும், நாட்டுநண்பருக்கும் அவள் தனது பெரும்துயரத்தை மறைக்கிறாள். உதவி கேட்க மறுக்கிறாள். அது விடயம் வெளிவராமலா போகப்போகிறது?

போகவிடாமல் பண்ணவேண்டும். அத்தோடு தன் கணவன் தன்னைவிட்டு பிரியக்கூடாது. அதை எப்பாடுபட்டேனும் முறியடிக்கணும்-. தெளிவாக இருக்கிறாள் இவள்.

நான் இன்றைக்கும்கூட மதனுக்கும் சேர்த்து சாப்பாடு செய்துவிட்டுத்தான் வருகிறேன். ஆனால் மதன் நான் சமைத்தால் சாப்பிடமாட்டார் என்பதும் எனக்கு தெரியும். இருந்தாலும் நானும் விடாப்பிடியாய் இருக்கிறேன். கடையில் சாப்பிட்டுவிட்டு வந்துவிடுகிறார். கடையில் சாப்பிடுவது உடம்புக்கு நல்லதில்லையே எத்தனையோமுறை சொல்லிப்பார்த்தாயிற்று. நீ ஒன்றும் என்னை கவனிக்கதேவையில்லை. பதில் வருகிறது. இப்போதெல்லாம் உடுப்பு துவைக்கிறதும் கூட தானே செய்துகொள்கிறார்.

பலநூறு ஆண்டுகளாக ஒரு ஆசியமனைவியின் மூளைக்குள் திணிக்கப்பட்டிருக்கும் இந்தப்பணிகளை இவள் செய்தும், அதை சொல்லிகாட்டாவிட்டால் அவள் தன்னை பெண்ணாகவே நினைக்கமாட்டாளோ?
-மதன் என்னோடு கதைப்பதே இல்லை.-
-இந்தப்பிரச்சினைக்கு முந்தியும் அப்படியேதானா- கீதாவுக்கும் கேட்கணும்போல தோன்றியது.
ஐயோ. அக்கா. உங்களுக்கு தெரியும்தானே. கலியாணம் முடித்த புதுசில் எல்லாம் பளபளக்கும். பிறகு முகத்தை பார்க்கக்கூட சகிக்காது. இதில கதைக்கிறது எண்டால் அது காசைப்பத்தியும், செலவைப்பத்தியும் இருக்கும். அக்கா. நானும் ஜேர்மனுக்கு வந்து 3வருசம். நானும் மதனும் மனம்விட்டு கதைத்திருப்போமா? எனக்கு ஞாபகமேயில்லை.

இது ஆதங்கமில்லை. ஒரு துயரவாழ்வின் சுமை. ஒருவீட்டுக்குள்ளே இருந்துகொண்டு நிர்ப்பந்தத்தில் வாழும் நிலை. ஒருவரோடொருவர் பேசுவது முன்னெடுக்காமல் போனதற்கு என்ன காரணம்? அறுத்து எறியப்படும் கயிறை



படிப்பகம்

www.padippakam.com

பிடித்துக்கொண்டு, தவிக்கும் இவள் மனைவி தகைமையை பற்றிக்கொணடிருக்கிறாளா அல்லது உண்மையிலேயே அவனில் அன்புகொண்டிருக்கிறாளா? மதனோடு இதுபற்றி நானெப்படி கதைப்பது? அவனை வீதியில் காண்பதோடே சரி. அவனும் கீதாவோடு எதை கதைப்பது என்ற முகம் கொண்டிருப்பான். அவனாக ஏதாவது கதைத்தாலும் சில அனுமானங்களை ஊகிக்கலாம். சிலவேளை தன்னுடன் அவன் மனைவி கொண்டிருக்கும் நட்புபற்றி அவனுக்கும் தெரியாதிருக்கலாம். அப்படி அவனுக்கு இந்த புதியநட்பு தெரிந்து, கணவன்-மனைவிசண்டை ஒரு அந்நிய பெண்ணுக்கும் வெளிச்சமாகி, தன்னைப்பற்றிய ஒரு மோசமான விமரிசனம் கீதாவிடம் இருக்கலாம் எனவும் நினைத்திருக்கலாம். ஒரு பெண் உள்வீட்டுவிவகாரங்களை வெளி ஆளுக்கு-அது சொந்தக்குடும்ப அங்கத்தவருக்குகூட-தெரியப்படுத்துபவளாயிருப்பின் அவளைப்பற்றிய விமரிசனங்கள் தமிழ்சமூகத்தில் எப்படி கேவலப்படுத்தப்படும் என்பதால்தான் அவன் மனைவியும் வேற்றுநாட்டுக்காரியான தன்னிடம் நட்பு தேடியிருக்கவேண்டும். எனினும் இவளின் ஒருபக்க நியாயங்களை மட்டும் கேட்டுக்கொண்டு தன்னால் என்ன செய்யமுடியும்? கீதாவும் எதுவும் செய்யமுடியாத வேதனைக்குள் உழன்றுகொண்டிருந்தாள். கணவன்-மனைவிக்குள்ளான பிரச்சினையில் தலைபோடுவது தேவையில்லாதது என்ற பரம்பரைசிந்தனைவேறு குறுக்காய் நின்றது. குடும்பத்துள் மூன்றாவது தலையீடு இன்னும் குழப்பங்களை உருவாக்கும் என்ற ஒதுங்கிப்போகும் கொள்கையை பிடித்துக்கொள்ளலாமா. இது ஒரு சுலபமான வழியாக கீதாவுக்கு பட்டது. நமக்கென்ன, இவள் சொல்வதை கேட்பது. எங்கேயும் கூடவரவேண்டுமென உதவி கேட்டால் செய்து கொடுப்பது. அதற்குமேல் என்னால் ஒன்றும் செய்யமுடியாது. தீர்மானம் எடுத்தாள். முடிவெடுப்பது எவ்வளவு லேசானது! அதை நடைமுறைபடுத்துவது எவ்வளவு சிரமமானது என்பதை. அடுத்தநாளே அவளின் வரவு உறுதியாக்கியது. அவளோ வந்ததும், வராததுமாக கீதாவை பிழியத்தொடங்கினாள்.

-அக்கா, நேற்றைக்கு வீட்டில் பெரிய ஆரவாரம். 3 நண்பர்கள் வந்திருந்தனர். மதனும்,அவர்களுமாய் பெரிய சமையல் நடந்தது. ஏதும் எதவி செய்யவா? மதனைக் கேட்டேன்.-
-என்னைக்கடித்து குதறாத குறைதான். என்னை வரவேற்பறைக்கோ, குசினிக்கோ வரக்கூடாதென்று கட்டளை. நீ எங்காவது போய்த்தொலையேன். என்றார். என்னை துரத்தியடிப்பதில் மதன் மூர்க்கமாயிருக்கிறது புரிந்தது. நான் விட்டுக்கொடுக்கிறதா. நண்பர்களுக்கும் கேட்கட்டும் என நானும் கத்தினேன். அறைக்கதவு காலால் அடித்து சாத்தப்பட்டது. பாட்டு சத்தம் காதை பிய்க்கிறமாதிரி கூட்டப்பட்டது.-

இவர்கள் உரையாடலில் ஏதும் பெண்பெயர் அடிபடுகிறதா. அறிய



படிப்பகம்

www.padippakam.com

முயன்றேன். ஒட்டுகேட்கிறதுக்கும் வாய்ப்பில்லாமல் போனது. -
கீதா, அவளை இடைமறித்து, நீங்கள் இருவரும் தனித்தனி அறையிலா வாழ்கிறீர்கள்? கேட்க நினைத்தாள். கேட்டால் அது அவர்களின் அந்தரங்க விடயங்களில் கைவைக்கிறதாய் இருக்கும். அடக்கிக்கொண்டாள்.

அவளே சளசளவென பேசிக்கொண்டேயிருந்தாள்.
-எவ்வளவு நேரத்துக்குத்தான் அறைக்குள்ளே கிடப்பது. மெதுவாக வெளியே வந்தேன். சத்தம் ஒன்றுமே பெரிதாக இருக்கவில்லை நடைவழியைக்கடந்து குசினிக்குள் நுழைந்தேன். போகும்போது ஏதும் கதைக்கிறார்களா. காதை தீட்டிக்கொண்டேன்.
வசிப்பறைக்குள்ளிருந்து யாரும் கதைக்கும் ஒலியும் கேட்கவில்லை. சிலவேளை டெலிவிசன் பார்க்கிறார்கள்போல.

என்ன சமையல் நடந்திருக்கும். அப்பிடி ஒன்றும் பிரமாதமாயிருக்கவில்லை. அதை விட நான் நல்லாய் சமைத்துக்கொடுத்திருப்பேன். யோசித்துக்கொண்டே அங்கேயே சுற்றிசுற்றி நடந்தேன். பசி இருந்தாலும், சாப்பிட மனமே வரவில்லை. சாப்பாடோ அளவுக்கதிகமாயிருந்தது.
அங்கேயிருந்த சாப்பாட்டுமேசைக்கருகில் கதிரையை இழுத்துப்போட்டு உட்கார்ந்தேன். இந்த சமயத்தில் மதன் இங்கு வந்தால், என்னைக்கண்டு, சண்டைக்கு வந்தால், அதற்கு என்ன பதில் கொடுப்பது. என்னை தயார்படுத்திக்கொண்டிருந்தேன். யாரோ குசினிவாசலுக்கு வந்துவிட்டு திரும்பிபோனமாதிரி எனக்கு பட்டது. மதனாயிருக்காது. மதன்நண்பர்களில் ஒருவனாயிருக்கலாம். இவர்களில் யாராவது ஒருவர் என்னைப்பற்றி கொஞ்சமாவது சிந்திப்பானா? எனக்கும் மதனுக்குமிடையில் சமரசம் பண்ண முயற்சிக்கலாமே.-

இப்போது என் கண்களை உற்றுப்பார்த்தபடி சொன்னாள் அவள்: அக்கா, மதனுக்கு உயிர்நண்பன்மாதிரி ஒருத்தன் இருக்கிறான்.
என்னைக்கண்டால் ஒதுங்கிப்போவான். அவன் எந்தநாளும் மதனைத்தேடி வருவான். இருவரும் ஒன்றாகவே சாப்பிடுவார்கள். எங்கும் போவார்கள். எந்தநேரமும் கதைத்துகொண்டிருப்பார்கள்.

இரவுகளில் மதன்அறையில் தங்குவான். இவன் ஏன் இங்கு தங்குகிறான் என்று ஒருதடவை நான் மதனிடம் கேட்கபோய், அன்று வீட்டில் பெரிய சண்டை. எனக்கு அவனை கண்டாலே பிடிப்பதில்லை. அவனின் நடையும், இளிப்பும். இவனைக்கண்டாலே எனக்கு பற்றிக்கொண்டு வரும். என்றாலும் அவனோடு எத்தனையோ தடவை கதைக்க முற்பட்டேன். அது வாய்க்கவில்லை. இந்த நட்பு உண்டான நாளிலிருந்துதான் மதனும் வித்தியாசமாய் போனான். இவன்தான் என்னை மதனிடமிருந்து பிரித்தானோ?-
இவளின் கேள்வியும், நியாயமும்.......

நீதிமன்றவாசலிலே மதன் எதிர்பட்டான்.



படிப்பகம்

www.padippakam.com

கீதாவையும் தன் மனைவியையும் கண்டும் காணாததுமாதிரி கடந்து போனான். அவள் கீதாவிடம்:
-அக்கா நீங்கள் மதனிடம் சொல்லுங்களேன். இந்த விடயத்தை திருப்பி எடுக்கும்படி.- கீதாவை பிய்த்தாள் அவள்.
-முதலில் நீதிமன்ற அறையை கண்டுபிடிப்போம். அதன்பின்னர் அவனும் என்னுடன் கதைத்தால், நானும் பேசிப்பார்க்கிறேன்.

அறையை கண்டுபிடித்தபின் மதனை இருவரும் தேடினார்கள். வலதுபக்கமாய் திரும்பி நேராய் போய்க்கொண்டிருந்த அந்த நடைவழிபுரா இருவரும் அவனை தேடினார்கள். சிறிய உருவமும், கருமைநிறமும் கொண்ட அவனை இருளானபகுதி காட்டிக்கொடுக்கமாட்டன் என அவன்மனைவி பகிடி பண்ணினாள். வேறு வழியற்று இருவரும் மீண்டும் வழக்கு நடைபெறும் அறைக்கு முன்னாலுள்ள கதிரைகளில் அமர்ந்தனர்.
அவளின் கண்கள் அவனைத் தேடிக் கொண்டிருந்தன.
இவளுடைய வழக்கறிஞர் வந்ததுதான் தாமதம் இவள் மீண்டும் அவரிடம் முறையிடத்தொடங்கினாள்.
-எனக்கு இதுவிடயத்தில் விருப்பமில்லை என்றால் ஒன்றும் செய்யமுடியாதுதானே. மதன் போட்டிருக்கும் விவாகரத்துவழக்கு எடுபடாதுதானே ?
வழக்கறிஞர் அப்படியும் இப்படியும்தான் என்றபடி, இவளை தற்போதைக்கு சமாதானம் செய்யும் நோக்கோடு கையால் பாவனை காட்டினார்.

ஒலிபெருக்கியில் -பாலசுந்தரத்திற்கு எதிராக பாலசுந்தரம் உள்ளேவரவும்- என கூறப்பட்டது.
எங்கிருந்தோ முளைத்தான் மதன். சிலநிமிடங்களில் இவன் வழக்கறிஞரும் தோன்றவே வழக்கப்படி வழக்கு ஆரம்பமாயிற்று. கீதாவை இவள் அறைக்குள் இழுத்துவராத குறையாக கூட்டிக்கொண்டுவந்திருந்தாள். இது கீதாவை பெரும் சங்கடப்படுத்தியது. நீதிபதி நீங்கள் இங்கு இருக்கக்கூடாது என்றால் தான் தப்பித்தோம் பிழைத்தோம் என ஓடிவிடலாம்- கீதா எதிர்பார்த்தாள்.

ஆனால் மதன் தன் வழக்கறிஞரிடம் ஏதோ இரகசியமாக கூறவே கீதாவின் இருப்பு அங்கே ஏற்கப்பட்டது. மதனின் சம்மதம் கீதாவுக்கு பெரிய ஆச்சரியம் தரவில்லை. ஒரு தமிழ் ஆணுக்கு தன்மனைவியை புறக்கணிக்க சமூகஅங்கீகாரத்தை வேண்டி நிற்கதேவையில்லை. சட்டமும், சமூகமும் அவனுக்கே உரியதாய் தாய்நாட்டுசட்டம்-சர்வதேசசட்டம்-விவாகரத்துவழக்கு, உள்நாட்டில் கொடுக்கப்படும்தீர்ப்பு ஆகிய விவாதங்கள் நீதிபதிக்கும் வழக்கறிஞர்களுக்கும் இடையில் வாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, அவள், ஒரு சின்ன இடைவெளி விட்டு பக்கத்து கதிரையில் அமர்ந்திருந்த மதனையே பார்த்துக் கொண்டேயிருந்தாள். அவன் மிககடுமையாக முகத்தை வைத்துக்கொண்டமாதிரி தெரிந்தது. அவள் தான் கொண்டுவந்திருந்த திருமணப்படங்களை தனக்கு



படிப்பகம்

முன்னாலிருந்த மேசையில் பரப்பினாள்.
-போனவருடம் நாமிருவரும் சேர்ந்து ஒரு நண்பர்வீட்டுக்கு போயிருந்தபோது எடுக்கப்பட்ட படம் இது.-
தன் வழக்கறிஞரிடம் காட்டினாள்.
அவருடைய தலையாட்டலை அடுத்து, நீதிபதி அவளிடம்
-உங்கள் நியாயத்தை கூறலாம்-
என்றார்.
-எங்களுக்கு சென்ற மூன்றுவருடங்களுக்கு முன் திருமணம் ஆனது. ஒரே வீட்டில்தான் இன்றுவரை வசித்துவருகிறோம். போன2-3 மாதங்கள் வரை நான்தான் இருவருக்குமாக சமைத்துக்கொண்டிருந்தேன். அதன்பின் என்கணவர் எனக்குரிய சாப்பாட்டுசெலவை தந்துவிடுவார். ஆனால் நானாக போய் கதைத்தால், அதற்கு பதில் வரும். உதவிகேட்டால் உடனே செய்து தருவார். நான் சேர்ந்து வாழத்தான் விரும்புகிறேன்.
என்னால் என் தாய்நாட்டுக்கு போகமுடியாது.

இவ்விடத்தில் மதனின் வழக்கறிஞர் குறுக்கிட்டார்.
-இப்போது உங்கள் நாட்டில் ஏதும் பிரச்சினை இல்லையே. சமாதானம் நிலவுகிறதுஎன கேள்விப்படுகிறோமே. தாய்நாட்டுக்கு திரும்பிபோவது சுலபமானதே.
-போர் நடக்காமலிருந்தால் அங்கு சமாதானம் வந்துவிட்டது என்பது அர்த்தமா? -
மதனை பக்கவாட்டில் பார்த்துக்கொண்டே அவள் சொல்லிக்கொண்டிருந்தாள்.

மதன் லேசாக சிரித்தான். -
நமக்குள்ளும் இதுமாதிரிதானே பிரச்சினை! இவ்வளவு நுணுக்கமாக விடயத்தை புரிந்துகொள்கிறவளுக்கு ஏன் என்னைப்பற்றி தெரிந்து கொள்ள இயலவில்லை.- அவன் புன்சிரிப்பில் இந்த சிந்தனை இருக்கவேண்டும். கீதா நினைத்தாள்.
அவனுடைய வழக்கறிஞர் மீண்டும் குறுக்கிட்டார்.
-எவ்வளவு காலமாக நீங்கள் இருவரும் ஒரேவீட்டில் தனித்தனி அறைகளில் வாழ்கிறீர்கள்?-
இதற்கான விடையை நேரடியாக கொடுக்காமல், மேசையில் பரப்பப்பட்டிருந்த படங்களில் ஒன்றை எடுத்து, -இதனைப்பாருங்கள். இது சென்றவருடம் மார்கழிமாதம் எடுக்கப்பட்டது. எங்கள் வீட்டில் வைத்து எடுத்த இதில் நானும், கணவரும் ஒன்றாய் சேர்ந்து நிற்கிறோம்.-
மதனின் வழக்கறிஞர் கேள்வியிலேயே குறியாய் இருந்தார்.

மதனுக்கு இரவுவேலை.
நடுஇரவிற்குமேல்தான் வீட்டுக்கு வருவார். நானும் காலையில் நேரத்துக்கு வேலைக்கு போவதற்கு எழும்பவேண்டும். ஆகவே தான் எங்களுக்குள் இந்த ஏற்பாடு.-
-அப்படி என்றால் உங்களுக்குள் உடலுறவு இல்லையா? வழக்கறிஞர் குறிவைத்து அவளை தகர்த்தார்.
இந்த நேரடித்தாக்குதலால் அவள் நிலைகுலைந்து போனாள்.
அழத்தொடங்கினாள். இவ்வளவுநாளும்

www.padippakam.com

கொட்டியதுமாதிரி கீதாவுக்கு புரிந்தது. ஒரு ஆசியப்பெண்ணிடம் இப்படி கேள்வி கேட்கக்கூடாது. இவர்கள் ஆண்-பெண் உறவு மூடுமந்திரம். விளக்கம் சொன்னார். அவளின் வழக்கறிஞர். துயரங்கள் அழுகையாய் பெருக்கெடுத்தபின் மீண்டும் அவள், -நான் என் கணவரோடு சேர்ந்து வாழவிரும்புகிறேன். விவாகரத்து வேண்டாம்.- உறுதியாய் கூறினாள். அங்கு கூறப்பட்டவைகள் யாவும் குறிக்கப்பட்டபின், நீதிபதி, இன்னொரு இன்று இத்தோடு வழக்கு நிறுத்தப்படுகிறது. என்றபோது, அவளின் ஏமாற்றப்பார்வை கீதாவை தாக்கியது. எல்லோரும் இருக்கைகளைவிட்டு எழுந்தபோது, அவள் பின் கதிரையிலிருந்த கீதாவிடம் வந்தாள். மதன் அங்கிருந்து வெளியேறிய வேகத்தை பார்த்தபோது அவன் விவாகரத்துவிடயத்தில் எத்தனை தீவிரமாயிருக்கிறான் என்பது கீதாவுக்கு புரிந்தது.

# சொல்லமாட்டேன்

*பெண்ணே*

*உன்னை கடவுள் என்று*

*சொல்லமாட்டேன் ஏனெனில்*

*நான் உன் பக்தன் ஆகிவிடுவேன்*

*உன்னை உலகென்றும்*

*சொல்லமாட்டேன் ஏனெனில்*

*நீ எல்லோருக்கும் சொந்தமாகிவிடுவாய்*

*உன்னை குழந்தை என்றும்*

*சொல்லமாட்டேன் ஏனெனில்*

*என்றோ நீயும் தவற விட்டுவிடுவாய்*



*உன்னை உயிர் என்று*

*சொல்லமாட்டேன் ஏனெனி*

*அதுவும் என்றோ பிரிந்துவிடு*

*உன்னை என் இதய*

*என்றுமட்டும் சொல்கிறே*

*ஏனெனில் நான் உள்ளவ*

*என் இதயத்துடிப்பா*

*நீ இருக்கவேண்டு*

*பெண்ணே என் இதயத்துடிப்*

*உன்னை மட்டு*
*நினைத்துத் துடிக்கின்ற*

**சுமிதா – நொச்சிமுனை**



படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் தொடர்பு சாதனங்களில் பெண்கள்

இக்காலத்தில் மக்கள் தொடர்பு சாதனங்கள் இன்றி மனிதன் உயிர் வாழ இயலாது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. மக்கள் தொடர்பு சாதனங்கள் எல்லாம் மனுக்குல முன்னேற்றத்திற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பாலமாக அமைய வேண்டிய சாதனங்களே. சின்னக் குழந்தையிலிருந்து வயதான முதியோர் வரை அவரவர் பொருளாதார வசதிக்கேற்ப ஏதாவது ஒரு தொடர்பு சாதனத்துடன் தங்களைப் பிணைத்துக் கொண்டிருந்த போதிலும் தொலைக்காட்சிப் பெட்டிதான் இதில் முதல் இடத்தைப் பிடிக்கிறது. மக்கள் தொடர்பு சாதனங்கள், அதிலும் குறிப்பாக தொலைக்காட்சிகள், மனிதனின் நாகரிகத்தை, மனித உறவுகளை, மனிதனின் பழக்க வழக்கங்களை, பொழுதுபோக்கை, உளவியலை, கருத்துக்கள் உருவாக்கத்தை, கால மேலாண்மையைத் தீர்மானிக்கின்ற மிகப் பெரும் சக்தியாக விளங்குகிறது.

இத்தகு சக்தி வாய்ந்த மக்கள் தொடர்பு சாதனங்கள், குறிப்பாக பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சிகள் பெண்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் வகையில் உள்ளனவா? பெண்களைப் பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனவா? பெண்களை இவைகள் எப்படிச் சித்தரிக்கின்றன? பெண் எப்படி மையப்படுத்தப்படுகிறாள்? மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் பெண்களைப் பற்றி எப்படிப்பட்ட செய்திகள் வெளி உலகிற்குப் பரவுகின்றன? என்ற கேள்விகள் நம் மனத்தில் எழாமலில்லை.

## வைகைச்செல்வி, இந்தியா

பல பத்திரிகைகள் பரபரப்பான செய்தியாக இருந்தால் ஒழிய பெண்கள் பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. தனியார் தொலைக்காட்சியின் வருமானம் விளம்பரங்களை நம்பியே இருக்கின்றது என்ற நிலையில், பெண்கள் விளம்பரங்களில் எப்படியெல்லாம் சித்தரிக்கப்படுகின்றனர் என்பது மீண்டும் மீண்டும் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ‘இந்த எண்ணெயில் சமைத்தால்தான் கணவன்



படிப்பகம்

www.padippakam.com

மகிழ்ச்சியடைவான்' என்று ஒரு விளம்பரம் 'இந்த மசாலாப் பொடியை உபயோகித்தால்தான் கணவன் தன்னைச் சுத்தி வருவான்' என்கிறது மற்றொரு விளம்பரம். 'கணவனை வசப்படுத்துவதே குடும்ப வாழ்க்கையின் ஒரே நோக்கம்' என்ற குறைந்த பட்சத்திலிருந்து அதிகபட்சமாக போகப் பொருளாகவும் காமப் பொருளாகவும் பெண்கள் சித்தரிக்கப்படுகின்றனர்.

**"ஆணின் பார்வையில் பெண் ஒரு கவர்ச்சிப் பொருள் மட்டுமே' என்ற பழைய சித்தாந்தத்தை உடைத்தெறிவதற்குப் பதிலாக மேலும் வலுப்படுத்தும் முயற்சிகளே, இந்த விளம்பரங்கள்.**

சிலவற்றில் பெண்கள் மென்மையானவர்களாகவோ அல்லது ஒன்றும் அறியாத பேதைகளாகவோ காட்டப்படுவதுண்டு. இரண்டு சக்கர வாகனத்திற்காக ஒரு விளம்பரம் வந்து போனது. அந்த விளம்பரம் 'சூப்பர் அப்பா, சூப்பர் பையன், சூப்பர் வண்டி' என்றுதான் சொல்லியதே தவிர, அருகில் நிற்கிற அம்மா பற்றி எந்த விமர்சனமும் இல்லை. 'அம்மா' ஒரு சாதாரண பொம்மை போலத்தான் நிற்கிறாள். 'இந்த பற்பசை மற்றும் செண்ட் உபயோகித்தால்தான் பெண்ணிற்குக் காதல் வரும்' என்று இல்லாத ஒரு கற்பனைக் குணாதிசயத்தை பெண் மீது வலிய சுமத்துகிறார்கள். பெண்ணுரிமைச் சங்கங்களும், முற்போக்கு எழுத்தாளர்களும், பெண்களைப் பலவிதமான பாரம்பரியத் தளைகளில் இருந்து விடுவிக்க படாதபாடு பட்டுக்




கொண்டிருக்க, அந்த விஷயங்களைப் பற்றியெல்லாம் இந்த விளம்பரங்கள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

பத்திரிகைகளை எடுத்துக் கொண்டாலும் பெண்களின் நிலைமை மோசமாகத்தான் இருக்கிறது. நடுப்பக்கம் என்றாலே நிச்சயம் ஒரு அரை நிர்வாணப் பெண்ணின் படத்தைப் போட்டாக வேண்டிய கட்டாயம் ஏனென்று தெரியவில்லை. பெண்களுக்கான ஒரு வலைத்தளத்தை



படிப்பகம்

www.padippakam.com

விவரித்த ஒரு பத்திரிகை 'இதை அடிக்கடி உரசிப்பார்க்கலாம் என்று அசிங்கமாக விமர்சித்தது. மருத்துவம் மற்றும் மனோதத்துவம் என்கிற போர்வையில் பெண்களின் உணர்வுகளை அதீத காம உணர்ச்சிகளாகக் கொச்சைப்படுத்தி பல தொலைக்காட்சிகள் குளிர்காய்கின்றன. கேட்டால் 'உண்மையைத்தானே சொல்கிறோம்;' என்ற போலி சமாதானங்கள். 'உண்மை நிலையை எடுத்துக் காட்டுகிறேன்' என்று ஆண்-பெண் அங்கங்களையும் உறவுகளைவும் கொச்சையாக எழுதி அப்புத்தகத்தை சில ண்டுகளுக்கு முன்னர் ஒரு எழுத்தாளர் தன் மகளுக்கு அர்ப்பணித்திருந்தார். அது மட்டுமல்ல. ஒரு சில கவிஞர்களும், கதாசிரியர்களும் ஏன் ஓவியர்களும் கூட பெண்களின் உறுப்புகளை முன்னிலைப்படுத்தி நவீனம் என்கிற பெயரிலும் பெண் மொழி என்ற பெயரிலும் கேவலப்படுத்தும் வழக்கம் வேறு இன்று உச்ச கட்டத்தை எட்டியுள்ளது.

தொலைக்காட்சிகளில் பெண்களுக்கு என்று எப்போதாவதுதான் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. இவைகள் 90 சதவிகிதம் அரைத்த மாவையே அரைப்பவைதான். சமையலையும், கோலத்தையும். கூடை பின்னுவதையும் காண்பித்ததைத் தவிர பெண்கள் முன்னேற்றத்திற்கென இந்த நிகழ்ச்சிகள் ஏதும் சாதித்தவைகளாகத் தெரியவில்லை. னால் பத்திரிகைகள் சிறிது தேவலாம். பெண்களுக்கென்று நடத்தப்படும் மாத இதழ்கள் சில பயனுள்ள செய்திகளைத் தாங்கி வருகின்றன. இப்போதெல்லாம் இந்த வணிக சூழலிலும் ஒரு சில பத்திரிகைகள் பெண்கள் பிரச்சனைகளுக்கென்று சில பத்திகள் ஒதுக்குவதையும் காண முடிகிறது.

தொலைக்காட்சித் தொடர்கள் எல்லாமே, பெண்களை மையமாக வைத்துத்தான் தயாரிக்கப்படுகின்றன. பெண் நேயர்களைக் குறி வைத்துத்தான் எடுக்கப்படுகின்றன. இத்தொடர்கள் பெரும்பாலும் கீழ்க்கண்ட தன்மையுடையவைகள்.

1. பெண்கள் எந்நேரமும் அழுது கொண்டிருக்கும் பலவீன பாத்திரங்களாக படைக்கப்பட்டுள்ளனர்.

2. பிறரது பழியை வலிய வந்து தங்கள் மீது பெண்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

3. தேவையின்றி குடும்ப பாரத்தைப் பெண்களே சுமக்கின்றனர்.

4. எவ்விதத்திலும் பயன்படாத கணவனைக் காப்பதற்காகக் கொலையும் செய்கின்றனர்.

5. மாமியார் மெச்சிய மருமகளாகப் பெயரெடுக்க பல தியாகங்களையும் செய்கின்றனர்.

6. குடும்பங்களில் பெண்கள் ஒருவருக்கெதிராக சதி செய்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

7. திருமணமான பெண்கள் தங்கள் மீது ஆசைப்படும் கயவனுக்குப் பயந்து பயந்து சாகின்றனர்.

8. பக்திப் பிழம்பான மூட நம்பிக்கையுடைய பெண்கள்

9. மாமியாரிடமும் அடிவாங்கும் பெண்கள் மற்றும் ஒருவடோரொருவா வாய்ச் சண்டை போடுவது மட்டுமன்றி கைச் சண்டையும் போடும் நாத்தானார்கள்.

இத்தகைய பிரபலமான தொடர்கள் எல்லாம் பெண்ணின் சோகத்தை மையமாக வைத்து நீட்டிக்கப்படுகின்றன. மேலும் இத்தொடர்க்ளைப் பார்க்கும் பெண்கள் மீது தேவையின்றி ஒரு மன அழுத்தம் (**stress**) சுமத்தப்படுகிறது. படித்த பெண்கள் கூட, தாங்கள் 'கற்பனைப் பாத்திரங்களைக் காண்கிறோம்' என்பதை மறந்து போகுமளவிற்கு இத்தொடர்கள் மூளையை மழுங்கடிக்கின்றன.

இறுக்கமான குடும்ப சூழ்நிலையில், சிக்கலான குடும்ப உறவுகளின் மத்தியில் பெண்கள் எப்படி வாழ முயற்சி செய்ய வேண்டும்? அப்படி வாழ இயலாத பட்சத்தில் என்ன முடிவு எடுக்க வேண்டும்? என்ற கேள்விகளுக்கெல்லாம் இத்தொடர்களில் விடை இல்லை. 'குடும்ப உறுப்பினர் அல்லது குடும்பத் தலைவி' என்பதைத் தவிர இந்த தொலைக்காட்சித் தொடர்களில் பெண்ணுக்கு வேறு பங்கு இருப்பதாகத் தெரியவில்லை. அலுவலகம் செல்லும் பெண்களின் பிரச்சனைகள், அவற்றைச் சமாளிக்கும் விதங்கள் போன்ற காரியங்கள் சொல்லப்படுவதில்லை. பெண்களை விளம்பரங்கள் மூலம் கேவலப்படுத்தும் ஊடகங்கள், அதே வேளையில் பெண்களை ஏதோ பாரம்பரியத்தைக் காக்கும் தியாக தீபங்களாக, கணவனைக் காக்கும் சாவித்திரிகளாக, கணவனை சந்தோஷப்படுத்தும் நளாயினிகளாகச் சித்தரிக்கிற கொடுமையை என்னவென்று சொல்வது? மறுபடியும் மறுபடியும் பெண்களை அடிமைகளாகவே காட்டி ஆணாதிக்கச் சூழலை நிலைப்படுத்தவே இவை துணை போகின்றன.

தொலைக்காட்சிச் செய்திகளில், பாலியல் கொடுமைக்குள்ளாகிய பெண்களை விரட்டி விரட்டி இண்டர்வியூ எடுப்பதும் அவர்களை முழுமையாக காட்டுவதும் வழக்கமாகி விட்டது. பட்டி தொட்டிகளில் எல்லாம் அப்பெண்களின் பெயரும் முகமும் தெரிவதற்காக தொலைதொடர்பு சாதனங்கள் போட்டி போட்டுக் கொண்டு வியாபாரமாக்கும் வேகத்தை என் சொல்வது? சமீபத்தில் சென்னைத் தலைநகருக்கு வந்து போன கிரண்பேடியை எந்த தொலைக்காட்சியாவது கண்டுகொண்டதா? பேமன் போன்றவற்றை போட்டி போட்டுக் கொண்டு காட்டும் தொலைக்காட்சிகள் நிர்வாக மேலாண்மை நிறுவனங்கள் போன்றவை நடத்தும் பெண்களுக்கான அறிவார்ந்த நிகழ்ச்சிகளை என்றாவது காண்பிக்கின்றனவா?



படிப்பகம்

www.padippakam.com

பெண்களை வணிகப் பொருளாகவும், செய்திகளில் பெண்களின் பிரச்சனைகளை பரபரப்பான செய்திகளாகவும் மட்டுமே காட்டும் போக்கினை மக்கள் தொடர்பு சாதனங்கள் கைவிட வேண்டும். பெண்களை நுகர்வோர் சந்தையின் மூலப் பொருளாகவும், மேட்டுக்குடி கலாச்சாரத்தின் அடையாளமாகவும் பயன்படுத்துவதைத் தவிர்த்து, குறைந்தபட்சம் ஒரு வாரத்திற்கு ஒரு முறையாவது 'ஞானம் நல்லறம் வீர சுதந்திரம்' மிக்க பெண்களை உருவாக்க மக்கள் சாதனங்கள் சிறிதளவாவது பாடுபட வேண்டும்.

## விமானநிலையச் சந்திப்பு

*ஒன்றரை தசாப்தங்களின் பின்*
*மீண்டும் சந்தித்துக் கொண்டோம்*
*இரு வேற்றுக் கண்டவாசிகளாய்*
*வேறு நிறக் கடவுச்சீட்டுகளுடனும் -*
*முற்றிலும்*
*அந்நிய அரசகரும மொழிகளுடனும்.*

*ஒரே நாட்டுப் பிரஜைகளாய்*
*இருந்த அன்றோர் நாளில்*
*பொருந்தாத இரு அரைவட்டங்களைப்*
*பொருத்தின இலைகள் தொங்கும்*
*திருவாத்திப் பூ மரத்தின் கீழ்*
*நாம் அறிமுகமானதை நினைவு கூர்கிறாய்.*
*- இன்னமும் மாறாத அந்தச் சிரிப்பை*
*எப்போதும் நான் அணியும் சீத்தைச் சட்டையை,*
*என் சகோதரனை,*
*மாவட்ட ரீதியாக எனக்குக் கிட்டிய*
*விசேட பெறுபேறுகளையும் கூட.*

*ஆமோதிக்கின்றேன் நான்.*

*எனினும்*
*கிடைத்த பொறியியற் புலமைப் பரிசால்*
*பாடசாலைப் பந்தாய் அடிபட்ட*
*உன் பெயருடன்,*
*துருவேறி மட்கின*
*பின்இருக்கை வைத்த உன் சைக்கிள்*
*மாத்திரமே*
*குளிர்ச்சியான அத் திருவாத்தி நிழலின் கீழ்*
*ஞாபகத்தில் இருப்பதை*
*எப்படி*
*உனக்குச் சொல்ல?*

**ஆழியாள், அவுஸ்ரேலியா**

*(24.02.2005).*



படிப்பகம்

www.padippakam.com

# எந்தையும்தாயும்

ஜெயந்தி சங்கர், சிங்கப்பூர்

மாலாவைக் கடக்கும் போதெல்லாம், அன்று நான் உணர்ந்தது விநோதமானது. சகிக்கமுடியாத ஒரு நாற்றம். யாராலும் அலட்சியப் படுத்திவிடமுடியாதபடிக்கு. சட்டென்று துரத்தும் அளவிற்கு. மழையின், மண்ணின் இதமான மணத்தை அடக்கி வீழ்த்திய நாற்றம். மாலாவின் இருக்கையினருகே இருந்த ஜன்னலின் வழியாக ஒரு முறை எட்டிப்பார்த்தேன். சந்தேகிக்கக்கூடியதாய் அங்கே ஒன்றுமேயில்லை. பெய்து ஓய்ந்திருந்த மழையின் சுவடுகளாய் இன்னமும் சொட்டுச்சொட்டாக மழைநீர் முதல் மாடியிலிருந்து சொட்டிக்கொண்டிருந்தது. அறையிலும் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லையே என்று யோசித்தபடி சுற்றுமுற்றும் பார்த்தேன். ஆனால், அந்த நாற்றம்?

வெவ்வேறு வகுப்பில் பயிலும் மாணவர்கள் தமிழ்ப்பாடத்திற்கு மட்டும் இவ்வறையில் கூடுவர். மூன்றாம் வகுப்பிற்கு அன்று தேர்வு நாள். மாணவர்கள் அவரவர் தேர்வு விடைத்தாளில் கவனமாயிருக்க சோர்ந்து காணப்பட்ட மாலா மட்டும் கவனமின்மையின் பிடியில் இருந்தாற் போலிருந்தது. அவள் உட்கார்ந்திருந்தது வகுப்பறையின் கடைசி வரிசையின் மூலை இருக்கை. அவளை நான் கவனிக்கும்போது அவள் தலையைக் கவிழ்த்து விடைத்தாளில் பார்வையைச் செலுத்தினாள். ஆனால், அது ஒப்புக்காக என்று எனக்குத் தோன்றியது. என் கவனம் அவளைவிட்டு அகன்றதும் அவளின் கவனம் மற்றவற்றில் படிந்தது. அல்லது, இலக்கின்றி அங்குமிங்கும் அவளது பார்வை பரபரவென்று அலைந்தது. வகுப்பைச் சுற்றி வந்த ஒவ்வொரு முறையும் இதை நான் கவனித்தேன்.

மூன்றாம் முறை அவளைக் கடந்தபிறகு சட்டென்று திரும்பினால், மாலா வேறெங்கோ பார்த்துக்கொண்டு, அதை நான் பார்த்துவிட்டதை அறிந்ததும் கவனத்தைக் குவிக்க முயன்று, பிறகு முடியாமல் போகவே நீரிலிருந்து தூக்கி நிலத்தில் போட்ட மீனாகத் தவித்தாள். வழக்கத்திற்கு அதிகமாகவே அவளின் நீல ஸ்கர்ட்டும் வெள்ளை ப்ளௌவுஸும் அழுக்கேறியிருந்தது என்



படிப்பகம்

www.padippakam.com

கவனத்தை ஈர்த்தது. காலுறையும் சப்பாத்தும் வெள்ளையென்று கற்பூரமடித்து சத்தியம் செய்தாலும் நம்பமாட்டார்கள்.

நான்காவது முறையாக மாலாவைக் கடக்கும்போது மீண்டும் அதே நாற்றம் என் மூக்கில் மோதியது. அப்போதுதான் அழுகிய முட்டையை நினைவுபடுத்தும், பலநாள் அழுக்குடன் சேர்ந்த வியர்வையின் அந்நாற்றம் மாலாவின் மீதிருந்துதான் கிளம்பியது என்று என் நுகர்புலன் அடித்துச்சொன்னது. ஆனால், ஏன் குளிப்பதில்லையா அவள்? என்னதான் ஆயிற்று? என்னால் காரணத்தை அனுமானிக்கவே முடியவில்லை.

கடந்தசில நாட்களாகவே மாலா பாடங்களில் போதிய கவனம் செலுத்துவதில்லை. சராசரியான மாணவியான அவள் திடீரென்று காட்டிய பின்தங்கல் என்னுள் சில அக்கறைகளை எழுப்பியபடியே தானிருந்தது. எது கேட்டாலும் தலையாட்டலில் பதில். அதிகபட்சம், 'ம்' என்றோ 'ஹுஊஹும்' என்றோ ஒற்றைச் சொல்லில் முணுமுணுப்பாய். அகன்று விரிந்த விழிகளில் ஒரு நிரந்தர சோகம். குடும்பத்தில் ஏதும் பிரச்சனையா? அவளைப்பற்றி அவளுடைய வகுப்பாசிரியை எஸ்தர் தியோவிடம் பேசவேண்டும் என்று கிட்டத்தட்ட தினமும் நினைத்துக்கொண்டிருந்தபோதிலும் ஏதேதோ வேலைகளில் மூழ்கிவிடுவதால், தட்டிக்கொண்டே போனது.

மணியடித்ததும், எழுதுவதை நிறுத்திவிட்டு, அறையை விட்டு வெளியேறி அறை வாசலில் வைத்திருக்கும் தங்கள் புத்தகப்பைகளை எடுத்துக்கொண்டு அவரவர் வகுப்புகளுக்குப் போகச்சொன்னேன். அதுவரை அமைதியாயிருந்த அறை திடீரென்று குசுகுசுவென்று விடைகளைச் சரிபார்க்கும் உரையாடல்கள், நாற்காலி மேசைகள் இழுபடும் நகர்த்தும் ஓசையுமாய் நிறைந்தது. ஓட்டமும் நடையுமாக அவரவர் வகுப்பறைகளை நோக்கி விரைந்தனர். அத்தனை நெருக்கடியிலும் கவனமாக மாலாவைத் தவிர்க்கவென்று விலகி பயந்தோடினார்கள். வெளிப்படையாக முகத்தைச் சுளித்துக்கொண்டு ஒவ்வொருவரும் தொற்றுநோயாளியைக் கண்டு பயப்படுவதைப்போலத் தான் நடந்துகொண்டனர். ஒருவர் செய்தவுடன் உடனே அடுத்தடுத்து மற்ற சிறார்களும் அப்பட்டமாகப் பின்பற்றினர்.

எல்லாவிடைத்தாள்களையும் ஒவ்வொன்றாக சேகரித்து, அடுக்கிக் கட்டி வைத்துக்கொண்டே மாலாவைப்பற்றிதான் நினைத்துக்கொண்டிருந்தேன். அவள் பையை எடுத்துக்கொண்டு மெதுவாக நடந்து போகும்போது இருகிக்கிடப்பதுபோல முதல்பார்வையில் தோன்றும் அவளின் முகம் பலவித உணர்ச்சிகளைக் காட்டவே செய்தது. அவமானம், வருத்தம் கொஞ்சம்




படிப்பகம்

www.padippakam.com

அடக்கிய அழுகை, சோர்வு என்று எல்லாவற்றிலும் ஒரு இழையைச் சேர்த்துப் பின்னினாற்போல்.

அன்றைக்கு வேறு வகுப்பு இல்லாததால், வீட்டிற்குப் போய்விடலாமா என்று யோசித்தபடியே நடந்தேன்.
இரவெல்லாம் இருமிக்களைத்த தினேஷ் மிகவும் சோர்வுடன் காலையில் பள்ளிக்குப் போயிருந்தான். வீட்டிற்குப்போகும் வழியில் வெற்றிலை, துளசி வாங்கிக் கொண்டுபோனால், கஷாயம் வைத்துக்கொடுக்கலாம் என்ற யோசனை உதித்தது.



மாலாவின் வகுப்பைக் கடந்த போது, வகுப்பாசிரியை எஸ்தர் தியோ கண்ணில் பட்டார். அறையின் மூலையில் தனியே ஒரு இருக்கையில் மாலா உட்கார்ந்திருப்பது தெரிந்தது. வாசலில் நின்றுகொண்டு, "எக்ஸ்க்யூஸ் மீ", என்றழைத்ததும் அவர் வெளியில் வந்தார். மாலாவைப்பற்றி அவரிடம் விசாரித்தேன். வகுப்பில் மற்ற பாடங்களிலும் அவள் பின் தங்குவதாகச் சொன்னவர், கடந்த சில நாட்களாக அவள் ஒரே நாற்றமாய் நாறுகிறாள் என்றும், மாணவர்கள் அவளைப்பார்த்து ஓடுகிறார்கள், கேலிசெய்கிறார்கள் என்று பலவாறாய் முறையிட்டார். மாலாவை என்னுடன் அனுப்பமுடியுமா என்று கேட்டேன். கூட்டிக்கொண்டு போய் பேசிப்பாருங்கள், நான் கேட்டு ஓய்ந்துபோனேன் என்று சொல்லி மாலாவை என்னோடு அனுப்பினார்.



படிப்பகம்

www.padippakam.com

மாலா என்னோடு நடந்தாள். பள்ளிப்பூங்காவிலிருந்த இருக்கைக்கு வந்ந்து உட்கார்ந்தோம். அவளும் அவளுடன் வந்த நாற்றமும் என் அருகில். குட்டையாய் இரட்டைப்பின்னலும் நடுவகிடும் அவளுடைய காயான குண்டு முகத்திற்குப் பொருத்தமாகவே இருந்தது. கிட்டத்தில் உற்றுப்பார்க்கும்போது தான் அவள் முகம் நீரகண்டு பலநாட்கள் ஆகியிருக்கும் என்று தோன்றியது. தலைமுடி சீப்பையும், சீருடை சோப்பு நீரையும் சந்தித்து குறைந்தது ஒருவாரமிருக்கும்.. எப்போதும் இப்படி இருக்கமாட்டாளே, ஏன்?

"சொல்லு மாலா, என்ன பிரச்சன? ஏன் உன்னால பாடத்துல கவனம் செலுத்த முடியல்ல? ஆமா, நீ தினமும் குளிக்கிறயா?", என்று கேட்டுவிட்டு அவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். ஹுஹும், முகத்தில் ஒரு சலனமில்லை. இவளுக்குள் இருப்பதை இவள் பேசினால் தான் அறியமுடியும்? இப்படி வாயைத் திறப்பேனா என்றிருந்தால்? கொஞ்சம் எரிச்சலும் கோபமும் என்னுள் கிளம்பியது.

என் கைத்தொலைபேசி சிணுங்கியது. தினேஷ்தான்! "அம்மா, இன்னிக்கி நா வர லேட்டாகும். அது சொல்லத்தான் போன் போட்டேன்", என்றான். "சாப்பிட்டயா தினேஷ்?", என்று நான் கேட்டபடி மாலாவின் பக்கம் எதேச்சையாக திரும்பினேன். அவள் வாயில் சுரந்த உமிழ்நீரைக்கூட்டி முழுங்கியபடி உட்கார்ந்திருந்தாள். " ஓ, கமான்மா, இந்த வருஷம் நா 'ஓ லெவெல் எடுக்கப்போறேன். சாப்டியான்னு கேட்டுகிட்டு. சாப்பிட்டுவிட்டுத்தான், ப்ரோஜெக்ட் வொர்க் செய்யப்போறேன். ஓகே, பை மா", என்று அலுப்புடன் ஆரம்பித்து சிரிப்போடு முடித்து துண்டித்துவிட்டான் தினேஷ்.

கண்கள் பனிக்க உட்கார்ந்திருந்த மாலைவைப்பார்த்து, "சொல்லு மாலா. நீ பேசினாதானே புரியம் எனக்கு, ப்ளீஸ்", என்று நான் சொல்வதற்காகவே காத்திருந்ததைப்போல கொடகொடவென்று கண்களில் கண்ணீர் வழிய விசும்பினாள். "எதுக்கு அழுவுற? நா இப்ப ஒன்ன ஏசினேனா? ", என்றதும், "டீச்சர், எனக்கு ரொம்பப் பசிக்குது", என்று சொல்லிக்கொண்டே கண்களைத் துடைத்துக் கொண்டாள். தினேஷச் சாப்பிட்டாயா என்று கேட்டதுமே இவளுக்குப் பசி வந்துவிட்டதோ!

முதல் நாள் மதியம் பள்ளியில் 'பன்' விற்கும் மலாய் தாத்தா கொடுத்த பன் ஒன்றைத் தவிர நான்கு நாட்களாக ஒன்றுமே சாப்பிடவில்லை என்றாள். அதை நான் துளியும் எதிர்பார்க்கவேயில்லை. வேறு ஏதோ இருக்கிறது என்றும், அவள் சொல்வாள், கேட்டுவிட்டு உதவுவோம் என்றும் நினைத்திருந்த எனக்கு என்னவோ போலாகிவிட்டது. மற்றவற்றைப்பிறகு கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்று நினைத்துக்கொண்டு, வாவென்று கூட்டிக்கொண்டு பள்ளி



படிப்பகம்

www.padippakam.com

உணவகத்துக்குப் போனேன். பின்தொடர்ந்து நடந்தாள். அங்கு அவளுக்கு ஒரு பெரிய கிண்ணம் நிறைய சூப் நூடில்ஸ் வாங்கிக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னேன். பசியில் அவசர அவசரமாக வாயில் போட்டுக்கொண்டு சுட்டுக்கொண்டு தவித்தாள். பசியைத் தணிக்க அவள் பட்டபாடு பரிதாபமாக இருந்தது. அவசரமாக உண்டதில் புரையேறிவிட்டது. கண்களில் கண்ணீர் பெருகியது. "மெதுவா சாப்பிடு", என்று சொன்னதும் இடையிடையே என் முகத்தைப்பார்த்துக் கொண்டே ஊதிஊதிச் சாப்பிட்டாள். "போதுமா", என்றதும் போதுமென்று தலையாட்டினாள். வீட்டிற்குத் தொலைபேசச் சொன்னேன் மாலாவை. ஆனால், வீட்டில் யாருமில்லை.

மீண்டும் இருக்கைக்குத் திரும்பினோம். பேசாமல் இவள் வீட்டிற்கே இவளுடன் போய்ப் பேசினால் என்ன என்று யோசித்தபடியே, "ம், சரி இப்ப சொல்லு. உங்கம்மா வீட்டுல இருப்பாங்களா இப்போ?", என்றதும்," டீச்சர், அம்மா இல்ல. எங்கன்னும் தெரியல்ல", என்றாள். "அப்ப, உங்கப்பா சாயங்காலம் இருப்பாரா? அவரோட நா பேசமுடியமா?", என்று நான் கேட்டதுமே," அப்பாவையும் காணோம். எங்க போயிருக்காருன்னும் தெரியல்ல", என்றுபடி மாலா மீண்டும் அழக்கிளம்பினாள்.
விசும்பல்களுக்கிடையேயும் அழுகை தேயத்தேய, கேவல்களுக்கிடையேயும் சொல்லிக்கொண்டே வந்தாள்.

நான்கு இரவுகளும் ஐந்து பகல்களுமாக பெற்றோர் இருவரையும் பற்றிய ஒரு தகவலும் இல்லாமல், தனியாக பூட்டிய வீட்டு வாசலில், படுத்து, உறங்கி, விழித்து, பள்ளிக்குப்போய், மீண்டும் அங்கேயே போய் வீட்டைத் தட்டிப்பார்த்துவிட்டு, அங்கேயே உட்கார்ந்து பாடங்களை எழுதி, உறங்கி, விழித்திருக்கிறாள். அம்மாவும் வரவில்லை அப்பாவும் வரவில்லை. கையில் காசும் இல்லை. பொதுத்தாழ்வாரத்தில் இருந்த சிறுமியை அண்டைவீட்டார்கூடவா கவனித்து விசாரிக்கமாட்டார்கள்? வேறுவித ஆபத்துகள் கூட சிறுமிக்கு ஏற்பட்டிருக்கலாமே என்று என் சிந்தனை அசுரவேகத்தில் நாலாதிசையிலும் பாய்ந்தது. பெற்றோர் இருவரும் தினமும் சண்டையிட்டுக் கொண்டு பலநாட்கள் பேசிக்கொள்ளாமலே இருப்பார்கள் என்றாள். குளிக்காமலேயே இருந்ததால் தான் அவள் மேல் நாற்றமடித்தது என்றும் சொல்லிமுடித்தாள். உறவினர்கள் அல்லது நண்பர்கள் யாரையும் தெரியாதா என்று கேட்டதற்கு திருதிருவென்று சிலகணங்கள் விழித்துவிட்டு இடவலமாகத் தலையை ஆட்டி இல்லையென்றாள்.

எட்டு வயது சிறுமி கவனிப்பாரற்று நாலைந்து நாட்களாக பொதுத்தாழ்வாரத்தில் இரவுபகலாக இருந்திருக்கிறாள் என்பதைக் கேட்டதும் வயிற்றிலிருந்து வேதனை கசப்பாகக் கிளம்பி தொண்டை வரை வந்து அடைத்தது. கூட்டி



படிப்பகம்

www.padippakam.com

முழுங்கிக்கொண்டேன். அங்கேயே மாலாவை உட்காரச்சொல்லிவிட்டு, பள்ளிவளாகத்தைவிட்டு விடுவிடுவென்று வெளியேறி நடந்தேன். அருகில் இருந்த அங்காடிக்கடையில் சோப்பு, சீப்பு மற்றும் தலைக்குத் தடவ எண்ணை வாங்கிக் கொண்டு, அங்கேயே அருகிலிருந்து துணிக்கடையில் மலிவு விலையில் மாலாவுக்கு ஒரு துண்டும், ஒரு உடுப்பு ஒன்றையும் வாங்கிக்கொண்டு வந்தேன்.

பள்ளியிலிருந்து குளியலறையில் மாலாவை முதலில் குளிக்கச் சொன்னேன். முளித்து உடை மாற்றிக்கொண்டவளிடம் தலைக்கு எண்ணையைத் தடவி சீவிக்கொள்ள்வும் சொன்னேன். அதன்பிறகுதான் மாலா, கொஞ்சம் பார்க்கும் நிலைக்கு வந்திருந்தாள்.
மீண்டுமொரு முறை அவள் வீட்டிற்குத் தொலைபேசச்சொன்னபோது, மாலாவின் அம்மா எடுத்தார். வீட்டிலேயே இருக்கச் சொல்லி, நாங்கள் வருவதையும் மாலாவைச் சொல்லச் சொன்னேன். இதற்குள் பள்ளியும் முடிந்துவிட்டிருந்தது. வகுப்பிலிருந்து பள்ளிப்பையை எடுத்துக் கொண்டு மாலா வந்ததும் கிளம்பி, அவர்களுடைய வீட்டிற்குப் போனோம்.

பத்துப்பன்னிரண்டு அடுக்ககங்களைத் தாண்டி நடந்தோம்.
எங்களைப்பார்த்ததுமே, மாலாவின் அம்மா, "என்னடி ஆச்சு?ஸ்கூல்ல ஏதும் பிரச்சனயா? ", என்று கேட்க ஆரம்பித்துவிட்டார். நடந்ததையெல்லாம் சொல்லச்சொல்ல ஆச்சரியத்தில் அப்படியே உட்கார்ந்துவிட்டார்.
"உங்கப்பா உங்கிட்ட வீட்டு சாவிய கொடுக்கல்ல? கொடுக்கச்சொன்னேனே? காசும் கொடுக்கல்லயா? நாலுநாளுமா வீட்டுக்கு வராம இருந்தாரு?", என்று பலவாறாகத் தன் மகளைக் கேட்க ஆரம்பித்துவிட்டார்.

அப்போது மாலாவின் அப்பா வீட்டிற்குள் நுழையவும், "நாலஞ்சு நாளா எங்க போயிட்டீங்க? இவகிட்ட சாவி கொடுக்கச்சொல்லி 'எஸ் எம் எஸ்' அனுப்பினேனில்ல. எங்க? அவ வீட்டுக்கா?", என்று நான் அங்கிருப்பதைச் சட்டென்று மறந்தாற்போல பேசிக்கொண்டே போனார். "நான், ரொம்ப பிஸி, நீயே மாலாவுக்கு சாவி, காசு எல்லாம் குடு, நாலஞ்சு நாளைக்கி நா வீட்டுக்கு வரமாட்டேன்னு நானும் தானே உனக்கு 'எஸ் எம் எஸ்' அனுப்பினேன்? ஏன்? நீ ஊர் மேயலாம்னா நான் மேயக்கூடாதா? நீ எங்கடீ போயிருந்த, அதச்சொல்லு", என்று சண்டைக்கான அத்தனை அறிகுறிகளோடும் அவர் பங்குக்கு முனைப்புடன் கேட்டபடி துவங்கினார்.

நான் ஒருத்தி அங்கு நின்றிருப்பதையே இருவரும் மறந்துவிட்டிருந்தனர். மாலாவின் இருப்போ, அவள் அனுபவித்த கஷ்டங்களோ, அவளுக்கு இருக்கக்கூடிய வேதனைகளோ பற்றித் துளியும் கவலையே படவில்லை இருவரும். யார் எங்கேயிருந்தார், யாருடன் இருந்தார், எதற்கு இருந்தார் என்று கேள்விக்கணைகளைத்



படிப்பகம்

www.padippakam.com

தொடுத்துக் கொண்டு காரசாரமாக விவாதித்தனர். என் முகத்தையே பார்த்தபடி நின்றிருந்த மாலாவை நோக்கிக் கையசைத்தேன். செருப்பை மாட்டிக்கொண்டு கிளம்பிவிட்டேன்.

எவற்றைப் பற்றியெல்லாம் பேசலாம் என்று வந்திருந்தேனோ அவற்றையெல்லாம் வேறொரு சந்தர்ப்பத்தில் பார்த்துக் கொள்வோம் என்ற நினைப்புடன், அநாகரீகத்தின் உச்சியில் இருந்த அவர்களின் வாய்ச்சண்டையைக் காணமுடியாந்ததால் விடுவிடுவென்று நடந்தேன். கைத்தொலைபேசியை எடுத்து," தினேஷ், உன்னோட சாவி இருக்கா?", என்றதும், "ஏம்மா திடீர்னு? சாவி எங்கிட்ட இருக்கே. இதோ, வீட்டுகிட்டயே வந்துட்டேன்", என்றான்.

# மனைவி கற்போடு இருக்கிறாள்

*எனக்கென்று ஒரு நண்பன்*
*இருந்தான்*
*சமத்துவமாகவே சமநிலை*
*பேசுவான்*
*புதுமை புதிதே பெரியது என்பான்*
*விழிப்பு எழுச்சி வேணடுமென்பான்*
*பூமிப்பந்தைப் புரட்டவே*
*நெம்பு கோலொன்று*
*மனைவி கற்போடு இருக்கிறாள்*

*எனக்கென்று ஒரு நண்பன்*
*இருந்தான்*
*சமத்துவமாகவே சமநிலை*
*பேசுவான்*
*புதுமை புதிதே பெரியது என்பான்*
*விழிப்பு எழுச்சி வேணடுமென்பான்*
*பூமிப்பந்தைப் புரட்டவே*
*நெம்பு கோலொன்று*

*நீளமாய் கேட்பான்*
*இன்னம் இதிலே இறுகிப்*
*போனதாய்*
*என்றோ யார்த்த கவி வரிகளோடு*


*கண்டங்களெல்லாம் கடந்து*
*கால் நூற்றாண்டு மேலாய்*
*கண்டுப்பிடியாய் தனித்தே வாழ்ந்து*
*நாடு நல்லாய் வந்ததும்*
*நாடு போய் மீண்டும் வந்து*

*வந்ததும் சொன்னான்*
*நாட்டின் நடப்பு நல்லதா - வேறு*
*என்ன சங்கதி என்றே நாம் வினவ ?*
*என் மனைவி கற்போடு தானுள்ளாள்*
*என்ற சேதி என் முன்வைத்தான் !*



படிப்பகம்

www.padippakam.com



இல்லாள் இருந்தும் இல்லாதவாய்
இருபத்தைந்து வருடம் முன்னாக
தாலி கட்டி வேலி மாட்டி
சடுதியாய் தரித்த கற்பமோடு விட்டு
கடுகதியாக விமானமேறிய-காவலன்
மனைவி கற்போடுதான் தான்,
இயம்புதல் கேட்டு எரிச்சலால்..

தொலைபேசியில் தொலைத்த
நாணயம்
அதனூடே வாழ்ந்து முடித்த
வயதுகள்
அதனைத் தாங்கியே
வயதுப் பைபயனும்
அப்பா தெரிந்தும் தெரியா
முகத்தினோடு
அவரா இவர் ஆராயும் நண்பரோடு
அவனும்

கிழம் எனப்படினும் இளம் முதிர்வோடு
பழம் போய் மீண்டது தாயகம்
விழுந்தாலும் மண் படவில்லை
வீரப்போடு
மனைவி கற்பொடு தானுள்ளாள்
வசனம் பேசி மகிழ்ந்தது கொண்டது

கற்பு இரு கட்சிக்கும்
நிகரென கர்ச்சித்துப் போனான் பாரதி-
ஆண் பெண் சமமென -அதை
அரியணையேற்றிய தலைவர்களுமாக,

தோளுக்கொரு துணையைத் தேடி
வாழ்வைத் தொலைத்து
தொலைந்த வாழ்வை
மீட்கப் போய் மீட்டு
மீண்டும் வந்து சொல்லுது
மனைவி கற்போடு இருக்கிறாள்

நீ எதைக் கொண்டு அளந்தாய்
என்பதை
எடுத்துச் சொல்லின் -அவளும்
அந்த அளவு கோல் கொண்டே
அவளும் அளப்பாள் உன்னை-ஆம்
நீயும் அதோடு இருக்கிறாயா
இல்லையா ?

'சேறு கண்ட இடத்தில் மிதித்து
தண்ணி கண்ட இடத்தில்,
கழுவுவான் ஆம்படையான்" என்ற
பாட்டி காலம் பறைந்தும் கேட்டேன்
பூட்டர் காலமும் கேட்டதுமுண்டு,
நீயும் சொல்லு நாமும் கேட்போம்-இந்த
நவீன யுகத்தில் கேட்பதோடு
கேட்பதாய்

ஆகவே அச்சுறுத்தலாய் இன்னம்
ஆதிக்கம் அசையாது உளது
வடிவங்கள் வேறு வேறாயினும்
மேற்குலகிலும் வாழுது ! போங்கள் !

**ஆக்கம்**
**கோசல்யா**
**ஜேர்மனி**
**8-7-2005**



படிப்பகம்

www.padippakam.com

# விழி ஒளி



*வால் பிய்ந்த பல்லியாய்*
*உன் ஞாபகங்களை*
*வெட்டிக்கொண்டாலும்*
*மீண்டும் மீண்டும்*
*பலமடங்கு*
*வீரியத்துடனும்*
*வேகத்துடன்*
*வளரத்தான் செய்கிறது.*

*உன்னால் முடிச்சவிழ்க்கப்பட்ட*
*என் மர்மப் பிரதேசங்கள்*
*என்னைக் கொல்லும்.*

*சூரியக் கதிர்களின்*
*அத்தனை வெப்ப உறிஞ்சியாய்*



*நான்.*

*துடித்துத்தான் போகிறேன்.*

*நீயே மருந்தென*
*தெரிந்திருந்தும்*
*என்ன செய்வேன் சொல்..!?*

*இருள் சூழ்ந்த*
*சூனிய வெளியுள்*
*சிக்குண்ட தவிப்பு.*

*அத்தனை உணர்வுகளையும்*
*ஒன்று திரட்டி*
*உன் விழி ஒளி கொண்டு வா*
*எனை மீட்க.*

***நளாயினி***
***தாமரைச்செல்வன்.(சுவிஸ்)***



படிப்பகம்

www.padippakam.com

# இந்த ஓவியங்கள் பற்றி..

இவர்களுக்கு முக அடையாளம் தேவையில்லை. இவர்கள் பெண்கள், மகளாய்,மனைவியாய், தாயாய், சகோதரியாய், தோழியாய்ப் பரிணமிக்கும் பாத்திரங்கள் பெண்ணை அழகுப்பொம்மையாய் ஓவியத்தில் காட்டுவதை விட அவளின் இயக்கத்தை ஓவியத்தில் கொண்டு வருவதை விரும்புபவள் நான். அவ்வாறே இத்தொடர் ஓவியங்களும் பெண்ணைச் சித்தரித்துக் காட்டுகின்றன.

1970கள் எனக்கு மங்கலாய் நினைவில் நிற்கும் காலம். அக்காலத்தில் சமூக பொருளாதார நிலவரங்கள் வீட்டுக்கு வீடு மாறுபட்டாலும் நித்திய நிகழ்வுகள் தலைகீழாய் மாறிவிடுவதில்லை. அனேகமாக ஒவ்வொரு நாளும் ஒரே சீரான நிகழ்வுகளுடன் ஓடமுடியும். அம்மா தலைசீவி விடுவவதும் சம்பல் அரைப்பதும் அக்கம்பக்கத்துடன் குசலம் விசாரிப்பதும் மதியம் குட்டித் தூக்கம் போடுவதும் கூட நாள் தவறாமல் நடக்கக் கூடியவை. எதிர்பாரா அசம்பாவிதங்கள், பதட்டங்கள் அதிகம் இல்லாத காலம் அதனாலோ என்னவோ அவை என்றும் பசுமையாக என் மனதில் நிற்கின்றன. 80களில் ஏற்பட்ட பதட்டங்களும் அவை தந்த அதிர்வுகளும் சமகால நிகழ்வுகள் என்ற தலைப்பின் கீழ் ஓவியங்களாக்கிச் சலித்து விட்ட விடயம். அவை உண்மைகளாய் இருப்பினும் எனக்குத் திரும்பிப் பார்க்கப் பிடிக்காத நிகழ்வுகள் எனவே நான் விரும்பும் யாழ்ப்பாணத்தின் வாழ்வு என் ஓவியங்களில் நிறங்களாய் வெளிப்படுகின்றன.

அருந்ததி (லண்டன்)
30.7.2005



படிப்பகம்

www.padippakam.com



**ஓவியம் : அருந்ததி**



படிப்பகம்

www.padippakam.com

## நூல் விமர்சனம்: தர்மினி, பிரான்ஸ்




தேடல்வலி என்பது தொகுப்பின் பெயர் பெண்களின் தேடலில் வலி அதிகம். எதற்காக வலி தேடலில் அவளுக்கு வலியா? வலியில் தேடலுக்கு உந்தப்படுகின்றாளா? கவிதைகளால் பதில் சொல்ல கவிஞர் முயற்சிக்கிறார் என்ன தான் ஆண்கள் எழுதித் தள்ளினாலும் முடியாது. ஒரு பெண்ணின் மனநிலை, எதை எப்படி? அணுகுவாள்? என்பதைப் பெண்களால் மட்டுமே உணர முடியும் எந்த பிரச்சினையையும் சந்தித்தவர்களால் மட்டுமே அதை முழுமையாகப் புரிந்து கொள்ள இயலும். இல்லை என்றால் பாலின் நிறமும் கொக்கின் நிறமும் வெள்ளை என்ற கதையாகத் தான் இருக்கும்.

பிரான்ஸில் வெளியான முதலாவது பெண் கவிஞரின் தொகுப்பு எனக் கூறப்படுகின்றது.ஆகவே நாம் அலசுவது அவசியம் தான். பெண்களின் தீவிரம், கவிதையாற்றல் நிறுத்துப் பார்க்கப்பட காரணமாக அமைந்து விடும். ஆகவே இன்னும் இன்னும் நாங்கள் கனதி நிறைந்தவைகளை ஆக்க வேண்டுமென்றால் இக் கவிதைத் தொகுதியை விமர்சிக்கத் தான் வேண்டும்.

நூல் விமர்சனம்: தர்மினி-பிரான்ஸ்

ஆண்கள் இக்கவிதைகளைப் படித்து விட்டு அதன் கருத்துக்களை உள் வாங்குவதும் பெண்கள் உணர்வதும் வித்தியாசம். புலம் பெயர்ந்த அவசர வாழ்வில் பல பெண்களுக்கு சிந்திப்பதற்கே நேரம் இல்லை. அல்லது செயற்பட ஆதரவு இல்லை. நாள் முழுதுமான வேலைகளுக்கிடையில் பெண்கள் கூட சில விடயங்களில் கவனம் செலுத்தி பொழுதைப் போக்கிவிடுவார்கள். ஆண் தன் ஆர்வங்களை இலட்சியங்களைச்



படிப்பகம்

www.padippakam.com

சுலபமாக நிறைவேற்றுகின்றான். வேலைக்கு போவது தவிர மிகுதியெல்லாம் அவனுக்கு ஓய்வு நேரம் தான். அந்நேரம் ஆறுதலாக அரசியலும் இலக்கியமும் அலசுவார்கள். பெண்ணுக்கோ நித்திரையில் கூட நிம்மதியான ஓய்வு கிடைப்பது குறைவு. பல வேலைகளுக்கிடையிலும் குடும்பம் தவிர்ந்த இன்னொன்றைச் சிந்திக்க அமைதியான மனநிலை அமையாது. அப்படியான சூழ்நிலையில் பெண்கள் இவ்வாறான செயற்பாடுகளை மேற் கொள்வதைப் பாராட்டத் தான் வேணும்.

இக்விதைத் தொகுதியின் முகவுரையில் பெண்கள் என்ன ஒடுக்கப்படுகின்றார்களா? என்ற கேள்வி பெண்களிடமே கூட இருக்கிறது என்கிறார் கவிஞர். சுற்றியுள்ள சமூகம் சுமையை ஏற்படுத்துகிறது. அடிப்படை வசதிகள் கிடைத்ததா? திருப்திப் பட்டுக் கொள் என்கிறது. தனக்கு என்னென்ன அவசியம் என்பதைப் பகுத்தறிய விடுவதில்லை. கலாச்சாரத்தை காப்பாற்ற கடப்பாடு ஒரு பெண்ணுக்கு மட்டுமே.

ஒவ்வொரு பெண்ணுக்கும் வித்தியாசமான பிரச்சினைகள், ஒடுக்குமுறைகள், அவளுக்கான ரசனைகள், ஆர்வங்கள் ஆசைகள் வேறுபட்டவை. சுற்றியுள்ள சமூகம் பலவிதம் கலாச்சாரம் கட்டுப்பாடு வித்தியாசமானவை எல்லாவற்றையும் சகித்துக் கொள்ள பெண் பழகிக் கொள்ள வேண்டும். இத் கவிதைத் தொகுதியில் 15 கவிதைகள் உள்ளன.

கவிஞர் தான் நினைத்த கருத்துக்களை வெளிக் கொணர்ந்திருக்கிறார். ஆனால் எளிமையாக அமையும் போது சில கவிதைகளில் கனம் அற்று காணப்படுகின்றது.

இத்தொகுதியில் முதல் இரு கவிதைகளும் ஆண் பெண் நட்பு பற்றியது. பெண் எதிர் கொள்ளும் உளரீதியான தாக்கங்களில் இந் நட்பும் ஒன்று

**நட்புப் பறவையில்** இவ்வாறாக

*பெண்ணுடன் பெண் கதைத்தால்*
*சிநேகிதி, நண்பி*
*ஆணுடன் ஆண் கதைத்தால்*
*சிநேகிதன், நண்பன்*
*கணவனும் மனைவியும்*
*பேசிக் கொண்டால்*
*பரஸ்பரம் ,புரிந்துணர்வு, தாம்பயத்தியம்*
*என உறவு முறைகள் வருகின்றன.*
அதே போல் இக்கவிதையில்

*இன்னொருவன் மனைவி*
*இன்னொருத்தி கணவன் கூடாது*
*பேசவே கூடாது* என்று தொடர்ந்து நீண்டு செய்கிறது இக்கவிதை.

**'நாங்கள்'** என்ற இன்னுமொரு கவிதையில் நட்பு பற்றி

*நீ யாருடன் கதைத்தாய்*
*என்பதை விடவும்*
*யாருடன் பேசினேன்*
*என்பது தான்*
*அதிகதேவை* எமக்கு என்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

**சுதந்திர அடிமைகள்** என்ற கவிதைவயில்

*கற்பு என்றால் என்னவென்று*
*கண்டு பிடித்தீர்களா?*
*நண்பர்களாய் இருப்பவரை*
*வஞ்சித்தால் தான்*
*வாஞ்சையா?*
என கேள்வி எழுப்புகிறார்.

சந்தேகம் என்ற கவிதையும் இதைத்தான் வேறுவிதமாகச் சொல்கிறது. ஆணும் பெண்ணும் பேசுவது பழகுவது பற்றி மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை சிந்தித்துக் கொண்டேயிருந்தால் குறுகிய வட்டத்துக்குள் தான் நிற்க வேண்டும்.

அம்மாவுக்கு ஓர் கடிதம் என்ற கவிதையில் என் அமமாவிற்கு என்று தொடங்குகிறது கவிதை தாயின் பராமரிப்பு வயிற்றிலேயே ஆரம்பித்து விடும் ஆனால் தந்தை பெயர் சொல்லியே அறிமுகம் செய்து அடையாளப்படுத்துகிறோம் என கவிஞர் தனது மணவுணர்வுகளை இக்கவிதை மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

செங்குருதியை ஆறாய் இழந்து
உதிரத்தை எனக்கு
பாலாய் தந்து  என புலம்புகிறார்.

இப்படி பல கவிதைகளைச் சொல்லலாம்.

பெண்கள் தம் மொழியில் சிந்திக்கும் போது ஆண் மொழியுடன் போராட வேண்டியுள்ளது கவிதை என்பது தனது தனிப்பட்ட அனுபவங்களை சொந்த உணர்வுகளை பொது உணர்வுகளுடன் இணைத்துச் செல்ல வேண்டும். ஆண்களின் மொழிகளுக்கு தனிப்பட்ட அர்த்தங்களை பெண்மொழி கற்பிக்க வேண்டும் பெண்மை பற்றிய உணர்வை வெளிப்படுத்தவே மொழி தேவை. ஆனால் நிலவுகின்ற மொழியும் அது கற்பிக்கும் அர்த்தங்களும் சரியான உணர்வுகளை வெளிப்படுத்த விடுவதில்லை மொழியின் வரம்புகளை மீறினாலேயொழிய இது முடியாது.

எண்பதுகளிலே கவிஞர் செல்வியினால் எழுதப்பட்ட எனக்குள்ள என்ற கவிதை இப்படி கூறுகின்றது.

*வானமெங்கும் அதற்கப்பாலும்*
*நீண்டு நீண்டு வரிக்கும் என் கைகள்*
*பாதாளத்துக்கும் அதற்கும் ஆழமாய்*
*எனது கால்கள் அழுந்திப் புதையும்*
*பூமிக்குள் குழம்பெனக் கொதிக்கும்*
*தழல் போல்*
*சீறியெழுந்து எரிமலையாவேன்*
*அன்றேயுமது சாத்திரம் தகரும்*
*அன்றேயுங்கள் சடங்குகள் மாளும்* என
இக்கவிதை தொடர்கிறது.

அதே போல் சிவரமணியின் கவிதையொன்றில்

*நான் ஒரு பிறவிக் கவிஞன் அல்ல*
*ஏன்னை வெறிமூட்ட*
*இங்கு*
*ஓராயிரம் சம்பவங்கள்*
*நானோ*
*இருபதாம் நூற்றாண்டின்:*



படிப்பகம்

www.padippakam.com

*வசந்தத் தென்றல் அல்ல.* கிட்டதட்ட 15 வருடங்களுக்கு முன்னேயான கவிதைகள் இவை.

முலைகள் என்ற குட்டி ரேவதியின் கவிதைத்தொகுப்பிலிருந்து

மரபின் அழகிய கதவுகளையும்
அவற்றை இணைக்கும் தாழ்ப்பாளையும்
பத்திரப்படுத்துகிறோம்
அன்பும் அதிகாரமும்
வேறு வேறு அல்ல உனக்கு
என்று விளிக்கும் அவரின் இன்னும் ஒரு கவிதையில் அவளுக்கோ
அதிகாரமென்பது
ஒரு துளி எச்சில்
என முடிகிறது கவிதை.

ஜெயந்தி சாம்சனின் கவிதைகளில் சிலவற்றில் சொற்கள் அடுக்கியது போல் உள்ளது அத்துடன் ஒரு சில கவிதைகளில் சலிப்பையும் கவிதையின் அழகையும் குலைக்கிறது ஆனாலும் ஒரு பெண் தன் எண்ணங்களை எழுத்தில் கவிதையாக தந்துள்ளார். அந்த வகையில் ஜெயந்தி சாம்சனின் தேடல்வலி என்ற கவிதைத்தொகுப்பும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றேயாகும்.

## ஈரல்களும் இதயங்களும்

*ஆவியும் நுரையுமாய்*
*பாட்டிலைத் திறக்கையில்*
*அவனிடம்*
*தண்ணீரைத்*
*தவிர்த்து விடுகின்றதாய்*
*மூர்க்கமாய்த் தாகம் பிறக்கும்*

*நரம்புக் கடத்தல்கள்*
*மெல்லத் தளர்கையில்*
*அசிங்கமும் பொய்யும்*
*வாய்க்குள் புற்றெடுக்கும்*
*உண்மைகள் இடையிடையே*
*மின்னி மறையும்*

*அவன் கண்கள் இரண்டும்*
*சிவந்து செருகுகையில்*
*அவன் மனைவியின்*
*இரத்தம் கொதித்து*
*இன்னொருமுறை சிவக்கும்*

*மார்பிலே துள்ளவென*
*மடியிலே கொஞ்சவென*
*பகல் பொழுதுக் காத்திருப்புகள்*
*பயனற்றுப் போனதால்*
*அவன் குழந்தை*
*அழுதபடி*
*தூங்கப் போவான்*



படிப்பகம்

மதுவினைக் கண்டறிந்தவன்
இறந்த பின்னும்
அவன் மனைவி
அந்த மாபெரும் கண்டுபிடிப்பாளனை
மனதிற்குள் திட்டித் தீர்ப்பாள்

பெண்களின் மௌனங்களை
சம்மதமாய் கொள்ளும்
அறிவீனர்கள் வரிசையில்
இவனும் இணைந்ததையிட்டு
இரக்கமும் அருவருப்பும்
சத்தமில்லாமல் வெளிப்படும்

அவனோ
தன் குடும்பம்
மனநோயில் மாள்வது தெரியாமல்
தான் ஓடாய் உழைத்ததிற்கு



மதுதான் மருந்தென்பான்

அரைக்கிளாஸ் ஆரோக்கியமாம்
அதற்காய்
இவன் அண்டாவில் விழுந்து
நீந்துவான்

வீட்டில்
அன்பும் நிம்மதியும்
அவனால் குழி தேடி ஒழியும்

அவன் கவலை
மறப்பானோ இல்லையோ
வெறுமை கிலோ கணக்கில்
வீட்டில் நிறையும்

அநாவசிய விரிவுரையோடு
வாழ்க்கையே வீணென்ற
தத்துவத்தோடு
அவன் கால் நீட்டி
கண்ணயர்வான்

அவன் அங்கம்
அசைவில்லாமல் கிடக்க
ஈரல் மட்டும் கருகிக் கொண்டிருக்கும்

அவன் மனைவி பிள்ளைகள்
மௌனமாயிருப்பார்கள்
ஆனால்
அவர்கள் இதயங்கள் மட்டும்
அழுது கொண்டிருக்கும்

**மதனி**
**ஜேர்மனி**

www.padippakam.com

# A Song for Tea

*From dawn to dusk the tender*
*leaves*
*I pluck, pluck and pluck*
*As I toil, my sweat I drop*
*to earn that mighty buck*
*My memory runs like a thunder*
*strike*
*on a dark and rainy day*
*Nothing has changed in our lives*
*so far*
*it's just like yesterday*
*How we were brought for cheap*
*labour*
*by the whites from far away*
*They sell our sweat in various*
*blends*
*and make the whole world pay*
*"Any time is tea time" they say*
*when they drink the best*
*We drink the dust and work all*
*day*
*without nourishment and rest*
*I slog and slave just to live*
*and feed the mouths at home*
*But I earn much more as foreign*
*exchange*
*that keeps the country warm*
*I am called a coolie! with no*
*respect!*
*for the work I do with pain*
*With an iron will I sing aloud*
*That my labour wont be in vain*
*If, I am called a worker,*
*of dignity, fame and skill*
*A human being, and a woman at*
*that*
*as with pride I stand still*
*From dawn to dusk the tender*
*leaves*
*I pluck, pluck and pluck*
*As I toil, my sweat I drop*
*to earn that mighty buck!*

**Mallika**
**June, 1997**



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு தேயிலைப் பாட்டு



நாளொன்றின்
உதயத்திலிருந்து
தேயிலைச் செடியின்
பசிய இலைகளை
என் கைகள் கொய்யும்
அந்தியின் அஸ்தமனம்
வரை.

வருந்துமென் உழைப்பில்
சிந்துது வியர்வை
சில சில்லறைக்
காசுகளிற்காய்.

இருண்ட மழை
நாளொன்றில்
மின்னல் வெட்டெனப் பாயுமென்
நினைவுகளில்
கண்ணில் தெரியுதெம் வரலாறு.

தொலைதூரமிருந்து குறைந்த
கூலிக்காய்
கொண்டு வரப்பட்டோம்
வெள்ளையரால்..

நேற்றுப் போல இருக்கிறது எல்லாம்.
எதுவுமே பெரிதாய் மாறிடவில்லை.
மாறாமல் அப்படியே இருக்கிறது எம்
வாழ்வும்.

விதம்படு சுவைகளில்
பெரும் பணத்திற்கு விலைப்படுவது
எம் வியர்வை தான்.

தரத்தில் உயர்ந்த தேனீரைப்
பருகும் அவர்தம் வாய்கள்
கூறிக்கொள்ளும்

***"Any time is tea time"***

மிஞ்சிய தேயிலையின் தட்டிய
தூசியைக்
குடிக்கும் எமக்கு
ஊட்ட உணவும் ஓய்வுமிலா
முழுநாள் வேலை.

வாழ்வதற்கும்
வீட்டிலுள்ள சீவன்களின்
வயிற்றுக்குமென
அடிமையாகப் பாடுபடுகிறேன்.

நாட்டை உயிர்ப்பித்து வைக்கும்
செலவாணியை உழைத்துக்
கொடுக்கிறேன்.

வலியுடன மாய்ந்து
தொழில் செய்வதற்காய்
கூலி எனும் இகழ்வைக்
கூலியாகப் பெறுகிறேன்

மாண்பும் திறமையும் கீர்த்தியும்
நிறைந்த



படிப்பகம்

www.padippakam.com

*தொழிலாளியாய் நான் மதிக்கப்பட்டால்*
*உழைப்பு வீண்போகா மகிழ்வுடனும்*
*இரும்பின் வலிவுடனும் நான்*
*உரக்கப் பாடிடுவேன்*

*மனித ஜீவியாய் பெண்ணாய்- இன்னும்*
*பெருமையுடன் நிமிர்ந்தே நிற்கிறேன்.*

*நாளொன்றின் உதயத்திலிருந்து*
*தேயிலைச் செடியின் பசிய இலைகளை*
*ஏன் கைகள் கொய்யும்*
*அஸ்தமனம் வரை.*

*வருந்துமென் உழைப்பில்*
*சிந்துது வியர்வை*
*சில சில்லறைக் காசுகளிற்காய்.*

***மல்லிகா ,ஜேர்மனி***
***ஆடி 1997***

---




நிருபாவின்
சிறுகதைத்தொகுதி

வெளியீடு: ஆகஸ்ட: 2005

அச்சிட்டோர்:

இக்குவலிற்றி கிரபிக்ஸ்
பிரைவேட் லிமிடேட்

தொடர்புகட்கு
**nnirupa@yahoo.de**



படிப்பகம்

www.padippakam.com

# வீட்டுவேலையில் ஒளியும் துயரங்கள்

அண்மையில் . .

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளரும் , தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச மாணவரமைப்பின் பேச்சாளராகவிருந்தவருமான கே.ரி.கணேசலிங்கம் தனது வீட்டில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த முள்ளியவளையைச் சேர்ந்த 12 வயதுச்சிறுமியை 40 தடவை பாலியற்பலாத்காரம் செய்துள்ளார்.
இச்சம்பவத்தால் மனமுடைந்த அச்சிறுமி நஞ்சருந்தி மரணிக்க முயற்சித்த வேளையில் அயலவர்களால் காப்பற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். இதைத் தொடர்ந்து குற்றவாளி கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சில காலங்களிற்கு முன்பாக . .

1995ம் ஆண்டு கொழும்பு வெல்லவத்தை பீட்டர்சன் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் வேலைசெய்த லக்சுமி என்ற 20 வயது பெண் மீது அவ்வீட்டின் எஜமானியான நிர்மலா வெண்மதிராஜா மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக் கொலைசெய்தார்.
ஆதரங்களும் சாட்சிகளும் இல்லையென்ற காரணத்தால் குற்றவாளி விடுதலைசெய்யப்பட்டார்.

இன்னொரு சம்பவம். .

1995 ம் 1996ம் ஆண்டுகளில் கொழும்பு வீடுகளில் வேலை செய்த தேவி, ரமணி என்ற இரு மலையகத்தைச் சேர்ந்த பெண்களும் அவ்வீட்டு ஆண்களால் தொடர்ந்தும் பாலியற்பாலத்காரத்திற்குட்படுத்தப்பட்டு கர்ப்பமடைந்தவுடன் மண்ணெண்னை ஊற்றப்பட்டு பிரேதங்களாக பெற்றோரிடம் அனுப்பப்பட்டனர். நியாயம் கேட்கச் சென்ற தந்தைமாருக்கு சாராயம் வாங்கிக் கொடுக்கப்பட்டு வாயடைக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

அறிந்த துயரங்கள் இவை. அறியாது காதும் கண்ணும் வைத்தாற்போல் மூடிமறைக்கப்பட்ட உண்மைகள் ஏராளம்.

நன்கு பராமரிக்கப்படாத செம்பட்டைத் தலைமயிர். உருவத்திற்கும் வயதிற்கும் சம்பந்தப்படாத அளவற்ற ஆடைகள். சொந்தப்பெயர்கள் மாற்றப்பட்டு லக்சுமி தேவி, பத்மா, ராணி என்ற பெயர்களுடன் உலாவும் மலையகத்துச் சிறுமிகளும் யுவதிகளும் இலங்கை உயர் மத்தியதர வர்க்க வீடுகளின் வசதியின் சின்னங்கள்.

தமது விளையாட்டுக் கனவுகளை மூட்டைக்கட்டி வைத்துவிட்டு, தமது வயதினரின் வேலைகளை ஓடி ஓடி கவனித்து, அவர்களை சின்ன ஐயா சின்னம்மா என்று அழைத்து அடியும் உதையும் வாங்கி, அவ்வீட்டு எஜமானர்களின் பாலியற் இச்சைக்கு ஆளாகி இறுதியில் அவர்கள் உயிரும் பறிக்கப்படுகின்றது.

இவர்கள் வீட்டில் சமைத்தல், துணிதுவைத்தல், கடைக்குப் போதல், அயர்ன்செய்தல், துப்பரவு செய்தல், குழந்தைகளைக கவனித்தல் என்பன போன்ற சகல வேலைகளையும் செய்யவேண்டியுள்ளது.

இலங்கையை எடுத்துக் கொண்டால் இவ்வாறு வீடுகளில் வேலைக்கமர்த்தப்படுபவர்களில் பெரும்பாலனவர்கள் மலையகத்தைச் சேர்தவர்கள். இவர்களது பெற்றோர்கள் தங்கள் வறுமையின் காரணமாக தமது பிள்ளைகள் வசதியாக ஒரு வேளைச் சாப்பாட்டையென்றாலும் பெற்று உயிர்வாழவேண்டுமென்று கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் ஏனைய நகரங்களிலுமூள்ள செல்வந்தர்களின் வீடுகளிற்கு அனுப்பிவைக்கிறார்கள். இவர்களின் பெரும்பாலனவர்களிற்கு ஊதியம் என்று எதுவும் கொடுக்கப்படுவதில்லை. அவர்களுக்கென்று கிடைக்கக்கக் கூடிய ஊதியத்தின் பெரும்பகுதியை இடையில் உள்ள தரகர்கள் தமக்கென எடுத்துக்கொள்கிறார்கள். இவர்களுக்கு மிஞ்சுவது எதுவும் இல்லை. பல பெற்றோர்களுக்கு இறுதியில் அவர்களின் சடலங்களைத்தான் பார்க்க நேரிடுகிறது. பெற்றோர் கனவு காணும் வாழ்வு அவர்களிற்கு கிடைப்பதில்லை. உணவாக அவர்களிற்குக் கிடைப்பது பழையயுணவும், மிஞ்சின எச்சங்களுமே.

## வரலாற்றில் பின்நோக்கி

இலங்கையின் காலணித்துவக காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தேயிலைப்பயிர்செய்கைக்கு ஒத்துழைக்க இலங்கை



படிப்பகம்

www.padippakam.com

விவசாயிகள் மறுப்புத் தெரிவித்தனர். தேயிலை மலைப்பிரதேசங்களில நன்கு விளையக் கூடியதாகவிருந்தபடியால் இது பெருமளவில் வருவாயைப் பெற்றுத்தரும் என்று அவர்கள் நம்பினார்கள். அதற்கு நிறையவே தொழிற்சக்தி தேவைப்பட்டது. உள்நாட்டு விவசாயிகளின் போராட்டங்கள் அவர்களின் இந்த நோக்கத்திற்குத் தடையாகவிருந்தது. இதனால் 1860ம் ஆண்டு பிரிட்டஷ் ஆட்சியாளர்களால் தமது இன்னொரு காலணியான இந்தியாவிலிருந்து தமிழ் பேசும் மிகவும் விளிம்புநிலை மனிதர்களை கட்டாயமாக இலங்கைக்கு அழைத்தவந்து தேயிலைத்தோட்டங்களில் வேலை செய்ய நிர்ப்பந்தித்தனர். இக்காலத்தில் பெரியவர்கள் தோட்டங்களில் வேலை செய்யும் வேளை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் 12க்கும் 14 வயதிற்கும் இடைப்பட்டச் சிறுவர்களை தங்கள் வீடுகளின் வேலைக்கு அமர்த்தினர். இவர்கள் நாளடைவில் கொழும்பிலுள்ள இலங்கைச் செல்வந்தவர்களின் வீடுகளில் அடிமைகளாக்கப்பட்டனர்..

இலங்கையின் இந்தியசெலவாணியின் பெரும்பகுதியைப் பெற்றுத் தருபவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்களே. இவர்களின் இன்றைய ஒரு நாளிற்கான ஊதியம் 120 ரூபாய்கள். இது அவர்களின் குடும்பங்களைப் பராமறிக்கப் போதாமையால். இவரகளின் குழந்தைகள் செல்வந்தர்களின் எழுதா அடிமைகளாகின்றனர்.

## சிறுவர்களின் உழைப்புச் சுரண்டல்

யூனிசெப்பின் அறிக்கையின்படி உலகெங்கிலும் 246 மில்லியன் சிறுவர்கள் வேலைகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். அதில் 70வீதமானவர்கள் ஆபத்து நிறைந்த பாதுகாப்பற்ற சூழல்களில் வேலைக்கமர்த்தப்படுகிறார்கள். அவர்கள் பெரும்பாலும் சுரங்கங்களில், இரசாயனக் கூடங்களில், தோட்டங்களில், உணவுச்சாலைகளில், கடைகளில் எனக் குறைந்த கூலிக்கு தொழில்புரிகின்றனர். இதில் கண்ணுக்குத் தென்படாமல் எண்ணிலடங்கா சிறுவர்சிறுமிகள் செல்வந்தர், மற்றும் உயர்மத்திய, மத்தியதரவர்க்க வீடுகளில் வேலைக்காரர்களாக அல்லலற்படுகிறார்கள்.

சம்பளமின்றியோ அல்லது குறைந்த கூலிக்கு வேலையிலீடுபடுத்தப்பட்டு சுரண்டப்படும் சிறுவர்களின் தொகை 5.7 மில்லியன்கள் ஆகும். இதில் 1.8 மில்லியன் சிறுவர்சிறுமியர் விபச்சாரம் மற்றும் போனோகிராபி என்பனவற்றில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இதில் 300.000 சிறுவர்கள் கட்டாயத்தின்பேரில் போராளிகளாக்கப்படுகின்றனர் என்பதுவும் குறிப்பிடத்தமக்கதாகும். உலகெங்கிலும் 40 000 குழந்தைகள் விற்கப்படுகிறார்கள். 30 000 இலங்கை சிறுவர்களும் சிறுமியரும் மேற்கத்தைய



படிப்பகம்

www.padippakam.com

நாடுகளைச் சேர்ந்தவர்களால் பாலியற் சுரண்டலிற்குட்படுத்தப்படுகிறார்கள்.

வயதிற்குக்குறைந்த சிறுவர்களை தொழிலிலீடுபடுத்தும் நாடுகளாக தெற்காசியாவில் இலங்கை, பங்களாதேஷ், நேபால் அகிய நாடுகளும், தென்கிழக்காசியாவில் கம்போச்சியா, மியாமா, தாய்லாந்து, வியாட்னாம், இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளும் முன்னணியில் நிற்கின்றனர்.

இச்சிறுவர்களின் அதிகமானோர் பாலியற்சுரண்டலிற்கு உட்படுத்தப்படுவதோடு, பாலியல் சம்பந்தமான தொழில்களில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

## சிறுவர்களின் உரிமைகள்

சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்ட கோப்பானது சிறுவர்களில் உடல்நலம் மனநிலை ஆகியவை பாதிப்படையாதிருப்பதற்காகவும் அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் உரிமைகளைப்பாதுகாப்பதற்காகவும் பல சட்டங்களை இயற்றியுள்ளது.

இச்சட்டமூலமானது பிள்ளைகள் பெற்றோர்களின் கண்காணிப்பில் இருத்தல் வேண்டும், அவரது அடையாளங்கள் பேணப்படுதல் வேண்டும், பெற்றோர்களுடன் நெருங்கிய தொடர்பு இருத்தல்வேண்டும், அவர்களிற்கு தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை இருத்தல் வேண்டும், அவர்கள் பெற்றோர்களால் வளர்க்கப்படுதல் வேண்டும், மனரீதியானதும், உடல்ரீதியானதுமான ஸ்திரத்தன்மை பேணப்படல் வேண்டும், கல்வியுரிமை வழங்கப்படல்வேண்டும், ஓய்வுநேரம் மற்றும் விளையாடுவதற்கான நேரம் வழங்கப்படல்வேண்டும், மனவுளைச்சல் வராது பாதுகாத்தல் வேண்டும், பாலியற் சுரண்டலிற்குட்படுத்தப்படக்கூடாது, பிள்ளைகளை விற்றல் தடைசெய்யப்படவேண்டும், சித்திரைவதைக்குட்படுத்தப்படக்கூடாது என்பன போன்ற சாரங்களை முன்னிலைப்படுத்துகின்றது.

ILO- சர்வதேச தொழில் அமைப்பும்- 1919ல் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவதைத் தடைசெய்யும் வேலைத்திட்டம்(IPEC) என்பன 1992ம் ஆண்டு சிறுவர்கள் அடிமைகளாகச் சுரண்டப்படுவதையும், பாலியற்தொழில்களில் ஈடுபடுத்தப்படுவதையும் தடைசெய்தது. 12வயதுக்குட்பட்ட பல சிறுவர்கள் உலகெங்கிலும் பாதுகாப்பற்ற பயங்கரமான தொழில்களைச் செய்கின்றனர்.

ILO ன் புள்ளிவிபரங்களின்படி 250 மில்லியன் சிறுவர்கள் வீடுகளில் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இதில் 16 வீதமானவர் பெண்குழந்தைகளாவர். பங்காளதேஷில் 300,000பேரும், கைட்டியில்250,00 பேரும் இதில் 20% 7லிருந்து 10 வயதிற்குட்பட்டவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

இந்தோனேசியாவில் ஜக்காட்டாவில் 700,000 பேரும் , இதில் அதிகமானவர்கள் 18வயதிற்குட்பட்வர்கள், நேபாலில் 62 000 பேரும் இதில் பெரும்பானவர்கள் 14 வயதிற்குட்பட்டவர்கள், லீமா-பேருவில் 29 000 பேரும் இதில் 10 வயதிற்கும் 14 வயதிற்கும் உட்பட்டவர்கள் 766 000 பேரும், இலங்கையில் 100 000 பேரும் வீட்டின் வேலையாட்களாக கடமைபுரிகின்றனர். நைரோபி கென்யாவில் வீட்டில் வேலை செய்யும் சிறுவர்களில் 20 வீதமானோர் பத்து வயதிற்குக் குறைந்தவர்கள். பிறேசிலில் 22 வீதமானவரும் வெனசுலாவில் 60 வீதமானவரும் பத்திற்கும் பதினாழு வயதிற்கும் உட்பட்டவர்கள்.
பங்களா தேஷில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரம் ஒன்றின்படி 80 முழுநேர வேலையாட்களில் 71 சிறுமியரும் 9 சிறுவர்களும் அடங்குவர்.

## வீடுகளில் வேலை செய்யும் சிறுவர்களின் சமூகப்பின்னணி

ஆபிரிக்காவில் தன்சானியா, செனகல் சம்பியா ஆகிய நாடுகளிலே அதிகமான சிறுவர்கள் வேலைக்குட்படுத்தப்படுகிறார்கள். அவர்கள் ஆபிரிக்கவில் ஒடுக்கப்படும் இனக்குழுக்களைச் சேர்நதவர்களாகவே பெரும்பாலும் காணப்படுகின்றனர். இலத்தின் அமெரிக்காவில் கவுத்தமாலா, கைட்டி, பரகுவோ, பேரு ஆகியநாடுகளில் பெரும்பாலாக வீட்டுவேலையாட்களாகவிருப்பவர்களும் ஒடுக்கப்படும் சமூகங்களைச் சேர்ந்தவர்களாகவும், பூர்விகக்குடிகளைச் சேர்ந்தவர்களாகவுஆம இருக்கின்றனர். இந்தியாவிலும் நேபாலிலும் தலித்துக்களும் பூர்விகக்குடி ஆதிவாசியினருமே இத்தகைய தொழில்களில் அமர்த்தப்படுகிறார்கள்.

இலங்கையை எடுத்துக்கொண்டால் பெரும்பகுதியினர் மலையகத்தைச் சேர்ந்த அப்பாவிச் சிறுவர் சிறுமியர் ஆவர். இதைத்தவிர வடகிழக்கில் நிலவிய போர்ச்சூழலினால் அநாதைகளாக்கப்பட்ட சிறுவர் சிறுமியரும் வீட்டு வேலைக்காக எடுத்தச்செல்லப்படுகிறாரகள்.

இச்சிறுவர்களின் இளமைக்காலம் பறிக்கப்படுவதுடன் அவர்களின் உழைப்பும் உடலும் சுரண்டப்படுகிறது. புள்ளிவிபரங்களின்படி ஆசிய அபிரிக்க நாடுகளில் அதிகமான ஆண்கள் தமது விடுகளில் வேலைக்கமர்த்தப்பட்ட சிறுமிகளுடன் தான் முதன்முதலாக பாலுறவை மேற்கொள்கிறார்கள். இச்சிறுமியர் தமது வறுமையால் மௌனம் காக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். உண்மை வெளியில் கசியும் சந்தர்ப்பங்களில் தற்கொலை செய்யமுற்படுகிறாரகள். அல்லது பெரும்பாலும் கொலை செய்யப்படுகிறார்கள். சட்டங்களும் அதிகாரிகளும் வீட்டு எஜமானர் பக்கமே சார்ந்து நிற்கின்றனர். ஆய்வுகளை எடுத்தக் கொண்டால் அவ்வாறு



படிப்பகம்

www.padippakam.com

சிறுவர்கள் துன்புறுத்தப்படும் வீடுகளில் வசிக்கும் அவர்களின் வயதை ஒத்த சிறார்களும் மனநிலையில் பாதிக்கப்பட்டவர்களாகவிருக்கின்றனர். அதில் சிலர் தமது பெற்றோர் அநீதியான முறையில் செயற்படுவதாகக் கருதுகின்றனர். அதேசமயம் சில சிறார்கள் தங்கள் பெற்றோர்களைப் பின்பற்றி அச்சிறார்களை மேலும் சித்திரைவதைக்குட்படத்துகிறார்கள். தமது ஏமாற்றங்:களை இச்சிறார்கள் மேல் சுமற்றி திருப்தியடைகின்றனர்.



## வீட்டு வேலையில் ஈடுபடுபவர்களிற்கு புனருத்தாரனம்

இச்சிறார்களின் மேம்பாட்டிற்காக சில நாடுகளில் அரச சார்பற்ற சில நிறுவனங்கள் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். கென்யாவில் சினகா என்ற அமைப்பு வீடுகளில் வேலைசெய்யும் சிறார்களை எஜமானர்களின் அனுமதியோடு சில மணித்தியாலங்கள் கல்விகற்க ஏற்பாடு செய்கின்றனர். இவர்கள் சமையல், தையல், தட்டச்சு போன்றவற்றை கற்பிப்பதோடு சட்ட ஆலோசனைகள், அவர்களை மனரீதியாகத் திடப்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் இயங்குகின்றனர். அவர்களது முக்கிய நோக்கமானது அவர்களிற்கு தகுந்த எதிர்கலத்தை அளிப்பதாகும். சிறுமியர் கற்பமுற்றால் அதற்கான உதவிகளையும் செய்வதோடு, அவர்கள் வளர்ந்தபின் வேறொரு வாழ்கைகையை மேற்கொள்ள வழிவகைகளைச் செய்கின்றனர். இதுவரை 500 பட்டதாரிகளை உருவாக்கியுள்ளனர்.

பிலிப்பைன்சில் விசயன் அமைப்பு இச்சிறார்களைச் சிறிது நேரம் பார்க்கிற்கு அழைத்துச் சென்று அவர்களுடன் கலந்துரையாடி, அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிக்கின்றனர். இதுதவிர அவசர தொலைபேசித் தொடர்புச் சேவை ஒன்றை நடாத்துகின்றனர். அவர்களின் வாழ்முறைக்கு தேவையான விடயங்களை அடக்கிய, உதாரணமாக பிறப்புத்தாட்சிப்பத்திரம் பெறுவது



படிப்பகம்

www.padippakam.com

எவ்வாறென்ற விடயங்களைத் தாங்கிய நூல்:களையும், செய்தித்தாழ்களையும் வெளியிடுகின்றனர்.
பங்களாதேஷில் ஷேதய்சப் என்ற அமைப்பு 1990 ஆண்டுமுதல் கல்விசேவையொன்றை நிறுவியுள்ளதோடு, அவர்களின் பிரச்சனைகளையும் தீர்த்துவருகின்றனர்.

இலங்கையில் 1992 ம்ஆண்டு சிறுவர்நல பராமறிப்புத் திணைக்களம் சிறுவர்களை வீடுகளில் வேலைகமர்த்த வேண்டாமென்று தொலைக்கட்சிகளிலும் பத்திரிகைகளிலும் விளம்பரப்பிரச்சாரங்களைச் செய்ததோடு, அவசர தொலைபேசிச் தொடர்பு சேவையொன்றையும் 1993 ஆண்டுவரை நடாத்தி வந்தது.

## நாம் என்ன செய்யலாம்?

இத் தொடரும் அநீதிகள் தொடரரவண்ணம் மறிப்பதற்கு முதற்கட்டமாக இச்சிறார்களிற்கு இழைக்கப்படும் அநீதிகளை வெளிச்சத்திற்கு கொண்டுவருதல் வேண்டும். இச்சிறார்களிற்கு கிடைக்கக் கூடிய நீதிக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய சக்திகளை இனங்காணுதல் வேண்டும்.

இலங்கையிலுள்ள பெண்ணிலைவாத அமைப்புகளும் மனிதவுரிமை அமைப்புகளும் இச்சிறார்களை வேலையில் ஈடுபடுத்தவதை முற்றாக இல்லாதொழிக்கக் கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுதல் வேண்டும்.

முதற்கட்டமாக பெண்ணிலைவாதியாக அல்லது பெண்ணினத்திறகாக குரல் கொடுக்கிறோம் என்று கூறுபவர்கள் தங்கள் வீடுகளில் சிறுவர்களையும் வேலையாட்களையும் வைத்திருப்பதை நிறுத்தவேண்டும்.
பெண்ணியக் கோரிக்கைகள் வர்க்கம் சார்ந்தவையாகத்தானிருக்கும். இவ்வர்க்கச் சரண்டலில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு பெண்ணியம் பேசுவதாவது வெறும் ஏட்டு சுரக்காயாகும்.


**உமா, ஜேர்மனி**





படிப்பகம்

www.padippakam.com



ஓவியம் : வாசுகி




படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com




# கணவனின் தோழியர்

(1)

*கதம்ப மாலையாய்*
*உன் தோள்களில்*
*உன் தோழியரின் புன்னகை.*

*கதம்ப மாலைகள் கசங்காமலேயே*
*அணைக்க நினைக்கிறது*
*என் தோள்கள்.*

*கதம்பங்களுடன் கலந்துவிட்ட*
*காற்றுடித்து*
*உதிர்ந்துபோகிறது*
*என் இரவுகள்.*



(2)

*பெண்ணுரிமைப் பேசும்*
*உன் எழுத்துகள்*
*என்னுரிமையை*
*எப்போதும்*
*இருட்டடிப்பே செய்கின்றன.*

(3)

*ஏதாவது காரணம்சொல்லி*
*அடிக்கடிச் சந்திக்கும்*
*உன் தோழியரின் முகங்கள்*
*அச்சுறுத்தவில்லை என் இரவுகளை.*
*எப்போதா சந்தித்த*
*என் பள்ளிப்பிராயத்துநண்பனை*
*இப்போதும் நான் சந்திப்பதாக*
*நீ சந்தேகப்படும்வரை.*

**புதியமாதவி (மும்பை)**






படிப்பகம்

www.padippakam.com

# நடேசன் சார்



அரையாண்டு தேர்வு முடிந்து நேற்றுதான் விடுமுறை ஆரம்பித்தது. காலை பத்துமணிக்கு சுகமாய் கதை புத்தகம் வாசித்துக் கொண்டு இருக்கும் பொழுது, வாசலில் அப்பா யாரையோ வரவேற்கும் சத்தம் கேட்டு, எட்டிப் பார்த்தால் நடேசன் சார்! சார் அப்படியேயிருந்தார். தலை முடியை பின்பக்கமாய் சீவி, நெற்றியில் சந்தனம் துலங்க, பேண்டு போட்டாலும், வேஷ்டி கட்டினாலும் ஜிப்பாதான் போடுவார்.. அவரைப் பார்க்கும்பொழுதெல்லாம் பிரமிப்பாய் இருக்கும். என்ன கம்பீரம் எங்க அப்பாவும் இருக்கிறாரே, எப்பொழுதும் அழுக்காய், லொங்கு லொங்கு என்று வேலை வேலை என்று! இந்த மாதிரி அப்பா இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும் என்று அவரைப் பார்க்கும்பொழுது எல்லாம் தோணும். எனக்கு சார்னா ஒரு பிரமிப்பு. பார்க்கிறவர்கள். எனக்கு மட்டுமல்ல, யாருக்கும் அவர் மீது மரியாதைதான் தோன்றும். அப்பாக்கூட அவர் என்ன சொன்னாலும் சரி, சரி என்று தலையை ஆட்டிக் கொண்டு இருப்பார். அவருக்கு தெரியாத விஷயமே கிடையாது.

வீட்டில் எல்லாரும் அவரை முறை வைத்துக் கூப்பிடும் பொழுது நான் மட்டும் சார் என்றுதான் கூப்பிடுவேன். அவர் வந்து போன சில நாளுக்கு சார் சார் என்று நடேசன் சார் புராணம் பாடிக் கொண்டு இருப்பேன் என்று எல்லாரும் வீட்டில் கேலி செய்வார்கள். சார், கையர் செகண்டரி ஸ்கூலில் எட்மாஸ்டர். எங்களுக்கு சொந்தமெல்லாம் இல்லை. சார்ரோட அப்பாவும், எங்க தாத்தாவும் சேர்ந்து வேலை செஞ்சாங்களாம். முசிறியில் இருந்து சென்னைக்கு வந்தால் வீட்டுக்கு வந்து எங்களைப் பார்க்காமல் போக மாட்டார்கள்.

**ராமசந்திரன் உஷா**
**ஐக்கிய அரபு குடியரசு**

இந்த முறை அத்தையும், முகுந்தும், ராதிகாவும் கூட வந்திருந்தார்கள். முகுந்த் என்னைவிட ஒரு வகுப்பு சிறியவன், ஏழாவது படிக்கிறான். ராதிகா ஒன்பதாவது, என்னைவிட ஒரு வகுப்பு பெரியவள். நான் ஓடிப்போய் சார் கையில் இருந்த பையை வாங்கி ஓரமாய் வைத்தேன். நல்லா படிக்கிறீயாமா என்று என் முதுகைத் தட்டிவிட்டு அப்பாவுக்கு எதிரில் இருந்த சோபாவில் உட்கார்ந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

நான் வழக்கப்படி அப்பா உட்கார்ந்திருந்த நாற்காலியின் கை மீது உட்கார்ந்து அப்பாவின் தோள் மீது கையைப் போட்டுக் கொண்டேன். அம்மா முறைப்பது தெரிந்தும் அந்த பக்கமே திரும்பவில்லை. போன வாரம்தான் இப்படிதான், அப்பா டிவி பார்த்துக் கொண்டிருந்தப் பொழுது நாற்காலி கையில் உட்கார்ந்து அப்பா தோளைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்ததைப் பார்த்துவிட்டு அம்மா, வயசு பொண்ணு இப்படி எப்பப் பார்த்தாலும் தொட்டுக்கிட்டு இருக்கிறது நல்லா இல்லே என்று திட்ட ஆரம்பிக்க, நா பெத்த புள்ளய அசிங்கமாவா பேசறேன்னு அப்பா, அம்மாவை அடிக்கவேப் போய்விட்டார்.

அத்தை "நல்லா வளர்ந்துட்டாளே?" என்றுச் சொல்லிவிட்டு அம்மாவிடம் குசுகுசுக்க ஆரம்பித்தார். அம்மாவும் சிரிப்புடன் தலையை ஆட்டியவாறு பதில் சொல்வதைப் பார்த்து முறைத்தேன். வேற என்ன? எட்டாவது வந்ததில் இருந்து யார் என்னைப் பார்த்தாலும் முதல் கேள்வி இதுதான். ஆனால் இன்னும் இல்லை. ஆனால் வகுப்பிலும் பிள்ளைகள் போன வருஷமே இதைப் பற்றி சொல்லிவிட்டார்கள்.

சார் "என்னத்த வளர்ந்துட்டா? எனக்கு இன்னும் கொழந்ததான்" என்றவர், எட்டி என் கையைப் பிடித்து இழுத்து பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு என்னுடையப் படிப்புப் பற்றிக் கேட்டார். அதற்காக காத்திருந்த நான் சமீபத்தில் வாங்கிய நற்சான்றிதழ், பரிசு புத்தகங்களைக் கொண்டு வந்துக்காட்டினேன். நல்லா படிக்கணும் என்று தலையை தொட்டு ஆசிர்வதிக்கும் பொழுது பெருமையாய் இருந்தது.

அதற்குள் அம்மா என்னை எல்லாருக்கும் பிரிஜ்ஜில் இருந்து ஐஸ்தண்ணியை எடுத்து சாதா தண்ணியைக் கலந்துக் கொடுக்க சொன்னாள்.

ராதிகா ரெட்டை பின்னலும், சம்மந்தமேயில்லாமல் லூசாய் புல் ஸ்லீவ்ஸ் சுடிதாரில் இருந்தாள். அத்தை "தாவணி போடுனா கேக்க மாட்டேங்குது. மாடன் டிரஸ்தான் போடுவேன்னு ஓரே அடம்" சுடிதாரை மாடன் டிரஸ் என்றதும் சிரிப்பு வந்துவிட்டது. ஆனால் அடக்கிக் கொண்டேன்.

"என்னோட கவிதை தொகுப்பு ஒண்ணு அடுத்த மாசம் வெளியாகப்போகுது. எங்க ஊரு எம்.எல்.ஏ என் ஸ்டூடண்ட். அவர் தலைமைலதான் விழா. இன்விடேஷனை எம்.எல்.ஏ ஹாஸ்டலுக்கு போய் நேரா கொடுக்கணும்." என்றவாறு சார் அழைப்பிதழை எடுத்துக் கொடுத்தார். நானும் ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டேன்.

"இவளுக்கு ஆர்.எம்.கேவில பட்டு பொடவ எடுக்கணுமாம். நீங்க போய் பொடவ எடுத்துக் கொடுத்துட்டு, காஞ்சிபுரத்துக்கு வண்டி ஏத்தி விட்ட முடியுமா? அங்க அம்மா வீட்டுல நாலு



படிப்பகம்

நாள் இருந்துட்டு இவங்க மூணு பேரும் நேரா முசிறி வந்துடுவாங்க. நா ராத்திரி வண்டி பிடிச்சி இன்னைக்கே முசிறி போயாகணும்" என்றார்.

"அது என்ன காஞ்சிபுரத்துல கெடைக்காத பட்டுசேலையா?" என்று பாட்டி ஆச்சரியப்பட, " அங்க பட்டும், ஜரிகையும் நல்லா அழுத்தமாதான் இருக்கும், ஆனா டிசைன்ஸ் இவ்வளவு கெடைக்காது" என்றார் அத்தை. "அதெல்லாம் இல்லைங்க. அங்கையும் நல்ல டிசைன்ஸ் கிடைக்குது. இவ இந்த தடவ ரெம்கேவிலத்தான் எடுக்கணும்னு முடிவா இருக்கா" என்று சொல்லி சிரித்தார்.

அப்பா, " நாங்க பாத்துக்குறோம். நீங்க கவலைப்படாம ஒங்க வேலைய பாருங்க" என்றார்.

அப்பொழுது முகுந்தும், ராதிகாவும் ஏதோ சொல்ல, அத்தை, " இதுங்க ரெண்டும் ப்ரியாவை பாக்கணுனே வந்திருக்குதுங்க" என்றவர், என்னைப் பார்த்து, " அவ வீட்டுக்கு கூட்டிக்கிட்டு போறீயாமா?" என்றுக் கேட்டார்.

நான் சங்கடமாய் அம்மாவைப் பார்த்தேன். இது ஒரு பெரிய பிரச்சனையாய் இருக்கிறது. வீட்டுக்கு யார் வந்தாலும் ப்ரியாவை பற்றி பேச வேண்டியது, பிறகு அவ வீட்டுக்குப் போகலாமா என்று ஆரம்பிக்க வேண்டியது!

அம்மா " மொதல்ல போன் செஞ்சி விசாரி" என்றதும், அம்மாவையே செய்ய சொன்னேன். நல்லவேளையாய் அவள் ஷட்டிங் போய்விட்டாள் என்று சொன்னார்கள். ஆனால் ஜன்னல் வழியாய் பார்த்தப்பொழுது அவள் வீட்டு வாசலில் சிவப்பு ஜென் நின்றிருந்தது. அது வீட்டில் இருந்தால் அவளும் வீட்டில் இருக்கிறாள் என்று எனக்கு தெரியும். தெருவின் எதிர்புறத்தில் மூன்றாவது வீட்டில் குடியிருக்கும் பிரியா என் வகுப்பில்தான் படித்துக் கொண்டு தெருவில் விளையாடிக் கொண்டு இருந்தாள். திடீரென்று சினிமாவில் நடிப்பதாய் செய்திதாளில் அவள் படம் வந்தது. பள்ளி கூடத்துக்கும் வருவதில்லை. என் வகுப்பு பிள்ளைகளுடன் ஒரு நாள் அவள் வீட்டிற்குப் போய் கேட்டப் பொழுது வாசலிலேயே நிற்க வைத்து இனி அவள் பள்ளிக்கூடம் வரமாட்டாள் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள்.

ராதிகாவும், முகுந்தும் ஜன்னல் வழியாய் பிரியா வீட்டையேப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். திரும்ப திரும்ப அவளைப் பற்றிக் கேட்டும் எனக்கு ஒன்றும் தெரியாது என்று நான் சொன்னதை அவர்கள் நம்பவில்லை. எங்கள் தெருவிலேயே இருக்கும் அவளைப் பார்த்தே பல மாதங்கள் ஆகிவிட்டது. அதிலும் தினதந்தியில் குளிக்கிற மாதிரி அரைகுறை உடையில் அவள் படத்தைப் பார்த்ததும் ஏனோ அவளை பிடிக்காமல் போய்விட்டது. தெருவில் அவள் வீட்டு வழியாய் போனால் கூட அவள் வீட்டுப் பக்கம் திரும்பாமலே போவேன். ஆரம்பத்தில் ஒரிரண்டு தடவை அவள்



படிப்பகம்

www.padippakam.com

மாடியில் நின்றுக் கொண்டு கூப்பிட்டும், காதில் விழாத மாதிரி வேகமாய் போய்விட்டேன்.

சார் கிளம்பியதும் நாங்கள் எல்லாரும் டி.நகர் போய் புடைவை எடுத்துவிட்டு முருகன் இட்லி கடையில் சாப்பிட்டுவிட்டு அவர்கள் மூவரையும் காஞ்சிபுரத்துக்கு பஸ் ஏற்றி அனுப்பிவிட்டு நானும் அம்மாவும் வீடு வந்து சேரும்பொழுது எட்டாகிவிட்டது. காலையில் பாதியில் விட்ட மர்மநாவலில் சுவாரசியமாய் ஆழ்ந்திருந்தப்பொழுது, போன் அடித்தது.

எடுத்தால் நடேசன் சார் மாதிரி இருந்தது. கொழ, கொழவென்று பேச்சு தெளிவாய் இல்லை. பின்னால் ஓரே சத்தம், சிரிப்பு வேறு.

"ஹலோ ஹலோ" என்றுக் கத்தினேன்.

"சித்ராவாமா? ஒன் பிரண்டு பிரியா போன் நம்பர் கொஞ்சம் சொல்றீயாமா?" என்றுக் கேட்டார். ஒரு நிமிடம் எனக்கு எதுவுமே புரியவில்லை. சார் என்னக் கேட்கிறார்? அவளோட நம்பர் இவருக்கு இந்த நேரத்தில் எதுக்கு? ஏதோ புரிந்தமாதிரி இருந்தது. பயத்தில் நெஞ்சு அடித்துக் கொண்டது. என்ன பதில் சொல்வது என்றுத் தெரியாமல், எனக்கு தெரியாது என்று பட்டென்று சொல்லிவிட்டு ரீசிவரை வைத்துவிட்டேன். இந்த நேரத்துல யாரு என்றுக் கேட்டவாறு அப்பா வந்தார்.

ராங்நம்பர் என்று முணங்கினேன். ஏம்மா



மூஞ்சி ஒரு மாதிரி இருக்கு என்றுக் கேட்டுக் கொண்டே பக்கத்தில் வந்தார். முதல் முறையாய் அப்பா அருகில் வரவர உடம்பெல்லாம் கூசியது. அவர் கை என்னைத் தொடும் முன்பு உடம்பை சுறுக்கிக் கொண்டு உள்ளே சென்று படுத்துவிட்டேன். திரும்ப போன் வருமா என்று காதை தீட்டிக் கொண்டிருந்தேன். ஆனால் வரவில்லை.

நடேசன் சார் முகத்திலேயே எச்சில் துப்பி, நன்றாக அடி வைக்க வேண்டும் என்று ஆத்திரமாய் வந்தது. எழுந்து காலையில் அவர் தந்த அழைப்பிதழை எடுத்து கவரில் தூ தூ என்று துப்பிவிட்டு, அப்படியே சுருட்டி குப்பை டப்பாவில் போட்டு விட்டு படுத்தேன். மூடிய கண்ணில் பிரியா தினதந்தியில் டவல் கட்டிக் கொண்டு குளிக்கும் படம் அப்படியே வந்தது. என்னால் அழுகையை அடக்க



படிப்பகம்

www.padippakam.com

# குரல் கொடுப்போம் !




மானுடத்தின் சடங்குகளில்
சிக்குண்டு சிறைப்பட்டு
சீரழியும் பொழுதுகளில்
வெளியே இழுத்து
தேசாந்திரம் திக்கனைத்தும்
பார் பார் பாவம் தந்து தூண்டும்

அசாதாரணப் போக்கில் அழிந்து
விடவோ
ஆடும் சூதாட்டத்தில் தொலைத்து
விடவே
சங்க இலக்கிய அபலைகள்
திரௌபதிகள் என்றெண்ணும்
துகிலுரி துச்சாசனன்களோடு
கண்ணன் வருவான்
கதைகள் தருவான்
என்றேங்கும் பெண்களாக
நாமில்லை !

புரட்சி புரிந்த போது
முரண் பிடித்த முட்களை
மலராக்கிக் கொண்டு
மதியை வளைத்துக் கொண்டு
வலம் வரும் பெண்களாகவே

இந்த வேளை அந்த வேளையென
ஏங்கிப் போன நேரங்களை
தாங்கி வாழும் தாரங்களை
ஓங்கிப் பிடித்து ஒதுக்கி விட்டு

ஒய்யாரத்தில் மயங்காது
மெய்யாகவே வாழும் வாழ்வில்
வாழ்வுக்காக குரல் கொடுப்போம்
-இங்கே கண்ணன் வரார்கள்
காத்திருப்பிலும் நாமில்லை

கொஞ்சம் வளைந்து கொடு
வாழ்வில் நிமிர்ந்து கொள்வாய்
பதங்களைப் பரிகசிக்கும்
பார்வைகளோடு முன்னோர்
பட்டுத் தெளிந்ததை பெண்ணே
பாடங்களாக்கி முடங்கலற்று
வாழ்வுக்காய் குரல் கொடுப்போம் !

**கவியாக்கம்**
**கோசல்யா - ஜேர்மனி**



படிப்பகம்

www.padippakam.com



## தொடர்பூடகங்களும் பெண்களும்

## பெண்களை ஆர்வப்படுத்தலும் ஆளுமைப் படுத்தலும்

ஊடகங்கள் சமூகத்தில் கருத்துநிலையை உருவாக்குவதிலும் பிரதிபலிப்பதிலும் பரப்புவதிலும் மிக முக்கிய பங்கு வகிப்பன. எனவே இந்த ஊடகங்கள் பெண்கள் பற்றிய விடயங்களை கையாளும் முறைமை சமூக முக்கியத்துவம் வாய்ந்தது.

அனேகமாக பிரதான ஊடகங்கள் ஆண்களை மையமாக வைத்தே தகவல்களை வெளியிட்டு வருபவை. அதாவது அந்த ஊடகங்களுக்கான வாடிக்கையாளர்கள் (கேட்பவர்கள், பார்ப்பவர்கள், வாசிப்பவர்கள்) ஆண்களே என்ற கருத்தாக்கம் தான் முதன்மையானதாக இருக்கிறது. ஒரு தினப் பத்திரிக்கையை எத்தனை பெண்கள் வாசிக்கிறார்கள் ? அதிலும் அவர்கள் வாசிப்பது என்ன? ஞாயிறு பத்திரிகையில் பெண்கள் வாசிப்பது என்ன இவையெல்லாம் கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்.

பத்திரிகையாயின் பெண்களுக்கு ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டிருக்கும். அந்தப் பக்கத்தில் பெண்கள் பற்றிய விடயங்கள், பெண்களுக்கான விடயங்கள், குடும்ப தளத்தில் இருந்து கட்டமைக்கப்பட்டிருக்கும். குழந்தை, சமையல், அழகு முக்கியமானவையாக இருக்கும். அத்துடன் பெண்களுக்கான ஒழுக்கம் கணவனை, உறவினர்களை, வயோதிபர்களை கவனித்தல், பராமரித்தல் பற்றிய விடயங்களும் கொடுக்கப்படும். இவை பெண்களுக்கு.

அடுத்து பெண்பற்றிய விடயங்களை, உதாரணமாக சினிமாவில், சினிமாவை பத்திரிகையில் கொண்டுவரல் - இவற்றில் பெண்களை காட்சிப்படுத்தல் ஆண்களை வாசகர்களாக, பார்வையாளர்களாக வரித்துக் கொண்டதன் விளைவு. அது இன்றுவரை தொடர்வதுதான் அபத்தம். பெரிய திரை ஆண்களுக்கு, சின்னத்திரை (வீட்டுக்குள்) பெண்களுக்கு. இத்தகு



படிப்பகம்

www.padippakam.com

பிரிப்பைத்தான் சகல ஊடகங்களும் கருத்தியல் ரீதியாக செய்கின்றன. இதனால், ஆண் - பெண் நோக்கு, தேவை வேறு வேறாகி அவர்கள் இரு துருவங்களாக வளர்த்தெடுக்கப் படுகின்றார்கள். ஆனால் இவர்கள் ஒன்றாக ஒரே கூரையின் கீழ் வாழவேண்டியவர்கள். இன்னும் சொல்லப்போனால், ஆணுக்கு உலகமே வீடாகவும், பெண்களுக்கு வீடே உலகமாகவும் இவர்களை வளர்த்தெடுக்கும் பணியை நன்றாகவே தொடர்பூடகங்கள் செய்துவருகின்றன. இதை நாம் விளங்கிக் கொண்டால்தான், தொடர்பூடகங்களில் கொண்டுவரக் கூடிய மாற்றங்கள் பற்றியும் மரபில் சேர்க்க வேண்டிய விடயங்கள் பற்றியும் தெளிய முடியும்.

---

**தொடர்பூடகங்கள் பெண்களை எப்படி கருத்துருவாக்கம் செய்கின்றன என்பதை ஆழமான புரிதலுடன் விளங்கிக் கொள்கின்ற போது, பெண்களின் முழு ஆளுமையும் குடும்பவட்டத்திற்குள் கட்டமைக்கப்படுவது புரியும். அது கூட எதிர்மறையாக இருப்பது தான் இன்று பெரிய சவால்.**

---

அதாவது எம்மில் 70% ஆன பெண்கள் சமூகத்தில் தொழிற் துறைகளில் இறங்கியுள்ள நிலையில் குடும்பம் சார்ந்த கருத்துகள் இரட்டைச் சுமையை ஏற்படுத்துகின்றதேயொழிய, நடந்த மாற்றங்களுக்கு அமைய அவை கட்டமைக்கப்படவில்லை.

உதாரணமாக, சமையலை இலகு படுத்த இரவில் காய்கறி வெட்டுதல், பாத்திரம் கழுவுதல் போன்ற வேலைகளைச் செய்து வையுங்கள் என்ற தகவல் பெண்களுக்காக தரப்படும்..

அலுவலகம் சென்று வரும் பெண் (இன்று அனேகர் அப்படியானவர்கள்) ஐந்து மணிக்குப் பின் வீட்டுக்கு வந்து வீட்டு வேலைகள், சிலருக்கு தன்னார்வ விருப்புகள், (வாசித்தல், ரீ.வி. பார்த்தல், எழுதுதல்) குடும்பத்தினருடன் உரையாடல் எல்லாம் முடித்து படுக்க பத்து மணிக்கு மேலாகின்றபோது அடுத்த நாள் சமையலுக்கு தயார் படுத்த முடியுமா? இந்த விடயங்களை பிள்ளைகளுடன் கணவருடன் பங்கீடு செய்வது பற்றி யாரும் பேசுவதில்லை. இந்த நிலை, ஒட்டுமொத்த குடும்பச்சுமையைப் பெண் ஏற்றுக் கொள்ளவைக்கப்படுவதால் அவள் சிந்தனையும் விரிவுபட வழியில்லை.



படிப்பகம்

www.padippakam.com

இதனால்,
விரைவில் சலிப்படையும் பெண் பல பிரச்சினைகளையும் உருவாக்க காரணமாகிறாள்.

இதனால் தான் பல வருடங்களுக்கு முன் பெண் எழுத்தாளர்கள் பற்றி குறிப்பிடும் போது அவர்கள் வெறும் கண்ணீர் இழுப்பிகள் என்ற விமர்சனம் முன்வைக்கப்பட்டது. (இன்று சின்னத்திரை நாடகங்கள் பெண்களை வைத்து அதைச் செய்வது வேறு விடயம்).

இந்த நிலையில் தொடர்பூடகங்களில் பெண்கள் ஆர்வம் கொண்டு அதில் தம்மை இணைத்துக் கொள்வது பல யதார்த்தங்களை வெளிக்கொணர உதவும். அதிலும் பெண் பற்றிய அக்கறை கொண்ட பெண்களால்தான் இது ஏற்பட முடியும். எப்படி ஆளுமையுள்ள பத்திரிகையாளர்களால் ஒரு சமூக கருத்தியலை கட்டமைக்க, மாற்றியமைக்க முடியுமோ அப்படித்தான் பெண்பற்றிய யதார்த்தங்களை உணர்ந்த பெண்ணால் தான் தொடர்பூடகங்களில் கருத்துகளை முன்வைக்க முடியும். நம்மில் பலர் நம் சமூக யதார்த்தத்தை எமது சிந்தனையில் எடுக்காமலே கதைபண்ணிக்கொண்டும், கவிதை வடித்துக்கொண்டும், ஏற்கனவே எழுதிய பழமொழிகளை தூசி தட்டிக் கொண்டும் இருக்கிறோம்.

பெண்ணுக்குரிய பிரச்சினைகளை குடும்பமட்டத்தில் மட்டுமே வைத்துப்பார்த்து தீர்ப்பிடும் நிலையைத்தான் நாம் கொண்டியங்குகிறோம். இன்று நம் சமூகப் பெண்கள் சமூக தளத்திற்கு இழுத்து வரப்பட்டிருக்கிறார்கள். போர் தந்த மாற்றம் இது. இப்போது அதுதான் வாழ்வாகிவிட்டது. இந்த நிலையில் குடும்பத்தை மட்டும் பிரதானமாகக் கொண்டு பெண் இப்படி இருக்கவேண்டும் இது இது செய்ய வேண்டும் என்று கூறி ஒரு கருத்துரு வாக்கத்தை மேற்கொள்வது முரணானது. சாதாரணமா "அழகு" பற்றி கூறும் நாம் இன்று எமக்குத் தேவைப்படும் உடல் உறுதி, உடல் உற்சாகம் பற்றி கதைக்கிறோமா? அதற்கு என்ன செய்யவேண்டும் என்பதை முக்கியப் படுத்துகிறோமா? முடி நீளமும் முக அழகும் எந்தக் கருத்தாக்கத்தில் எமக்குத் தேவை? இந்தக் கேள்விகளை நாம் கேட்டுப் பார்க்க வேண்டும்.

எனவே ஒரு சின்ன விடயமானாலும் அது இன்றைய யாதார்த்த பெண்ணுக்கு ஏற்புடையது தானா? என்ற சிந்தனை வேண்டும். அத்துடன் கீழ்மைப்படுத்தல், பலவீனப்படுத்தல் எந்தவிதத்திலும் பெண்ணின் இயற்கையான விடயம் என்ற தொனி இல்லாதவாறு கருத்துருவாக்கம்



படிப்பகம்

செய்தல் முக்கியமானது. பத்துப்பேரை ஒன்றாக
அடிக்க முடியும் என்று திரைப்படத்தில் ஆணை கதாநாயகனாக காட்ட முடிந்திருக்கிறது. ஆனாலும் பலம் பொருந்தியவனாக ஆகமுடியும் என்ற நம்பிக்கை எவ்வளவு தூரம் பதிந்திருக்கிறது! இல்லாத ஒன்றையே நடக்க முடியாத
ஒன்றையே இவ்வளவு தூரம் காட்டமுடியும் என்றால், யதார்த்தத்தை, உண்மை
விடயங்களை எமது வாழ்வாதாரங்களை ஏன் காட்டமுடியாது? ஏன் வெளிக்கொணர
முடியாது?

வெளியில் இருந்து ஏதோ ஒருவகையில் தொடர்பூடகங்களுடன் தொடர்பு கொள்ளும்
பெண்களின் சிந்தனைக்காக மேற்கூறிய விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

அடுத்த விடயம் ஊடகங்களில் பணிபுரிவது! இது ஒரு பெரிய சவால் தான்.
மூன்றாம் உலக நாடுகளிலேயே முதல்முதல் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய
நாடு, முதல் பெண் பிரதமரைக் கொண்ட நாடு என்ற பெருமையை வைத்திருக்கிறோம்
நாம். பெண்கள் அதிலும் தமிழ் பெண்கள், சமூகத்தில் பொதுமக்களுடன் தொடர்பு கொள்வதென்பது பெரிய விசயம். பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும் விடயத்தில்
ஏற்பட்ட வாதப்பிரதிவாதங்களில் ஜி.ஜி.யால் சொல்லப்பட்ட ஒரு விடயம். "ஆங்கிலேயரின் நாகரிகத்திற்கு ஆட்பட்டு எமது குடும்பப் பெண்களை "பொது
மகளிர்' ஆக்கப்பார்க்கிறார்கள;' என்பது. இப்படி சமூக சிந்தனையை பெண்கள் ஏற்படுத்திக் கொள்வதே பெரும் சிரமமாக இருந்த வரலாற்றில் வந்த நாம், இன்று
போராளிப் பெண்களைக் கொண்டியங்குகிறோம் பெண் தலைமைத்துவ குடும்ப மரபைக் கொண்டிருக்கிறோம். ஆனால் தொடர்பூடகங்களில் பணிபுரிவதற்கு முடியாதிருக்கிறது.
தொலைக்காட்சிகளில் செய்தி வாசிக்க பெண் தேவை, கணீர்
என்ற குரலில் நேயர்களைச் சொக்கவைக்க பெண் தேவை. பத்திரிகையை
கவர்ச்சியாக்க பெண் தேவை் ஆனால், ஆழமான கருத்தியல்களை சமூக அபிவிருத்தி,
அரசியல், பொருளாதாரம் பற்றிய அக்கறைகளை கொண்டு தொடர்பூடகங்களில் இயங்க பெண் "இல்லை'

ஏன்?

பெண்ணுக்குக் கொடுக்கப்படும் வாய்ப்புகள் இவை சார்ந்து பெண் ஆர்வப்படல்
என்பன இல்லாமல் இருக்கின்றது. இதற்குக் காரணம் சமூகம் பெண், தொடர்பூடகம்
பற்றி வைத்திருக்கும் விழுமியங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

போருக்குள்ளால் புடம் போடப்பட்ட நாங்கள் எங்கள் பலத்சைரியாக இனம் காணவில்லை. சமூகத்தளத்தில் எம்மால் ஆளுமையாக இயங்கமுடிகிற போது ஏன் தொடர்பூடகங்களில் அதை வெளிக்கொணர முடியாது? பெண் ஏமாற்றப்பட்ட செய்தி, பெண் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்ட செய்தி சுவாரஸ்யமான செய்திகளாக மட்டும் போடப்படும் நிலைதான் உள்ளது. இதுவே பெண்கள் ஊடகங்களுக்குள் வேலை செய்கின்றபோது, இயல்பாகவே அடுத்து என்ன நடந்தது, குற்றம் புரிந்த நபர் யார்? அவருக்கு கிடைத்த தண்டனை என்ன? அல்லது தண்டனை கிடைக்கவில்லையா? இது எல்லாம் செய்தியாகும். இதுவே அக்குற்றத்தை குறைப்பதற்குமான வழியுமாகும்.

அபிவிருத்தி, மீள்குடியேற்றம் பற்றியெல்லாம் சிந்திக்கும் போது, பெண்ணைப் பற்றி யார் சிந்திக்கிறார்கள்? சமூக மறு உற்பத்தி பண்பைக் கொண்டுள்ள பெண், குடும்பங்களை பராமரிக்கும் பெண், சமூகத்தில் முக்கிய கடமைகளை நிறைவேற்றும் பெண் கவனிக்கப்படுவதில்லை. அவளது போசாக்குப் பற்றியோ, சுகாதாரம் பற்றியோ யாருக்கு அக்கறை? இது பற்றி பெண்களால்தான் கேள்வி எழுப்ப முடியும். பெண்கள் சமூகத்தின் முக்கிய பங்காளிகள் என்பது எல்லாவிதத்திலும் முன்னிலைப் படுத்தப்பட வேண்டும். பெண்களின் ஒவ்வொரு செயலும் ஆளுமை மிக்கதாக மிளிர வேண்டும். இதற்கு பெண் தான் தன்குடும்பம், தன்சமூகம், தன் நாடு ஆகியவற்றில் கொண்டிருக்கக்கூடிய தொடர்பு முக்கியம்.

தொடர்பூடகங்களிலும் முடிவெடுக்கும் தகுதியைப் பெற்ற பெண்கள் இலங்கையில் இல்லை. அதிலும் தமிழ்ப் பெண்கள் அறவே இல்லை. பெரும்பாலும் ஊடகங்களில் வேலை செய்யும் பெண்கள் அலுவலகத்தினுள்ளே வேலை செய்பவர்களாகவே உள்ளனர். இன்றைய எமது ஊடகத்துறைகூட குறிப்பாக தமிழ் ஊடகத்துறை பெரியளவில் வளர்ச்சியடைந்ததாக இல்லை. ஒரு விவரணக் கட்டுரை எழுதுவதற்கான தகவலை திரட்ட வெளியில் சென்று வருதல், புலனாய்வு கட்டுரைக்கான தகவல் சேகரிப்பு என்பவற்றைக் கூட நாம் செய்ய முடிவதில்லை. ஆளணி பற்றாக்குறைமற்றும் பாதுகாப்பின்மை என்பன முக்கிய காரணங்களாகும். அத்துடன் தொடர்பூடகத்துறை கல்வியியல் ரீதியாக வளர்த்தெடுக்கப்படாததும் ஒரு குறைபாடு. இன்று அந்த வாய்ப்பு உள்ளது. அதில் பெண்களையும் உள்வாங்கி பயிற்சி அளித்தால்



படிப்பகம்

www.padippakam.com

நம்பிக்கை தரக்கூடிய யதார்த்தசமூகத்தை கட்டியெழுப்பலாம்.எல்லாவற்றுக்கும் மேலாக ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு ஓரளவுக்காவது அந்தந்த நிறுவனங்களிலாவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஊடகத் தொழில் என்பது எனக்குப் பிடித்ததையும் உங்களில் ஒருவருக்கு பிடித்ததையும் எழுதுவதல்ல.

சமூக யதார்த்தத்தில் இருந்து பல்வேறு கோணங்களிலும் பிரச்சினைகள் அணுகப்பட்டு ஆழமான சிந்தனையில் வளமான சமூகத்தை எதிர்பார்த்து கட்டமைக்கப்படுவது, அல்லது முன்வைக்கப்படுவது.

இதில் சமூகத்தில் சரிபாதிக்கும் மேலிருக்கும் பெண்களும் பங்கெடுத்துக் கொள்வது ஒரு சமநிலைச் சமூகத்தை உருவாக்க , பிரச்சனைகளைத் தெளிவாக அணுக வழிகோலும். உலகெங்கும் இன்று பெண்கள் தொடர்பூடகங்களில் மிகுந்த தாக்கம் மிக்கவர்களாக இயங்குகிறார்கள். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பெண் ஊடகவியலாளர்கள் 40 வீதத்தினர் உள்ளனர். போர் காவு கொண்ட எம் சமூகத்திலும் பெண்கள் அரிய பல பணிகளை ஆற்றி வருகின்றனர். ஆனால், அவை சரியாக இனம் காணப்பட்டு வளர்த்தெடுக்கப்படவில்லை. இவற்றை செய்யக்கூடியவர்கள் பெண்கள் தான் அதிலும் சமூகம், பெண் பற்றிய சிந்தனைகளைக் கொண்டவர்கள். அவர்களை ஊடகங்கள் வரவேற்கவேண்டும்.

அத்துடன் சமூகத்தளங்களில் அகலக்கால் வைத்திருக்கும் நம் பெண்கள் தம் சிந்தனையிலும் சமூக தளத்திலிருந்தும் தம் இயங்கியலுக்கான மரபுகளைக் கட்டியெழுப்பவேண்டும். அதற்கு இந்த உணர்வு உள்ள பெண்கள், ஊடகங்களில் உள்வாங்கப்படவேண்டும் அல்லது உள்வாங்கப்பட்ட பெண்கள் இத்தகு சிந்தனையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**எம். தேவகௌரி**
**(பதில் ஆசிரியர், ஞாயிறு தினக்குரல்.)**



படிப்பகம்

www.padippakam.com

# என்னை நீ ப்ரியம் செய்கிறாய்



ஒளிவெளியில் உருள்கிறது இருள்பந்து.
புதிய ஊழியின் அழிவந்தத்தில்
முகிழ்த்திருக்கும் உயிர்களின- இருப்பு

இனியழியா சாசுவதமாகிறது.
வடதிசை வானத்து நட்சத்திரங்களின்
தொட்டோடும் விளையாட்டை
அப்போதேயலர்ந்த செந்தாமரைகள்
ரசிக்கின்றன.
காடழியா நாட்களின் பொன்விழாவில்
வனமோகினிகள் இசைக்கிற கீதங்களை
காவி இனிக்கிறது காற்று.
சிறகுகளரியப்பட்ட போர்க்கழுகுகள்
மணல்வெளி வனாந்தரங்களில்
தம் இருப்பின் இறுதிமூச்சினை
வெளிச்சுவாசிக்கின்றன.
பறவைகளின் ராஜ்யத்துகிரீடம்
ஒரு வயதில் சிறிய
வெண்புறாவுக்குச் சூட்டப்படுகிறது.
பார்க்கும் பேறுற்ற விழிகளெல்லாம்
தமிழ் காணவும்
பேச வாய்திட்ட வாய்களெல்லாம்
தமிழ- ஊற்றவும்
கேட்கும் ஆற்றலுடைய செவிகளெல்லாம்
தமிழ் கேட்கவும்
தவியாய்த் தவிக்கின்றன.
வனமுறைகளறியாத உலக இலக்கியங்கள்
உடையுரித்த சொற்களை
தேசப்பிரஷ்டம் செய்துள்ளன.

இவ்வாறாக.
சாத்தியங்கள்
ஏதுமற்ற
முரண்களின்
'நிகழ்'
சிகரத்திலிருந்தபடி
ஆண்
எனப்படுகின்ற நீ
பெண்
எனப்படுகின்ற
என்னை
எதுவித காரணங்களும் கருதாது
ப்ரியம் செய்கிறாய்

**சாரங்கா தயாநந்தன்**
**(லண்டன்)**



படிப்பகம்

www.padippakam.com




மேலே எழும்பி வர முடியாத படிக்கு ஆழத்தில் மணல், சுக்காம் பாறை, கருங்கல் பாறை என எல்லாவற்றுக்கும் அடியிலாக, எல்லாவற்றுக்கும் இடையிலிருந்தும் எதிலும் கலந்து விடாதவளாக ஊற்றாய் நான் இருந்ததை முதல் முதலில் யார் கண்டடைந்தார்களோ தெரியாது. நிலம் இரண்டாய் பிளக்க வேர் விட்ட மரமொன்றின் வேராய் இருக்கலாம். எனது ஓட்டங்களின் உணர்வுகளை மெல்லிய அதிர்வுகளை உணரத் துவங்கிய ஒரு சில கவட்டைக் குச்சிகளாய் இருக்கலாம். கவட்டைகள் பற்றியிருக்கும் உன் கை வலிக்கத் திருகித்தான் தெரிய வைக்க வேண்டியிருக்கின்றது. ஆழமொன்றில் ஓடுகின்ற என் உணர்வலைகளின் ஓட்டத்தை சொல்லும் என் இருப்பை.

எனக்கென்று ஒரு குணம், மணம், நிறம் என்றிருந்த போதும் சமயங்களில் என்னைச் சூழ்ந்திருந்த நிலத்தின், மண்ணின், கருங்கல் கொண்டிருந்த உப்பின் உவர்ப்பை, நிறத்தை

**திலகபாமா, இந்தியா**

சமயங்களில் தாங்கியிருந்த போதும் நான் எனக்கென்றிருந்த மணத்தையும் , நிறத்தையும் குணத்தையும் மீட்டுக் கொண்டுவரக் கூடியவளாகவே இருந்தேன். ஆழமொன்றில் சிறைபட்டுக் கிடந்த போதும் சுதந்திரமாகவே இருந்தேன். எனைச் சூழ்ந்திருந்த நிலம் இன்னாருக்கென்று உடைமையாக்கப் பட்ட போதும் நான் அவ்வாறு அடையாளம் காணப் படாததால்.

ஓட்டங்கள் புரியத் துவங்க சிறையெடுப்பு துவங்குகின்றது. புரியத் தருவதிலை என இதுவரை எனக்குள்ளிருந்த வைராக்கியத்தையும், குற்றஞ்சாட்டியிருந்த சுட்டு விரல்கள் புரியத் தந்ததால் நேர்ந்து விட்ட சிறையிருப்பையும், காணததாகவே நடித்துப் போகின்றன சுட்டு விரல்களின் விழிகள். இனி புரியத் தருவதில்லையென தன்னை அகலிகையாகிக் கொண்டு அந்த வைராக்கியத்தை கிணற்றுக்குள் வந்திருந்த நீர் தனது தலைமுறை அணுக்களுக்குள்ளும் திணித்து வைக்கின்றன. நிலத்தை கடற்பாறைகளும், மண்வெட்டிகளும் பிளக்க துவங்குகின்றன.

உடைமையாய்த் தனை கருத இடம் தந்த நிலம் துகிலுரியப் படுகின்றது பாஞ்சலியாய், பஞ்ச பூதங்கள் தலை குனிந்து அடிமைப் பட, பலியிடப்



படிப்பகம்

www.padippakam.com

படுகிறது அரவானாய் களப் பலியாய், குருசேத்திரம் துவங்க . சமநிலம் வெட்டுப் பட்டு ,பள்ளங்கள் உருவாக்கப் பட்டு தற்காலிக மேடுகள் தலை கனத்து ஆடுகின்றன. அதன் மேலும் ஆங்காங்கே சின்னச் சின்ன செடிகள். ஆண்டுகள் பலவாய் இருந்திருந்த தென்னைகளைக் காட்டிலும் உயர்வாய் இருப்பதாய் சிரித்து வைக்க இடம் பெயரத் தேவையில்லா தென்னைகள் தன் காலடியில் தவழ்ந்து ஓடும் நதியில் தனது முற்றிய கொப்பரைகளை மிதக்க விடுகின்றன. ஓடுகின்ற நீரில் இழுத்துச் செல்லப் படுகின்ற கொப்பரைகள் கரையொதுங்குகின்ற வேளைகளில் புதைத்துக் கொள்கின்றன. வேர் விடுதலுக்காய், மரங்கள் இடம் பெயராது என்பதை பொய்யாக்கி.

கொத்தலிலேயே கையோடு வந்துவிடும் மண் அடுக்குகள் இடம் மாற நகர மறுத்த பாறைகள் வெடி மருந்துகளில் சிதறித் தெறிக்கின்றன. இதோ நிலக்காரனுக்கு உடைமையாகிப் போயிருந்ததாய். அவனால் கருதப் பட்ட கிணற்று நீர் தழும்பாது அமைதியாய் கிடக்க சொந்தமாக்கிவிட்ட பிரமையில் கல்லிட்டு எறிந்த படி நகலுகின்றான். எத்தனை முறை உறிந்த போதும் நிரப்பிக் கொள்கிறது தன்னை. பச்சை பசும் நீர். உணர்வற்றதாய் கோழையாய் பிறர் அடையாளப் படுத்தித் திரிய ஒடவும், வீழவும், அடித்துச் செல்லவும் கூடிய தனது நீரோட்டத்தையும், தான் தனதென்று காட்டித் தெரியாத உயிரையும் மீன்குஞ்சுகளுக்கும், தலைப் பிரட்டைகளுக்கும் பரிசளித்தபடி சுவாசிக்கின்றது.

கிணறு தரையோடு தரையாய் பூமிக்குள் புதைந்திருந்தது. வேரில்லாது, கிளையில்லாது மடை வழிஓடி எல்லா புல் பூண்டு மரம் செடி கொடிகளின் வழியாக பூத்து , காய்த்து , கனிந்து சாறாகி, விதையாகி , மீண்டும் விருட்சமாகி அதன் வேர் கிணற்றின் பக்கச் சுவரைப் பெயர்த்துக் கொண்டு கிணற்றின் ஆழம் வரை மூழ்கி மூச்சு வாங்கியது. புதையாது ஓடிக் கொண்டிருந்த நதியொன்று . ஒரு மழைக்காலத்து வெள்ளம் ஓடி வந்து கிணற்றுக்குள் ஓடுகின்ற வேகத்தில் பக்கச் சுவற்றை அரித்து அரித்து பொந்தாக்கியிருக்க அதற்குள் புறாக் குடும்பமொன்று பத்திரமாய் இருந்தது

தன் குண்டு உடல் தூக்கி பொந்திலிருந்து கிணறு எதிரொலிக்க பறந்த புறா காலை நேரத்து தண்ணீர் பாய்ச்சலில் பூமி உறிஞ்சாது விட்டு விட்டிருந்த துளிகளை அருந்தியது , கிணற்றுள் தண்ணீர் போதும் போதுமென்றிருந்த போதும்.

கிணறு புறாக்களின் குரலில் இயலாமைகளை அனத்தலாய் வெளிப்படுத்த அதன் எச்சங்களை உள்வாங்கி விதை மிதக்கப் பண்ணி காற்றின் அலையடிப்பில் தன் கரையோரச் சுவற்றில் பதித்தது அந்த விதையை.

பகலில் சூரியனையும், இரவில் நிலவையும் மீந்த நேரங்களில்



படிப்பகம்

www.padippakam.com

வானையும் தனக்குள் புதைத்துக் கொண்டிருந்தது கிணறு. சூரியன் தனக்குள்ளிருந்ததை, நிலவுக்குச் சொல்லாது, நிலவிருந்ததை சூரியனுக்கும் சொல்லாது தான் யாருக்கும் சொந்தமில்லையென நிறுவிக் கொண்டிருந்தது

.நீள் வரப்போடு நீண்டிருந்த பாதைகள் என்னருகே வந்ததும் நின்று சுற்றிக் கொண்டு போகின்றன. கடந்து கொண்டிருந்த காற்று தாண்டித் தழுவி எனக்குள் எனைச் சுற்றியிருந்த சுவற்றுக்குள் சுழன்று கொண்டிருக்க உள்ளே வாழவென்று உயிரை நீரிலிருந்து பெற்றிருந்த தவளைகள் கிணற்றின் பெருமையை பேசித் திர்ப்பதாய் உரத்துக் கத்திக் கொண்டிருக்க ஓடும் ஆறு கண்டு, வீழும் அருவி கண்டு , மீண்டு தப்பி கிணற்றுள் வந்து வீழ்ந்த தவளை குழம்பியது, பெருமை பேசும் கிணற்றுத் தவளை கண்டு ..கிணற்றுத் தவளைகளோ புதிதாய் வந்த நபருக்கு தங்களது இருப்பிட பிரம்மாண்டம் தரும் பேராச்சர்யமே குழப்பங்களின் காரணமென்று எண்ணி சிலாகித்தபடி கேள்வி எழுப்பியது “ நீ பார்த்த ஆறு இதில் பாதி இருக்குமா? அருவிகள் இதில் கால்வாசித் தண்ணீராவது கொண்டிருக்குமா? ”என்று

கிணற்று நீர் சிரித்துக் கொள்வது பாவம் யாருக்கும் கேட்பதில்லை. இரு தவளைகளும் உணர்ந்த நீர் தானில்லை என்று உணராதிருப்பதை எண்ணி

கிணற்றின் மேட்டில் பூத்திருந்த பூவரசு வேரை மண்ணுக்குள் விட்டிருந்த போதும் பூக்களை பூக்களின் வாசங்களை காற்றுக்கும் தேனை தேனின் ருசியை வண்டுகளுக்கும் தந்து விட்டு விதையாய் மாறிய பின் உயிர்க்க வேண்டிய நேரம் வரும் போது மட்டும் மண்ணோடு இணைந்து விட இதுவரை கிளைகளோ பூக்களோ இலைகளோ மறந்து விட்டிருந்த மண்ணின் நினைவு இப்பொழுதுதான் வந்து சேர்கின்றதாய் விதைகளை மண்ணுக்கு பரிசெனப் பல்லைக் காட்டிச் சொல்கிறது. “எங்கிருந்த போதும் என் வேர் தாங்கிய மண் நீயல்லவா” என்று மேலிருந்து கீழிறங்கிய பார்வைகளில் தெறிக்கும் நிராகரிப்பை கூட தந்து விட எண்ணாத உணர்வுகள் தாங்கியிருந்த மண்ணும் சிரிக்கின்றது. ஒரு நாள் கிணற்று நீரின் சிரிப்பை காணநேர்ந்ததையும் எண்ணியபடி.

பூவரசு வேர்கள் மண் துளைத்து கிணற்றுக்குள் தன் வேர்களை விட்டு அத்துமீறல்களை அன்பால் செய்ததாய் நிகழ்த்திக் கொண்டிருக்க கிணறு முதல் முறையாய் கொதிக்கிறது. உள்ளிருந்த மீன்களும் தவளைகளும் தவிக்கின்றன பொறுக்காது.

ஊற ஊற தன் பெருமை உணராது உறிஞ்சித் தீர்த்த நில உடைமைக்காரனிடம் கிணற்று நீர் முதல் முதலாய் பேசிற்று. “ தந்த அன்புகளுக்கு மீண்டும் தருவாயென்று



படிப்பகம்

www.padippakam.com

ஆழாக்குகள் நீட்டவில்லை , இருந்தும்
எனக்குள் எதிர்பார்ப்புகள் இருக்காதா?
ஊற்றெடுத்த பிரவாகம் நான். அடங்கிக்
கிடப்பது நாலு சுவருக்குள் , மீறிப்
போக முடியாதென்பதாலா? இல்லை
தேவையில்லை என்பதால் ஆனால்
நிகழ்ந்த என் உள்ளிருப்பின் வலி
உணராத உனக்கு இனி நான்
தேவையுமில்லையென உரைக்க

கண்ணகி

பேசக் கேட்டவன், காற்றும் பேசக்
கேட்டவன், அலையும் சிலும்பாத
கிணற்று நீர் பேசக் கேட்டு திணறுவான்
கோபமுறுவான் பின் தேறுவான், மனம்
ஆறுவான் . கிணற்று வெள்ளம் நீ யார்
கொண்டு போகக் கூடும், பொறுத்திரு
நானும் தருவேன். பத்திரப் படுத்து
உன் ஆழாக்குகளை .
எதிர்பார்ப்புகளை துறப்பதுவே புரட்சி
அன்பால் அடக்க நினையாதிருப்பதுவே
இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டு ,
பதினெட்டாம் நூற்றாண்டுகளைத்
தாண்டி மீண்டு வா.

" நீர் அழுத்த புதைந்த
வேர்கள் பட்ட இடத்தின் புழுதி தட்டி
விட்டு போ என்பதுவே புதுமை" என
அறிவு ஜீவித் தனமாய் தான்
தீர்மானித்திருந்த ஒன்றாய் கிணற்று நீர்
இருக்க போதிக்க, நாலு சுவர் தாண்டி
எங்கு போய்விடும் அலட்சியத்தில்
கிணற்று நீரின் உயிர் தாங்கிய உடல்
மீது நிறுவ நினைத்த கட்டிடச்
செங்கல்களை , அதை அவன்
அன்பின்பேரால் கட்டி விட்ட
தாஜ்மகாலாய் அடையாளப் படுத்தி
விட அனுமதிப்பதில்லை எனும்
தீர்மானிப்பில், தனக்குள்ளும் அலைகள்
உண்டாக்கி தகர்த்துப் போகின்றது
கிணற்று நீர்

ஒரு நாள் யாரும்
எதிர்பார்த்திடாத பொழுதொன்றில்
மீன்கள் துள்ளத் துடிக்க,
முட்டைகளைப் புதைத்துவிட
தவளைகள் வேறு வழியில்லாது இடம்
பெயரலை யோசிக்க , பூவரச வேர்கள்
தடம் மாறி இன்னும் ஆழம் போகத்
தீர்மானிக்க பொந்தில் அமர்ந்த குண்டுப்
புறாக்கள் குஞ்சுகள் சிறகு ஏக அடுத்த
பருவம்
தங்களும் இங்கில்லை என வாழ்ந்த
கூடுதனை தீர்ந்து கொண்டிருக்கும்
நாட்களை முழுக்க கலைத்து தீர்த்து
விட தீர்மானிக்க கிணறு வற்றிப்
போனது

கிணற்று வெள்ளம் போகாது என
தீர்மானித்திருந்த நிலவுடைமைக்காரன்
நினைப்பு பொய்க்க பக்கத்து
தோட்டக்காரன் போட்ட ஆழ்குழாய்
கிணற்றில் உடைபட்ட பாறையோடு
அடைபட்டிருந்த கிணற்று ஊற்று ,
யாரும் அறியாப் பொழுதொன்றில்

யாரும்
நினைத்திடாத பாதையொன்றில் யாரும்
தீர்மானித்திடாத ஒன்றாக கையிருந்த
ஆழாக்குகளை இருந்திருந்த கிணற்றின்
சேறுகளோடு புதைய விட்டு தன்
பாதையை மாற்றி பயணித்திருந்தது.

மேட்டில் நிலவுடைமைக்காரன்



படிப்பகம்

www.padippakam.com

எரிகின்ற கல் தொலைத்து விட்டிருந்த
அலைகளின் ஒப்பாரியென சப்த
மெழுப்பி ஓடதுவங்கியிருந்தான்.
தீர்மானிப்புகள் நீரில்லாமலேயே
மூழ்கிப்போனதை எண்ணி.

## மலரோடு திலகம்

மலரோடு திலகம்!
இது.. என்ன!.. யார் சொன்னது
பெண்ணே!
இது நீயாகக் கொண்ட
விலங்கு கண்ணே!
என் சொந்தம் உனக்கு தாய்
தந்ததென்று,
தொன்று தொட்டு தன்
பந்தம் உன்னோடென்று,
இன்று எதற்கிந்தத் துறவு
விலங்கென்று,
இன்று மலர்கள் உனைப்
பார்த்துச் சிரிக்கிறது!



அன்னை உனக்கன்று திருஷ்டித்
திலகமிட்டாள்
பின்னை நீ மலர் சூடிக்
காஞ்சிப் பட்டணிந்தாய்!
பழகிய திலகமதை நீ தூர
விலக்கினாய்!
அழகிய மலர்களை
நீயன்றோ தள்ளினாய்!
சுய யாக அவிப்பாகம்
இவைகளாக்கினாய்!



படிப்பகம்

www.padippakam.com

தியாகத் தீவிரவாதியாகி நீ
துவள்கிறாய்!

அற்றைச் சில பழக்க விதிக்
கோடுகள்,
இற்றைக்குப் பொருந்தாச் சமச்
சீரற்ற அழுக்குகள்.
கால மாற்றம், உயரறிவுடையாய்!
கணவனை இழந்திடினும்,
சாலப் பொருந்தும் நெறி
கடைப் பிடிக்கலாம்,
கோலம் சீர்செய்து அழுக்குகள்
துடைக்கலாம்.
மலரோடு திலகமிட்டு நீ
மங்கலப் பெண்ணாகலாம்!

வேதா இலங்காதிலகம்,
டென்மார்க்



ஓவியம்:சுகந்தினி சுதர்சன்



படிப்பகம்

www.padippakam.com

# யாதுமாகி நின்றாள்

ரஞ்சி,சுவிஸ்

புலம்பெயர் இலக்கியத்தில் தமிழ் பேசும் பெண்களின் சிந்தனை வெளிப்பாடுகளாக இப்பொழுது சிறுகதைத் தொகுப்புக்கள், குறும்படங்கள் கவிதைத்தொகுப்புக்கள் என வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில் சுமதி ருபனின் சிறுகதைத் தொகுப்பான ‘யாதுமாகி நின்றாள்’ என்பது வெளிவந்துள்ளது. புலம்பெயர் பெண்கள் புலம்பெயர் வாழ்வில் கூட பல எண்ணற்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ள போதிலும் இப் பெண்களுடைய எழுத்துலகப் பிரவேசம் என்பது மகத்தானது என்றே




சொல்லவேண்டும்.

வெளி உலகைப் பெண்கள் பார்ப்பதற்கும் புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் கூட பெண்கள் ஆண்களின் சார்பிலேயே நின்று அவற்றை செயற்படுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். பொதுவாக பெண்களின் சிந்தனையின் வெளிப்பாடானது ஆண்களினதும் ஆண் அதிகாரத்தினதும் எதிர்கொள்ளலையே பெரும்பாலும் வெளிப்படுத்தி நிற்கிறது. பெண்களின் அடையாளத்தை நிறுவுவதே இன்றைய காலத்தின் தேவையென்றும் ஆண்டாண்டு காலமாக தம்மீது திணிக்கப்பட்டு வந்திருக்கும் மதிப்பீடுகளையே இவர்கள் தமது எழுத்துக்களில் முன்வைத்துக்



படிப்பகம்

கொண்டிருக்கிறார்கள். எழுத்து என்கிற செயல்முறை பற்றி சிந்திக்கும் பொழுது மொழியின் சாத்தியப்பாடுகளை புரிந்து கொள்ள முடியும். வாழ்வு குறித்த கேள்விகளை மட்டுமல்ல பல்வேறு பெண்நிலைநோக்கினுள் விளையும் மோதல்களினதும் பாலியல் உணர்ச்சிகளிலும் சுயகேள்விகளையும் நாம் சுமதிரூபனின் கதைகளில் காணமுடிகிறது.

இத் தொகுப்பில் முக்கியமான விடயம் என்னவென்றால் நிகழ்வுகளினுடாக ஒரு பிரச்சினையையோ அல்லது பல சம்பவங்களையோ இனங்கண்டு அதனைப் படைப்புக்குள்ளாக்கியது மட்டுமல்லாமல் இத்தொகுப்பில் உள்ள பல கதைகள் பெண்களின் வெவ்வேறு விதமான பாலியல் உணர்ச்சிக் கோணங்களைத் வெளிக்கொண்டு வந்துள்ளன. பெண்கள் வெளிப்படையாக எழுதத் தயங்கும் பாலியல் பிரச்சினைகளை, உணர்வுகளை தன் கதைகளில் சுட்டிக்காட்டுகிறார். அத்துடன் தனியே பெண்களின் உணர்வுகளை மட்டுமல்லாது ஆணின் பாலியல் உணர்வையும் இங்கு சுட்டிக்காட்டுகிறார். இவற்றிற்கு இடையே ஆழ்ந்த வேறுபாடு உள்ளது. இவை ஒரு விதத்தில் சமூகரீதியில் அங்கீகரிக்கப்படாத உறவுகளாக இருக்கின்றன. இவை அங்கீகரிக்கப்பட வேண்டும். இவற்றை சிலர் அசிங்கமாகவும் நிலவும் சமூக அமைப்பின் அதிகார, ஆதிக்க அழகியல் மதிப்பீடுகளை மீள உற்பத்தி செய்பவர்களுக்கு இது ஒரு தீண்டத்தகாத பேசுபொருளாக தமிழ்ச் சமூகத்தில் உள்ளது.

இவற்றையெல்லாம் புறந்தள்ளி சமூக நிகழ்வுகளை ஒரு தளத்தில் வைத்து உருவம் கொடுப்பதிலும் பாலியல் உணர்வுகளை நாவலாகவோ சிறுகதையாகவோ கவிதைகளாகவோ குறும்படங்களாகவோ விமர்சனங்களாகவோ படைத்து வருகின்றார்கள். இந்த வகையில் தான் சுமதி ரூபனின் கதைகளும் உள்ளன.

கொஞ்சம் கற்பனை,கொஞ்சம் கனவு,கொஞ்சம் அனுபவம் கலந்து,எழுத்தில் வடித்ததை தரம் விமர்சனம் போன்றவற்றைக் கருத்தில் கொள்ளாது ஒரு பதிவாக உங்கள் முன் வைக்கிறேன் அத்துடன் விமர்சனங்களை முழுமனத்தோடு ஏற்றுக்கொள்வேன் என்கிறார் சுமதிரூபன்.

இத் தொகுப்பில்

அம்மா! இது உன் உலகம்
அவன் அப்படித்தான்
அகச்சுவருக்குள் மீண்டும்
ஆதலினால் நாம்
ராஜகுமாரனும் நானும்
வடு
பிளாஸ்டிக்
கட்டிடக் காட்டுக்குள்
யாதுமாகி நின்றாள்
ள் களும் ன் களும்



படிப்பகம்

www.padippakam.com

ரோஜா
பவர் கட்
சூன்யம்

போன்ற சிறுகதைகளைத் தொகுத்து மித்ரா ஆர்ட்ஸ் கிரியேசன் வெளியிட்டுள்ளது.

பிரான்சிலிருந்து வெளிவந்த உயிர் நிழல் சஞ்சிகையில் இடம் பிடித்த பல சிறுகதைகள் இத்தொகுப்பில் வெளிவந்துள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அம்மா இது தான் உலகம்

இக் கதையில் இழப்பு, இயற்கையில் பிறந்தவர் ஒவ்வொருத்தரும் இறந்து தான் ஆகவேண்டும். என வந்து போகின்றது அதே போல் இன்னொரு இடத்தில் அம்மாவுக்கு என்ன பிடிக்கும் என்று ஒருபோதும் நானோ அப்பாவோ கேட்டறிய முயலவில்லை...
சீலை,நகை,தமிழ்ச் சினிமா போதும் என்ற சாதாரண மனுசிக்குள் இலகுவாக அம்மாவை நாமாகவே ஒதுக்கிவிட்டோம் என மகள் அங்கலாயிக்கின்றார். .இதே கதையில் இன்னொரு இடத்தில் அம்மா கூறுகின்றார். பிடிக்குதோ இல்லையோ கலியாணம் எண்டு வந்திட்டால் எல்லாத் தமிழ் பொம்பிளைகளுக்கும் பிடித்திருக்கும் சாபம் இது.. என் அம்மா மற்றப் பெண்களைப் போலில்லாமல் சிந்திக்கத் தெரிந்தவள் திருமணம் என்ற பந்தத்திற்குள் அகப்பட்டு தனித்தன்மை இழந்த பெண்கள் எத்தனைபேர் இதற்கு ஆண்களை குறை கூறுவதா? அல்லது எம் சமூகத்தை குறை கூறுவதா என மகள் ஆர்த்தி அங்கலாய்க்கின்றார். மனித மனத்தின் இருண்ட இடங்களை நிதானமாக உருவிச் செல்கிறது இக்கதை. தாய் மகளின் உறவு. வாழ்வு குறித்த கேள்விகளை மட்டுமல்ல பல்வேறு மோதல்களினின்று எழும் கேள்விகைள அம்மா இது தான் உலகம் என்ற கதை சுட்டி நிற்கின்றது.

'அவன் அப்படித்தான் அவன்'
ஆண் ஓரினச்சேர்க்கையாளர்கள் பற்றிய ஒரு கதை. அவன் அப்படித்தான், எமது தமிழ்ச் சமூகத்தில் இப்படியான நிலைமைகள் இல்லை. எமது தமிழ்ச் சமூகம் உலகத்திலேயே உயர்ந்தது. என தமது கலச்சாரங்களை கட்டிக்காத்து வருபவர்களால் தம்பட்டம் அடிக்கப்பட்டு வருகின்றது. பல உண்மைகளை மறைத்து மிகவும் கொச்சையாக உறவுகளை பார்க்கும் எமது சமூகம் இக்கதையை கதைகளை வாசித்து விட்டு என்ன சொல்லப் போகின்றார்கள் என்பது தெரியவில்லை. ஐரோப்பிய நாடுகளில் பெண்ணும் பெண்ணும், ஆணும் ஆணும் திருமணம் செய்கின்றார்கள் (ஓரிணச் சேர்க்கையாளர்கள்) அதற்கான சட்டங்களை பெல்ஜியம், நெதர்லாந்து, டென்மார்க், பிரான்ஸ் போன்ற நாடுகள் இயற்றியுமுள்ளன. அண்மையில் பிரான்சில் இரு ஆண்களுக்கு கிறஸ்துவ தேவாலயத்தில் பாதிரியார் சட்டப்படி திருமணம் செய்து வைத்துள்ளார். இப்படி நடைபெறும் வேளையில் தமிழ்ச் சமூகத்தினர் அவர்களைப் பார்த்து ஏளனம் செய்வதும் அதை



படிப்பகம்

www.padippakam.com

அங்கீகரிக்காவிட்டாலும் எமது சமூகத்தில் அப்படி இல்லை என வாதிடுவதும் தான் நடைபெறுகிறது. சுமதி ரூபனின் அவன் அப்படித்தான் என்ற கதையில் சத்தியனுக்கும் அவனது நண்பனுக்கும் உறவு ஏற்படுகின்றது. இதை அவர்களின் குடும்பம் எதிர்க்கிறது. இது தான் கதையின் சாரம்சம்.

தனி மனிதனின் உணர்வுகள் மதிக்கப்படவேண்டும் நடைமுறையில் எதுவுமே சாத்தியமில்லை முற்போக்கு சமூகம் என்பது வெறும் சொற்களால் ஆன கனவு உலகு மட்டுமே. யதார்த்தம் எனும் போது எமது சமூகத்தை நார் உரித்துப் பார்க்கும் போது உள்ளே எல்லாமே வேஷம் இந்தச் சமூகத்தினுள் தானே எனது குடும்பமும் அடங்கும் எவ்வளவு தான் படித்திருந்தாலும் எமது சமூகம் சக மனிதர்களின் உணர்வுகளை புரிந்துகொள்வதில் பின்னிற்கிறது. என சத்தியன் அங்கலாயக்கின்றான். இந்தக் கதை உயிர்நிழல் சஞ்சிகையில் (பிரான்ஸ்) வெளிவந்த போது Funny boy யைத் தழுவி எழுதப்பட்ட கதை போல் உள்ளது எனவும் விமர்சனங்கள் வந்தன.

'அகச் சுவருக்குள் மீண்டும்' என்ற கதை முழுமையற்ற வாழ்வு, வாழ்தல் பற்றிய தோற்றம் அல்லது மயக்கம், கலாச்சாரத்தின் மேலான பிரமைத்தனம் போன்றவற்றினை உள்வாங்கி எழுதப்பட்டுள்ளது.

அதேபோல் 'ஆதலினால் நாம்' என்ற சிறுகதையில் உணர்வைத் தொட்டுச் செல்கின்றார் இக்கதை இரு பெண்களின் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளினால், கணவனின் கொடுமையினால் இரு பெண்கள் கணவனை பிரிந்து வாழுகின்றனர். அவர்களுக்கிடையில் ஏற்படும் நட்பு, புரிந்துணர்வு காதலாக மாறுகிறது. தங்களது பாலியல் தேர்வை அவர்கள் தெரிவு செய்து கொண்டுள்ளார்கள். இதை சுமதிரூபன் தத்ரூபமாக கதையாக தந்துள்ளார். முகத்தில் அறைவிழுந்தது. அறை விழ அறைவிழ ஏன் என்ற கேள்வி கூடிக்கொண்டே போனதே தவிரக் குறையவில்லை. பெண் சிந்திக்கக் கூடாது என்பதின் கருத்து மட்டும் புரிந்தது. ஐயோ நான் ஏன் சிந்திக்கும் பெண்ணாகிப் போனேன். பல்லிளிக்கும் பரதேசிகளை எனக்குப் பிடிப்பதில்லை இனிமேல் ஆண் வர்க்கம் மீதே எனது பார்வை விழுமா என்ற சந்தேகம் எனக்குள் அந்தளவுக்கு ஏற்பட்டுவிட்டது. ஆணின் நெருக்கம் உடல் சிலிர்க்க வைப்பதற்குப் பதில் அருவருக்கத் தொடங்கிவிட்டது என்று கதையில் வந்துபோகிறது வசனங்கள். இதன்மூலம் அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு தூரம் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை மிக அழகாகத் தன் கதையில் கூறுகிறார்.

இங்கு கதைகளாக புலம்பெயர்ந்து ஆணாதிக்கத்திற்கு முரண்பட்ட நிலையில் பெண் எதிர்கொள்ளும் பிரச்சினைகள். குடும்பத்தை விட்டு வெளியேறி ஆணை நிராகரித்து வாழும் பெண்களின் நிலை, ஓரினச்சேர்க்கையாளர்கள் பற்றிய



படிப்பகம்

www.padippakam.com

துணிந்த பார்வை என்பவற்றை இவரின் கதைகள் அழகாக சொல்லி நிற்கின்றன.

இக்கதைகளில் வரும் பெண்கள் தமது சூழலில் வாழநேர்ந்த பெண்களின் உள்ளுணர்வுகளுக்கும், சுயமுரண்களுக்கும் மீறல்களுக்கும் பெண்கள் தமக்கான தீர்வுகளைத் தாம் வாழ்ந்த வாழ்கின்ற சூழலிலிருந்து செய்ய முனைகின்றார்கள். எப்போதுமே தன்னை மீறிப்போகின்ற வாழ்க்கை தனது வாழ்வு மற்றவர்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றதான அவலம் இக்கதைகளில் தெரிகிறது. பல கதைகளின் கரு முடிவில் ஒரே கருத்தை ஒத்தவையாக உள்ளன. பெண்களின் புதிய சேதிகளை சொல்லவேண்டும் எனும் அவசியத்தினை இக்கதைகள் மூலம் தந்துள்ளார் சுமதிரூபன்.

எனினும் பெண்ணியக் கருத்துக்களை தயங்காது எழுதிவரும் (சுமதிரூபன் உட்பட) பெண்களும் கூட தங்களதுபெயர்களுடன் தங்களது கணவனின் பெயரையோ அல்லது தந்தையின் பெயரையோ சேர்த்துக் கொள்வதை மட்டும் இவர்களால் தவிர்க்க முடியவில்லையே. இதற்கு பெண்களின் விருப்பு, வெறுப்பு என்ற பதிலை மட்டும் நாம் எதிர்பார்க்கமுடியாது. ஆனாலும் சமூக அந்தஸ்தை வேண்டி நிற்கும் பெண்கள்போல் சமூகப்பயமும், ஆழ்மனதில் பதிந்து போன ஆண் மேலாதிக்க கருத்துக்களிலிருந்து முற்றாக விடுபடமுடியாமையும் காரணமாக இருக்கக்கூடும். இப்பெண்கள் யாரும் தங்களது

பெயர்களுக்குப் பின்னால் தாயின் பெயரைச் சேர்த்துக் கொள்ளவில்லையே என்ற விமர்சனமும் எழுகின்றது.
சுமதிரூபன் தமிழச்சி என்கிற புனைபெயரிலும் எழுதிவருகின்றார். இவரின் எழுத்துக்கள், குறும்படங்கள் இன்று புலம்பெயர் நாடுகளில் பேசப்பட்டு வருகின்றவையாக உள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

சுமதி ரூபன், கனடா



***(Adrienne Rich said at the memorial of Anne Sexton, 'we have had enough suicidal women poets... enough self-destructiveness.')***



# ஓரு பாதை பல கவிகள்...

மனிதாபிமானமற்ற உலகு தரும் ஏமாற்றங்கள் மனஉளைச்சலாய் பீரிட, நிவாரணமாய் விடுபடல் முயற்சியில் எழுதும் எழுத்து வீரியம் கூடியதாய் அதிர வைக்கின்றது. எப்போதும் பாதிப்பின் உச்சம் பெண்களுக்கே அனேகமாகிப் போவது வழக்கம். பெயர் பெற்ற பெண் இலக்கியவாதிகள் அனைவருமே எங்கோ ஒரு புள்ளியில் சாயல் கொண்டவர்களாகின்றார்கள். காதல்ஏமாற்றங்கள், பாலியல்தொல்லைகள், . தனிமை, வறுமை போன்றவற்றோடு அரசியல் அராஜகமும் சேரும் போது, இவற்றிலிருந்து தமக்கான வடிகாலைத் தேடி விடுபடல்களுக்காய் உணர்வுகளைக் குவித்து வெறும் காகிதத்தில் கொட்டிய போது, அதுவே அவர்களை தரமான இலக்கியவாதிகளாய் உலகிற்குக் காட்டியிருக்கின்றது.

மனஉளைச்சலின் தீராத வலியைப் படைப்புகளாக்கி, உலக இலக்கியத்தில் புகழ்பெற்ற பெண் கவிகளாக திகழ்கின்றார்கள் மரீனா ஐவனோவா, சில்வியா பிளாத், ஆனி செக்ஸ்ரன். இவர்களைப் போலவே ஈழத்து இலக்கியஉலகில் பெண்ணானதாலும் அரசியல் அராஜகங்களால் பாதிக்கப்பட்டதாலும் சிவரமணி, செல்வி போன்றோர் நல்ல கவிகளாக தம்மை அடையாளம் காட்டியுள்ளார்கள்.

மொஸ்கோ பல்கலைக்கழகத்தின் வரலாற்றுப் பேராசிரியரான ஐவான் வலடிமிரோவிச் (இவர்தான் மொஸ்கோவின் பெயர் பெற்ற அலெக்சாண்ரா III மியூசியத்தை நிறுவியவர்) இற்கும் இவரின் இரண்டாவது மனைவியான பியானோ ஆசிரியை மரியா அலெக்சாண்ரோவாவிற்கும் 1892 இல் பிறந்த மரீனா ஐவனோவா பால்ய



படிப்பகம்

www.padippakam.com

வயதிலேயே கவிதை எழுதுவதில் ஆவர்வம் மிக்கவராக இருந்த போதிலும் அவரது தாயாரால் அவரது சிறுவயது கவிதைகள் அழிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் பியானோ இசை உலகத்திற்குள் நிர்ப்பந்திக்கப்பட்டு புகுத்தப்படுகின்றார். மரீணாவின் தந்தை பாசம் மிக்கவராக இருந்தாலும் தனது ஆய்வுகளில் அவர் அதிகம் நேரத்தைச் செலவு செய்பவராக இருந்ததால் குடும்பத்துடன் அவரால் ஒட்ட முடியவில்லை. இதனால் மரீணா தனது பால்ய பருவத்தை அழகற்றதாகவே பார்க்கின்றார். 1906ஆம் ஆண்டு தாயரின் மறைவிற்குப் பின்னர் மரீணா தான் வெறுத்த பியானோவைத் ஒதுக்கி விட்டு மீண்டும் கவிதை உலகிற்குள் நுழைகின்றார். இவருடைய முதலாவது கவிதைத் தொகுப்பான "ஈவினிங் ஆல்பம்" 1910இல் வெளிவந்து பலர முக்கிய இலக்கியவாதிகளின் கவனத்தை ஈர்க்கின்றது. மரீணாவிற்கு பல நல்ல இலக்கியவாதிகளின் நட்பு இப்போது கிடைக்கின்றது. குறிப்பாக இலக்கிய விமர்சகர் மாக்ஸிமில்லனின் நட்பை பெரிதும் மதிக்கின்றார் மரீணா. 1912ல் சேர்ஜி யோர்கோர்லிவிச் எப்ரோனை மிகவும் விரும்பித் திருமணம் செய்து கொண்ட போதிலும் மரீணா பிறருடனான தனது காதல் வாழ்க்கையைத் துறக்காதவராகவும் தனது காதல் அனுபவங்களைக் கவிதைகள் மூலம் வடிப்பவராகவும் சோபியா பாளொக் எனும் பெண் கவியுடனான தனது உறவை மறைக்காது கவி படித்தவருமாகவே காணப்படுகின்றார்.

மரீனா ஐவனோவா



ரஷ்யப் புரட்சியின் தொடக்கத்தில் மரீணாவின் கணவர் எப்ரோன் ராடர் வெள்ளை ஆமியில் இணைந்து விட மரீணாவும் அவருடைய இரு குழந்தைகளும் மொஸ்கோவிற்குத் திரும்பிவிடுகின்றார். இந்த வேளை மரீணாவின் படைப்புக்கள் அனேகமாக அரசியல் சார்ந்ததாகவே அமைந்திருக்கின்றன. மொஸ்கோவில் ஏற்பட்ட பஞ்சத்தில் அவருடைய இளைய மகளை இழக்கின்றார் மரீணா. இவள் தனது குழந்தைகளைத் துன்புறுத்தும் ஒரு தாயாக இருந்தாள் என்ற செய்தியும் உள்ளது. பதின்நான்கு வருடங்களின் பின்னர் மரீணாவிற்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கின்றது. அரசியல் நெருக்கடிகளாலும் பஞ்சத்தாலும் கணவரின் அக்கறையின்மையாலும் மரீணாவின் குடும்பம் சிதையத் தொடங்குகின்றது. மரீணாவின் கவிதைகளைப் பிரசுரிக்க மறுக்கப்படுகின்றது. 1941ம் ஆண்டு மரீணாவின் கணவர் எப்ரோ உளவாழி என்ற சந்தேகத்தின் பேரில்



படிப்பகம்

www.padippakam.com

வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்கின்றாள். மகன் தாயை மதிக்காத இளைஞனாகின்றான். ஆதரவு அற்ற நிலையில் ஒரு துண்டு பாணிற்கு மட்டும் போதுமான பணம் கொண்டவளாக பஞ்சத்தில் வாடிய மரீணா 1941ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31ம் திகதி தூக்கில் தொங்கி இறக்கின்றார்.

அமெரிக்கர்களால் சிறந்த பெண்கவியாக அடையாளம் காணப்பட்ட சில்வியா பிளாத் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து தனது எட்டாவது வயதில் முதல் கவிதையைப் பிரசுரித்தவர் இவர் பாடசாலையில் மிகவும் பிரசித்தி பெற்ற முதல் தர மாணவியாக விளங்குகின்றார். மிக இளம் வயதில் தனது தந்தையை கடும் நோயினால் இழந்து தாயினால் வளர்க்கப்பட்டவர். இருந்தும் தாயை வெறுப்பவராகவே இருக்கின்றார். தந்தையின் நோய் கால வேதனைகள் இவரை "டாடி" எனும் சிறந்த கவிதையை எழுத வைத்தது. பிளாத் தனது எழுத்துக்காய் பல பரிசில்களை வென்றிருக்கின்றார். சிறந்த கல்வி நிலையங்களின் அழைப்பைப்பைப் பெற்றவர் இருந்தும் இவர் இளம் வயது சந்தோஷமற்றதாகவும் எப்போதும் பயந்து உளவியல் உபாதைகளுக்கு உள்ளாவதாகவுமே இருக்கின்றது. 1953ம் ஆண்டு முதல் முறையாக நித்திரைக் குளிசைகளை உண்டு பிளாத் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றார்.

தொடர்ந்த சிகிச்சையின் பின்னர் மீண்டும் இலக்கிய உலகில் தன்னை இணைத்துக் கொண்ட சில்வியா 1956ம் ஆண்டு ரெட் கியூக்ஸ் எனும் கவிஞரை காதலித்து மணந்து கொள்கின்றார். பிளாத் நல்ல ஒரு மனைவியாகவே இருக்க ஆசைப்படுகின்றார். இருந்தும் ரெட்டின் நடத்தை அவருக்கு மனத் திருப்தியைக் கொடுப்பதாக அமையவில்லை. 1961ம் ஆண்டு சில்வியாவின் முதலாவது குழந்தையின் பிரசவத்தின் பின்னர் ரெட் ஏஷியா விவில் எனும் பெண்ணோடு உண்டான உறவினால் பிளாத்தை விட்டு விலகுகின்றார்.

கணவரைப் பிரிந்த நிலையில் இப்போது இருகுழந்தைகளுக்குத் தாயான பிளாத் தனிமை வறுமையின் நிமித்தம் மீண்டும் மனஉளச்சலுக்கு ஆளாகி 1963ம் ஆண்டு மாசி மாதம் 11ம் திகதி தனது குழந்தைகளுக்கு பாலும் பாண் துண்டும் வைத்து விட்டு சமையல் அறையில் நச்சு வாயுவைத் திறந்து தன்னை மாய்த்துக் கொள்கின்றார் சில்வியா பிளாத். இறப்பிற்கு இரண்டு வருடங்களின் பின்னர் "ஏரியல்" எனும் இவரின் பிரசித்தி பெற்ற படைப்பு வெளிவருகின்றது. அழகு அறிவு வசதி அனைத்தும் கொண்ட சில்வியாவின் தற்கொலை ஒரு புதிராகப் பலருக்கு இப்போதும் இருப்பினும் ஏமாற்றம் தனிமை என்பன இவருக்கு மனஉளைச்சலைக் கொடுத்துத் தற்கொலைக்குத் தூண்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது. சில்வியாவின் மரணத்திற்குப் பின்னர் ஏஷியா விவில் தனது குழந்தைகளுடன் சில்வியா



படிப்பகம்

www.padippakam.com


சில்வியா பிளாத்

பிளாத் போலவே நச்சு வாயு மூலம் தன்னை மாய்த்துக் கொள்கின்றார். தொடர்ந்து வந்த காலங்களில் பிளாத்தின் கணவர் ரெட் பெண்ணியவாதிகளாலும் பிளாத்தின் நண்பர்களாலும் சில்வியா பிளாத்தைக் கொன்ற கொலைகாரனாகவே பார்க்கப் பட்டு விமர்சிக்கப்படுகின்றார். சில்வியா பிளாத்தின் வாழ்க்கை இரண்டு முறைகள் திரைப்படமாக்கப்பட்டுள்ளது.

மூன்று பெண்கள் கொண்ட குடும்பத்தில் கடைக்குட்டியாக நியூற்றன் மாஸ்சசூசில் பிறந்த ஆன் செக்ஸ்ரன் எப்போதும் மற்றவரின் கவனத்துக்கு ஏங்குபவராகவே இருந்திருக்கின்றார். மூத்த சகோதரி தந்தையின் செல்லப்பெண்ணாகவும் இரண்டாவது சகோதரி வாசிப்பதற்கும் கல்லூரிக்குச் செல்வதற்கும் விரும்பும் அறிவாளியாகவும் இருப்பது ஆனுக்குச் சங்கடத்தைக் கொடுக்கின்றது. ஆனின் தந்தை ஒரு குடிகாரன். தாய் ஒரு நோயாளி. ஆனின் வாழ்க்கையை எழுதிய டயான் மில்டபுறுக் என்பவர் ஆன் சிறு வயதில் அவரது பெற்றோரால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கூறுகின்றார். ஆன் எப்போதும் தனது உறவினரான நாநாவுடனேயே அதிகம் நேரத்தைக் கழிப்பவளாகின்றாள். இயற்கையாக அமைந்து விட்ட ஆனின் கடினமான குண அம்சத்தை மாற்ற வேண்டி அவளது பெற்றோர் அவளது பதினேழாவது வயதில் பெண்கள் கல்லூரிக்கு அனுப்புகின்றார்கள் அப்போதாவது அவள் பெண்மையின் குணம் கொள்வாள் என நம்பி. அங்குதான் ஆன் கவிதை எழுத ஆரம்பிக்கின்றாள். அவளது முதல் கவிதை கல்லூரி ஆண்டு மலரில் வெளியான போது இலக்கியக் குடும்பத்திலிருந்து வந்த ஆனின் தாயாரால் இந்த உண்மையை ஏற்க முடியாமல் போகிறது. கற்பனையைத் திருடியவள் என்று தனது மகளை உதாசீனம் செய்கின்றாள். ஆன் தொடர்ந்து போஸ்டன் காலண்ட்ட கல்லூரியில் கல்வி கற்ற வண்ணம் பல பெண்ணியக் கவிதைகளை எழுதுவருகின்றாள். இந்த வேளைதான் அவள் அல்பிரெட் முலர் செக்ஸ்டனை(காயோ) காதலித்துக் கல்யாணம் செய்கின்றாள். காயோ அதிகம் தனது படிப்பில் நேரத்தைச் செலவு செய்ததால் குடும்பத்தைக் கவனிக்கத் தவறிவிடுகின்றான். தோற்றத்தில் அழகியான ஆன் மொடலிங் பள்ளியில் சேர்ந்து பகுதி நேரமாக மொடலிங் வேலையும் செய்கின்றாள்.



படிப்பகம்

www.padippakam.com

1953இல் ஆன் தனது முதல் குழந்தைக்குத் தாயாகின்றாள். அதனைத் தொடர்ந்து அவள் மனஉளைச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றாள். மனஉளைச்சல் அவளை குடிக்குள்ளும் தள்ளி விடுகின்றது. இயற்கையிலேயே அழகிய தோற்றமுடைய ஆனின் உடலில் சதை போடுகின்றது. தனது குடிப்பழக்கம் உடற்பருமன் போன்றவையும் அவளுக்கு மனஅழுத்தத்தைக் கூட்டுவதாக அமைகின்றன. 1954இல் இரண்டாவது குழந்தைக்கும் தாயாகிய ஆனின் மனநிலை மீண்டும் பாதிக்கப்படுகின்றது. 1956இல் ஆன் முதல் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றாள். அதன் பின்னர் அவளது மருத்துவரின் ஆலோசனையின் படி மீண்டும் கவிதை எழுதத் தொடங்குகின்றாள். கவிதைப் பட்டறை ஒன்றில் தன்னை இணைத்துக் கொண்ட ஆன் அங்கு கவிஞர் மக்சின் குமினைச் சந்திக்கின்றாள். ஆன் இறக்கும் வரை அவளது மிக நெருங்கிய தோழியாக மக்சின் குமின் இருக்கின்றார். தொடர்ந்து 1957 இல் மீண்டும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட ஆன் தற்கொலை முயற்சியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள கவிதை எழுதுவதில் தீவிரமாக ஈடுபடுகின்றார். 1958இல் சில்வியா பிளாத்தின் நட்பு கிடைக்கின்றது.

1973ம் ஆண்டு மீண்டும் பலமுறை மனஉளைச்சலுக்கு ஆளான ஆனை விவாகரத்துச் செய்து கொள்ளுகின்றார். அவளது கணவன். 1974ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4ம் திகதி ஆன் தனது வீட்டு கார் கறாஜினுள் காரை



*ஆன் செக்ஸ்டன்*

இயங்க வைத்து நச்சு வாயுவை சுவாசித்து தற்கொலை செய்து கொள்ளுகின்றாள். ஆன் பல கவிதைத் தொகுப்பையும் நான்கு குழந்தை நாவல்களையும் வெளியிட்டுள்ளார். இவருடைய படைப்புக்கள் பல விருதுகளை வென்றுள்ளன. ஆன் கவிதையை தற்கொலையின் எதிர்பதமாகப் பார்க்கின்றார். இவரது கவிதைகள் பல தற்கொலையின் அச்சத்தையும் மரணத்தையும் கோபத்தையும் தாங்கி நிற்பவையாக இருக்கின்றன.

இந்த மூன்று புகழ்பெற்ற பெண் கவிகளின் கவிதைகளும் ஓரே தளத்தில் தொடங்கி உருமாறுவதாகக் கூறப்படுகின்றது. தமது காதல் அனுபவங்களை மிக வேகமாகப் பல



படிப்பகம்

www.padippakam.com

கவிதைகளில் வடித்திருக்கின்றார்கள். தொடர்ந்து பெண்ணியப் பார்வையில் பெண்மையின் நோ தனிமை பயம் கோபம் போன்றவைகளை மையமாக வைத்தும் பல கவிதைகளைப் படைத்துள்ளார்கள். குடும்ப வாழ்க்கையால் அதிகம் கவரப்படாதவர்களாகக் காணப்படுகின்றார்கள். கணவன் குழந்தைகள் என்பதை மிகவும் பயங்கரமாகவே பார்க்கின்றார்கள். நல்ல ஒரு மனைவியாக வாழ ஆசைப்பட்ட சில்வியாப் பிளாத்உம் குடும்ப அமைப்பை வெறுப்பவளாகவே காணப்படுகின்றாள். சில்வியாவின் தற்கொலைக்குப் பின்னர் ஆன் "சில்வியா" என்ற தலைப்பில் எழுதிய கவிதையில் "எங்கே போய் விட்டாய் சில்வியா? நாம் இருவரும் அடிக்கடி தற்கொலை பற்றிக் கதைப்போமே" என்று குறிப்பிட்டு "நீ மட்டும் தப்பி விட்டாய்" என்று கூறியிருக்கின்றார். யதார்த்த உலகைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் எழும் ஏமாற்றங்கள் இவர்களுக்கு மன அழுத்தத்தைக் கொடுத்திருக்கின்றது என்கின்றார்கள் விமர்சகர்கள்.

ஈழத்துக் கவியான சிவரமணியின் கவிதைகளிலும் இப்பெண்களின் அனுபவங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சிவரமணியின் கவிதைகளும் பெண் அடக்கு முறைக்கும் அராஜகத்திற்கும் எதிரானதாகவும் மனித நேயத்தில் எழுந்த சினத்தால் வடிக்கபட்டதாகவுமே காணப்படுகின்றன. மாணவியான சிவரமணியின் தற்கொலையும் மனஅழுத்தத்தாலும் சமூகத்தில்



சிவரமணி

அவருக்குண்டான அதிருப்தியுமே காரணம் என்கின்றார்கள் அவருடைய நண்பர்கள். கவிதை உலகில் அவருடனான பெண் தோழிகளின் தவறான வழிகாட்டல் சிவரமணியை உலகம் வாழ்வு பற்றிய எதிர்பார்ப்புக்களை அதிகமாக்கி அதிலிருந்து எழுந்த அதிருப்பதியும் முரண்பாடுகளும் அவரை உளவியல் தாக்குதலுக்குள்ளாகி தற்கொலைக்குத் தூண்டியிருக்கலாம் என்ற விமர்சனங்களும் உள்ளன.

சமூகம் வாழ்வு போன்றவற்றின் மேலான மிதமான நம்பிக்கையும் விருப்பும் ஏமாற்றங்களாகும் போது எழும் சினம் இயலாமையே மனவலிமையற்ற பெண்களை தற்கொலைக்குத் தூண்டுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு பாடல்

நீள்கடலுக்கப்பாலே பால் சுரந்த மார்பைப் பிளந்த தாயவளின் ஓலம்
வாழ்வு கொல்லும் தேசத்து என் துயிலைக் கலைத்ததுவே
கரையைப் ஸ்பரிசிக்க ஓடிவந்துடையும்
அலையெனவே மரித்தனவே எம் கனவும்
இசையின் தேவதையே குயிலம்மா! உன் குரலின் விக்கல் தணிக்க
நாதியில்லை, நெஞ்சும் பொறுக்கவில்லை
பாலூற்றும் வெண்ணிலவை குருதிநிணம் குளிப்பாட்ட
மேகங்கொண்ட சோகத்தினால் அவள் நீரும் கரித்ததுவே
வார்த்தைகளை முடமாக்கும் இத்துயரை எங்கியம்ப சொல் தாயே
( அலைகடலுக்கப்பாலே)



பூக்களை மரங்களுடன் விட்டகன்ற புவிமகளை
நூழிலையில் தொங்கும் இதயங்கொண்ட பாமகளை
முறியாத பனையாக நிமிர்ந்து நின்ற மூத்தவளை
பள்ளிக்கனவு சுமந்து நின்ற சிறியவளை
கோணேஸ்வரியான எம்மவளை
அரக்கரின் வேட்டையிலே மானான தோழியரை
நினைந்து நெஞ்சுருகும் சப்தம் பேரிடியை மிஞ்சியதே
வார்த்தைகளை முடமாக்கும் இத்துயரம் எங்கியம்ப சொல்தாயே
(அலைகடலுக்கப்பாலே)

காணிநிலம் வேண்டி தலையுருளும் தேசத்திலே
வேலி சரிபார்த்து நாழிகையும் பாழாச்சு
மாற்றாளின் கனவை உயிர்ப்பிக்க உம் கனவை எரித்தீரே
உம்மை வடிக்கையிலே முகம் தொலைந்த என் கோலும் வலிமை பெறும்
ஒற்றைச் சலங்கைக்காய் நகரெரித்த காலம்போய்
சிற்றெறும்பும் சிரம் உயர்த்த மண்ணில் பல புற்கள் முளைத்தனவே
வார்த்தைகளை முடமாக்கும் இத்துயரம் எங்கியம்ப சொல் தாயே
( அலைகடலுக்கப்பாலே)

உமா –ஜேர்மனி



படிப்பகம்

www.padippakam.com

# இனிக் கண்ணீர் வேண்டாம் சகோதரி



**க**னடிய தேசிய திரைப்பட நிறுவனம் (National Film Board of Canada) தயாரித்து Helene Klowdasky இனால் நெறியாள்கை செய்யப்பட்டுள்ள NO MORE TEARS, SISTER என்ற 80 நிமிட ஆவணப்படமானது, இடர் நிறைந்த காலத்தில் தன் சமூகத்தை நேசித்ததனால் விடுதலைப் புலிகள் இயக்கத்திரால் கொலை செய்யப்பட்ட மனித உரிமைப் போராளியான ராஜனி திரணகமவின் கதையைச் செல்கிறது.

இது காதலின் கதை. போராட்டத்தின் கதை. போர்காலத்தில் உண்மையின் விலை என்பதைச் சொல்லும் கதை.

யுத்த காலத்தில் ஒரு தாய், மருத்துவப் பேராசிரியர், நிர்கதியுற்ற ஒரு சமூகத்தின் சின்னம், மனித உரிமைப் போராளி என வெவ்வேறு நிலகளில் போரும் வன் முறையும் கொண்ட சூழலை எதிர் கொண்ட ராஜனி, அவர் நேசித்த மண்ணில்



படிப்பகம்

www.padippakam.com

சுடப்பட்டு வீழ்ந்த போது அவருக்கு வயது 35.

அவர் கொல்லப்பட்டு 15 வருட காலத்திற்குப் பிறகு வெளிவரும் இந்த விவரணச் சித்திரம் ராஜனிக்கு மிக நெருக்கமானவர்களினதும் அவரை நன்கு அறிந்தவர்களினதும் செவ்விகளினூடாகவும் மிக கடினமான சூழலில் பெறப்பட்ட அரிதான ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டுமே உருவாக்கப்பட்டுள்ளது. யுத்தத்தின் நெருக்குதலுக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட ஒரு சமூகத்தையும் அதை நேசித்த ஒரு பெண்ணையும் பற்றிமட்டும் இந்தப்படம் பேசவில்லை.

முரண்பாடுகள் நிறைந்த சூழலில் உண்மையைத் தேடுதலில் உள்ள



ஆபத்தையும் இது கூறிச்செல்கிறது.

இது ஒரே ஒரு பெண்ணைப்பற்றிய படம் அல்ல.

ஒடுக்குதலுக்குட்பட்ட சிறுபான்மை இனத்தை, அதனுள் கிளை விட்ட குறுந்தேசியத்தை, எல்லாவற்றிற்கும் மேலாக மனித உரிமைகளுக்காக போராட வேண்டியதன் அவசியத்தைச் சொல்லுகிறது.

பெண்ணுரிமைப் போராளியாக சூழலால் வளர்க்கப்பட்ட ஒரு பெண்ணைப்பற்றி,



படிப்பகம்

www.padippakam.com

நெருக்கடிப் பிரதேசப் பெண்களை விவரணை செய்யும் படங்களை உருவாக்கும் இன்னொரு பெண் இயக்கிய படம் என்ற வகையில் மனித உரிமை மீது அக்கறை கொண்ட அனைவருக்கும் மிக முக்கிய படைப்பு இது.

20 வருட காலமாக ஆவணத்திரைப்படத்துறையில் ஈடுபட்டிருக்கும் மொன்றியல் வாசியான Helene Klowdasky காதலியாய், படைப்பாளியாய், போராளியாய், அகதியாய் என பெண்ணின் பல் வேறு பரிமாணங்களை யுத்தப்பிரதேசங்களிலிருந்து தேடிக் கண்டெடுத்து அந்தக் கதைகளைத் தன் படைப்புக்களுடாக உரக்கச் சொல்வதே தன் கலையின் நோக்கம் என்கிறார்.

ஏராளமான பெண்களைச் சந்தித்து பல ஆவணப்படங்களை இயக்கியுள்ள இவர், கற்பனைக்கதைகளை விட நிசமான அனுபவங்களில் பயங்களும், துயரமும், திகிலும் மிகப் பிரமாண்டமான அளவில் உள்ளன என்கிறார்.
' என் தாயார் அவுஸ்' விட்ஸ் சிறைகளில நாசிகளின் கொடுமைகளினால் வதைக்கப்பட்டவர். அடக்கு முறையின் கொடுமைகளைப்பற்றிய கதைகளையும் சொல்லாடல்களையும் தினமும் கேட்டு வளர்ந்த எனக்கு யுத்தத்தின் நிழலை மிக அருகிருந்து ஸ்பரிசித்த அனுபவம் இருக்கிறது" என்று கூறுகிறார்.

போரும் பெண்களும் என்ற விடயத்தைப் பற்றியவொரு படத்தை எருவாக்குமாறு கனேடிய தேசிய திரைப்பட நிறுவனம் தன்னைக் கேட்டுக் கொண்ட போது காலனித்துவக்காலத்தின் பின்னர் இரத்தம் சிந்தும் முரண்பாடுகளை கொண்டிருந்த இலங்கை, தன் கவனத்தை ஈர்த்ததாகக் கூறும் இவர் 65,000 உயிர்களை இது வரை பலி கொண்ட இலங்கையின் வன் முறைச் சூழலில் மனித உரிமைகளையும் அதற்காக போராடியவர்களையும் தேடிய போது தவிர்க்கப்பட முடியாதவளாக ராஜனி தென்பட்டாள் என்கிறார்.

வட இலங்கையின் மத்திய வர்க்கத்து இரு சகோதரிகளையும் அவர்களின் அரசியற் பயணத்தையும் பற்றிப் பேச முற்படுவதன் மூலம் ஒரு சமூகத்தின் வரலாற்றை எதிர்ப்புகளை துயரத்தை துரோகங்களை இப்படம் வெவ்வேறு அலகுகளில் விபரிக்கிறது.

இரு சகோதரிகளின் அவசியலார்வம், இலங்கையின் அனைத்து சமூகங்களினதும் விடிவை இடதுசாரிச்சித்தாரந்த வெளிச்சத்தில் தேடியமையும் இன ஒடுக்குதலின் கூர்மையில் தமிழ் தேசியப் போராட்டத்தில் கவனம் கொண்டதும் குறுந்தேசியமும் துரோகத்தனமும் சகோதரப் படுகொலைகளும் கொடுத்த அதிர்ச்சிகளும் முரண்பாடுகளும் விரக்தியும் விவரதிக்கப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

சகோதரி நிர்மலா ராஜனி 1989 இல் படுகொலை செய்யப்பட்டதன் பிறகு முதன் முதலாக இந்த விவரணச் சித்திரத்தில் தன் மௌனம் கலைத்ததாகத் தெரிவித்தள்ளார்.

கடந்த காலங்கள் மீட்டெடுக்கப்பட்டு படமாக்கப்பட்ட காட்சிகளில் ராஜனி கொல்லப்பட்ட போது சின்னஞ் சிறுமியாகவிருந்த இளைய மகள் தாயின் உருவில் நினைவுகளின் நிழலாக உலாவுகிறார்.

ராஜனி வாழ்ந்து மரித்த பிரதேசத்தில் படமாக்க முடியாத நிலையும் பேசத் தயங்கும் மனிதர்களின் அச்சமும் மிகச் சில புகைப்படங்களுமே இருந்த சூழலில் இந்த முயற்சி ஆரம்பிக்கப்பட்டது.

படத்தின் பின்னணியில் தன் குரலில் கதையை விவரிப்பது **The English Patient , Anil's Ghost, In the skin of the Lion** போன்ற நாவல்களினால் அறியப்பட்ட எழுத்தாளரான **Michael Ontaatje.**

இப்படம் நியுயோர்க்கில் நடைபெற்ற **Humanrights Watch** இன் சர்வதேசத் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது.





படிப்பகம்

www.padippakam.com

**ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்**




ஒரு சமுதாயத்தின் நாகரீக வளர்ச்சியை, அந்த சமுதாயத்தின் கலை கலாசாரங்கள், வாழ்க்கையமைப்பு, கல்வியின் தரம்,அந்தச் சமுதாயம் கடைப்பிடிக்கும் நீதி நியாயக்கோட்பாடுகள், வரையறுக்கும் கட்டுப்பாடுகள் என்பன வெளிபடுத்துகின்றன.

இன்று உலகில் நடக்கும் மிகப் பயங்கரமான யுத்தங்களுக்கும்,பயங்கரவாதங்களுக்கும் வேறுபட்ட சமுதாயங்களின் நாகரீக வளர்ச்சியின் பிரதிபலிப்புகளாகும். ஒரு சமுதாயம் கடைப்பிடிக்கும் கொள்கைகள் மற்றச் சமுதாயத்தின் கொள்கைகளுடன் முரண் படுவதால் பிரச்சினைகள் தோற்றமெடுக்கின்றன.

எந்த சமுதாயமா னாலும்,அந்தச் சமுதாயத்தின் வளர்ச்சி,அந்தச் சமுதாயத்தைச் சார்ந்திருக்கும் குடும்ப அமைப்பில் தங்கியிருக்கிறது. சாதாரண மக்களின் குடும்பமும் வாழ்க்கைமுறையும்தான் ஒரு சமுதாயத்தின் ஆணிவேர். வேர் சரியாக ஊன்றாத எந்த மரமும் உறுதியாக வளராது. ஒரு சிறு காற்றுக்கும் நின்று பிடிக்காது. மனிதநேய அடிப்படையில் அமைக்கப் படாத, எந்த உறவும் நீண்ட காலம் நிலைக்காது. உறவுகளின் ஆரம்பம் அன்பில் தொடங்குவது. இயற்கயின் நியதி.யினால் உறவுகளை ஒரு குடும்பத்தின் பொருளாதார இலாபத்தின்,அல்லது ஆண்டான்,அடிமை அடிப்படையில் தொடக்கி வைத்தால் அந்தக் குடும்பத்தின் எதிகாலம் எப்படியிருக்கும் என்பதை யாரும் கற்பனை செய்து பார்க்கலாம்.

அண்மையில் ஒரு கலாச்சார நிகழ்ச்சிக்குப் போயிருந்தபோது, ஒரு பட்டி மன்றத்தில்,இலக்கியம்,சமுதாயம், குடும்பம்,பெண்கள் என்ற அடிப்படையில் சொல்லப்பட்ட பல விடயங்கள் இந்தக் கட்டுரையை எழுதத்தூண்டியது.

புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் கலை நிகழ்ச்சிகளில் ஏதோவொரு பட்டிமன்றம் நடப்பது எப்போதும் எதிபார்க்கப் படவேண்டிய விடயமாகி விட்டது. பட்டிமன்றம் என்பது ஆண்டாண்டு காலமாகத் தொடர்ந்து வரும் கிராமத்துக் கலாநிகழ்ச்சிகளின் ஒரு அம்சம்.



படிப்பகம்

www.padippakam.com

நீண்ட தூரம் வெளியில் பிராயணம் செய்து போகமுடியாத கால கட்டத்தில் கிராமது மக்களுக்காக, படித்த பண்டிதர்கள், புலவர்கள்,இலக்கியம் தெரிந்தவர்கள் (தெரிந்த வரலாற்றின்படி இவர்களில் பெரும்பாலோனோர், அல்லது ஒட்டு மொத்தமாக எல்லோருமே ஆண்கள்) பட்டிமன்றம் நடத்தினார்கள். இம்மன்றங்களில், மக்களுக்குத் தெரியப் பட்டிருந்த மகாபாரதம் இராமயணம், அரிசந்திரன், சிலப்பதிகாரம் போன்ற பழைய கதைகள் திரும்பத் திரும்ப விவாததிற்கு எடுக்கப் பட்டன.

இந்திய இதிகாசங்கள் அத்தனையும் பெண்களின் அடிமைத்தனத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவன. ஆண்களுக்காக நடுச் சபையில் நிர்வாணமாகவேண்டும், தீயில் இறங்க வேண்டும், போன்ற மிக மிகக் கீழ்த்தரமான விடயங்களை, மனித உரிமைக்கு அப்பாற் பட்ட விடயங்களை, சமயம், பண்பு, பெண்களின் கற்பு என்ற போர்வையில் விவாததிற்கு எடுக்கப்பட்டன.

இந்து சமயத்திலுள்ள பெருப்பாலான கருத்துக்கள் மிக பிற்போக்கானவை. சாதி பிரிவினை மூலம் மக்களைப் பிரித்து அடிமை செய்யும் கருத்துக்களையும், பெண் என்பவள் ஆணுக்காக, அவனின் தேவைகளுக்காகக் கடவுளால் படைக்கப்பட்டவள் போன்ற கேவலமான கருத்துக்களையும் கொண்டவை.

தங்களின் விவாதத்தை வலிவு செய்ய இந்தப் “படித்தவர்கள்” அடிக்கடி, புராணங்கள், இதிகாசங்கள், இலக்கியங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டித் தங்கள் திறமையை, புலமையைக் காட்டிக்கொண்டார்கள். இன்று போலவே அன்றும் இந்த”படித்தவர்களுக்கு” எதிர் சொல்ல யாரும் முன்வருவது கிடையாது. ஆண்கள் கை தட்டி ஆரவாரித்து ரசிக்க, பெண்களும் சேர்ந்து கொள்வார்கள். ஆண்களை எதிர்த்துப் பேசுவது’நல்ல’ பெண்களின் இலட்சணமல்ல என்ற கருத்து ஊறிபோயிருந்தது.

இன்று, இலங்கைத் தமிழர்கள், உலகின் பல பாகங்களில், கிட்டத்தட்ட 76 நாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்கிறார்கள். பெரும்பாலோனோர் 1983ம் ஆண்டின் பின் வந்தவர்கள். புலம் பெயர்ந்த நாட்டின்,மொழிப் பிரச்சினையால், அந்நாட்டின் கலை, கலாச்சாரத்துடன் ஒன்றிப் போக முடியாதவர்கள். இவர்கள், தங்கள் கலை,கலாச்சாரத்தில் சந்தோசம் காண்பவர்கள். இது எதிபார்க்க வேண்டிய விடயம்.

ஆரம்ப காலங்களில் எந்த புலம் பெயர்ந்த சமுதாயத்திலும் நடக்கும் விடயங்கள் இவை.

உதாரணமாக, ஆபிரிக்க மக்கள், வெள்ளையர்களால் அமெரிக்காவுக்கு அடிமையாக கொண்டு போனபோது வெள்ளையர்கள் கறுப்பு மக்களின் ஆபிரிக்க இசைக்குத் தடை



படிப்பகம்

www.padippakam.com

போட்டார்கள். சேர்ச்சில் மட்டும் பாட அனுமதிக்கப் பட்டர்கள். அது இன்று "புளூஸ்"என்ற இசையாகப் பரிணாமம் பெற்றிருக்கிறது. கறுப்பு ஆண்கள் 1880ம் ஆண்டுகளில், நியுஓர்லியன் பகுதிகளிலுள்ள விபச்சார விடுதிகளில் தங்கள் முன்னோர்களின் இசையை (காலக்கிரமத்தில் மருவு பட்டது) ஏழை ப்ரன்சியக் கூலிகளுடன் சேர்ந்து க்ளாரினெட்டில் வாசித்தார்கள்.
ஆபிரிக்கவில் மரக் குழலில் வாசிக்கப் பட்ட ஒலி, அமெரிக்கவில், ப்ரான்சிய க்ளாரினெட்டில் கறுப்பு இசையாக ஒலித்தது. இந்த இசைக்கு, ஆங்கில மேல்மட்ட இசை மாதிரி எந்த விதமான வரைமுறையும் கிடையாது. தனி மனித உணர்வுடன் இணைந்தது, அது தான் இன்று உலகெல்லாம் பிரபலமாயிருக்கும் "ஜாஸ;"

இதை ஏன் சொல்ல வேண்டியிருக்கிறதென்றால், புலம் பெயர்ந்த மக்கள் எப்போதும் தாங்கள் சேர்த்திருக்கும் சமுதாயத்துடன் சேர்ந்து, தங்களின் உணர்வை வெளிக் கொண்டுவருவார்கள். இது இயற்கை.புலம் பெயர்ந்த மக்களின் கலையை, அந்நாட்டு மக்களும் ஏற்றுக் கொள்வார்கள்.
உதாரணமாக, இன்று,ஸ்பானிஸ் மொழி பேசும் நாடுகளில் பிரபலமயிருக்கும் "கிற்றார்" அரபு நாட்டின் இசைக்கருவி.
அரபு நாடுகளிலிருந்து, முஸ்லிம் ஏகாதிபத்தியம் பல ஐரோப்பிய நாடுகளை வெற்றி கொண்டபோது ஒருதொருக்கொருத்தரும் ஒவ்வொரு கலாச்சாரதிலிருமிருந்தும் தங்களுக்குப் பிடித்ததை எடுத்துக் கொண்டார்கள்.

முஸ்லிம் கலாசாரம் இந்தியாவை வெற்றி கொண்டபோது" கிற்றார;" என்பது, ரவி சங்கர் வாசிக்கும்"சித்தார்" என்று பெயர் எடுத்தது.
இன்று, ஆங்கில நாட்டுச்சாப்பாடில் அரிசியும் கறியும் ஆங்கிலத்தேசிய உணவுகளில் ஒன்றாகப் பிரகடனப் படுத்தப் பட்டிருக்கிறது. கலாச்சாரங்கள் ஒன்றுடன் ஒன்று மருவுவது தவிர்க்க முடியாதது.மக்கள் எப்போதும் தங்களுக்குத் தேவையானதை எந்தக் கலாச்சாரதிலிருந்தும் எடுத்துக் கொள்வார்கள். இந்தியாவில் உருவெடுத்த யூள் வேதமும், யோகாசனமும் இன்று இங்கிலாந்திற்தான் மிகவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மனித மேன்மைக்குத் தேவையான எந்த விடயத்தையும்,கலாச்சார வளர்ச்சியில் அக்கறை கொண்ட எவரும் எங்கிருந்தாலும் தேடியெடுத்துக் கொள்வார்கள். அதேமாதிரித் தங்கள் கலாச்சாரதிலுள்ள நல்ல கருத்துக்களையும் எந்த சமுதாயமும் உதறி எறிந்தது கிடையாது.

ஆனால், இன்று எங்கள் இளம் தலை முறைப் பெண்கள் இந்தப் பட்டி மன்றப் பிற் போற்குக் கருத்துகளால் எங்களின் கலாச்சாரத்தையே ஒட்டு மொத்தமாக உதறி எறிந்து விடுவார்களோ என்ற பயம் வருகிறது. ஏனென்றால் தாயகங்களிலிருந்து வரும் "இலக்கியவாதிகள்,படித்தவர்கள்" என்போர், புலம் பெயர்ந்த நாடுகளில்



படிப்பகம்

www.padippakam.com

வமும் தமிழர்கள் ஏதோ ஒரு நாகரீகமற்ற காடுகளுக்குள் வாழ்வதாகத் துக்கப்பட்டு, புத்தி சொல்கிறார்கள்.
மேற்கு நாடுகளுக்கு வரச்சொல்லி, இலங்கைத்தமிழரை யாரும் வெற்றிலை வைத்துக் கூப்பிட்டதாகக் கேள்விப்பட்டில்லை. வந்தவர்கள் பலர் மிக மிக வசதியாகவும் வாழ்கிறார்கள். மேற்கு நாடுகள் சமய,மொழி,இன,பால் விதியாசங்களின்றி எல்லோரையும் சமத்துவமாக நடத்துவதில் அக்கறை கொண்டவை.ஆரம்பப் படசாலைகளிலேயே, ஐந்து வயதுக் குழந்தைக்கும் சமத்துவத்தின் தத்துவத்தையுணர்த்தும் நாடுகள் இவை. ஆனால் இங்கு வரும் " பட்டி மன்ற"ப் பிரமுகர்கள், பெண்கள் எப்படி வாழவேண்டும் என்று புத்தி சொல்கிறார்கள்.

இவர்களை அழைக்கும் 'புலம் பெயர்ந்த தமிழ்ப் பிரமுகர்கள்'. இங்கு வாழும், வளரும், படிக்கும், பட்டம் பெறும்,வேலை செய்யும் பெண்களைப் பற்றி மிக மிக மட்டமான அபிபிராயம் வைத்திருப்பது அவர்கள் பேச்சிலிருந்து அப்பட்டமாகத் தெரிகிறது. அதன் பிரதி பலிப்புத்தான் இந்தப் பட்டி மன்றங்கள்.

இந்தப் பட்டி மன்ற வாதிகள், அவ்வையாரையும், திருவள்ளுவரையும் மேற்கோள் காட்டுகிறார்கள்.லண்டனிலும் பரிசிலும், சுவில்சர்லந்து, ஜேர்மனியில் வாழும் குழந்தைகளை," கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்" என்ற நியதிப் படி வாழ எதிர்பார்ப்பது எவ்வளவு முட்டள்த்தனமான கனவு?.

அவர்கள் 2000 யிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதியவை இன்றைய வாழ்க்கை முறைக்குச் சரி வருமா?

இந்தப் பிரமுகர்கள் தங்கள் கனவுலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. மேலை நாட்டில் வாழும் தாய்கள் இவர்களின் கற்பனா வாததிற்குத் தங்கள் குழந்தைகளைத் திருமணம் என்ற பெயரில் பலி கொடுக்கக் கூடாது.

படித்த பெண்கள் திமிர் பிடித்தவர்கள், அவர்களை அடக்கி வைப்பது ஒரு கணவனின் 'பணி,உரிமை'(!!!) என்று ஓலமிட்டார் இன்னொரு பிரமுகர். இந்தப் பட்டி மன்ற வாதிகள் பொழுது போக்கு என்ற பெயரில், இளம் மனதில் குழப்பங்களையுண்டாக்குகிறார்கள். பட்டிமன்றம் நடத்தும் போது, சுவாரசியம் என்ற பெயரில் பெண்களை மட்டம் தட்டிப் பேசுபவர்களுக்கு அவர்களின் தாய், தங்கை, தமக்கை, மகள் என்போரும் பெண்கள்தானென்று தெரிவதில்லையா?

"பெண் அடிமைத்தனம் என்று பேசுவதெல்லம் பொய், படுக்கையறையில் காதல், காமமாகும்போது ஆண்கள்தான் பெண்களிடம் அடிமையாகிறான் என்று 'தத்துவம்' சொன்னார் ஒருத்தர்.

'பெண்களின் தலையணை மந்திரதிற்குப் பலியான ஆண்களுக்குத் தெரியும் யார் யாரை அடிமைகளாக



படிப்பகம்

www.padippakam.com

நடத்துகிறார்களென்று' என்று சுவாரசிய (????) மாகப் பேசினார் இன்னொரு பெரியவர்.

இன்று, வளரும் நாடுகளில் உழைக்கும் பெண்களின் தொகை கூடிக் கொண்டு வருகிறது.
தங்கள் உரிமைக்குப் போராட அவர்கள் தயங்கப் போவதில்லை. இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் ஒடுக்கப் பட்ட பெண்களின் மௌனம் கலைகிறது.
பாகிஸ்தான் முஸ்லிம் கிராமம் ஒன்றில், தம்பி செய்த குற்றத்திற்காக ஒரு முஸ்லிம் தமக்கை 14 முஸ்லிம் ஆண்களால் பாலியல் வன்கொடுமைகளுக்கானாதை எதிர்த்து பாகிஸ்தானில் பல பெண் இயக்கங்கங்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளன.

இந்தியக் கிராமம் ஒன்றில் ஒரு முஸ்லிம் பெண் தனது மாமனாரால் வன்முறையாகப் பாலியல் துன்பத்திற்காளானாள்.

அக்கிராமத்து, முஸ்லிம் தலமை, அந்தப் பெண், தனது மாமனாரைக் கணவனாகவும், சொந்தக் கணவனை மகனாகவும் ஏற்றுக் கொள்ளச் சொன்னது. இந்தத் தீர்ப்பையெதித்து இந்தியாவில் பல பெண்கள் போராடுகிறார்கள்.

சமய,கலாச்சாரத்தை காட்டிப் பெண்களையடக்கி வைக்கத்தான் இந்த மாதிரியான குழுக்கள் முன்நிற்கின்றன.

இன்று, தமிழ் பேசும் மக்களிடையே பட்டிமன்றம் மூலம் பிற் போக்கு வாதங்களை முன்னெடுக்கும் தமிழ் "அறிஞர்கள;" முஸ்லிம் பெண்களை அடிமைகளாய் நடத்தும், ஆப்கானிஸ்தானின் பிற்போற்கு வாத 'தலிபான்களை' விடப் பயங்கரவாதிகள். கலாச்சாரதின் பெயரைச் சொல்லிக் கொண்டு பெண் அடிமைத்தனதை வளர்ப்பவர்கள்.
இந்த மாதிரி சுவாரசியமான நிகழ்ச்சிகள் தமிழ் ஊடகங்களில் வருவது ஒரு வளரும் சமுதாயத்தைச் சேர்ந்த பெண்களை அவமானப் படுத்துவதாகும்

புலம் பெயர்ந்த தமிழ் இளைஞர்களிடையே, வன்செயல்கள் கூடிக் கொண்டு வருகின்றதை பத்திரிகைகள் மூலமாக அறிகிறோம். பட்டிமன்றங்களையுண்டாக்கி, பெண்ணடிமைத்தனம், பிற்போக்குச் சிந்தனைகளை வளர்க்காமல், புலம் பெயர்ந்த மக்களின் வாழ்க்கை முன்னேற்றதிற்கு உழைத்தால் அது ஒரு நன்மையான சமுதாயப் பணியாகவிருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com



**ஓவியம் : ஆரதி**




படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கனடாவில் கருமைய பெண்கள் பயிற்சி பட்டறையும் எமது அனுபவமும்.



கடந்த வருடம் கனடாவில் பெண்கள் சம்பந்தமான பிரச்சனைகளை கலந்துரையாடுவதற்கும் அதன் மூலம் அவர்களின் பிரச்சனைகளை மேடை நிகழ்வாக கொண்டு வருவதற்கும் ஒரு பயிற்சி பட்டறை கருமையத்தால் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பயிற்சி பட்டறை கனடாவில் முதல் பெண்கள் பயிற்சி பட்டறை என்பது குறிப்பிடத்தக்கதாகும். பெண்கள் பட்டறையினூடாக எனக்கு கிடைத்த அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன். பெண்ணியம் என்றால் என்ன? பெண்ணியம் என்ற பதம் எவ்வாறு தோன்றியது. ஏன் தோன்றியது. இப்பிடி பல கேள்விகள் என் மனதில் தோன்றினாலும் எனது ஒரே பதில் அடிப்படைக் காரணமான பெண்களின் பிரச்சனைகள் என்பகாகவே அமையும். பிரச்சனைகளை எதிர்நோக்கும் பெண்களை மூன்று விதமாக பிரிக்கலாம். ஒன்றில் பெண்கள் தங்களுடைய பிரச்சனையை அறிந்து ஏதோ விதமாக வெளிக்கொண்டு வரக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அடுத்தது பெண்களைச்சுற்றி அல்லது தன்னைச்சுற்றி பிரச்சனைகள் இருக்கிறது என்று தெரிந்தும் வெளிக்கொண்டு வரத்தெரியாதவர்களாக அல்லது வெளியே வரத்தெரியாதவர்களாக இருக்கிறார்கள். மூன்றாவது தங்களுக்கு இப்பிடி ஒரு பிரச்சனை இருக்கிறது என்று தெரியாமல் பிரச்சனையில் இருந்து வெளியில் வரமுடியாதவர்களாக இருக்கிறார்கள். இதில் என்னை முக்கியமாக பாதிக்கும் விடயம் தங்களுடைய பிரச்சனைகளை உணராமல் வாழும் பெண்கள். இவற்றையெல்லாம் நோக்கமாகக் கொண்டு கருமையத்தால் உருவாக்கப்பட்டது தான் பெண்கள் பயிற்சி பட்டறை.

இந்தப்பயிற்சிப் பட்டறையில் சுமாராக 50 பேர் வயது வித்தியாசமின்றி சிறுபிள்ளை முதல் வயது முதிர்ந்தவர் வரை பங்குபற்றி இருந்தார்கள். பெண்ணியம் என்றால் என்ன என்று தெரிந்து வந்ததை விட தெரியாமல் இந்தப்பட்டறை மூலம் அனுபவத்தை பெற்றவர்களும் இருக்கிறார்கள் என்பது தான் இந்தப் பட்டறையின் முக்கிய வெற்றியாகச் சொல்லலாம்.. எங்களுடைய அனுபவங்களை பகிர்ந்தது மட்டுமல்ல அது சம்பந்தமான அனுபவம் வாய்ந்தவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

அந்தத் துறையோடு வேலை செய்பவர்கள் வருகை தந்து தங்களுடைய அறிவு அனுபவங்களை எங்களுடன் பகிரந்து கொண்டார்கள். பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டாலும் அதிலிருந்து ஆறு விடயங்கள் மட்டுமே நாடகமாக்கப்பட்டது. ஒவ்வொரு நாடகமும் 10-15 நிமிடத்திற்குள் உட்பட்டதாக ஆக்கியிருந்தோம். ஒவ்வொரு பெண்ணிலிருந்தும் வெளிவந்த சொற்களிலிருந்து உருவாகியதே இந்த நாடகப் பிரதிகள். வீட்டுக்கு வீடு சின்னத்திரை நாடகம் , தமிழ் ஆங்கில திரைப்படங்கள் வீட்டுவேலைகள் அலுவலகம் பிள்ளை குட்டிகளின் மத்தியிலும் பெண்கள் தங்கள் நேரத்தை ஒதுக்கி இப்பயிற்சி பட்டறையில் பங்கேற்றியது வரவேற்கத்தக்க ஒன்று.

'கட்டவிழ்ப்பு' என்பதே நாடகத்தின் தலைப்பு. ஒரு பெண்ணுக்கு எவ்வாறு கருவிலிருந்து கல்லறை வரை கொடுமைகள் தொடர்கிறது என்பதை வெளிக்கொண்டு வருவதே எமது நோக்கமாக அமைந்திருந்தது. பெண்ணாக பிறப்பதால் ஒவ்வொரு பருவங்களிலும் அவள் அனுபவிக்கும் அடக்குமுறைகள் கொடுமைகளை கருவாகி பிறந்ததிலிருந்து வயோதிப அம்மாவாகும் வரையில் முடிந்த வரையில் நிரல் படுத்தி நாடகமாக்கிய விடயங்களை கீழே தொகுத்திருக்கிறேன்.

- கருச்சிதைப்பு: ஒரு பெண் கருவுற்றவுடன் கருவை கலைப்பதா இல்லையா என்பதை சமூகமும் பெரும்பாலான ஆண்களும் அவர்களது உறவினர்களும் தான் இன்னும் தீரமானிக்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். கருவை கலைப்பதுக்கான உரிமை முற்றுமுழுதாக ஒரு பெண்ணினுடையது.

- **கள்ளிப்பால்:** இந்தியாவில் சில கிராமங்களில் ஒரு பெண் குழந்தை பிறந்து விட்டால் அக்குழந்தை கள்ளிப்பாலுக்கு இரையாகிறாள்.

- **சாமத்தியசடங்கு:** இச்சடங்கு ஆரம்ப காலங்களில் ஒரு பெண் கல்யாண சந்தைக்கு தயாராகி விட்டாள் என்பதை நோக்கமாக கொண்டு உருவாகக்கப்பட்டாலும் இங்கு இருக்கும் பெற்றோர்கள் தங்களுடைய பொருளாதார வசதியை காட்டுவதற்கு பெண் பிள்ளைகளை ஒரு பொருளாக பொம்மையாக கருவியாக பாவிக்கிறார்கள்.

- **இளைய தலைமுறையினர்:** பெற்றோர்களால் ஆண்பிள்ளைக்கும் பிள்ளைக்கும் இடையில் காட்டப்படும் பாகுபாடுகள்.

***சீதனம்::*** சீதனக்கொடுமை இன்னும் தொடர்கிறது. "மாப்பிள்ளை ஒன்று விலைக்கு வருகிறது. 50.000 கனடிய டொலர்கள் வேண்டிய நகைகள் எல்லாம் 22 கரட்டில் தான் இருக்க வேண்டும். Bank loan இருந்தால் கட்டி முடிச்சிட



படிப்பகம்

www.padippakam.com

வேண்டும்.
Markham இல் ஒரு வீடிருந்தால்
போதும்
வேறொன்றும் வேண்டாம்

**- Abuse:** ஏதோ ஒரு காரணத்தால் பெண்கள் மனநோயால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். தடுப்பதற்கு பல வழிகளில் Counseling உம் ஒரு தீர்வாக அமையும்.. இங்கு இப்படியான சேவைகள் இருந்தும் பலபேர் பாவிப்பதற்கு தெரியாமல் இருக்கிறார்கள் பயப்பிடுகிறார்கள்.

**- விதவையும் சமூகமும்:** சமூகத்தால் ஒரு விதவை தாய் எவ்வாறு பார்க்கப்படுகிறாள். தனது சொந்தப் பெண் கல்யாணம் செய்யும் போது முன்னுக்கு நின்று ஆசீர் வாதம் செய்ய முடியாத ஒரு விதவை தாய். முழுவியளத்திற்கு முன்னுக்க நிற்க முடியாத தாய். நல்ல காரியத்தில் பங்கு பற்ற முடியாத தாய்.

இப்படியான கொடுமைச் சிறையை உடைத்து வெளிவரும் பெண்கள் தான் இந்தக் கட்டவிழ்ப்பு.

இந்நாடகம் மேடையேறிய போது பலபேருடைய கேள்வி ஏன் இந்தியாவில் நடக்கும் ஒரு விடயத்தை இங்கு காட்டவேண்டும் என்பது. இப்பட்டறையின் நோக்கம் கனடாவில் இருக்கும் பெண்களின் நிலை மட்டுமன்றி உலகளாவிய ரீதியல் இருக்கும் எல்லா பெண்களின் பிரச்சனைகளையும் வெளிக் கொண்டு வருவதே. இன்னும் சில பேரின் கேள்விகள் இவற்றை விட முக்கியமான விடயங்கள் இருக்கின்றன ஏன் அவற்றை கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை என்பது. இது தான் எங்களது முதல் பெண்கள் பட்டறையிலிருந்து உருவாகிய விடயங்கள். எதிர்காலத்தில் எங்களால் இயலுமான முயற்சி எடுத்து மற்ற விடயங்களையும் கவனத்தில் எடுத்துக்கொள்வோம்.

ஒவ்வொரு கிழமையும் சந்திக்கும் போதும் யோகா பயிற்சியுடனேயே discussion ஆரம்பிப்போம். இதில் முக்கியமான விடயம் என்ன என்றால் வயது முதிரந்த அம்மாமார் எங்களுடன் பயிற்சியில் பங்கேற்றியது. அது எங்களுக்கு வித்தியாசமான அனுபவமாக இருந்தது. மூன்று மாத d iscussion உம் மூன்று மாத கால rehearsal இன் பின் March மாதம் 2005 இந்நாடகங்கள் மேடையேற்றப்பட்டது. இப்பட்டறையை செய்து என்னத்தை பெற்றுக்கொண்டோம் என்று கேட்டால் அனுபவத்துடன் சில வெற்றிகள் என்று சொல்லலாம். இங்கு வெற்றி என்று குறிப்பிட்டது நாங்கள் சொல்ல வந்த செய்திகள் சென்றடைந்திருக்கின்றன. இங்கு சில உதாரணங்களை கூறலாம் என்று நினைக்கிறேன். நாடகம் முடிந்தவுடன் ஒருவர் கூறியது "இந்த நாடகத்தை முதலே போட்டிருந்தால் என்ரை மகளுக்கு சாமத்திய சடங்கு செய்திருக்க மாட்டன்". இன்னுமொரு உதாரணம் நாடகத்தில் பங்கு பற்றிய அம்மா கூறியது "தாலி என்ற ஒரு பிழையான விடயத்திற்கு பின்னால்



படிப்பகம்

www.padippakam.com

இவ்வளவு இருக்கிறது என்பதை பட்டறைக்கு வந்த படியால் தான் தெரிந்து கொண்டேன்". முக்கியமாக இங்கு குறிப்பிடப் பட வேண்டியவர்கள் நாங்கள் அதாவது பங்கு பற்றியவர்கள். குளிரைக் கூட பொருட்படுததாது கிழமையில் ஒரு நாள் rehearsal க்காக தங்களுடைய குடும்ப பிரச்சனைகள் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளை போன்ற பொறுப்புக்களின் மத்தியில் ஆர்வமாக வந்து நாடகத்தை மேடை வரை கொண்டு சென்றிருக்கிறோம் என்பது பெரிய ஒரு விடயம்.



கருமையத்தால் கனடாவில் தொடங்கப்பட்ட இந்த முதல் முயற்சி எதிர்காலத்தில் பெண்கள் பிரச்சனைகள் சம்மந்தமான முன்னெடுப்புகளுக்கு புதிய பல வாசல்களைத் திறந்து விடும் என்று நம்புகின்றேன்.

**நந்தினி சபேசன், கனடா**



படிப்பகம்

www.padippakam.com



# பெண்கள் சந்திப்பு மலர் 2004
*ஒரு பார்வை*

சந்திரவதனா செல்வகுமாரன்

**சுயம், சுதந்திரம்... போன்றவற்றின் பொருள் சரியாக உணரப்படுகிறதா என்ற சந்தேகம் அடிக்கடி எழுகிறது. பெண்விடுதலை என்றால் என்ன என்பது பலருக்கும் புரியவில்லை.**

இவ்வளவு கொடுத்து விட்டோமே! போதாதா? என்றும், இதற்கு இதற்கு எல்லாம் அனுமதியளிக்கிறோமோ! திருப்தியில்லையா? என்றும், இதற்கு மேல் என்ன வேண்டும்? என்றும் ஆணாதிக்க உலகிலிருந்து வெளிவர முடியாதவர்களும், வெளிவந்து விட்டதாக நினைத்துக் கொண்டிருப்பவர்களும் சற்றும் தயங்காமல் கேட்கிறார்கள். அளந்து தருவதற்கும் நிறுத்து வாங்குவதற்கும் சுயமும், சுதந்திரமும் என்ன கடைச்சரக்குகளா?

ஒரு பெண் வேலைக்குப் போனாலோ, அல்லது ஒரு ஆண் சமைத்தாலோ அந்தக் குடும்பத்துப் பெண்கள் விடுதலை பெற்று விட்டார்கள் என்று கூட்டாகப் பாடத் தொடங்கி விடுகிறார்கள். பெண்களுக்குள்ள பிரச்சனைகள், அதிலிருந்து வெளிவருவதற்கான வழிகள், சில உணர்த்துதல்கள், ஆலோசனைகள்... போன்றவற்றை யாராவது சொன்னாலோ அல்லது எழுதினாலோ போதும், அவளுக்கு பெண்ணியவாதி என்று முத்திரை குத்துவது மட்டுமல்லாமல் ஒரு இளக்காரப் பார்வை, கிண்டல் பேச்சு... என்று எதிர்க்குரல் கொடுக்கத் தொடங்கி விடுகிறது சமூகம்.

இத்தகையதொரு இக்கட்டான, புரிந்துணர்வற்ற சமூகச் சூழ்நிலையில் 39க்கு மேற்பட்ட பெண் படைப்பாளிகளின் படைப்புக்களுடன், பெண்கள் சந்திப்புக் குழுவினரால்(றஞ்சி-சுவிஸ், தேவா-ஜேர்மனி, உமா-ஜேர்மனி, விஜி-பிரான்ஸ்; நிருபா-ஜேர்மனி) எட்டாவது பெண்கள் சந்திப்புமலர் அழகாகவும் நேர்த்தியாகவும் வெளியிட்டு வைக்கப் பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

"பெண்கள் சஞ்சிகையா?" என்று முகம் சுளித்தவர்களும், "பெண்களுக்கு என்று தனியாக வெளிவரும் சஞ்சிகையில் நான் எழுதவில்லை. எனது எழுத்தின் மதிப்பை அது குறைத்து விடும்..." என்று தயங்கியவர்களும், இப்போது தாமாகவே முன் வந்து படைப்புக்களைத் தருவதற்கும், குறிப்பிட்ட ஒரு வட்டத்துக்குள்ளேயே நின்றவர்கள் துணிந்து பல்வேறு விடயங்களிலும் கால் வைத்திருப்பதற்கும் இப்படியான வெளியீடுகள் பெரிதும் துணை நிற்கின்றன என்பது யாராலும் மறுக்க முடியாத ஒன்று.

அச்சு, பதிப்பு, வெளியீடு... போன்ற பெரும்பான்மையான வேலைகள் ஆண்களுடையதாகவே கருதப்பட்டு வந்த காலம் மாறி, இப்போது பெண்களாலேயே செய்யப் படுவது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாக உள்ளது. பெண்கள் சந்திப்பு மலரின் ஆக்கங்கள் மட்டுமல்லாமல் மலரின் வடிவமைப்பும் படிப்படியாக பாரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

பெண்கள் சந்திப்புமலர் 2004இன் அட்டைப்படம் அர்த்தமுள்ள அழகிய நவீன ஓவியத்துடன் கண்களைக் கவருகிறது. முன் அட்டைப் படத்தை வாசுகியும் பின் அட்டைப் படத்தை அருந்ததியும் வரைந்துள்ளார்கள். மலரில் இடம் பெற்ற ஆக்கங்களுக்கு வலுவும் அழகும் சேர்ப்பனவையாக மோனிகா, சுகந்தி , ஆரதி, அருந்ததி, வாசுகி... போன்றோரின் ஓவியங்கள் மலரினுள்ளே பொருத்தமாக நிறைந்திருப்பது மலரின் இன்னொரு சிறப்பம்சம்.

குறிப்பிட்டுச் சொல்லும் விதமாக, மலரில் 10 சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. பத்தையும் வெவ்வேறு கோணங்களிலிருந்து பத்துப் பெண்கள் எழுதியுள்ளார்கள். பத்துமே நன்றாக அமைந்த கதைகள்.

பாமாவின் - அந்தி - கதை இவைகளுள் பிரத்தியேகமாக நிற்கிறது. அவருக்கேயுரிய வட்டார வழக்குச் சொற்கள் பலதின் அர்த்தம் புரியாவிட்டாலும் கதையின் ஓட்டமும், கதை சொல்லும் விதமும் ஒரு பிசகலின்றி அமைதியாக, நேர்த்தியாக எம்மை கதையோடு அழைத்துச் செல்கின்றது. குழந்தை, குட்டி என்று பெற்று அவர்களை வளர்த்து, ஆளாக்கி அவர்களுக்கென்று வாழ்வுகளை அமைத்துக் கொடுத்து விட்டு, தான் என்ற வீம்போடு தனியாக வாழும் தவசிப் பாட்டியின் கதை சாதாரண கதைதான். வெள்ளம் வருமளவு பெய்து விட்ட மழை நிறைந்திருக்கும் ஒரு குழியில் ஒரு அந்திப் பொழுதில் தவசிப்பாட்டி அநியாயமாக ஆனாலும் தான் நினைத்தது போலவே யாருக்கும் பாரமாக இல்லாமல்... இறந்து விட்டதை, மனசை விட்டு அகலாத படி பாமா சொன்ன விதம் அருமை. வாசித்துப் பல நாட்களாகியும் அகலாமல் மனசுக்குள்ளேயே உருண்டு கொண்டிருந்த கதை.

நிருபாவின் - மழை ஏன் வந்தது -



படிப்பகம்

www.padippakam.com

பாலியல் துர்ப்பிரயோகத்துக்கு அல்லது பாலியல் சுரண்டலுக்குள் தன் பால்ய காலத்து இனிமைகளை எல்லாம் தொலைத்து நிற்கும் ஒரு சிறுமியின் பரிதாபக்கதை. மிகவும் தத்ரூபமாக நிருபா அதை எழுதியுள்ளார். பாலியல் துன்புறுத்தலை மட்டுமல்லாது, அந்த வயதில் துளசியோடு பின்னியிருக்கும் வாழ்வின் அசைவுகளையும், அதனூடே இடையிடையே நாகம் போலப் படம் விரித்தாடும் பாலியல் தொல்லை ஒரு சிறுமியின் வாழ்வை எத்தனை தூரம் இம்சைப் படுத்துகிறது என்பதையுயும் நிருபா சொன்ன விதம் யதார்த்தமாக அமைந்துள்ளது. பேச்சுத்தமிழ்தான் என்பதால் ஒரு இயல்புநிலை தெரிகிறது. யாரது...? அப்பாவா..! அண்ணாவா...! மாமாவா...! என்று தெரியாமல் குழம்பும் அந்தச் சிறுமி துளசி தன் வயசுக்குரிய சந்தோசங்களையெல்லாம் அந்த அருவருப்புக்குள் தொலைத்து விட்டு தன்னைக் குற்றவாளியாக நினைத்தோ என்னவோ பெற்றதாயிடம் கூட சொல்லாமல் மறுகுகிறாள்.

நண்பியிடம் கூட மனம் விட்டுப் பேசத் தைரியமின்றிய துளசியின் இயலாமை, எமது சமூகத்தில் பல குழந்தைகளுக்கும் உள்ள அவலந்தான். இந்த நிலை எமது சமூகத்தில் மட்டுந்தானென்றில்லை. ஐரோப்பிய சமூகங்களிலும் கூட குழந்தைகளோடு மனம் விட்டுப் பேசாத பெற்றோரின் குழந்தைகள் இப்படியான கொடுமைகளை வெளியில் சொல்லும் தைரியமின்றி மிகுந்த இம்சைக்கும், மனஉளைச்சலுக்கும் ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களது வாழ்வு இந்தப் பருவத்தில் மட்டுமல்லாது தொடரும் காலங்களிலும் இதன் பாதிப்பை பிரதிபலிப்பதாய் அமைந்திருப்பது ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இப்படியான கதைகளை வாசிக்கும் போது தமது பெண்குழந்தைகளுக்கு இப்படியொரு நிலை ஏற்படுவதற்கான சாத்தியம் இந்த உலகில் இருக்கிறது என்பதை தாய்மார் கண்டிப்பாக உணர்ந்து கொள்வார்கள்.

"இவ இப்பிடியான கதை மட்டுந்தான் எழுதுவா" என்று ஒரு சாரார் குரல் கொடுப்பது கேட்காமல் இல்லை. இவைகள் வெறுமே கதைகளல்ல. நியத்தின் வடிவங்கள். சமூகப் பிரச்சனைகளை வெளியில் கொண்டு வரும் இப்படியான எழுத்துக்களால் எத்தனையோ குழந்தைகள் இந்தத் தொல்லைகளிலிருந்து காப்பாற்றப் படுகிறார்கள் என்ற உண்மையை நாம் தயங்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும். நிருபாவின் எழுத்துக்களில், அதாவது ஒரு சமூகப் பிரச்சனையை எடுத்துச் சொல்லும் விதத்தில் ஒரு தனித்துவம் இருப்பதை மறுக்க முடியாது.

சுமதியின் - நாகதோஷம் - அருமையான கருப்பொருளைக் கொண்ட கதை. எந்த யுகத்திலும் அழகுக்குத்தான் முதலிடம். நல்ல வெள்ளையா... சிவப்பா... வடிவான... என்ற ரீதியில் பெண் தேடும் படலம் இன்னும் நின்ற பாடில்லை. காலாகாலத்துக்கும் இந்தப் பெண்



படிப்பகம்

www.padippakam.com

தேடுதல் வேட்டையில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்களும் இல்லை. வைப்பாட்டியாக... ஆசைநாயகியாக... அவசரத்துக்காக... என்று எந்தக் கோணங்கியோடும் இணைந்து இச்சை தீர்த்துக் கொள்பவர்கள் மனைவி மட்டும் சுத்தமாக... அழகாக... வெள்ளையாக வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இங்கேயும், வரப்போறவன் எப்படி இருந்தாலும் அவன் ஆம்பிளை என்பதை மட்டுந்தான் பெண்ணானவள் கவனிக்க வேண்டும். ஆனால் பெண் மட்டும் அழகாக லட்சணமாக இருக்க வேண்டும். தப்பித்தவறி கறுப்பாய் இவர்கள் வகுத்து வைத்த லட்சணங்களுக்குள் அடங்காதவளாய் இருந்து விட்டால் போதும் அவள் உணர்வுகளும், ஆசைகளும் தனிமைக்குள் தீய்ந்து போய் விடும். இதனோடு சாத்திரம் சம்பிரதாயம் என்ற பெயரில் தோஷங்கள் வேறு அவளைப் பொசுக்கி விடும்.

இப்படியான அவலத்தில் மனசு பொசுங்கிப் போன ஒரு பெண் இன்றைய வசதிகளைப் பயன் படுத்தி செயற்கையாய் தன்னை அழகு படுத்திய போது அவளது பருவ வயதில் அவளை அழகில்லையென்று விட்டுச் சென்ற அதே ஆடவன் அவளைச் சுகிக்க வருகிறான். அப்போது அவளும் அவனிடம் அவனது ஆண்மையைக் குறைத்துக் கூறுவது பழிதீர்ப்பதாய் வக்கிரமானதாய்த் தெரியலாம். காதலித்தவன் அல்லது காதலிப்பது போல நடித்தவன் அவளுக்கு மார்பு போதவில்லை என்பதற்காகவும் கறுப்பாய் இருக்கிறாள் என்பதற்காகவும் மணமுடிக்காது போன போது எவருக்கும் அது வக்கிரமாயோ பாலியல் சார்ந்ததாகவோ தெரியவில்லைத்தானே!

பெண்களை, பாலியல்தேவையை பூர்த்தி செய்யும் இச்சைப்பொருளாக மட்டுமே நோக்கும் ஆண்களுக்கு சாட்டையடி கொடுப்பது போல அமைந்த கதை நாகதோஷம்.

கமலா வாசுகியின் - கண்டறியாத பிள்ளை - கதை ஒரு பெண்ணுக்கு முதலில் ஏற்படும் சூல் முட்டைகளின் வெளியேற்றத்தை, பெருவிழாவாக்கும் எம்மவரிடையே உள்ள அறியாமையையும், அது அப்பெண் குழந்தையின் மனதை எந்தளவுக்குப் பாதிக்கிறது என்பதைப் பல பெற்றோர்கள் இன்னும் உணர்ந்து கொள்ளாமல் இருப்பதையும், சிலர் உணர்ந்தாலும் மற்றவர்கள் போலச் சடங்கு சம்பிரதாயம் செய்யாவிட்டால் தாம் சமூகத்தில் இருந்து ஒரு படி இறங்கி விடுவோம் என நினைத்து செயற்படுவதையும், பெண்குழந்தைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத உறவுகளின் தன்மையையும் அதனால் ஒரு பெண்குழந்தையின் மனதில் ஏற்படுத்தும் விசனத்தையும் சொல்கிறது.

ஜெயந்தியின் - தையல் - குழந்தை பெற்றுக் கொண்ட பச்சை உடலோடு வலியும் உணர்வுமாய் தவிக்கும் ஒரு பெண்ணின் கதை. குழந்தை பெறுவதை



படிப்பகம்

www.padippakam.com

விடத் தையல் போடுவதுதான் அதிகமாய் வலிக்கும் என்பார்கள். கதையின் நாயகி சுதா வலியோடு கணவனுக்காய் காத்திருக்கும் போது புண்ணியாஜனத்துக்கு வந்தவன் அவள் உணர்வுகளை மதிக்காமல் போனது கூட மனதைப் பாதிக்கவில்லை. அன்பாய் ஆதரவாய் பேச வருவான் என்று அவள் காத்திருக்க நடுஇரவில் தன் உடற்சுகத்துக்காக அவளைத் தேடி வருவது மனதை நெருட வைக்கிறது.

விஜயலட்சுமி சேகரின் - குற்றமில்லை - சிறுகதை நான்கு சுவர்களுக்குள் வாழ்ந்த பெண் சுவர் ஏறிக்குதித்து கொலை செய்ய வரும் காமுகன் முன்னே ஆபரணம் ஆவதா ஆயுதம் ஆவதா? என்று கேட்கிறது. ஆயுதம் ஆவதுதான் சரியென்று நாம் சொன்னாலும் சட்டமும் சமூகமும் கொலைகாரியென்றும் நடத்தை கெட்டவள் என்றும் பாதகமாக அவள் மீது பழி சுமத்தியுள்ளன.

சாந்தினி வரதராஜனின் - வீடு - புலம்பெயர்ந்து வாழும் சுகந்தி சொந்த நாட்டை நோக்கிப் பயணிப்பதையும், அங்கு தான் பிறந்து வளர்ந்து வாழ்ந்த வீட்டுக்கு சோகங்களையும் சுகங்களையும் நினைவுகளில் சுமந்து கொண்டு செல்வதையும் உணர்வுகளோடு சொல்கிறது. புலம்பெயர்ந்த எல்லோரின் மனதுக்குள்ளும் பிரிவும் துயரும் எந்தளவுக்குப் படிந்து போயிருக்கிறது என்பதை நெகிழ்வோடு சொல்லியுள்ள கதை.

சந்திரா ரவீந்திரனின் - பனிமழையும் ஒரு சனிக்கிழமை மாலையும் - சுப்பர்மார்க்கெட்டில் வேலை செய்யும் புலம் பெயர்ந்த ஒரு தமிழ்குடும்பப் பெண்ணின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதாய் அமைந்துள்ள கதை. பனிமழையின் குளிரையும், அழகையும் அவர் வர்ணித்திருந்ததையும் விட அவர் கடமையாற்றும் சுப்பர்மார்க்கெட்டினுள்ளான வேலைகளையும், அனுபவங்களையும், நடைமுறைகளையும் எங்கள் கண்முன்னும் அழகாகக் கொண்டு வந்திருந்தார்.

வேலையிடத்தில் தனது கடமைகளை அதற்கேயுரிய சிரத்தையுடன் செய்து விட்டு ஒரு மனைவியாக, தாயாக வீடு திரும்பும் போது வீட்டின் கோலங்கள் ஒரு ஒரு குடும்பப்பெண்ணின் மனதை எந்தளவுக்கு நெகிழச் செய்யும் என்பதை நன்றாகச் சொல்லியிருந்தார். இருந்தாலும் சந்திரா ரவீந்திரனின் கதை என்ற எனது எதிர்பார்ப்புக்கு ஈடாக அக்கதை அமையவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

உமாவின் - மரியானா - கதை மருத்துவமனைக் கட்டிலில் வலியுடன் படுத்திருக்கும் போது வைத்தியத்துக்காக அவள் அறையைப் பங்கு போட வந்த ஒரு ஜேர்மனியப் பெண்ணுடனான உரையாடல். மிகவும் இதமாக, படிக்கும் போது மனதை வருடும் உணர்வைத் தரக் கூடிய விதமாக நன்றாக அமைந்துள்ளது. வயதானாலும் வயதை ஒரு



படிப்பகம்

www.padippakam.com

பொருட்டாக்காமல் அறிவோடு பேசும் தொண்ணூற்றைந்து வயதுச் சிறுமியின் பேச்சுக்களும் அதை உமா சொன்ன விதமும் மிகவும் நன்றாக உள்ளன.

ஷாமிலாவின் - சிறகிழந்த பறவையாய் - நாட்டு நிலைமையை உத்தேசித்து வெளிநாட்டில் பெரியப்பாவோடு இருந்து படிக்கச் செல்லும் ஒரு சிறுமியின் வாழ்வு எப்படி சிதைக்கப் படுகிறது என்று சொல்லும் கதை. ஐம்பது வயதைத் தாண்டிய, அப்பா ஸ்தானத்தில் இருக்க வேண்டிய பெரியப்பாவே அவளைப் பாலியல் இச்சைக்கு பலியாக்க முயல்வதும், அவள் இணங்காத பட்சத்தில் வற்புறுத்துவதும் பாலியல் சுரண்டல் என்பது எமது சமூகத்தில் எந்தளவுக்குப் புரையோடிப் போயிருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

சிறகுகளை விரித்துக் கொண்டு தன் வீட்டை விட்டுப் பறக்கத் தொடங்கும் அந்தச் சிறுமியின் கண்களில் கனவுகளும், வானத்தைத் தொடும் நினைவுகளும் மட்டுமே இருந்தன. வீட்டை விட்டு போகும் போது இன்னும் எத்தனை விடயங்களை இழக்கப் போகிறேன் என்பது மட்டும் நினைவுக்குள் சிக்கவில்லை. அவள்தான் சின்னப்பிள்ளை என்றால் அவள் பெற்றோருக்குக் கூட சில விடயங்கள் விளங்கவில்லை. பெற்றோர்கள் தவிர்ந்த வேறு உறவுகளுடன் (அவர்கள் மிக நெருங்கிய உறவுகளாய் இருக்கும் பட்சத்திலும் கூட) வாழ நேரிடும் பெண்குழந்தைகளுக்கு நேரும் பாலியல் துன்புறுத்தல்களைப் பல பெற்றோர்கள் அறிந்து கொள்வதில்லை. இக்கதையிலும் அதேதான். நம்பிக்கைக்குரியவர்கள் என்று நினைத்து அவர்களிடம் தமது குழந்தைகளை ஒப்படைக்கும் பெற்றோர்கள் கண்டிப்பாக வாசிக்க வேண்டிய கதைகளில் ஒன்று இது.

இது ஒரு உண்மைக் கதை என்பதால் அதிகம் சொல்ல முடியவில்லை. மொழிபெயர்ப்பு சரியாக அமைய வேண்டுமானால் தன்னிச்சையான சுருக்குதல் அல்லது நீட்டுதலைத் தவிர்க்க வேண்டும். அதைத்தான் செய்துள்ளேன். கதை பின்னுக்கு சற்று நீண்டு விட்டது போலவே தோன்றுகிறது. கதையில் பின்னுக்கு வரும் கணவனின் தந்தையின் செயற்பாட்டை இன்னொரு கதையாகச் சொல்லியிருக்கலாம். கதைக்காக றஞ்சி தேர்ந்தெடுத்த படம் கதைக்கு மிகவும் பொருத்தமாக அமைந்திருப்பது குறிப்பிடப்பட வேண்டியதொன்று.

அடுத்து மதனி ஜெக்கோனியாஸ் மொழி பெயர்த்துத் தந்த - கைவிடப்பட்டவளாய்.... - மனதை மிகவும் பாதித்த இன்னொரு உண்மைக்கதை. 13வயதுச் சிறுமியான நூரியாவின் சோகக்கதை. ஒரு தந்தை தனது பெண்குழந்தையை அவளது மூன்றாவது வயதிலேயே பெரியப்பாவிடம்(தனது சகோதரனிடம்) கொடுப்பதுவும் அந்தப் பெரியப்பா அவளை அவளது 12வது வயதிலேயே, அவளது சம்மதமோ அன்றி அவளது



படிப்பகம்

விருப்பு வெறுப்பு பற்றிய பிரக்ஞையோ இன்றி ஒரு 62வயதுக் கிழவனுக்கு விற்பதுவும் நம்ப முடியாவிட்டாலும் உண்மையான கதை என்னும் போது மனதை வருத்துகிறது. இன்றைய காலகட்டத்திலும் இப்படியான அடிமைத்தனமான வேலைகளுக்கு பெண்குழந்தைகள் பலியாவது மிகச் சோகமான விடயம். அவள் கொலைக்குற்றம் சாட்டப் பட்டு சிறையில் இருப்பது இன்னும் துன்பமானது.

கட்டுரைகளைப் பார்க்கும் போது ஆறு கட்டுரைகள் இடம் பிடித்துள்ளன. இவைகளில் இன்றைய காலகட்டத்தில் மிகுந்த பிரபலமாகியுள்ள, பலராலும் பாவிக்கப்படுகின்ற, உயர்ந்த இடங்களில் கூட அவதானிக்கப் படுகின்ற, பயனுள்ள... இணைய உலகிலான வலைப்பதிவுகள் பற்றியதான மதி கந்தசாமியின் - இணையத்தில் குடில் போடலாம் வாருங்கள் - தவிர்ந்த மற்றைய ஐந்து கட்டுரைகளும் பெண்களின் பிரச்சனைகள், முன்னேற்றம் குறித்த ஆலோசனைகள், ஆணாதிக்க சிந்தனைகள்.. பற்றிக் கூறுகின்றன.

இவைகளில் இந்தியாவைச் சேர்ந்த வைகைச்செல்வியின் - பெண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் - கட்டுரை சகலவிதத்திலும் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட அன்றைய காலத்தில் படைக்கப் பட்ட பெண் எழுத்துக்களில் இருந்த வலிமையும், வீரியமும், உயிர்ப்பும், காலத்தை வென்று நிற்கும் தன்மையும் இன்றைய பெண்படைப்பாளிகளின் படைப்புக்களில் இல்லையோ! என்ற ஐயத்தை எழுப்பியுள்ளது. அன்றைய பெண்படைப்பாளிகள் பற்றிய பலதகவல்களோடு ஔவையார், சரோஜினி, வை.மு.கோதைநாயகி... என்று அன்றைய பெண் படைப்பாளிகளிகளையும் அதற்கு உதாரணமாக ஒப்பிட்டுச் சுட்டியுள்ளார் வைகைச்செல்வி. ஆனாலும் வைகைச்செல்வி குறிப்பிட்டது போன்ற ஆளுமை மிக்க பெண்படைப்பாளிகள் இன்றும் இருக்கிறார்கள். அதுவும் அன்றைய படைப்பாளிகளை விடக் கூடிய எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அன்று ஒரு குறிப்பிட்ட அளவான பெண் படைப்பாளர்களே இருந்தார்கள். அவர்கள் பளிச்சென்று எல்லோர் கண்களுக்கும் தெரிந்தார்கள். இன்று உலகளாவப் பெண் படைப்பாளிகள் இருக்கிறார்கள். அதனால் அந்தப் பளிச்சென்ற வெளித்தெரிவு இல்லை. மற்றும் படி பன்முகத்தன்மை கொண்ட எழுத்துக்களை மட்டுமல்லாமல், அதைச் செயற்படுத்தும் திறனோடும் பல ஆளுமை மிக்க பெண்கள் இன்று எம்மிடையே உள்ளார்கள் என்பதுதான் உண்மை.

மும்பையைச் சேர்ந்த புதியமாதவியின் - என்று தணியும் எங்கள் சுதந்திரதாகம் - என்ற கட்டுரை இன்றைய காலகட்டத்தில் பெண்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேறியிருந்தாலும் இன்னும் ஏன் பெண்ணியல் சிந்தனையில் புரட்சிகள் ஏற்படவில்லை என்றும், ஆணாதிக்கம் இல்லாத சுதந்திரக்காற்று இன்னும் ஏன் அவள்

www.padippakam.com

சுவாசத்துக்கு எட்டவில்லையென்றும் ஆய்ந்துள்ளது. ஊடகங்களில் பெண்கள் எப்படிச் சிறுமைப் படுத்தப் படுகிறார்கள், விளம்பரங்களில் பெண்கள் எப்படி மலிவு படுத்தப் படுகிறார்கள், அரசியலில் எந்த நிலையில் பெண்கள் நுழைகிறார்கள், இல்லங்களில் பெண்களின் வேலைகள் எப்படிக் கணிக்கப் படுகின்றன என்றெல்லாம் அருமையாக விளக்கி, அதிகம் படித்த பெண்ணென்றால் என்ன? ஐரோப்பியப் பெண் என்றால் என்ன? பெண் என்பதால் அவள் இன்னும் வன்முறைக்கு உட்படுத்தப் படுகிறாள் என்ற உண்மையை புள்ளி விபரங்களுடன் தந்துள்ளது.

ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் அவர்களின் - இன்னும் இருபது வருடங்களில் - புலம்பெயர்ந்த தமிழ்ப்பெண்களின் நிலை எதிர்காலத்தில் என்னவாயிருக்கும் என்ற ஒரு சந்தேகத்தை எழுப்பியுள்ளது. அரசியல், பொருளாதாரம், மேற்படிப்பு போன்ற காரணங்களால் ஏற்பட்ட புலம் பெயர்வு தமிழ்பெண்களை பொருளாதார ரீதியில் சற்று முன்னேற்றி இருக்கிறது என்றாலும், அதற்கப்பால் என்ன முன்னேற்றத்தைத் தமிழ்ப்பெண்கள் கண்டிருக்கிறார்கள் என்ற கேள்வி இக்கட்டுரையினூடே எழுகிறது.

சின்னத்திரைத் தொடர்களும், பெரியதிரை தரும் படங்களும் பெண்களை இன்னும் எவ்வளவு தூரத்துக்கு பின்னுக்குத் தள்ளுகின்றன என்பதையும், இவைகளின் பாதிப்புக்கள் எமது தமிழ்ப்பெண் குழந்தைகளின் மனவளர்ச்சியில் எத்தகையதொரு பாதிப்பை எதிர்காலத்தில் ஏற்படுத்தப் போகிறது என்பதையும், இதனால் எதிர்காலக் குழந்தைகளின் அறிவுவளர்ச்சி எந்தளவுக்குக் குன்றும் என்பதையும் ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் அவர்கள் கட்டுரையினூடு வருத்தத்தோடு தெரிவிக்கிறார். சின்னத்திரைகளோடு மாரடிக்கும் புலம்பெயர் பெண்கள் கண்டிப்பாகக் கவனத்தில் எடுக்க வேண்டிய கட்டுரை இது.

அவுஸ்திரேலியாவிலிருந்து சந்திரலேகா வாமதேவா - கற்பு நிலை சொல்ல வந்தார் - என்ற கட்டுரை மூலம் கற்பு என்பதன் பொருள் பற்றியும், அது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொது என்ற போதும் அன்றைய காலத்திலிருந்து இன்றைய வரைக்கும் பெண்களின் கோட்பாடாகவே கருதப்படுவது பற்றியும் ஆய்ந்துள்ளார். கூடவே இலக்கியங்களில் உள்ள கற்புக்கரசிகள் பற்றிய கதைகளை உதாரணங்களாகக் காட்டி, அவைகளெல்லாம் ஆண்களாலேயே எழுதப் பட்டிருப்பதைச் சுட்டியும் உள்ளார்.

தயாநிதி மொழிபெயர்த்துத் தந்த கிறிஸ் கிராஸ்சின் - ஆணாதிக்கத்திற்கு முகம் கொடுப்பது பற்றிய சில தனிப்பட்ட பிரதி பலிப்புகள் - மிகவும் அருமையானதொரு கட்டுரை. "ஆணாதிக்கத்திற்கு எதிரான போராட்டம் என்பது ஒரு விவாதத்தில் பெண்களுடன் நேருக்கு நேர் பார்த்து உரையாடுவது போன்றதல்ல. இது ஒரு



படிப்பகம்

www.padippakam.com

அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, உளவியல் ரீதியான பலம் வாய்ந்த கட்டமைப்புக்கு எதிரான போராட்டம். அத்துடன் எனது உட்புறமுள்ள மேலாதிக்கம் என்பது பனிமலையின் முனைப்பகுதி போன்றது. இது சுரண்டலாலும் அடக்கு முறையினாலும் கட்டப் பட்டது" என்கிறார் கிரிஸ் கிராஸ்.

ஆணாதிக்க சமூகத்தில் உள்ள ஒருவரே ஆணாதிக்கத்தைப் பற்றிச் சிந்திப்பதென்பதும் அது பற்றி கூறுவதென்பதும் மிகவும் வித்தியாசமானது. என்னதான் விடுதலை அமைப்புக்களில் அங்கத்தவர்கள் ஆனாலும் தந்தைவழிச் சமூக அமைப்புகளினோடு வளர்ந்த ஆண்களின் உள்ளே திமிறும் மேலாதிக்கம் அவர்களை ஆக்கிரமிப்பது அவர்களைப் பொறுத்த வரையில் தவிர்க்க முடியாத ஒன்றே. இந்த நிலையை ஒரு குற்ற உணர்வோடு நோக்கும் ஒரு ஆணே இது பற்றி எழுதியது ஒரு வகையில் சுவாரஸ்யமாகக் கூட உள்ளது. மொழி பெயர்த்துத் தந்த தயாநிதிக்கு கண்டிப்பாக நன்றி சொல்ல வேண்டும்.

கவிதைகளைப் பார்க்கும் போது அவுஸ்திரேலியாவிலிருந்து ஆழியாளின் விடுதலை, பாமதியின் யுத்தம், சௌந்தரியின் இளமைக்காலம், இலங்கையிலிருந்து அனாரின் இருப்பின் பின்னால் வாழ்வின் வெளி, முகைசிரா முகைடீனின் நான், நான் பேச நினைப்பதெல்லாம், பாலறஞ்சனியின் நிஜங்களும் நிகழலாம், தீக்குள் விரலை வைத்தால், விஜயலட்சுமி.சேகரின் நானும் ஓர் காவியம்தான், இந்தியாவிலிருந்து மாலதி மைத்ரியின் மனநோயின் முன் பின் நிகழ்வுகள், விதைச்சொல், திலகபாமாவின் நகல்கிறது நதி, கட்டுடையும் நகரம், புதியமாதவியின் கவிஞனின் மனைவி(தெலுங்கில் மந்தரப்பு கேமாவவதி), புதியமாதவி கவிதைகள், கனடாவிலிருந்து எதிக்காவின் இன்னமும் ஏதோவொன்றிற்காய்..., துர்க்காவின் துர்க்கா கவிதைகள், சுவிசிலிருந்து நளாயினி தாமரைச்செல்வனின் தலைப்பில்லாத கவிதை, நமக்கான நட்பு, ஜேர்மனியிலிருந்து பாரதியின் நலங்கெடப்புழுதியில் சுகந்தினி சுதர்சனின் பிரச்சனைகளுக்கு முகவரியிடுவோம், கோசல்யா சொர்ணலிங்கத்தின் தீர்ப்பெழுதும் கரங்கள் பெண்களாகட்டும், விக்னா பாக்யநாதனின் துளிப்பாக்கள், என்று 23க்கு மேற்பட்ட கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இவைகள் பெண்களின் விடுதலையை, அடக்கப் படுகிறோம் என்று தெரிந்தும் விட்டு வெளியேற முடியாத இயலாமையை, அடைந்து கிடந்தாலும் மனதால் சுதந்திரமாகப் பறக்கத் துணிந்த பெண்களின் தன்மையை, விட்டு விடுதலையாகி விடுவோம் என்ற நம்பிக்கையை, இருப்பின் அவசியத்தை..., யுத்தத்தின் கோலங்களை, இயற்கையின் சீற்றங்களை... என்று பல விடயங்களை உணர்வுகள் கலந்து சொல்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

இக்கவிதைகளைத் தனியாக ஒரு தரம் அலசலாம் போலுள்ளது.

அடுத்து, உரையாடல் வடிவில் - மல்லிகா எம்மிடையே உள்ள சில பிரச்சனைகளைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

சமைத்துப் போடும் கணவனின் மனைவியும், அதிகாலை வேலைக்குப் போகும்போது தானே தேநீரைத் தயாரித்துக் குடித்து விட்டுச் செல்லும் கணவனின் மனைவியும் விடுதலை பெற்றவர்கள் என்பதான அறியாமை நிறைந்த பேச்சு கூடுதலாகப் பெண்களிடையேதான் உலாவுகிறது.

கதையில் வந்த மாயாவுக்கு தான் விரும்பியவனை மணம் முடிக்கவோ, முடித்த ஒருவன் சரியில்லை, குடிகாரன், இவளை அடித்துத் தொந்தரவு செய்கிறான் என்ற போது அவனை விட்டு விலகிச் செல்லவோ உரிமையில்லை. தன் வாழ்வைத் தானே நிர்ணயிக்கும் அவளது சுதந்திரம் பற்றி பெண்ணான அவள் அண்ணிக்கே கவலையில்லை. பெண்ணே பெண்ணை விளங்கிக் கொள்ள முடியாத அல்லது விளங்கிக் கொள்ள விரும்பாத இப்படியான நிலைமைகளையும் சமூகம், கலாசாரம் என்பதன் அர்த்தம் புரியாத அர்த்தமற்ற செயற்பாடுகள் கொண்ட எமது பெண்களின் பார்வையில் ஜேர்மனியப் பெண்கள் மீதான கணிப்புகளையும்.... என்று சொல்ல வந்த விடயத்தை கச்சிதமாகச் சொல்லியுள்ளார் மல்லிகா.

ஓவியர் வாசுகியுடனான றஞ்சியின் செவ்வியொன்றும் மலரில் இடம் பெற்றுள்ளது. மலருக்கு மிகவும் பொருத்தமான ஒருவரோடான செவ்வி இது. பெண்களது வெளிப்பாடுகளை ஓவியப்பயிற்சி மூலம் கொண்டு வரும் இந்த வாசுகிதான், முன் அட்டைப்படத்தை வரைந்து, மலருக்கு அழகும் வலுவும் ஊட்டியுள்ளார். யாழ்ப்பாணத்தின் சாதாரண ஒரு பெண்ணுக்குக் கிட்டாத பல வெளிகள் ஓவியம் மூலம் தனக்கு சாத்தியமாகின என்று சொல்லும் வாசுகியினுடனான செவ்வி மிகவும் சுவாரஸ்யமானது.

"பெண்கள் சந்திப்போ...! உங்கை என்ன நடக்குது?. உதுக்கு நாங்கள் ஆம்பிளையள் வரக்கூடாதோ?"

"ம்... பெண்டுகள் சந்திச்சு என்ன செய்யப் போறிங்கள்? குடுமிச் சண்டையோ பிடிக்கப் போறிங்கள்?"

"இஞ்சைபார்...! பெண்கள் சந்திப்பு, இலக்கியம் எண்டெல்லாம் சொல்லிக் கொண்டு கூடுறது இலக்கியங்கள் பேச இல்லை."

இவைகளெல்லாம் என்னவென்று யோசிக்கிறீர்களா? பெண்கள் சந்திப்புக்கு ஒரு தடவையேனும் செல்லாத சில ஆண்களால் அவர்களைச் சுற்றியுள்ள பெண்களின் மீது எறியப் படும் எள்ளல் கருத்துக்கள் இவை. தமது மனைவியரோ சகோதரிகளோ இதைச் சாட்டிக் கொண்டு வெளியில் போய்



படிப்பகம்

www.padippakam.com

விடக்கூடாதே என்ற அங்கலாய்ப்பில் அவசரமாய் கொட்டப்படும் வார்த்தைகள் இவை.

கருத்து மோதல்களும் முரண்களும் ஆண்கள் ஒன்று கூடலில் ஒரு போதுமே நிகழ்வதில்லையா? கேட்பதற்குத் திராணியற்றவர்களாக இன்னும் பெண்கள் இருக்கிறார்கள்.

இவைகளுக்கெல்லாம் பதில் கூறும் விதமாக பெண்கள் சந்திப்பதில்..., ஒன்று கூடுவதில்... உள்ள நன்மைகள்.... தமது பிரச்சனைகளை மனந்திறந்து கலந்துரையாடுவதின் மூலம் பெண்களுக்குள் ஏற்படும் தன்னம்பிக்கை... இவை பற்றி தேவா விளக்கமாகச் சொல்கிறார் பெண்கள் சந்திப்பு சிறுகுறிப்பு என்ற கட்டுரை மூலம்.

இத்தனை விடயங்களும் இந்தப் பெண்கள் சந்திப்பு மலருக்குள் அடங்கியிருக்கின்றன என்னும் போது உண்மையிலேயே வியப்பாகவும் மகிழ்வாகவும் இருக்கிறது. எத்தனையோ பிரச்சனைகள், அவசரங்கள், அவசியங்கள், தடைகளின் மத்தியில் மீண்டும் பெண்கள் சந்திப்பு மலர் இத்தனை கனமாக வெளிவந்தது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய விடயமே. வெளியிட்டு வைத்த பெண்கள் சந்திப்புக் குழுவினருக்கு மனம் நிறைந்த பாராட்டுக்கள். கூடவே ஆக்கங்களைத் தந்துதவி பெண்கள் சந்திப்பு மலருக்கு வலுவூட்டி, உறுதுணையாக நின்ற

சகோதரிகளுக்கும் மனதார்ந்த நன்றி.

18.8.2005



*ஒரு பெண்ணாக எனக்கு நாடில்லை.*
*ஒரு பெண்ணாக எனக்கென்று ஒரு நாடு வேண்டாம்*
*ஒரு பெண்ணாக. இந்த உலகமே எனது நாடு.*

**வெர்ஜினியா வுல்ப் (Virginia Woolf)**



படிப்பகம்

www.padippakam.com


நன்றி:

படைப்புகள் தந்துதவிய தோழிகட்கும்
அச்சிடுவதிலும் மற்றும் பல
வகைகளிலும் உதவிபுரிந்த விடியல்
பதிப்பகத்திற்கும்
நன்றி.



படிப்பகம்

www.padippakam.com



**ஓவியம் : அருந்ததி**



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்